ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்.

வித்வசிரோன்மணியாகிய புகழேந்திப்புலவர்

திருவாய்மலர்ந்தருளிய

அல்லியரசாணிமாலை

இஃது

சிதம்பரம்

நடராஜ சுவாமிகளால்

பார்வையிடப்பட்டு,

சுத்தப்  பதிப்பு.

மதுரை புக்ஷாப், புதுமண்டபம்

இ. மா. கோபால்கிருஷ்ணக்கோன்

உத்திரவின்படி,

சென்னை

வாணீ விலாசம் அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

இதன் விலை] 1926. அணா 6.

A 5396

புதிய புத்தக விளம்பரம்.

இதனால் சகலமானவர்களுக்கும் தெரிவித்துக்கொள்வது யாதெனில், சோதிட புத்தகங்களும், வைத்திய புத்தகங்களும், கீர்த்தனை, அம்மானை, நாடகம், டிராமா இதுகளும், அடியிற்கண்ட புத்தகங்கள் அச்சிட்டுத் தயாராக இருக்கிறபடியால் வேண்டியவர்கள் நேரிலும், வி. பி. போஸ்டு மூலமாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

பரமசிவன் பார்வதியாருக்கு உபதேசித்த

ஈஸ்வரநாடி சோதிடம்.

முதலாவது சூரியகாண்டம்	விலை	2	0	0
2-வது சந்திரகாண்டம்		2	0	0
3-வது குஜகாண்டம்		1	8	0
4-வது புதகாண்டம்.		1	8	0

இராமதேவர் சோதிட திரவுகோலென்றும் ஆண் பெண் இரேகை சாஸ்திரம்	1	0	0
மனையடி சாஸ்திரமென்றும் சிற்ப சிந்தாமணி	1	8	0
அறுபோக ஆருட சிந்தாமணி	0	8	0
திருவாதவூரர் புராணம் மூலமும் உரையும்	1	4	0
புலிப்பாணி சோதிடம்	0	12	0
வைத்திய சாரசங்கிரகம்	2	0	0
மலையாள மாந்திரிக அரிச்சுவடி	0	4	0
ஞானவெட்டி மூலம்	1	0	0
ஷை மூலமும் உரையும்	2	8	0
விராடபஞ்சபட்சி	1	0	0
ஆதிநாடகம்	0	8	0
மணிமாலன்சண்டை நாடகம்	0	4	0
இலட்சுமணதேவி மாலையிடு நாடகம்	0	4	0
சமத்கார சற்குண சாவித்திரி	0	4	0

எமது விலாசம்:—

ம. திருவேங்கட முதலியார்.

நெ. 11 தாண்டவராயப்பிள்ளை தெரு

சௌகார்பேட்டை போஸ்டு, ஜீ டி, மதராஸ்.

ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்.

அல்லியரசாணிமாலை.

KOVILOOR ANDAV... A. No. 45396 ★ LIBRARY, KOVI...

விநாயகர் துதி.

கலிவிருத்தம்.

அடாதகும்முலை யாள்திருவாலவாய்த்
தடாதகைபிராட் டியரின் தன்னருள்
கொடாநின்றவல்லிக் கோதையர்சொல்லக்
கடகளிற்றினைக் கைதொழுதேத்துவாம்.

வெண் செந்துறை.

சித்திவிநாயகர்தஞ் செம்பொற்பதம்போற்றி
மித்தியளிக்கவல்ல முக்கணன்றருள்போற்றி
அஞ்சாயனமேக்கிவிடும் அங்குசமின்றருள்போற்றி
சீராருமல்லிகதை செந்தமிழாலயான்பாட
ஏசாதுகாவிலிலே யிசைந்தருள்வாய்நான்முகனே

சுப்பிரமணியர் துதி.

சுத்தமெய்ஞ்ஞானகர்த்தர் ஐய்யவடிபோற்றி
பக்தர்தமக்குவரம் பாலிப்போன்தாள்போற்றி
ஆதிபரமசிவற் கருள்செய்வோன்றருள்போற்றி
நீதில்லாமாயனையுந் துணித்தபதம்போற்றி
சூரபத்மன்சிரந் துணித்தார்பதம்போற்றி
தீராநான்முகனைச் சேதித்ததாள்போற்றி
வன்முகன்றுருமுகனை வாதித்ததாள்போற்றி
பின்முகன்றுருமுகனை பாழ்செய்ததாள்போற்றி
கந்தாகடம்பா கதிர்வேலாயிக்கதைக்குச்
சிந்தாகுலந்தீரச் செய்திடுவாய்கர்த்தாவே.

சரஸ்வதி துதி.

தாராருங்கூந்தல்விழுந் தங்கள்பதம்போற்றி
சூதார்முலைவாணி துங்கப்பதம்போற்றி
துன்னுங்கலைமாதின் துணையடிகளைப்போற்றி
மன்னுசரஸ்வதிதா மரையடிகளேபோற்றி
அல்லிக்கதையுரைக்க அருள்புரிவாய்மாதாவே
வள்ளிக்கொடியனைய வண்காத்தக்கோதாவே
கஞ்சபூபன்மனதிற் கலந்தவளேநீயென்று
நெஞ்சந்தனிற்கலந்து நிகழ்த்துமம்மாயிக்கதையை

ஊருமுலகளந்த மெய்யன்பதம்போற்றி
பஞ்சவர்க்குத்தூதசென்ற பங்கயத்தாள்போற்றி
எங்களைக்காத்த ஏழுமலையடிகளைப்போற்றி
இந்தக்கதைதனக்கு எல்லவருமுன்னிருந்து
சந்ததமும்வந்துவரந் தன்னைக்கடைக்கண்பாரும்

நாட்டுச்சிறப்பு.

தென்பெருகுஞ்சோலை தென்னவளநாடு
கனியுதிருஞ்சோலை கனமதுரைநன்னாடு
வடகாஞ்சிமுத்திறங்கும் வடமதுரைநன்னாடு
தென்காஞ்சிமுத்திறங்கும் தென்மதுரைபட்டணமாம்
வாழைவடக்கீனும் வடமதுரைபட்டணமாம்
சோலைகிழக்கீனும் துய்யபலாமேற்கீனும்
வாழைவடக்கீனும் வாங்கமுகுதெற்கீனும்
கரும்புமிளநீருங் கண்திறந்துபடையாயும்
கட்டுக்கலங்காணும் கதிருமுக்குநெற்காணும்
அரிதாளறுத்துவர மறுநாள்பயிராகும்
அரிதாளின்கீழாக ஐங்கலந்தேன்கூடுகட்டும்
யானைகட்டத்தாளும் வானமட்டும்போராகும்
மாடுகட்டிப்போரடித்தால் மாளாதுசெந்நெலென்று
யானைகட்டிப்போரடிக்கும் அழகானதென்மதுரை
தானாகத்தான்வளர்ந்து தழைத்தோங்குந்தென்மதுரை
சோலைமலருடைய சொக்கர்கிருபையினால்
மாதமொருமும்மாரி வருஷிக்குந்தென்மதுரை
மும்மாரிபெய்யும் முறைமையுள்ளதென்மதுரை
பஞ்சைபனாதி பரதேசிகிடையாது
பஞ்சங்கிடையாது பாண்டிவளநாட்டில்
கருப்புக்கிடையாது கனத்தகொருமதுரையிலே
கூலிகுறையாது குறைமரக்காலைக்காணோன்
அங்காடிகூடை யதிகவிலைகூறுர்கள்
ஏழைபரதேசி நால்வகைகுடிவாழ்க்கை
தழைத்தோங்கிவாழ்வார்கள் சங்கரன்கிருபையினால்
எங்கெங்குமிருந்து ஏழைபரதேசிகளும
அடுப்பார்பரிசனங்கள் அந்தமதுரையிலே
மதுரையையடுத்தவர்கள் வாழ்வுகள்பெற்றுவாழ்வார்

பாண்டியன் பெருமை.

நீதிமனுமுறைகள் நெறிதவறுமன்னவனும்
செங்கோல்செலுத்திச் சித்திரசங்கதபாண்டியனு
மகுடமுடிசூடும் மன்னவன்சிம்மாதனத்தில்
தங்கமுடிசூட்டி தானிரதிவாண்டிருந்தான்

சொக்கர்வறுமையுண்டு நலாராஜன்பாண்டியற்கு
மீனாட்சிவறுமையினால் மேன்மையுடனாண்டிருந்தான்
ஆறிலொருகடமை யரசமன்னன்வாங்குவது
சக்கரநெறிப்படியே தானிதனையாண்டிருந்தான்
சொக்கர்திருவிழாவை சோபமாய்ச்செய்திருந்தான்
ஐயன்திருவிழாவை ஆனந்தமாய்நடத்தி
உலகந்தழைத்தோங்க உத்தமனாண்டிருந்தான்
தாழ்வுகள்வாராமல் தழைத்தோங்கிவாழ்ந்திருந்தான்
அப்படியாகவாழ்ந்து அரசாளும்நாளையிலே

சோழராசன் வறுமை அல்லது நிறமை.

சோழராசன்தன்னாட்டிற் சொர்ணகிரிப்பட்டணத்திற்
மழைகள்கிடையாது மன்னனதுசீமையிலே
தூறல்கிடையாது சோழனதுசீமையிலே
பயிர்கள்விளையாது பறவைகள்நாடாது
குடிக்கசலங்கிட்டாது குருவிகள்நாடாது
தீய்ந்துபயிர்களெல்லாம் தேசங்கள்தனையும்
காய்ந்தனமரங்களெல்லாங் கனிகள்கிடையாது
சரிகுளங்கள்தனி லிறைக்கசலங்கிட்டாது
பூமிதனிற்புல்லு பூண்டுகள்கிடையாது
சருகுபோலுலர்ந்தனவே தனிச்சோழன்பட்டணத்தில்
அன்னங்கிடையாது அபிமானபரிசனங்கள்
சோறுகிடையாது சோழனதுசீமையிலே
எல்லோரும்பரதேசி ஏழைகளாய்ப்போனார்கள்
பெண்டுடனேபரதேசி புருஷசெனங்களெல்லாம்
இனியிருந்தாலிவ்விடத்தி லிறந்துமடிவோமென்று
சொல்லாமலோடுகிறார் சோழராஜன்சீமைவிட்டு
வலசைவாங்கிப்போனார்கள் மன்னர்பரிசனங்கள்
குடிவலசைவாங்கினார் குடித்தனக்காரரெல்லாம்
அண்டிபிழைக்கவென்று அல்லவரும்லவந்துவிட்டார்
வந்துமிகச்சேர்ந்தார்கள் மதுரைவளநாட்டில்
பாண்டியன்தேசமதிற் பரிசனங்கள்வந்துசேர்ந்தார்
அப்போதுசோழன் அவனுடையபட்டணங்கள்
பாழடைந்துபோயிற்றே பரிசனங்களேதுசெய்தார்
சோழனதுசீமையிலே துற்குறிகள்நடந்தனவே
பன்னிரண்டுதன்வருஷம் பாரில்மழையில்லாமல்
மாடுகள்கிடையாது மனிதரும்கிடையாது
தங்கமிழல்கிடையாது தரித்திரமேபெரிதாச்சு
என்னசெய்வேனென்று எண்ணமிட்டான்சோழனவன்
வாடிமனந்தளர்ந்தான் வாழ்வரசனப்போது
செடியின்கீழ்ப்புல்லதுபோற் செழித்ததிருமுகங்கள்
களர்நிலத்துப்புல்லதுபோற் கருகிநிறந்தலந்தான்

என்றுநமெல்லி வெம்பிமனந்தளர்ந்து
யாரையழித்தோமோ அநியாயஞ்செய்தோமோ
கூலிகுறைத்தோமோ குறைமரக்கால்விட்டோமோ
பஞ்சைபரதேசிகளைப் பரக்கடித்தோட்டினோமோ
அந்தணர்வேதியர்க்கு அபசாரஞ்செய்தோமோ
தெய்வத்தின்செயலோ திருவுளத்தின்சோதனையோ
ஆரையடிப்போம் அன்றிப்பிழைத்திடுவோம்
எவரையடிப்போம் இக்குறையைத்தீர்த்திடுவோம்
தேசமும்பாழாச்சு ஜெனங்களெல்லாம்பறிபோச்சு
அல்லவரும்போயடுத்தா ரணிமதுரைப்பாண்டியனை
பாண்டியன்தேசம் பதியடைந்ததுகாண்
சொக்கர்கிருபையினால் சுகமாயிற்றுதென்மதுரை
தெய்வச்செயலாலே சீர்பெற்றான்பாண்டியனும்
நாளுமவருடைய நாதாடிதான்பணிந்து
பாண்டியனுமதியாற் பகவானைதான்வணங்கி
சொக்கர்மீனாட்சியின் துணையடியைதான்பணிந்து
பாண்டியனைக்கண்டு பகவானுக்கறிக்கையிட்டு
ஐயர்கிருபையினா லதிஷ்டம்பெறவேண்டும்
இதுதான்வயணமல்லால் இதைவிடவேறேயுண்டோ
மகாதேவர்கண்திறந்தால் மழைக்குக்குறைச்சலுண்டோ
தழைத்திருக்குஞ்சீமையென்று தரணிபதியெழுந்திருந்தான்
மதுரைக்குப்போகவென்று மன்னனெழுந்தவன்தான்
சிநேகந்தான்செய்வோம் தென்மதுரைபாண்டியனை
என்றுபயணமிட்டானிடறுதனைத்தான்தொலைக்க
கொஞ்சமுள்ளசேனைகளைக் கூடத்துணையாக்கி
பூவின்முடிதுலங்க பொன்றுபாணமின்ன
வாருங்கடகமும் வயிரமணிடால்துலங்க
புரவியின்மேலே புறப்பட்டான்சோழனவன்


சோழராசன் பாண்டியனைக் காண்கிறது.

பாண்டியன்தேசத்திற் பக்குவமாய்வருகிறானே
வெகுதூரமாய்கடந்து வெஷ்டைகள்தான்பட்டு
தொலைதூரமாய்கடந்து தென்மதுரைவந்தானே
மதுரைவளநாட்டில் வந்துவிட்டான்சோழனவன்
கோட்டைக்குள்ளேநுழைய கொற்றவனுஞ்சோழனவன்
தூதுவர்களோடிப்போய்ச் சொன்னார்கள்பாண்டியற்கு
சந்தோஷங்கொண்டு தனிமதுரைபாண்டியனும்
வரச்சொல்லுமென்று மன்னன்கொலுவமர்ந்தான்
அப்போதுதூதுவர்வந் தறிக்கையிட்டார்சோழனுக்கு
கொலுமுகத்தைத்தேடி கொற்றவனுந்தானடந்து
பாண்டியனைக்கண்டு சரிவுடனேதெண்டனிட்டான்
தெண்டனிட்டசோழனுமே சித்திராங்கதராஜன்

திடுக்கிட்டெழுந்திருந்து சிங்காதனமேடைவிட்டு
கூடவேவகைபெயர்த்துக் கும்பிட்டான்பாண்டியனும்
கட்டித்தழுவி களிகூர்ந்துறவாடி
கூட்டிவந்துகொலுமகத்திற் கூடவுட்காரவைத்தான்
இட்டசிம்மாதனத்தி லிருந்தாலேசோழனவன்
சினேகிதன்முகம்பார்த்து தென்பாண்டியராசன்
சோழன்முகம்பார்த்துச் சொல்லுகிறான்பாண்டியனும்
எங்கேவந்தீரென்னசெய்தி யென்றுயிர்க்குயிர்தோழா
அவசரமாய்வந்ததென்ன ஆட்கள்படையில்லாமல்
வேர்வையொழுக வேற்றுமுகமாவதென்ன
சிந்தைகலங்கத் திருமுகந்தான்வாட
பூமாலைதான்கசங்க பொன்மகுடந்தான்கருக
அழகுகள்தான்மாறி யனலிட்டமெழுகதுபோல்
உருமாறிவந்ததென்ன வுணர்வுடையமன்னவரே
எந்தனுக்குத்தான்தெரிய யியம்பிடுங்களென்றுரைக்க

சோழராசன் பாண்டியனிடத்திற் சொல்வது.

அவ்வார்த்தைதான்கேட்டு அப்போதுசோழனவன்
தனக்குள்ளவருத்தமதைச் சாங்கமாய்ச்சொல்லலுற்றார்
பன்னிரண்டுவருஷமாகப் பாரில்மழையில்லாமல்
தவிக்கிறதேயுலகந் தாங்கமுடியவில்லை
திருவமிசகையாட்டாமல் தினைக்காமலோடிவிட்டார்
கருகிறதேயுலகந் தாங்கமுடியவில்லை
தாளமுடியவில்லை தனிமதுரைப்பாண்டியரே
காவிளைத்துப்போனாலும் நன்மையோவந்தனுக்கு
உன்னுடையராச்சியந்தா னொருகுறைவுமில்லாமல்
தாழ்வுகளில்லாமற் றானியங்கள்தான்தழைக்க
தேசஞ்செழிக்கச் சிறப்புடனேநீர்வாழ்ந்த
எளியவன்போலேதான் இந்தச்சிறுமைப்பட
பார்க்கமனம்வந்ததோ பாராளும்பாண்டியரே
என்-தேசஞ்செழிக்கச் செல்வங்களுமேற
அவ்வளவுநீருதவி யனுக்கிரகஞ்செய்தாலே
நன்றிமறப்பேனோ நானுள்ளநாள்வரைக்கும்
சகாயமறப்பேனோ சந்திராதித்தருள்ளளவும்
உதவிமறப்பேனோ வுயிருள்ளநாள்வரைக்கும்
இந்தசகாயமதை எப்போதும்யான் மறவேன்
சஞ்சலந்தீரவைப்பாய் தனிமதுரைப்பாண்டியனே
அவ்வசனங்கேட்டு அழகுள்ளபாண்டியனும்
சோழன்முகம்நோக்கிச் சொல்லுவானோர்வசனம்
என்னாலேயாகுமோ இவ்வுலகந்தான்தழைக்க
நம்மாலேயாவதுண்டோ நாடுகள்தழைத்தோங்க
உன்னாலுமென்னாலு முலகந்தழைக்குமோதான்



பாண்டியனுஞ் சோழனுஞ் சொக்கரிடம் வந்துகண்டது

தேவாதிதேவர் திருவருள்தானிருந்தால்
நாதராதயவு நமக்குதானிருந்ததென்றால்
சொக்கராதயவால் தொல்லுலகந்தான்றழைக்கும்
அவருடையசெயலல்லா லாசனலைவகாண்டோ.
தெரியாதோவந்தனுக்குத் தெளிவரிந்தசோழமன்னு
நாதராலென்னுடைய நாடுதழைத்ததென்றால்
அவ்வசனங்கேட்டு அருஞ்சோழனேதுரைப்பான்
உமதுதயவாலே உரிமைபடவெந்தனுக்கு
நாதருக்குசொல்லி நாடுதழைக்கவையும்
சொக்கருக்குசொல்லி தேசஞ்செழிக்கவையும்
என்றுமிகவேண்டினான் இராஜனந்தபாண்டியனை
அப்படியேநல்லதென்று அனதொருபாண்டியனும்
வந்ததொருசோழனுக்கு வருந்திமிகவிருந்துசெய்து

பாண்டியனுஞ் சோழனுஞ் சொக்கரிடம் வந்து கண்டது.

இருவருங்கூடியே ஈஸ்வராலயத்தில்
சொக்கராதுகோயிலுக்குத் துரிதமுடன்வந்தார்கள்
ஈஸ்வரதுசந்நிதிக்கு இன்பமுடன்வந்தார்கள்
சுவாமியைக்கண்டு தொழுதடிகளைப்பணிந்தார்
சாஷ்டாங்கதெண்டன் சரணமென்றடிபணிந்தான்
இருவருமேயடிபணிந்து ஈசரைத்தோத்தரித்து
தும்பமலர்சூடுகின்ற சொக்கரைத்தோத்தரித்து
ஆலவிடமுண்ட ஐயரைத்தோத்தரித்தார்
நஞ்சையமுதுண்ட நாதரைத்தோத்தரித்தார்.
இடறுதனைநீக்கிவிடும் ஈசனேசரணமென்றார்
அப்போசொக்கலிங்கர் அந்தமொழிகேட்டு

சொக்கலிங்கர் சொல்வது.

குஞ்சிரிப்புகொண்டவருங் கொடிமுடிகைசாலம்
எதுவகையாக இருவருமாவந்தீர்கள்
வந்தவிவரமதை வகையாகச்சொல்லுமென்றார்
அவ்வசனங்கேட்டு அழகுள்ளபாண்டியனும்
சொக்கரைசேவித்து சொல்லுகிறான்ராசனவன்
மதுரையிலேவாழுகின்ற மகாதேவஆண்டவனே
இச்சோழனுக்கு வந்ததொரு துன்பங்கள்
சொல்லத்தொலையாது துயரமிகத்தோன்றுதையா
மழைகள்கிடையாமல் வையகங்கள்பாழாகி
உலர்ந்துதேசருபோ லுலகங்களத்தனையும்
வாடித்தவிக்கிறார்கள் மனிதர்களெல்லோரும்
அன்னங்கிடையாது சோழனதுசீமையிலே
மிகவும்வருத்தமுற்றான் வேந்தனிந்தசோழ்ராசன்

தயவுபுரிந்தவந்து தற்காக்கவேண்டுமையா
மனமகிழ்ந்து மழைபெய்யவையுமையா
நாடுசெழிப்பதற்கு நாதனேகேள்பாரும்
கண்பார்க்கவேண்டுமென்று கர்த்தரேதெண்டனிட்டோம்

சொக்கநாதர் சொல்வது.

அவ்வசனங்கேட்டு ஆண்டவனுமேதுரைப்பார்
அரசர்களேநீங்கள் அஞ்சவேவேண்டாங்காண்
எவனெவன்றன்றனக்கு எந்தவதிகாரமுண்டோ
அந்தவதிகாரம் அவனவனேசெய்கிறது
வருணபகவானு மனதுவைத்தாராமானால்
பொய்யாமழைபெய்வித்து பெருகவைப்பார்பூமியெல்லாம்
வருணனுக்கதிகாரன் மேலானயிந்திரன்காண்
தேவேந்திரனைத் தெரிசித்தீராமாகில்
உங்கள்குறைவுகளை யுரையுங்களிந்திரற்கு
மனதிரங்கவேண்டி வணங்கினீராமாகில்
வருணனைத்தானழைத்து மழைபெய்யவைப்பான்காண்
மேகத்தைதானழைத்து விடைகொடுத்தானிந்திரனும்
இந்திரன்தயவாலே யெங்குஞ்செழிக்குநாங்கும்
அவ்வசனங்கேட்டு அல்லிமதுரைபாண்டியனும்
சொக்கர்விடைகொடுக்கச் சோழராம்பாண்டியனும்
நல்லதென்றுசொல்லி நாதரடிபணிந்து
இருவருமாய்நடந்தார்கள் நகரதுகோவில்விட்டு
ஆலயத்தைவிட்டு அப்பால்நடந்தார்கள்

இந்திரலோகங் காண்கிறது.

தெய்வலோகம்போவென்று சதுதியாய்த்தானடந்தார்
சோழராம்பாண்டியனும் துருசாய்நடந்தார்கள்
இந்திரலோகத்திற்கு இசைந்துமேவந்தார்கள்
தேவேந்திரலோகத்திற்கு சதுதியில்தானடந்தார்
அமராபதிதேடி அரசர்கள்தானடந்தார்
வானுலகங்கிட்டி வருகிறவேளையிலே
ஆயிரங்கணிந்திரனு மமர்ந்தார்கொலுமேடை
முப்பத்துமுக்கோடி முனிவர்களுந்தேவர்களும்
நாற்பத்தெண்ணாயிரம் நலமானரிஷிகளுடன்
கிம்புருடர்கின்னரர் கெருடகாந்தருவருடன்
கின்னரிவீணைகள் கீதங்கள்பாடிநிற்க
மேனகைரம்பையும் மெல்லிதிலோத்தமையும்
ஊர்வசிநாட்டியங்க ளுச்சிதமாய்செய்துநிற்க
இந்திராணிதேவியுடன் இந்திரன்கொலுவிருந்தார்
அந்தசமயத்தில் அழகுள்ளபாண்டியனும்

சோழனும்பாண்டியனுந் துரிதமாய்வந்தார்கள்
இந்திரன்கொலுவைநாடி இருவரும்வருகையிலே
கண்டானே இந்திரனுங் காவலர்கள்வருகிறதை
பூலோகராஜாக்கள் பொன்னுலகம்வருகிறார்கள்
நரமனிதராஜாக்கள் நாடிவரக்காரணமேன்
இவர்களாய்வருவாரோ ஈஸ்வரனால்வருகிறார்கள்
சொக்கரருள்பெற்று சொக்கர்பதிவாரார்கள்
நல்லதென்றுசொல்லி நலமுடனேபார்த்திருந்தார்
பாண்டியனும்சோழனும் பதிகொலுவில்வந்தார்கள்

இந்திரனைக்காண்பது.

சொர்க்கலோகயிந்திர சோழனவன்பார்த்து
மிகவும்பயந்து மேன்மையுள்ளயிந்திரற்கு
அஞ்சிப்பயந்து அடிதொழுது தெண்டனிட்டான்
சாஷ்டாங்கதெண்டனிட்டான் சசிதேவிநாயகற்கு
தெண்டனிட்டுசோழனைத் தேவேந்திரன்வாழ்த்தி
வணங்கியேசோழனை வாயாரத்தான்வாழ்த்தி
பொற்பீடம்போடுமென்றார் பூலோகச்சோழனுக்கு
எட்டுபடியின்கீழிட்டார்கள்பொற்பீடம்
வந்தமகாராசன் மன்னன்மனமகிழ்ந்து
அந்தமுள்ளபீடத்தி லமர்ந்தானேசோழனவன்
எதிராகபாண்டியனும் இருமாப்புதானடைந்து
மதுரையாளும்பாண்டியனும் வணங்காமற்றானிருந்தார்
நம்மைப்போலிவனொருவன் ராசனல்லோயிந்திரன்தான்
இந்திரனைநாமும் எப்படிவணங்குவது
பூலோகயிந்திரன்போற் பொன்மதுரையாளுகிறோம்
ஈஸ்வரன்கிருபையினா லிப்பூமியாளுகிறோம்
ஈசன்தயவிருக்க இவனைவணங்குவதேன்
சொக்கர்மகத்துவத்தால் தொழாமலெதிரேநின்றார்
எதிர்நின்றபாண்டியனை யிந்திரனுந்தான்பார்த்து
வந்திருக்கும்பாண்டியன்றான் வணங்காமலிருப்பதென்ன
நம்மைமதிக்கவில்லை நாடாளும்பாண்டியனும்
எதிரில்மதியாம லிருக்கிறான்பாண்டியனும்
சொக்கர்வலுமையினாற் றொழுகாமற்போனாலே
நாதரதுதயவாலே நம்மைமதிக்கவில்லை
பூலோகமன்னனுக்குப் பெருமைகள்தானுமுண்டோ
கெருவம்படைத்தோர்க்குக் கேடுவருந்தெரியாது
இவனுடையகெர்வத்தை யினியடக்கவேண்டுமென்று
நல்லதனத்தாலே நடுங்கவைக்கவேணுமென்று
உபாயத்தாலே ஒடுங்கவைக்கவேண்டுமென்று
மர்மத்தைக்கொண்டாரும் வானவர்களிந்திரனும்

ஆடாதாடுவர்கள் அருகிருக்குங்காவலரே
சரியொத்தபாண்டியற்குஞ் சரிபீடம்போடுமென்று
எதிராகப்போட்டதொரு பீடாசனஆசனத்தில்
குந்துமென்றார்பாண்டியனைக் கொலுவேடையாசனத்திற்
சரியாகவுட்கார்ந்தான் தனிமதுரைபாண்டியனும்
ஆடாதாடுவரே அரசாளுமன்னனுக்கு
வந்ததொருமன்னனுக்கு மாலையொன்றுபோடுமென்று
கண்காட்டயிந்திரருஞ் சனமுடனேமல்லருக்கு

இந்திரன் செண்டிமாலை சூட்டினது.

பாண்டியராசனுக்கு பதித்தமுத்துசெண்டியொன்று
கொண்டுவந்துபோடுமென கொடிமதுரைபாண்டியற்கு
சூட்சமாயொருமாலை சோழனுக்குப்போடுமென்றார்
அப்படியேயோடினார்க ளந்தப்புரந்தானழைத்து
ஆயிரம்பேர்மல்லரவ ராள்பிடித்துதானுநன்றி
தூக்கியெடுத்தார்கள் நேரானகழுத்துசெண்டி
முத்தோடேபாண்டியன்றான் விரல்நடுங்கிடுவான்
தூக்கிக்கொண்டுவந்தார்கள் சூரரந்தமல்லர்களும்
இந்திரன்கண்காட்ட எதிர்வந்தார்மல்லர்களும்
பாண்டியற்குவெகுமதியாய் பார்மன்னன்சூடுமென்றார்
போட்டார்கள்கழுத்திலேதான் போர்மல்லராயிரம்பேர்
அப்பெரியமாலையைத்தான் அழகுள்ளபாண்டியனும்
காதராதிருமையினால் நடுக்கங்களில்லாமல்
சொக்கரைத்துதிசெய்து தோளிலேதாங்கிக்கொண்டான்
மார்பைநெளித்துமே மாலையைத்தாங்கிக்கொண்டான்
கண்டார்களெல்லோரும் கனகமானபாண்டியனை
தேவேந்திரன்கண்டான் சிறப்புள்ளபாண்டியனை
இவனாலேயொன்றுமில்லை யீசரதுதன்பலந்தான்
அறிவோமிவனுடைய ஆங்காரவலுமையென்று
பாண்டியன்மேலேயல்லோ பகைவைத்தானிந்திரனும்
ஒருவருக்குந்தெரியாம லுள்ளத்திற்கபடுவைத்தார்
பாண்டியன்முகம்நோக்கி பண்புடனேதான்சொல்வான்
சோழனுநேர்மாய்ச் சொர்க்கபதிவந்ததென்ன
வந்தவயணமதை வகைபிரித்துச்சொல்லுமென்றான்
அப்போதுபாண்டியனும் அருள்புரிந்தேதசொல்வான்
எனதுகாரியமா யிவ்விடத்தில்வந்ததில்லை
சோழனுக்காயிங்குவந்தேன் சொக்கர்பதியிந்திரனே
அவ்வாகனவுவைகொண்டு அமராபதிவந்தேனென்றார்
தொக்கதுரைகள்படுகுறுனே சோழனிந்தமன்னவனும்
மழைமாரியில்லாமல வருத்தங்கள்மிகவாகி
நம்முதேராச்சியத்தில் கருகுதேபூமியெல்லாம்

பரிசனங்களெல்லவரும் பரதேசியானார்கள்
பன்னிரண்டுகன்வருடம் பாரில்மழையில்லையாது
அந்தவிசனத்தாலே அடுத்துவந்தாரெந்தனையும்
என்றுலேயாகாதென்று ஈசரண்டைபோயுரைத்தேன்
உம்மண்டைபோகவல்லோ வுத்தரவுசெய்தார்காண்
ஈசர்விடையெற்றுமல்லோ யிவ்விடத்தில்வந்தோம்யாம்
உம்மாலேயானுமல்லோ வுதவிபெறவேண்டுமென்றான்
அந்தமொழிகேட்டு ஆயிரங்கணிந்திரரும்
சோழன்முகம்பார்த்துச் சொல்லுவாரிந்திரரும்
எதுக்குமஞ்சாதே யின்னமுள்ளமன்னவனே
ஈசர்தயவாலே இனிசவுக்கியமுண்டு
அப்படியேசேவிப்பேன் அஞ்சாதேசோழமன்னா
நெறிமுறைதானணிந்த நீதியுள்ளமன்னவனே
நாதருவார்த்தைக்கு நாமென்றுபோவோமோ
அப்படியேநடப்பேன் அரசனேநடவுமென்றார்
தேவேந்திரன்சொல்லத் திடுக்கிட்டெழுந்திருந்து
சாஷ்டாங்கதெண்டனிட்டுச் சரணமென்றடிபணிந்தார்
வாழ்த்திவிடைகொடுத்தார் வானவர்கோனிந்திரனும்
உத்திரவுபெற்றனே வுலகாளுஞ்சோழமன்னன்
பாண்டியனுமப்போது பக்குவமாயெழுந்திருந்து
இந்திரரேவிடைதாருமெங்களிருவருக்கும்
போய்வாருமென்றுசொல்லி போகவிடைகொடுத்தார்
ஆனந்தமாய்பூரித்து அரசர்களிருவருமாய்
தெய்வலோகம்விட்டுமல்லோ திரும்பினார்பூலோகம்
மதுரைவளநாட்டில் வந்தார்களிருவருமாய்
சோழனுக்குவெகுமதிகள் செய்தந்தபாண்டியனும்
அனுமதிகள்பெற்றுக்கொண்டு அனுப்பிவிடைகொடுத்து
பாண்டியன்விடைபெற்றுப் பார்மன்னன்சோழனவன்
சொக்கரைத்தரிசித்து சோழன்நடந்துவிட்டான்
தன்னுடைராச்சியத்திற் றனஞ்செயனும்போய்நடக்க
இற்படியாய்ச்சோழ விருக்குமந்தவேளையிலே

இந்திரன்கோபித்துச் சோழன்பெருமைபடவும்
பாண்டியன் சிறுமைபடவுஞ்செய்வது.

ஆகாயமிந்திரனு மனபுடனேதுசெய்தார்
பாண்டியன்வந்ததுவும் பார்சோழன்வந்ததுவும்
தன்னைவணங்காமற் றயிரியமாய்ப்போனதுவும்
நானுனபாண்டியன்று நம்மைவணங்காததினால்
மதியாமற்போனவனை மட்டடக்கவேணுமென்று
கோபங்கள்கொண்டாரே கொழுந்தனல்போலிந்திரனும்
எரிபறந்தகண்களுடன் இந்திரனுரைத்சொல்வார

மேகங்களேழையும் மேன்மையுடன்வரவழைத்து
சப்தமேகமத்தனையுஞ் சதிராய்வரவழைத்து
வருணபகவானை வரவழைத்திந்திரனும்
கேளுங்கள்மேகங்களே கீர்த்தியுடனென்வார்த்தை
இன்றுமுதலாக ஈடழிவாள்மதுரையிலே
கால்வைக்கக்கூடாது கருமேகம்நீங்களெல்லாம்
அலிதவான்மதுரையிலே அடிவைக்கலாகாது
தூரல்விழப்போகிறீர்கள் துன்மார்க்கன்மதுரையிலே
எடுத்தடிவையாமல் இழைந்துமழைபெய்யுங்கள்
அவளுடைபூமிதனி லடிவைக்கலாகாது
மதுரையிலேநீங்களும்போய் மழைபெய்தீராமானால்
கால்விலங்குமகைவிலங்கும் கழட்டாப்பெருவிலங்கும்
தாள்விலங்குமதோள்விலங்கும தரிக்காப்பெருவிலங்கும்
விலங்குகள்போட்டுமல்லோ வெட்டிவெரிந்திடுவேன்
என்வார்த்தைதனைத்தடுத்து வருவிக்கப்போரீர்கள்
சோழனதுசீமையிலே சொர்ணமழைபெய்திடுங்கள்
மாதமும்மாரி வருஷியுங்கள்சோழனுக்கு
முப்போகந்தன்விளைய மும்மாரிபெய்திடுங்கள்
கருப்புத்தெரியவேதான் கரிமேகம்பொழிந்திடுங்கள்
எந்நாளுஞ்சோழனுக்கு இடையூறுவாராமல்
அரசனுடசீமையிலே அமர்ந்துமழைபெய்திடுங்கள்
என்றுவிடைகொடுத்தா ரிந்திரனப்போது
நல்லதென்றுசொல்லி நலமாகமேகமெல்லாம்
மதுரையைநாடாமல் வருகிறதேமேகமெல்லாம்

சோழராசன் பெருமைபட்டது.

சோழனதுசீமையிலே சொலிக்கிறதேபெருமழைகள்
கடலிரைச்சல்போலாக கம்மிற்றேலோகமெல்லாம்
குமுறியிடித்துங் குடங்கொண்டுபொழிந்தது
இரைகிறதேமேகங்கள் எகுவெள்ளம்பெருகிறது
சோனைமழைபோலே சொரிகிறதேமேகமெல்லாம்
நல்லமழைபெய்வதினால் நாடுஞ்செழித்ததுவே
பூமிகுளிர்ந்ததுவே பொய்கைகள்நிரம்பியது
ஏரிகள்நிரம்பி பெருகுதேபெகவெள்ளம்
மடுவுகள்நிரம்பி கால்வாய்கள்தானிரம்பி
ஆறுகள்நிரம்புவதா லடிபணிந்தெகுசனங்கள்
கூவலிபள்ளம்நிரம்பி கால்வாய்கள் தானிரம்பி
ஊறுகள் தான்சுரக்க ஓடிற்றேசலம்விசையால்
தடாகங்கள் தானிரம்பித் தாமரைப்பூத்ததுபோல்
வயல்கள்நிறம்பியல்லோ வாய்க்காலுக்காதோடி
உலர்ந்தமரங்களெல்லாம் உயிருண்டாய்துளிர்த்ததுவே

அடியற்றமரங்களெல்லாம் அன்பாதுளிர்த்ததுவே
சாடுசெடிகளெல்லாம் கனமாகவே துளிர்க்கு
செடிகள்மரங்களெல்லாம் செழிப்பாய்வளர்ந்திருக்கும்
பூவாமரங்களெல்லாம் பூத்துசொரிந்தனவே
காயாமரங்களெல்லாம் காய்த்துசொரிந்தனவே
செந்நெல்விளைந்தனவே செழிப்பாகபூமியெங்கும்
இன்னப்பழுத்ததுவே!இனிசன்வந்துசேர்ந்ததுவே
அள்ளப்பழுத்ததுவே அணிகள்வந்துபாய்ந்தனவே
சோலைகள்சாலைகளுஞ் சூழ்ந்ததடாகங்களும்
குருவிபடுத்தனவே குயில்கள்வந்துபாடுவதும்
தாராவும்மயில்களும் தாவிவிளையாடுவதும்
குயில்களறைச்சலிடுங் கோகிலங்கள்சத்தமிடும்
அன்னங்கள்பேடைகள் ஆந்தையடுத்தனவே
பண்டுபழங்கள்தின்று களித்தனபறவையெல்லாம்
ஏர்கட்டிவிழுவாரும் இளநாற்றுநடுவாரும்
பயிரிடுங்குடிகள் பலப்பட்டபூமியிலே
ஓடுங்குடிகளெல்லாம் ஊர்வந்துசேர்ந்தார்கள்
பரதேசியாதேசி பஞ்சபஞதியெல்லாம்
சோழராசன்பட்டணத்தில் சுகப்பட்டுவாழ்ந்தார்கள்
பிச்சைக்காரரெல்லோரும் பெருமையடைந்தார்கள்
சோழமண்டலங்களெல்லாம் சுகமாய்த்தழைத்தனவே
சோழமகாராசன் தொலைந்தான்விசனமெல்லாம்
கீர்த்தியடைந்தானே கிருபைக்கடலானன்
இந்திரனைமனந்தனிலே எந்நாளுநினைத்திருப்பான்
மாதமும்மாரி வருவிக்கும்மண்டபத்தில்
சோழமகாராசன் தொலைந்தான்விசனமெல்லாம்
அப்படியாகவாழ்ந்தான் அழகானசோழமன்னன்

பாண்டியன் வறுமையடைந்தது.

பாண்டியநாட்டார் பரதேசம்போனார்கள்
மழைகள்கிடையாது மதுரைநகர்சீமையிலே
தூரல்கிடையாது தென்மதுரைபூமியிலே
தூரல்விழுவதில்லை சொக்கர்மதுரையிலே
எரிந்துபுகைகிறதே ஈரங்கிடையாமல்
குடிக்கநீரெட்டாது குளங்கள்மடுக்களெல்லாம்
காகங்குடிப்பதற்கு கரண்டிசலங்கிட்டாது
ஆறுகுளங்களெல்லாம் அடங்கநும்வரண்டனவே
ஏரிவரண்டனவே ஏற்றக்கோலாழமட்டும்
பூமிக்குள்ளுடெழும்ப பொங்கிற்றேதணலாக
விளைவுகள்கிடையாது வேந்தன்மதுரையிலே
களைவுகள்கிடையாது வளமதுரைபூமியிலே

பொன்மதுரைநாட்டிலே புழுதியடைந்தது
சாருபோலுதிர்ந்தவே தழைத்தமரங்களெல்லாம்
பூமியுலர்ந்து பூண்டுகிடையாது
பறவைகள்கிடையாது பாண்டியன்தேசத்தில்
குடி வலசைவாங்கினார் தென்மதுரையுள்ளவர்கள்
பஞ்சைபறதியாய் பரதேசம்போகிறார்கள்
அன்னங்கிடையாது அழகுள்ளமதுரையிலே
மதுரையைச்சுற்றி மாவனங்கள்செடிகளெல்லாம்
காய்ந்துபோய்ந்து கருகிப்புகைச்சல்கொண்டனவே
தங்கவிழல்கிடையாது தனிமதுரைபூமியிலே
ஊரிலேயுள்ளவர்கள் உடக்குக்கொண்டார்கள்
பாழடைந்தமுகமானார் பாண்டியநாட்டிலுள்ளோர்
அன்னவிசாரம் அதுவேபெரிதாச்சு
பன்னிரண்டுவருஷம் பாக்கருப்பாயிற்று
சரீரம்வெளுத்தவர்கள் சல்லடைக்கண்ணானார்கள்
பெண்கள்பின்னே புருஷர்களொருதேசம்
பிள்ளைகள்கெட்டுத் திசைமாறிப்போனார்கள்
அப்படியலைந்தது அணிமதுரைபூமியெல்லாம்
இந்திரனாலே இடறுகள்சேர்ந்தனவே
ஆயாசத்துடனே அணிமதுரைபாண்டியனும்
மழையில்லாநாடு வையகம்தானுமோ
என்றுவிசனமா யிருந்தந்தவேளையிலே
மேகம்பொழியத் தனித்தோரன்கட்டிலே
மேகக்குழறி மேலாகப்போய்விடுமாம்
மதுரையைநாடாமல் வகைபடனேபோய்விடுமாம்
இப்படியாய்போகும்போது இந்திரலொருமேகம்
குட்டிமேகமென்று குறுக்கிட்டுவோடும்போது
வருகிறவிசைதனிலே மதுரையென்றுதெரியாமல்
பொழிந்துகொண்டேயோடிற்று போகும்விசையிலே
அந்தமழைவெள்ளம் அணிமதுரைபெருகிற்று
வெள்ளம்பிரண்டுது வேந்தன்மதுரையிலே
வைகைப்பெருக்கெடுத்து மாவெள்ளமோடுவதை
அதுகண்டுபாண்டியனும் அவசரமாயெழுந்திருந்தான்
துரிதமாயெழுந்திருந்தான் சுந்தரப்பாண்டியனும்

பாண்டியன் வைகையாற்றை அணைகட்டியது.

ஓடுகிறவெள்ளத்தை உள்ளடக்கவேண்டுமென்று
அப்புரம்போகாமல் அணைகட்டவேணுமென்று
ஆடாதுதவனே அணிமதுரைப்பட்டணத்தில்
வீட்டுக்கோராள்கள் வீழ்பட்டுவரவேண்டும்
ஆளனுப்பாவிட்டால் ஆக்கினைசெய்வேனென்று

அணைகட்டவரச்சொல்லி அடியாதமுக்கென்றான்
அப்படியேதானடித்தால் ஆனதொருசாம்புவனும்
அந்தச்சமுக்குக்கேட்ட அணிமதுரையுள்ளவர்கள்
வீட்டுக்கோராள்கள் விடுபட்டுவருகிறார்கள்
அவரவர்தம்முறைக்கு ஆளொருவர்வாரார்கள்
மண்வெட்டிக்கொண்டு வருகிறார்களணைகட்ட
பங்குள்ளவிதமாக பாறைகொண்டுஓடிவந்தார்
அவரவர்க்குப்பங்குகளில் அளந்துகொடுத்தார்கள்
அளந்திட்டபங்குகளில் அதிலேகுறைவுபட்டால்
பங்குவிதக்காரனைப் பட்டாவுக்கிறையிடுவேன்
என்றுதிட்டஞ்செய்தான் இராசனந்தபாண்டியனும்
அவரவர்கள்பங்குவிதம் அனைவருங்கட்டும்போது
மதுரையிலேயொருத்தி வாணிச்சியென்பவளாம்
அவளுக்குயாதொரு ஆண்டிக்குகாரருமில்லை
அவளுக்கொருபங்கு அணைகட்டச்சொன்னார்கள்
பிட்டுசுட்டுவிற்று பிழைக்குமந்தவாணிச்சி
என்னசெய்வேனென்று எண்ணமிட்டாள்வாணிச்சி
ஆளுங்கிடையாது ஆருமற்றபாவிநான்
எனக்கிட்டஒருபங்கும் எப்படிச்செய்வேன்யான்
அணைகட்டாளந்தனுக்கு ஆளுங்கிடையாது
ஆளில்லையென்றால் அரசனுங்கேட்பானோ
என்றுவிசனமுடனெண்ணியிருக்கையிலே

வாணிச்சி பிட்டுக்கு சொக்கர் மண்சுமந்தது.

அவளுடையவிசனத்தை யாற்றவேவேணுமென்று
அட்டாளுஞ்சொக்க ரைவரவரேதுசெய்வார்
ஆளுக்குஆளாகி அணைகட்டவேணுமென்று
ஒட்டனைப்போல் யுருவெடுத்துச்சொக்கலிங்கர்
தட்டுடனேமண்வெட்டித் தலைமேலேதானெடுத்து
வாணிச்சியண்டையிலே வந்துநின்றாரொட்டனாக
ஒட்டனைக்கண்டாளே உத்தமியாள்வாணிச்சி
ஆரடாஒட்டாநீ அணைகட்டவந்தாயோ
என்பங்குக்காளாகி யெனக்கணைகட்டுவையா
கேட்டதொருகூலி கிருபையுடன்தருவேனென்றாள்
அவ்வார்த்தைகேட்டு அந்தவொட்டனேதுசொல்வான்
கூலிக்குபிட்டுசுட்டு கொம்பனையேநீகொடுத்தால்
உதிர்ந்திடும்பிட்டதனை உத்தமியேநீகொடுத்தால்
பிட்டுக்குமண்சுமந்து போடுகிறேனணையாக
அப்படியேநல்லதென்று அவ்வாணிச்சிக்கிழவி
பிட்டுசுடும்போது பிட்டுமுதிர்ந்ததுகாண்

உதிர்தபிட்டைத்தானெடுத்து உத்தமியுங்கொடுத்தாளே
ஏந்திமடியில்வைத்து நல்வாறொட்டனவர்
வாலிச்சிபங்குக்கு வந்தாரேயணைகட்ட
உதிர்தபிட்டைத்தின்று ஒருகூடைமண்சுமந்து
போடுவாரொருதட்டு பிட்டுஞ்சரியாகும்
மறுபடியுந்தான்வருவார் வாலிச்சியண்டையிலே
பிட்டுசுடுவாளாம பொடிபொடியாயுதிர்ந்திடுமாம்
உதிர்ந்தவொருபிட்டுக்கு ஒட்டன்வந்துநிற்பானும்
பிட்டெடுத்துக்கொடுப்பாள் போனவொட்டனுக்கு
ஒருதட்டுமண்ணுக்கு உதிர்ந்தபிட்டுசரியாகும்
வாலிச்சிஅண்டைக்கு வந்துநிற்பாரொட்டனவர்
பிட்டுசுடும்போது பொடிபொடியாயுதிர்ந்திடுமாம்
பிட்டுகொடுப்பாளாம் போவாரும்தின்றுகொண்டு
ஒருதட்டுமண்போடுவது உதிர்ந்தபிட்டுசரியாகும்
மறுபடியும்வாறாராம் வாலிச்சிபிட்டுக்கு
ஒருபிட்டுசுட்டாலும் உதிராதிருப்பதில்லை
சுடப்பட்டபிட்டனைத்துஞ் சொரசொரென்றுதிர்ந்திடுமாம்
உதிர்ந்தவொருபிட்டுக்கு ஓடிவந்துநிற்பாரும்
பிட்டுதின்றுக்கொண்டே போடுவாரொருதட்டு
பிட்டுவிலையாகவில்லை ஒட்டன்வேலைசெய்யவில்லை
பாதியணையாயிற்று பாகியினுங்கட்டவில்லை
அவரவர்கள்பங்குக்கு அணைகட்டியாயிற்று
வாலிச்சிபங்குக்கு வரப்புகட்டிநிரவில்லை
பிட்டுகளைத்தின்கிறதும் போகிறதும்வருமதுவாய்
ஒட்டன்திரிவதிலே வுதிர்ந்தபிட்டுஞ்சரியாச்சு
பொழுதுமறைந்தது பொன்மதுரைபாண்டியனும்
கட்டினஅணைகளை கனமுடனேபார்த்துவந்தான்
வாலிச்சிபங்குக்கு வரப்பின்னுங்கட்டவில்லை
ஆறுதடாஇந்தபங்கு அணைகட்டநிரவில்லை
எவனுதடாஇந்தஅணை யென்றானேபாண்டியனும்
அரசனுக்குசொல்லுகிறா ரணைகட்டுமன்னவர்கள்
வாலிச்சிபங்குக்கு வந்தானேயொட்டனவன்
அவனுடையபங்கிதுதான் அணைகட்டவில்லையென்றார்
கோபங்கள்கொண்டானே கொற்றவனார்பாண்டியனும்
எங்கேயடாவொட்டனவ னிழுத்துக்கொண்டுவாருமென
ஒட்டனைப்பிடித்துவந்தார் உலகாளும்ராசாவண்டை
கண்கள்சிவப்பேறிக் கனமதுரைபாண்டியனும்

சொக்கர் பிரம்படிப்பட்டது.

பிட்டுக்குமண்சுமந்த பித்தரென்றறியாமல்
ஒட்டனென்றெண்ணியவ்வேளை ஓங்கியடிக்கலுற்றான்

கைப்பிடித்தபிரம்பதனைக் கரமொன்றுதான்சுழற்றி
ஓட்டன்முதுகின்மே லோங்கியடித்தானே
அந்தவடிபடவே ஐயரந்தசொக்கருக்கு
வருந்தங்கள்கொண்டாரே மதுரைசொக்கநாதருந்தான்
இந்தவடியுந்தான் அனைவருக்கும்பட்டனவே
அவரவர்கள்தம்முதுகில் அடிதழும்புநேர்ந்தனவே
திக்குதிசைகளும் தேவாந்திரங்களெல்லாம்
அண்டங்கள்தீவுகளும் ஆகாரமெவ்விடத்தும்
சகலசீவசெந்துக்கும் தழும்புமிகவுண்டாச்சு
பாண்டியன்முதுகின்மேற் பாரத்தழும்பாயிற்று
எல்லவரும்பயந்தா ரிந்தவடியாலே
பாண்டியனுமப்போது பயந்துநடுங்கி
எங்கேயந்தஒட்டனென்ன எறெடுத்துப்பார்க்கையிலே
மாயமாய்த்தான்மறைந்தார் வந்தவோரொட்டனவர்
எங்கெங்குந்தேடினான் இனிமதுரைப்பாண்டியனும்
காணாததினாலே கனகத்தாவிடிவிழுந்தான்
வந்தவொட்டனல்ல மாயாண்டிசொக்கரவர்
ஆண்டவாராகவேனும் ஆளடிமைசெய்யவந்தார்
தெரியாமற்போச்சுதென்று சிந்தைமிகவாடி
தீவினைக்காளானேமே தெய்வமென்றுபாராமல்
வல்வினைக்காளானேமே மகாதேவனென்றறியாமல்
இந்தவிதிப்பயனை எப்போதுலைந்திடுவோம்
வந்ததுநமக்குமல்லோ மதிமோசமென்றுசொல்லி
எந்தவிதத்திலேயும் யீடேறப்போறதில்லை
கெரிந்ததுநமக்கென்று தென்மதுரைப்பாண்டியனும்
மெத்தவிசனமாய் விடுதிக்குவந்துவிட்டான்
அழகியசொக்கர் ஆண்டவனாரப்போது
ஒட்டனென்றவுருவை உத்தனார்தான்மறைந்து
ஆலயத்தில்வந்தாரே அட்டாளுஞ்சொக்கலிங்கர்
வருத்தத்துடனேயவர் வந்துவிட்டாராலயத்தில்
அப்போதுமீனாட்சி யண்டையிலேஓடிவந்து
ஏதுகாண்சுவாமிநீரு மிப்படிக்குவந்ததென்ன
அலைகுலையவந்தீர் அக்குறையைச்சொல்லுமென்றாள்
கேளுமென்னாயகியே கிளிமொழியேமீனாட்சி
வாணிச்சிக்காகவல்லோ மண்சுமக்கப்போயிருந்தேன்
பிட்டுக்குமண்சுமக்கப் பிரம்படிபட்டுவந்தேன்
அடித்தான்பிரம்பாலென் னங்கந்தழும்போ
கொடுத்தான்முதுகின்மேற் கொடும்பாவிபாண்டியனும்
சகாயம்செய்யப்போனேன் அபாயம்வந்துநேர்ந்ததுகாண்
அபாயமென்னைச்செய்தவனை ஆதரிக்கப்போறதில்லை
என்றுரைக்கசொக்க ரெடுத்துரைப்பாள்மீனாட்சி

அறியாமற்செய்தபிழை பெரியோர்மனம்பொறுப்பார்
மறுரூபங்கொண்டல்லவோ மண்சுமக்கப்போனதினால்
ஆளடிமையென்றுசொல்லி அடித்தான்பிரம்பாலே
ஐயனென்றுதானறிந்தா லடிபணிந்துதொழுதிடுவான்
தெரியாதவன்செய்தால் சித்தத்தில்வையாமல்
ஆதரிக்கவேண்டுமென்றாள் அங்கயற்கண்மீனாட்சி
அவ்வசனங்கேட்டு அழகுசொக்கரேதுசொல்வார்
என்னையடித்தது எல்லோர்க்கும்பட்டதுகாண்
உலகத்துக்கெல்லாம் உரைத்ததேபிரம்படிதான்
சித்தர்கள்முனிவர்கள் தேவருக்கும்பட்டதுவே
வானரிஷிகளும் தபோதனர்க்கும்பட்டதுவே
சகலஜீவசெந்துக்கு தழும்புவந்துநேர்ந்ததுவே
கன்னியர்கள்கெர்ப்பம் கருவுக்கும்பட்டதுவே
இந்தப்பாவம் எப்படி தொலையுமடி.
இந்தப்பழிக்குபெண்ணே மைந்தன்வரம்நான்கொடுக்கேன்
கருவுதரிக்க கன்னியரோநான்கொடுக்கேன்
அந்தப்பழிபாவம் அத்தோடேதொலையுமடி.
என்றுமிகவுரைக்க எந்திழையும்பேசாமல்
மௌனமாய்த்தானிருந்தாள் மதுரைமீனாட்சியரும்
இப்படிச்சிலகாலம் இருக்குமந்தவேளையிலே
பாண்டியனுடு பரிசனங்களெல்லவரும்
அரசனதுநாடு அருமைமழையில்லவரும்
தத்தளித்துப்போகிறதே தனிமதுரைபூமியெல்லாம்
அரனுரைத்தானடக்க அக்கொலைப்பாதகனும்
சம்பூ.தேநாட்டிற் குறுகுதேபூமியெல்லாம்
மைந்தனுமில்லை போனமன்னனுக்கு
அப்படியேதுன்பம் அரசனும்பட்டிருந்தான்
ஆரையும்வணங்காத அந்தசித்திராங்கதனும்
சிறந்தேனெனச்சொல்லி பெருத்தவரைபோயடுக்கான்
தெய்வமேகதியென்று தேசத்தையாண்டிருந்தான்
சொக்கரேகதியென்று தோத்திரங்கள்செய்திருந்தான்
பன்னிரண்டுதன்வருடம் பாரில்மழையில்லாமல்
துன்பங்களுடனேயல்லோ துரைத்தனமும்பண்ணிவர

சொக்கரும் மீனாட்சியும் கானகம் வந்தது.


மதுரையிலேவாழும் மகாதேவர்சொக்கலிங்கம்
அங்கயற்கண்மீனாட்சி அம்மனும்சொக்கருமாம்
இருவருமப்போது ஏகாந்தநாளையிலே
தேவியரைப்பார்த்து சுவாமியவரேதுசொல்வார்
பெண்ணேமீனாட்சி பொற்கொடியே ஆலயத்தில்
தணலாயெரிக்கிறது தவிக்காற்றடிக்காமல்
ஒடுக்கங்களாகுது உன்மதுரைப்பட்டணத்தில்

காற்றுங்குளிர்ந்தடிக்க கனிவிருட்சங்கிடையாது
ஒடுக்கங்கள்நீரவேண்டி உலாவிநாம்வந்திடலாம்
காற்றுவாடைக்குநாம் கானகதிற்போய்வரலாம்
மதுரையைச்சுற்றி வருவோம்நாம்பெண்மயிலே
வாருமென்றுசொக்கர் மயிலனையைத்தானழைக்க
அப்படியேநல்லதென்று அங்கயற்கண்மீனாட்சி
சம்மதிப்பட்டு சதிரும்புருடனுமாய்
இடபத்தின்மேலேறி இருவரும்வெளியானார்
எருதின்மேலேறி இருவரும்வெளியானார்
ஆலயத்தைவிட்டு ஐயருமவெளியானார்
மதுரையைவிட்டு மகாதேவர்வெளியானார்
மதுரையைச்சுற்றி வந்தாரவரிருவருமாய்
பட்டணங்கள்சுற்றி பாதுகார்த்துவருகையிலே
அழகுமறைந்தது அழகானதென்மதுரை
அண்டவொருநிழலும் ஆதரிக்கக்கிடையாது
தோட்டங்கிடையாது துறவுகள்துர்ந்திருக்கும்
நிற்கநிழலுமில்லை நிலத்திற்றறிப்போமென்றால்
கானகங்களத்தனையும் கட்டையாயுலர்ந்திருக்கும்
செடிகள்கிடையாது செட்டுகள்கிடையாது
தழைகள்கிடையாது சற்றேயிருப்போமென்றால்
வெய்யலுரைக்கின்றது வெங்கானல்வீசிடுமாம்
வேர்வைபொழிகின்றது விமலருக்கும்பார்வதிக்கு
அண்டமுடிகூடவில்லை அக்கினிவாடையது
அக்கினிவாடையது அனல்கொண்டுவீசுதையா
நடுக்காட்டில்வந்தார்கள் நாதரும்தேவியுமாய்
அந்தநடுக்காட்டில் அலைந்துவருகையிலே
அங்கேயொருவில்வமரம் அடர்ந்துதழைத்திருக்கும்
பசுமையாகத்தழைத்துப் பார்த்துநெருங்கிருக்கும்
சந்துகள்தெரியாமல் தழைத்திருக்கும்வில்வமரம்
என்னேரமுஞ்சலங்கள் இலையிற்படர்ந்திருக்கும்
காய்த்துப்பழுத்து கனிகளுதிர்ந்திருக்கும்
பூத்துப்பழுத்துப் புஷ்பங்கள்பரிமளிக்கும்
தென்னை துவீசும் தேசங்குளிர்ந்திருக்கும்
அந்தமரமொன்று அவ்விடத்திற்றழைத்திருக்கும்
அவ்விடத்தில்வந்தார்கள் ஆண்டுமையவளும்
அந்தவதிசயத்தை அன்புடனேகண்டுவிட்டார்
சோபந்தெளிந்து தேசமுந்தான்குளிர்ந்து
இந்தநடுக்காட்டி லிதுதழைத்தவதிசயத்தை
கண்டறிவோமென்று கடுகியேயிழிறங்கி
எருதைநிழலில்விட்டு இறங்கினார்மரத்தடியில்
ஆயாசந்தீர்வதற்கு அவ்விடத்திலுட்கார்ந்தார்

சவுக்கியமானார்கள் தங்கள்சரீரத்தில்
இருவருமுட்கார்ந்து ஏகாந்தமானார்கள்
பட்டம்பகலிலே பாங்கானவேளையிலே
உச்சிச்சூரியன் உருமத்தின்வேளையிலே

: நீர்காக்கையைக்கண்டது.

அங்கேயொருநீர்க்காகம் அலைகடலில்போய்முழுகி
கடலில்முழுகிய கடல்சலத்தைதான்வாரி
செப்பட்டையில்நிறைய சலங்கொண்டுதான்வந்து
கடல்நீரைறெக்கையாலே காகமதுகொண்டுவந்து
வில்வமரத்தின்மேல் மேலாகத்தான்பறந்து
மேலிருந்துவிசிற்றும் மேன்மையுள்ளகாகமது
மழைமாரிபோலே வருஷிக்கும்காகமது
வருஷித்தஜலங்கள் மகாதேவர்மேற்படவே
குளிர்ந்ததிதேகங் கொடிமனாரைசொக்கருக்கு
அங்கயற்கண்ணம்மனுக்கு அங்கம்குளிர்ந்ததுகாண்
எதிந்தஜலமென்று ஏறெடுத்துப்பார்த்தார்கள்
சங்காரும்சங்கரியும் தலையெடுத்துப்பார்க்கையிலே
நீர்க்காகம்சலம்பொழிந்து நின்றுபறந்ததுவே
அந்தநல்லகாகத்தை ஆண்டவனார்தான்பார்த்து
பார்த்தாயோபெண்ணேநீ பட்சியின்தன்னறிவு
இந்தமரத்துக்கு இக்காகம்நீர்தெளிக்க
எதனால்தெளிக்கிறதோ இதையறியவேண்டுமென்று
காகத்தைதான்கேட்டு காரியமறிவோமென்று
அப்படியேயழையுங்கள் அறிவுள்ளகாகமதை
என்றுவுமையுரை ஈஸ்வரனுமப்போது
ஆகாசத்தின்றன்பார்த்து அந்தநீர்க்காகமதை
கைதட்டிதானழைத்தார் கைலாசநாதருந்தான்
கண்டதுகாகப் கைலாசநாதரென்று
அஞ்சிப்பயந்து ஆகாயம்விட்டிறங்கி
தாய்தகப்பன்வந்தாரோ தற்காக்கநம்மையென்று
சீக்கிரமாய்த்தானிறங்கி திட்டெனவேயோடிவந்து
முக்கால்வலம்வந்து முடிவணங்கிதெண்டனிட
நாற்கால்வலம்வந்து நமஸ்கரித்துதெண்டனிட
தெண்டனிட்டபட்சியைச் சிவனாரும்தான்வாழ்த்தி
அடிபணிந்தகாகமதை அரனாருந்தான்வாழ்த்தி
இந்தமரத்துக்கு இறைப்பதென்னநீஜலத்தை
இந்தமரத்தினாலே இத்தனைவருத்தமென்ன
வருத்தத்துடனே நீவந்துதெளிப்பதென்ன
சொல்லுமென்றுகேட்டார்கள் சொக்கரும்அம்மனுமாய்
கண்டதுகாகம் கனக்கமிகப்பயந்து
சொல்லுகிறதுகாகஞ் சொக்கரவர்சேவிபட



சொக்கரும் மீனாட்சியும் கானகம் வந்தது.

தங்களுக்கேயுகந்த வில்வமாமென்றுசொல்லி
விமலருக்குகந்த வில்வமாமென்றுசொல்லி
அதனால்கடல்நீரை அள்ளிவந்துயான்தெளித்தேன்
காடோறும்யான்தெளித்தேன் காதருக்கேற்றதென்று
இதுதானேஎந்தனுக்கு ஈஸ்வரனார்கட்டளைதான்
அவ்வார்த்தைதான்கேட்டு ஆனாரும் அம்மானுந்தான்
பூரித்திருந்தோனும் புத்திபுள்ள காகமென்று
கட்டித்தழுவி காகத்தைத்தானோக்கி
எங்களுக்கேற்றதொரு இக்கமமென்றறிந்து
களையாகவந்ததற்கு களையாற்றிவைத்தாயே
இந்தச்சகாயமதை எங்களுக்குச்செய்தாயே

சொக்கர் நீர்க்காக்கைக்கு வரங்கொடுத்தது.

உனக்கொருசகாயம் உதவிசெய்வேனென்றுசொல்லி
என்னவரமவேண்டி இன்பமுடனுந்தனக்கு
கேட்டவரந்தருவேனென்று சிந்தைமிகக்கூர்ந்து
அப்போது காகந்தான் அரனைநேசித்து
சொல்லுகிறது காகந்தான் சொக்கருக்குத்தெண்டனிட்டு
கைலாசநாதரே கண்மூன்றுடையவரே
என்மனதிலிருக்கிற எண்ணத்தைச்சொல்லுகின்றேன்
கன்னிப்பெண்ணாகி கனமதுரைபாண்டியனை
சேரவேண்டுமென்று சிந்தையில்நினைத்திருந்து
என்னுடையபாலனுக்கு இசைந்தபட்டந்தரவேண்டும்
அந்தவரமெனக்கு அருள்புரியவேண்டுமையா
காகமதுசொல்வதைக் கண்டாரேசொக்கலிங்கம்
ஆனாலொருவார்த்தை அன்பானகாகமேகேள்
கன்னிப்பெண்ணாகி கனமதுரைநீபோனால்
மன்னனைச்சேர்ந்தாலும் மலடியாய்ப்போய்விடுவாய்
உன்னைப்பெண்ணாகி கனமதுரைநீபோனால்
அநுப்பிவைப்பேனுன்னை அரசனதுமதுரையிலே
ஆமென்றுகேட்பான் அணிமதுரைபாண்டியனும்
அருமற்றபாவிநான் அண்டிவந்தேனுமையென்று
சொல்வாயேயாகில் தோழியாய்வைத்துக்கொள்வான்
தாதியாயிருந்தாயானால் தையலேஉந்தனைத்தான்
வசந்தனானால் மருவமனங்கொள்ளுவான்
ஆருமறியாமல் அணைவானேயுந்தனைத்தான்
அந்நேரத்தாசைதீர்த்திடுவாய் அரிவையிளமாதே
உன்வயிற்றிலேபிறக்கும் உறுதியுள்ளபாலனுக்குப்
பட்டந்தரிப்பான் ட்டணத்திலொருபங்கு
அந்தவரமளித்தே அப்படியேநடவுமென்றார்
சம்மதித்துகாகஞ் சந்தோஷங்கொண்டதுவே

காகத்தைப்பெண்ணாக்கி கருப்பமுமுண்டாக்கி
நீர்காக்கையென்று நேரிழைக்குப்பேர்கொடுத்து
நடவுமென்றுபேர்கொடுத்து நாதரவர்போய்விட்டார்

நீர்க்காக்கை பெண்ணாகிப் பாண்டியனை யடுத்தது.

அப்போதுநீர்க்காக்கை யரிவையந்தபெண்ணணங்கு
மதுரைநகர்தேடி வந்தாளேபெண்மயிலாள்
அப்போதுபாண்டியன் அரிவையரைத்தான்பார்த்து
சுந்தரவடிவமுள்ள காகையரைத்தான்பார்த்து
ஆரடிபெண்ணேநீ யரியவுரையுமென்றார்
அவ்வசனங்கேட்டு ஆரணங்கேதுசொல்வாள்
ஆருமில்லாபரதேசி அண்டவரேநம்மையென்றாள்
ஒருமாதங்கெற்பம் உத்தமியாளேந்தனுக்கு
கெற்பமானமங்கை கிளிமொழியாளாகையினால்
காப்பாற்றவேணுமென்றால் கன்னியரேயஞ்சாதே
அப்படியேநல்லதென்று அரிவையரைக்கூட்டிப்போய்
தன்னுடையதேவியண்டை தாதியாய்வைத்துவிட்டான்
சகலவிசாரணைக்குந் தாதியாய்தானிருந்தான்
அழகுந்திருமேனி அலங்காரமாயிருந்தான்
புத்தியுள்ளகுணவதியும் பூஷணாலங்கிருதையாய்
பாண்டியன்தேவிக்கு பட்சமாய்த்தானிருந்தாள்
சுந்தரமும்எவ்வனமும் சொல்லத்தொலையாது
வாலிபமாய்ப்பெண்மயிலும் மன்னவனார்தேவியண்டை
அதிகாரமும்பெற்று அவளிடத்திலிருக்கையிலே
வசந்தமானகாலம் வந்துமிகநேரிடவே
மன்மதவேதனையால் மன்னனந்தபாண்டியனும்
தன்னுடையதேவியாந் தையலரண்மனைக்கு
மாளிகைதேடி வரும்போதந்தவேளையிலே
வாசற்படியிலே மயில்போலந்தாதியர்கள்
பொற்பதுமைபோலே பொன்னாபரணமின்ன
நின்றாளேநீர்க்காக்கை நேரிழையைத்தான்பார்த்து
அதிகமையல்கொண்டானே அந்தமுள்ளசுந்தரிமேல்
அவளுமிவர்பேரி லாசைகொண்டுநின்றாளே
ஒருவர்க்கொருவர் உடன்பட்டிருவருமாய்
ஆசையுடன்சேர்வதற்கு அரிவையருஞ்சம்மதித்து
என்வயிற்றிலேபிறக்கும் இனிதானமைந்தனுக்கு
பட்டங்கொடுப்பீரோ பாண்டியரேஎன்றாளும்
காலிலொருபந்து நடத்துவேன்மங்கையரே

அப்படிக்குச்சம்மதித்தாள் அரிவையிளமாது
ஆருமறியாமல் அங்கொருவர்காணாமல்
கூடியவனைத்தான் கோலவிழிமாதாளை
அனைகலித்தீர்த்தானே ஐயன்கொடுத்தவரத்தினாலே
கர்ப்பமுடனேசேர்ந்து கவிதமுடன்பாண்டியனும்
தேவியன்னடைபாண்டியனுந் திக்கிசமாய்க்கடந்திட்டார்
இப்படிசிலகாலம் யிருக்குமந்தவேளையிலே
அப்போதுநீர்காக்கை அரிவையிளம்பிறையும்
மாதமும்பத்தாச்சு வருத்திமிகத்தவித்து

நீர்க்காக்கை நீன்முகனைப் பெற்றது.

பிள்ளையைப்பெற்றாள் பேருள்ளமதனையிலே
மைந்தனைப்பெற்றாள் மாதுந்தநீர்க்காக்கை
தாதியவிற்றில் சந்திபிறக்கவென்று
நீர்காக்கைபெற்றெடுத்த கோரனபாலனுக்கு
நீன்முகனென்று கீர்த்தியாய்ப்பேருமிட்டார்
பாண்டியன்றேவி பட்சமாய்தான்வளர்த்தாள்
பிள்ளையும்வளர்ந்து பேரானமாளிகையில்
தாதியின்பிள்ளையென்று சதங்கைகொலுசுமிட்டு
காப்புக்கடகமிட்டு கனகபணிதான்பூட்டி
வயதுமைந்தாக வளர்ந்துவருநாளையிலே
ஐந்துவயதில் அமர்த்தினார்பள்ளியிலே
பன்னுதமிழ்வித்தை படிக்கவைத்தார்பள்ளியிலே
அம்புபிடிக்கறிந்தார் ஆயுதம்பிடிக்கறிந்தார்
சகலமுங்கற்று சாமர்த்தியமானபின்பு
அவனுக்குவேறே யரண்மனையமர்த்திவைத்தார்
வெள்ளாட்டிபெற்றெடுத்த வீரியநீன்முகனும்
அப்படியாயிருக்க ஆனதொருபாண்டியனும்
நமக்குப்பிள்ளையில்லையென்று ராசனந்தபாண்டியனும்
சிங்காதனத்திற் செங்கோலுந்தான்பிடிக்க
பட்டணத்தையாள்வதற்கும் பாலகனில்லையென்று
விசனத்தைக்கொண்டானும் வேந்தனந்தபாண்டியனும்
சித்திராங்கதனுடனே சேர்ந்திருந்தபாண்டியர்கள்
ஆறுபேர்ப்பேர் அவிதிரனாம்பாண்டியர்கள்
அவர்களுடன்கூட ஆரார்கள்தான்மலடு
பாண்டியர்களோடிவரும் பட்டத்தானைதான்மலடு
கொட்டாய்நிறைந்தவொரு குதிரையெல்லாந்தான்மலடு
பட்டிநிறைந்தவொரு பாற்பசுக்கள்தான்மலடு

தொழுவம்நிறைந்ததொரு செல்வமதுதான்மலிய
வரப்பிலேயிருக்கிற எலிகளெல்லாந்தான்மலிய
தெருவிலேகூடிகட்டுஞ் சிறுகுளவிதான்மலிய
தெருவிலேதானிருக்குந் தென்னைமரந்தான்மலிய
கொல்லையில்தானிருக்கும் புன்னைமரந்தான்மலிய
வாசலிலேதானிருக்குஞ் வாழைமரந்தான்மலிய
அழுக்கெடுக்கும்வண்ணானு மம்மட்டியுந்தான்மலிய
வளர்கின்றநாய்களுடன் வாழ்பூனைதான்மலிய
மைந்தனுமில்லாமல் மகாபாவியானோர்கள்
மைந்தர்பெறவேண்டுமென்று வருந்தியேபாண்டியர்கள்
சாலைகள்போட்டுவைப்பார் சத்திரங்கள்கட்டிவைப்பார்
தடபாய்த்திருக்குளங்கள் நல்லதண்ணீர்கிணறெடுப்பார்
தவித்துவருவோர்க்கு தண்ணீர்பந்தல்போட்டுவைப்பார்
பசித்துவருவோர்க்கு பாலமிர்தஞ்செய்துவைப்பார்
ஆலயங்கடோறும் அணிமதில்கட்டிவைப்பார்
கோவில்கள்தோறும் கோபுரங்கள்கட்டிவைப்பார்
காணாதகோவில்கட்கு காணிக்கையனுப்பிவைப்பார்
செங்கல்லைக்கண்டவுடன் தெய்வமென்றுகைதொழுவார்
கருங்கல்லைக்கண்டவுடன் கர்த்தனென்றுகைதொழுவார்
என்னதவஞ்செய்தாலும் எத்தாலும்பிள்ளையில்லை
தவத்திற்குப்போகவென் தங்கள்மனதிலெண்ணி

நீன்முகனுக்குப் பட்டங்கட்டிப் பாண்டியர் தவஞ்செய்யப்போனது.


வெள்ளாட்டிப்பெற்றெடுத்த வேல்வேந்தன்நீன்முகனை
மதுரையையாள்வதற்கு மன்னனுக்குப்பட்டங்கட்டி
நீன்முகனைத்தானழைத்து நீதிபுள்ளபட்டங்கட்டி
ஆதிசிவனைநோக்கி அருந்தவஞ்செய்யவேண்டும்
எல்லையாளருமென்று இனியபட்டங்கட்டிவைத்தார்
ஆறுபிரம்பாண்டியர்களையமாரனைவோரும்
ஆண்பெண்ணடங்கலும் அரியதவஞ்செய்வோமென்று
போகிறார்கள்பாண்டியர்கள் பொன்மலையைத்தான்தேட
வனமாய்வனங்கடந்து வருகிறார்பாண்டியர்கள்
காடுசெடிகடந்து கரியமலைதான்கடந்து
சிருவதபருவதத்தைச் சேர்ந்தார்கள்பாண்டியரும்
ஆறுபிரபாண்டியரு மவருடையதேவியரும்
கண்ணிரண்டுமூடிக் கையிரண்டுமேந்திக்கொண்டு
மைந்தனைவேண்டியே மாளிகைமறந்தார்கள்
புத்திரனைவேண்டியே பூமிமறந்தார்கள்

பாண்டியர்களேழ்வரும் பட்டத்துவெள்ளையானை
ஆறுயிரவருடன் ஆனை தவஞ்செய்கிறது
நாற்காலுயமெடுத்து நடுவேயோர் தும்பிக்கையில்
தும்பிக்கைநாட்டிச் செய்கிறதுபெருந்தபசு
அப்படியாகவே அனேகதவம்பண்ணுகிறார்
அப்போதுபரமசிவன் ஆதிகயிலையிலே
ஆவணிமாதத்திற்றன் அன்பானநாளையிலே
விட்டுதிருநாளுக்குப் புறப்பட்டார்சொக்கலிங்கம்
தேவாதிதேவருடன் தெருசுற்றிவலம்வரச்சே
அரகராவென்றசத்தம் அலைகடல்போல்கோஷமிட
சிவசிவாவென்றசத்தம தேவருக்குள்காதடைக்கும்
அந்தச்சத்தங்கேட்டு அங்கயற்கணேதுசொல்வாள்
யென்சாமியென்குருவே என்னுடையகர்த்தாவே
அரகராவென்றசத்தம் அலைகடல்போல்கேட்கிறது
சிவசிவாவென்றசத்தம் செவியடைத்துப்போகுதையா
இவ்வனத்தில்மெத்த இரைச்சலென்ன ஆண்டவனே
என்றுதான்கேட்டளவி லீஸ்வரனுமேதுசொல்வார்
ஆயிரம்பாண்டியர்க ளரியதவம்பண்ணுகிறார்
மதுரைநாடாளும் வாழ்பாண்டிநாட்டார்கள்
புத்திரனைவேண்டியே பெருந்தவம்பண்ணுகிறார்
மைந்தனைவேண்டியே மகாதவம்பண்ணுகிறார்
கோவிலுக்குப்போவோம் கொம்பனையேயென்றழைத்தார்
இவ்வார்த்தைதான்கேட்டு ஈஸ்வரியுமேதுசொல்வாள்
தபசுபண்ணும்விர்த்தை சுவாமிதான்நானறியேன்
ஏதேதுதவம்பண்ணுவா ரீஸ்வரரேபார்ப்போம்வா
அம்மனுடனே அரனுருங்கூடிவந்தார்
ஆறுயிரவர்க ளருந்தபசுபார்த்தார்கள்
புற்றுமூடிப்போனதுவும் பெருங்கரையானேறித்ததுவும்
புல்மூடிப்போனதுவும் புழுதியடைந்ததுவும்
யானைதபசதிலே யருந்தபசுபண்ணுவதும்
உற்றுற்றுப்பார்த்தாளோ உத்தமியாளீஸ்வரியும்
ஐயாபரனே ஆறுயிரவருக்கும்
புத்திரனளித்தாலும் போனபாண்டியற்கு
ஆனால்கேள்பெண்மயிலே அரசர்செய்கொடுமையெல்லாம்
கூலிகுறைத்தவர்கள் குறைமரக்காலிட்டவர்கள்
அங்காடிகடைதன்னை அதிகவிலையிட்டவர்கள்
பட்டடைநெற்களிலே பதரைக்கலந்தவர்கள்
பசித்தார்முகம்பாரார் தாகங்கொடுத்தறியார்
ஆண்டிபரதேசியைப்போல் அங்கொருநாள்வடிவெடுத்து
பாண்டியராசாக்கள் பருமுத்தளக்கையிலே
சிவதருமமென்று சேர்ந்துவந்துபிச்சையென்றேன்

பதாரனமுத்தெடுத்துப் பாவியெனக்கிட்டார்கள்
சிப்பிமுத்துபோட்டார்கள் தோஷியந்தபாண்டியர்கள்
பதரிட்டபாவிகட்கும் பாலன்கொடுப்பதில்லை
பிட்டுக்குமண்சுமந்தேன் பிரம்படியும்பட்டுவந்தேன்
என்னதவம்பண்ணினும் ஏதானும்பிள்ளையில்லை
எழுபிறப்பிலேயு மிப்பிறப்பும்பிள்ளையில்லை
என்றதுதான்கேட்டு ஈஸ்வரியாளேதுசொல்வாள்
எப்பாவஞ்செய்தானு மீஸ்பரரேமனமிரங்கி
புத்திரனளிக்கவேணும் புகழானபாண்டியற்கு

பாண்டியற்கு ஈஸ்வரி புத்திரிவரங்கொடுத்தது.

உன்சித்தமிரங்காமற் போனாலுமீஸ்வரரே
ஒருபெண்ணாகிலுமளிப்பேன் புகழானபாண்டியற்கு
அங்கயற்கண்ணம்மையவ ளதிகமனமகிழ்ந்து
தோள்சதையைக்கிள்ளியம்மை தூரவெறிந்துவிட்டாள்
அல்லியுங்கொடியு மடர்ந்ததொருபொய்கையிலே
செந்தாமரைவெண்டாமரை சேர்ந்ததொருபொய்கையிலே
வானவருமிந்திரரும் வந்திருக்கும்பொய்கையிலே
சந்திரருஞ்சூரியனுஞ் சந்திபண்ணும்பொய்கையிலே
தாமரைப்பொய்கையிலே தண்ணீர்தடாகத்தில்
அல்லியிலைமேலே வந்துவிழுந்ததுகாண்
கையாகிக்காலாகிக் கண்ணுமூக்குருவாகி
குவ்வாகுவ்வாவென்றுசொல்லி குழந்தையழுகிறது
சந்திரனைப்போலத் தளும்புறகாண்பொய்கையிலே
சூரியனைப்போலத் துலங்குகிந்தக்குழந்தை
மேகத்துமின்னைப்போல் மின்னுகிறதக்குழந்தை
குன்றுமேற்சந்திரனும் குதித்தெழுந்தபாவனைபோல்
இருண்டிருந்தசோலையிலே திரண்டெழுந்தசூரியர்போல்
இப்படியாகயேதா னிருக்கிறவேளையிலே
அம்மையற்கண்ணம்மையவ ளதிகமனமகிழ்ந்து
குழந்தைதனக்கேற்றபடி குலாவிவரங்கொடுத்தாள்
ஏழாம்பிராயந்தன்னில் இளவரசுபட்டமென்று
பன்னிரண்டாம்பிராயத்திற் பார்த்தனுக்குமாலையிட்டு
எல்லையரசாள இசைந்தவரங்கொடுத்தாள்
அம்மான்கழுத்தினி லணிந்தபதக்கமுடன்
சுவாமிகழுத்திற் றரித்தபதக்கமுடன்
வாங்கித்தரித்தாளே வரிசையுள்ளகுழந்தைக்கு
அல்லியென்றுபேருமிட்டு அங்கயற்கண்ணம்மாள்
பாண்டியரைத்தானழைத்து பார்வதியேதுசொல்
ஆருயிரவரே அணிதிரளாம்பாண்டியரே
அல்லியிலைமேலே அழகுமைந்தனிருக்கிறது
ஆணுமதுபெண்ணுமது ஆறபிரவருக்கும்



எடுத்துப்போய்வாருமென்று சல்லவரியுந்தானுரைத்தான்
அப்போதுபாண்டியனும் அரனுரைத்தாவணங்கி
நவசுகிலேகடந்து தானெழுந்தார்பாண்டியனும்
அல்லியின்மேலே அலைமந்திருக்குழந்தைதனைத்தான்
தாங்கள்பெற்றதுபோல தழுவியெடுத்தார்கள்
வாரியெடுத்தார்கள் மார்போடணைத்தார்கள்
மதுரைநகர்நோக்கி வருகிறார்பாண்டியர்கள்
ஆளோடவிட்டார்கள் அறிக்கையிட்டார்பாண்டியர்கள்
மைந்தனைப்பெருபெற்று வருகிறார்பாண்டியர்கள்
புத்திரனைப்பெருபெற்று புண்ணியர்கள்வாரார்கள்
நீன்முகராசனுக்கு நீதியுடன்சொல்லுமென்று
தூதனுடன்சொல்லியே சேதிவிட்டார்பாண்டியர்கள்
ஒற்றனொருவன்வந்தா னுத்தமற்கேசேதிசொன்னான்
கேட்டந்நீன்முகனும் கெர்வமதிமுகமாய்
ஆராதாதுவமே அலங்காரமன்னர்களை
பாண்டியராசருடன் பாங்கானவார்த்தைசொல்லும்
நீன்முகராசனிவ னில்லைகொண்டராச்சியத்தை
நீங்கள்தரித்துவைத்த பின்னையபட்டமது
பட்டத்துறையவில்லை பாலகரும்வருவதில்லை
மதுரைக்குவந்தாலே வல்லுயிரைவாங்கிடுவேன்

நீன்முகராசனுக்குப் பாண்டியர்கள் பகுதிகட்டத் தீர்மானித்தது.

நீங்கள்எங்கேயிருந்தாலும் எங்களுக்குப்பகுதிகட்டி
வருஷத்துக்கொருதரம் வரவேணும்பாற்குடங்கள்
ஆயிரம்பாற்குடங்க ளனுப்பவேண்டுமென்றனக்கு
அனுப்பாமற்போனக்கா லாக்கினைகள்செய்திடுவேன்
நீன்முகராஜன் நிச்சயமாய்சொன்னானென்று
பாண்டியராசருக்கு பாங்குடனேசொல்லுமென்றான்
ஒற்றனொருவனுமே யோடினான்ராசரண்டை
ஆறுயிரம்பாண்டியர்க ளையருக்கேதெண்டனிட்டு
நீன்முகன்சொன்னதொரு யிச்சேதிசொல்லலுற்றான்
உங்களால்வந்தவினைக் காரெனனசெய்வார்கள்
அவனைவெறுக்கவென்று ளதிகமானபாவம்வரும்
வடமதுரைபட்டணத்தில வந்துகுடித்தனமாய்
உழவுகுடித்தனமா யுத்தமனார்வாசம்பண்ணார்
வருஷத்துக்கொருதரந்தான் வரவிடுவார்பாற்குடங்கள்
இந்தவிதமாகவேதா னிருந்தார்கள்பாண்டியர்கள்
சொக்கருளாலே சந்தரியாளல்லியற்கு
மாணிக்கத்தொட்டிலிட்டு வளர்த்தார்கள்பாண்டியர்கள்
ஒருமாதமிருமாத மொன்றிரண்டுமூன்றுமாச்சு
சிற்றிடைகட்டுவாளாஞ் சிறுகம்பிகோலிடுவாள்

பாவாடைகட்டுவாளாம் பந்துவிளையாடுவாளாம்
அம்மானைப்பந்துகளும் அழகானபுள்ளடிப்பாள்
ஐந்தாம்வருஷத்தி லழகாயபள்ளிவைத்தார்
ஏழுபிராயமட்டும் இளங்கொடியாள் தான்படித்தாள்
ஆறுசாஸ்திரம்நான்குவேதம் ஆயபத்துநாலுகலைக்யானம்
அம்புவித்தைவில்வித்தை அஸ்தானவித்தையெல்லாம்
காணலாவுபந்தியங்கள் கற்றுக்கொண்டாளல்லியரும்
பள்ளியின்கலைதேறி பகல்பாடமொப்பிவித்து
பாலமுர்தமுண்ணுவகைக்கு பத்தினியாள்வருகலுற்றாள்
அப்போதுமீன்முகன்று ஒருயிரவரன்னை
ஆயிரந்தூதுவரை அனுப்பினான்மீன்முகனும்
ஆயிரங்குடத்தி லப்பட்டமானபாலாம்
வாங்கிவரச்சொல்லியே வரவிட்டான்தூதுவரை
மலைகளுடன்தலைகொடுத்து மல்லர்வெளிப்பட்டார்கள்
காற்றிலும்வேகமாக கடுந்துவாரார்கள்
தங்கக்குடமெடுத்துத் தான்வந்தார்மல்லரெல்லாம்
பாண்டியராஜனண்டை பாங்குடனேவந்தார்கள்
பருதிகளைக்கட்டுமென்று பாற்குடங்கள்முன்னேவைத்தார்
அரண்மனைக்குப்போகவேணும் மறுபடியுங்கள்பாற்குடத்தை
அவ்வார்த்தைதான்கேட்டு அருசிப்பயந்தெழுந்து
காராவின்பசும்பால் கறந்துமேபாண்டியர்கள்
ஆறுயிரங்குடத்தி லப்பால்நிரப்பிவைத்து
மஞ்சள்துணியிலேமூடிகட்டி மாலைகளைச்சுற்றிவைத்தார்
பாற்குடங்களனையவர் பாதிரத்திலேவைத்தார்கள்
வரிசைவரிசையாக வைத்தார்கள்பாற்குடத்தை
பதினுயிரந்துதருக்கும் பாலமுதுபோஜனங்கள்
போசனஞ்சமைக்கலுற்றார் பேரானபாண்டியர்கள்
அரிப்பதுவும்பொறிப்பதுவும் அடிசில்சமைப்பதுவும்
இந்தவிதமாக யிருக்கின்றவேளையிலே
அந்தசமயத்தி லல்லியம்மாள்வந்துவிட்டாள்
பதினுயிரந்தூதுவரைப் பாற்குடங்கள்பார்த்தாளே
அரிப்பதுவும்பொறிப்பதுவும். அடிசில்சமைப்பதுவும்
இந்தமகிழ்ச்சிகொண்டு ஏதுசொல்வாளல்லியம்மாள்
ஒருநாளுங்கண்டதில்லை உச்சிதசம்பிரமங்கள்
என்றுஅதிசயமா யெந்தனுக்குத்தோற்றுது
இந்தவுறன்முறையா ரெங்கிருந்துவந்தவர்கள்.
இதுநாளுங்கண்டதில்லை உச்சிதமானவரை
அவ்வார்த்தைதான்கேட்டு ஏதுசொல்வார்பாண்டியர்கள்
அவ்வார்த்தைநயந்தனக்கே ஏழுதன்னைபோடியம்மா
பாலமுதுண்டுமேயும் பள்ளிக்குப்போமென்றார்
அவ்வார்த்தைதான்கேட்டு அல்லிமனதுநொந்து

இதுசொல்லாமற்போவீரானல் சீரானபாண்டியரே
நான்-வல்லபிராணனை கல்லோடேமோதிடுவேன்
செத்துமடிந்திடுவேன் செலவழிந்துபோய்விடுவேன்
மாண்டுமடிந்திடுவேன் வைகுந்தஞ்சேர்ந்திடுவேன்
அவ்வார்த்தைதான்கேட்டு ஆராயிரவர்சொல்வார்
ஆறுபிரவருமே ஆண்மலடுபெண்மலடாய்
மைந்தனை வேண்டியல்லோ மகாதபம்பண்ணுறோமம்மா
என்னதவம்பண்ணினாலு மேதானும்பிள்ளையில்லை
மகாமுனிவர்தபசுபண்ணி மாமலையைத்தான்தேடி
நாங்கள்தவத்திற்கு நகர்விட்டுப்போவதற்கு
வெள்ளாட்டிப்பெற்றதொரு வீரானனீன்முகனை
பட்டந்தரித்துவைத்து பாரத்தபசுபண்ணோம்
சிருவதபருவதத்திற் சேர்ந்துதவம்பண்ணோமம்மா
சொக்கருளாலே ஆரணங்கைபெற்றெடுத்தேன்
அல்லியிலைமேலே ஆரணங்கைபெற்றெடுத்தோம்
வயிற்றிற்பிறந்ததில்லை வன்கொடுமைசெய்ததில்லை
குடலிற்பிறந்ததில்லை குலக்கொடுமைசெய்ததில்லை
ஓடுகிறதண்ணியிலே யுள்ளேமணற்சேருமுண்டு
அடிக்கிறகாற்றதனி லலைகாற்றுகருப்புமுண்டு
காலகாலகண்டருக்குங் கண்டதில்லைகருப்புமுண்டு
குண்டுமணிக்கானாலுங் கொஞ்சங்கருப்புமுண்டு
சந்திரற்குமாசியுண்டு சற்றேகருப்புமுண்டு
உனக்கு-மயிரேகறுப்பொழிய மற்றக்கறுப்புமில்லை
புருவங்கறுப்பொழிய பின்னேகருப்புமில்லை
அல்லியிலைமேலே ஆரணங்கேபெண்பிறந்தாய்
வரத்தினாற்பேறுபெற்று வந்தாயம்மாதென்மதுரை
வெள்ளாட்டிபெற்றெடுத்த வீரானனீன்முகனும்
ஊரில்வரவொட்டாமலோட்டிவிட்டேனப்புறத்தே
ஆராயிரம்பாண்டியரும் ஆறுபிரம்பாற்குடமும்
வருஷத்திற்கொருகாந்தான் வாங்குகிறான்பகுதியவன்
உன்னைப்பெறவேண்டி ஊரிழந்தோமபதியிழந்தோம்
சீமையிழந்தோமம்மா துரைத்தனமுந்தானிழந்தோம்
ஏழுவருஷமம்மா இப்படியனுப்புகிறோம்
இந்தவருஷமே இங்குவந்தார்மல்லரவர்
பாற்குடம்நிறப்பிவைப்போம் பாலமிர்தஞ்செய்கிறார்கள்

அல்லியம்மாள் மல்லர்களை அவமானஞ் செய்தனுப்பியது.

அவ்வார்த்தைதான்கேட்டு அல்லிமிகக்கோபமதாய்
எட்டப்பழம்போலே இருகண்சிவந்தாளே
கோவைப்பழம்போலே கூறியகண்சிவந்து
வெள்ளாட்டிப்பையனுக்கு வீரியங்களுண்டாமோ

எருதுபசுவாமோ இளந்தபசுவுமுண்டோ
உயரப்பறந்தாலும் ஊர்க்குருவிபருந்தாமோ
கோகவும்பறந்தாமோ கூடப்பறந்துமோதான்
விரலிலேவிரலானல் உரலெல்லைகொல்லுமையா
வெள்ளாட்டிபையனைத்தான் வெட்டிதலைதள்ளாமல்
பாண்டியராசர்களே பாராளவைத்திர்களே
உங்களைப்போல்ராசாக்கள் உலகத்தில்காணறியேன்
என்றுமிகக்கோபமுடனெழுந்தாளேயல்லியம்மாள்
எழுந்திருந்தல்லியம்மாள் இயலானபாற்குடத்தை
இடதுகால்தன்னாலே யெட்டியுதைத்தாளே
அருமைப்பாற்குடத்தை ஆங்கொண்டோடிவிட்டாள்.
ஆடாமல்லர்களே அழையும்பிடாரனைத்தான்
ஓடியழையுமென்றாள் ஒருகோடியில்வாருங்கள்
அங்கிருந்தமல்லர்களதிதுரிதமாயோடி
பாம்புபிடாரனைப் பரிந்தோடியழைத்துவந்தார்
வாழுவரசியல்லியற்கு எதற்குமென்றார்
காட்டுக்குப்போய்நீங்கள் கன்னிபுத்தில்மருந்தைவைத்து
கருநாகஞ்செந்நாகம் காலக்கோட்டிவிஷங்களுடன்
மண்ணுளிதகசிறிய மலையேறிவிரியனுந்தான்
ஊதுசுருட்டைப்பாம்பு மூபர்வானகாகங்களும்
நீக்கத்தகுட்டிகளும் நீதியுள்ளபாம்புகளும்
வண்ணவண்ணப்பாம்புகளை வகைவகையாகத்தான்பிடித்து
ஓட்டம்நடையாக ஒருகோடியில்வாருமென்றாள்
அவ்வார்த்தைதான்கேட்டு அந்தப்பிடாரரெல்லாம்
ஓட்டநடையுமாக ஓடினார்கானகத்தில்
காட்டுக்குப்போனார்கள் கன்னிபுத்துமருந்துவைத்தார்
வண்ணவண்ணபாம்புகளை வரிசையுடன்பிடித்தார்
பெட்டிகள்நிரம்பவே பிடித்தார்கள்பிடாரரெல்லாம்
காடுசெடிதாண்டி கடுகியேயோடிவந்தார்
அல்லியரசாணி ஆரணங்குமுன்புவந்தார்
பெட்டியிற்பாம்பையெல்லாம் பொற்கொடியாள்முன்னேவைத்து
அல்லிபெருமாளும் ஆரணங்கேதுரைப்பாள்
பாற்குடந்தன்னிலேதான் பாம்பையடையுமென்றாள்
பஞ்சவர்னச்சிலையினாற் பானைகள்வாய்கட்டுமென்றாள்
ஆயிரங்குடத்தி லடையுமென்றாள்பாம்பையெல்லாம்
பஞ்சவர்னச்சிலைகட்டி பார்நிரந்தாமுன்னேவைத்தார்
அல்லிப்பெருமாளு மாரணங்கேதுரைப்பாள்
அம்பட்டனைத்தேடி அழையுமென்றாளல்லியரும்
ஓடியழைத்தல்லவோ ஓட்டம்நடையாகவந்தார்
ஆயிரந்தாதுவரை அழகுமொட்டைசெய்யுமென்றாள்

தாடிசிறைத்தவரை தலைபோடிபண்ணுமென்றாள்
மீசைசிரையுமென்றாள் மின்போடிபண்ணுமென்றாள்
கரும்புள்ளிசெம்புள்ளியுங் கலந்தழகாய்க்குத்துமென்றாள்
அல்லியின்சொற்படிக்கே அழகுமொட்டையிட்டார்கள்
மீசைதாடிசிறைத்து முகமயிரைத் தாம்பொட்டுமிட்டார்
ஆடாதூதவரே அன்பானவார்த்தைகேளும்
நீன்முகராசனுக்குப் பட்சமுள்ள அல்லியம்மாள்
இந்தவரிசைகளை யனுப்பினாளென்றுசொல்லும்
தொண்டைக்குதூண்டிமுள்ளு தொப்புளுக்குவீராணி
அவன்-மண்டைக்குகோடாலி மார்புக்குசெப்புலக்கை
கழுதைதடியிற்கதறியவள் காமாட்சியம்மையென்று
வெட்டியறுக்கவந்த வுண்மைபரஞ்சோதி
தலைமாட்டிற்பாம்பலவோ தாயாரந்த அல்லியென்று
சொல்லுங்கள்தூதுவரே துரைராசன்நீன்முகற்கு
வெள்ளாட்டிபையனுக்கு வித்தைதனைசொல்லுமென
ஆயிரந்தூதுவர்க ளக்குடமெடுத்துக்கொண்டார்
வருகிறாமதுரைபதி தென்மதுரைவருகிறார்கள்
தெத்துத்தெருகடந்து தேரோடும்வீதிவிட்டு
மகாராசன்கொலுதனிலே வந்தார்கள்தூதுவர்கள்
அப்போதுநீன்முகனும் அப்பிங்கனமாசிகைக்கு
சனியெண்ணைமண்டபத்தில் தானமர்ந்தான்வாழ்மார்பன்
எண்ணையிட்டுக்கொண்டே யிருக்கிறவேளைதன்னில்
பாற்குடத்தைமுன்னாலே பார்மீதிறக்கிவைத்தார்
வரிசைவரிசையாக வைத்தார்கள்பாற்குடத்தை
வந்திருந்தூதரெல்லாம் வரிசையாய்நின்றார்கள்
கண்ணைத்திறந்தல்லோ கட்டழகன்பார்த்தானே
இதுவென்னவதிசயங்கள் ஆர்செய்தவண்மையிது
என்று-ஈட்டிப்பழம்போலே இருவிழிகண்சிவந்தான்
கோவைப்பழம்போலே கூர்விழிகண்சிவந்தான்
உருக்கியசெம்பொனது வுதிரம்போல்கண்சிவந்து
இப்படிச்செய்தவரை யெனக்கறியச்சொல்லுமென்றான்
பால்வார்த்தனுப்பாமல் பாம்பையடைத்ததென்ன
ஆடாதூதவரே அறியவுரையுமென்றான்

நீன்முகராசனுக்குத் தூதர்கள் சேதிசொல்லுதல்.

அவ்வார்த்தைகேட்டவர்க ளஞ்சியுரைக்கலுற்றார்
ஐயாவேநீர்கேளும் அடியேனொருவார்த்தை
ஆறுபிரம்பாண்டியற்கே அரியவொருமகளாம்
அலரிபிலைமேலே ஆரணங்குபெண்பிறந்தாள்
ஏழுபிராயமுண்டு இளங்கொடியாள்கன்னிகைக்கு
பாண்டியராசனாராம் பகுதிபோய்க்கேட்டவுடன்

ளங்களுக்குசாப்பாடு இன்பமுடனேசமைத்தார்
அவ்வளவிலல்லிகல்லா ளானந்தவாழ்வரசி
பள்ளிக்கூடத்துப் பகலமுதுண்ணவந்தாள்
எங்களைக்கண்டவுட னென்றுதான்கேட்க
பாற்குடங்களே துக்கையா பாண்டியரேசொல்லுமென
அவ்வளவிற்பாண்டியர்க ளஞ்சிப்பயந்துரைப்பார்
உமக்குப்பட்டங்கரிந்துப் பாதவம்போனதுவும்
அல்லியரைப்பெற்றதொரு அதிசயத்தைச்சொன்னார்கள்
அதுகேட்டுஅல்லியவள் அதிகமானகோபமதாய்
வெள்ளாட்டிமையவளுக்கு வீரியங்களுண்டாச்சே
ஆறுயிரங்குடத்தை அரைநொடியிலிறடிவிட்டாள்
பாம்பைப்பிடித்துவந்து பாற்குடத்திலேயடைத்தாள்
வாருமென்றுளமபட்டரை மழுங்கமொட்டையடியுமென்றாள்
தலைபோடிபண்ணினார்கள் சுளிப்பொட்டுமிட்டார்கள்
தையலிடம்வந்தவர்கள் தலைபோடிபண்ணினார்கள்
கரும்புள்ளிசெம்புள்ளி கலங்கசழநாய்பொட்டுமிட்டு
தொணடைக்குதூண்டிமுள்ளு தொப்புளுக்குவீராணி
மண்டைக்குகோடாலி மார்புக்குசெப்புலக்கை
கழுத்தடியிறகத்தியென்றாள் காமாட்சியம்மனென்றாள்
ஊட்டியறுக்கவந்த வன்மைபாஞ்சோதியென்றாள்
உந்தனுக்குச்சொல்லுமென்று உத்தமியனுப்பிவைத்தாள்
தருமதுரைமகராசி தப்பவிட்டாளென்றுரைத்தான்
பிழைத்துவந்ததெங்கள் பெரியோர்செய்தபுண்ணியந்தான்
என்றுசொல்லக்கேட்டு யெழுந்தானேநீன்முகனும்

நீன்முகராசன் அல்லியின்மேற் படையெடுத்தல்.

ஆடாதுதவரே அழையுங்கள்மந்திரியை
இந்தட்சணமே கூடாரமபோடுமென்றான்
இன்றுவெளிகூடாரம் இயலுடனேபோடுமென்றான்
பாளையங்களுள்ளதெல்லாம பயணமிட்டுவாருமென
சண்டைகொடிபோட்டுச் சண்டைமுரசறையுமென்றான்
தேரையலங்கரித்துச் சீக்கிரமாய்வாருமென்றான்
ஆறுபிரமந்திரி யனைவரும்பயணமென்றான்
காலாள்பரிசேனை கடுகியேபயணமென்றான்
ஆராயிரம்பாண்டியரை அதம்பண்ணிபபோட்டுவிட்டு
அல்லியெனும்பெண்ணை அரைநொடியிற்பிடித்துவந்து
தலைபோடிபண்ணியே தம்பலச்சமக்கவைப்பேன்
எண்ணியிட்டவென்தலைக்கே இயல்பாயரைப்பிடுவேன்
இப்போதுஸ்நானமா யாடுவேனபிஷேகம்
என்றுளழுந்தானே இயல்புள்ளநீன்முகனும்
கட்டினதுகச்சையல்ல கைதவிசேவிலுமல்ல
முகத்தினிலேமீசையல்ல முன்கட்டுசிலையல்ல

தலையிலேபாகையல்ல தரித்தநூலுடையல்ல
என்றவனும்மார்பைதட்டி எழுந்தானேநீன்முகனும்
மூத்திருருமாலை மூசமமுகாய்த்தான்கமுட்டி
அம்புலில்லுதாவெடுத்தான் அம்புறாதூணிமுதகணிந்து
கருங்கச்சைதானணிந்தான் கூத்திவாள்தோளிலிட்டான்
தேரைசுற்றிநமஸ்கரித்து தேரின்மேலேறினானே
ஏறினார்தேர்மேலே எடுத்தார்நெரிகுடைகள்
கானல்தனக்கெடுத்தார் கறுப்புநல்லகூடாரம்
வெய்யலுக்கெடுத்தார்கள் வெள்ளைநல்லகூடாரம்
கறுப்புநிசான்செகப்புநிசான் கலந்துபறக்குது
அடிபடுதாரைமுரசு அனைவருங்கிடுகிடென்ன
கோடைகாலத்திடிபோலே குமுறுதேபேரிகைகள்
வெண்கலபேரிகைகள் விருதுமுழக்கமுடன்
அமரதருமசமரதரும் அஸ்திராயவருகிறார்கள்
கலிங்கர்தெலுங்கருடன் கன்னடர்வருகிறார்கள்
துலுக்கர்தெலுங்கருடன் சோனகரும்வருகிறார்கள்
வன்னியரும்சகுனியரும் மராட்டியரும்வருகிறார்கள்
வருகின்றசனங்களால் மட்டுமிதங்களில்லை
கொக்குவெளுத்ததுபோற் குடமல்லிபூத்ததுபோல்
வானங்கவிந்ததுபோல் மல்லிகைபூத்ததுபோல்
நீன்முகன்சேனையெல்லாம் நெருங்கிவருகிறதுபோல்
செந்தூளெழும்புவது சிவலோகங்கப்புகுது
கருந்தூளெழும்புகுது கதிரோனைக்கப்பிற்று
கோட்டைகடந்து கொப்பெனவேவருகிறார்கள்
அப்போதுபாண்டியர்கள் அறிந்தார்கள்சேனைதன்னை
நீன்முகன்வருஞ்சேதி நிமிஷத்திற்றானறிந்தார்
ஐயோமகனேயென்று அலறலுற்றார்பாண்டியர்கள்
தவம்பணணிப்பெற்றோமே தவக்குலையநாளாச்சே
பாரதவம்நாங்கள்செய்து பாலகியைப்பெற்றோமே
நீன்முகன்கையாலே நீமடியநாளாச்சே
வருகிறான்நீன்முகனும் மட்டில்லாச்சேனையுடன்
என்னசெய்வோம்மகளேயென்று இடிவிழுந்துதானழுவார்
அல்லிப்பெருமாளும் ஆரணங்குதான்கேட்டு
அஞ்சாதேயையமாரே அவனைபலிகொண்டிடுவேன்
மாண்டிடுவேனென்று மனதில்நினைக்கவேண்டாம்
செத்துமடிவேனென்று சிந்தையில்நினைக்கவேண்டாம்
அரைநாழிக்குள்ளேயவன் ஆங்காரயநானறிவேன்
என்சமர்த்தைப்பாருமென்று எழுந்தாளேயல்லியரும்
அல்லியம்மாள்சொக்கரையும் அம்மனைபுந்தொழுது வரம்பெற்றது.
அல்லிக்குள முழுதும் அலர்தாமரைபூவெடுத்து
சொக்கரதுவாலயத்தில் சுந்தரியும்போய்புகுந்து

கோவில்வலம்வந்து கும்பிட்டுத்தெண்டனிட்டு
கொண்டுவந்தபூமலரால் கொம்பனையும்பூசைசெய்து
ஒருவர்-வயிற்றிற்பிறவாமல் வன்கொடுமைசெய்யாமல்
குடலிற்பிறவாமல் குலக்கொடுமைசெய்யாமல்
அல்லியிஷ்டமென்னை ஆச்சியமாய்ப்பெற்றதாய்
பொற்றாமரையிலேதான் பிறப்பித்தாய்சுவாமியே
நீன்முகனைக்கொல்லவேணும நீலிப்பட்டங்கட்டவேணும்
மாற்றானைக்கொல்லவேணும வையகத்தையாளவேணும்
வாழ்த்தியேகைகொடம்மா மந்திரவாள்கைகொடம்மா
என்றுவணங்கியே இரங்கிநமஸ்கரித்தாள்
மாவிகைகர்சொக்கலிங்கம் மனதுமிகக்களித்து
அகிலாண்டநாயகியாள் அங்கயற்கண்மனமகிழ்ந்து
மதுரைமீனாட்சியுந்தான் மனதுமிகமகிழ்ந்து
மச்சுரதங்கொடுத்தாள் மந்திரவாள்கைகொடுத்தாள்
வாழ்த்தியேகைகொடுத்தாள் வெண்ணீறுமள்ளிவிட்டாள்
வர்ணலட்சந்தூதர்களை மகாதேவர்தந்துவிட்டார்
அல்லியர்க்குத்துணையாக அநேகம்பேர்வந்துவிட்டார்

அல்லியரசாணி நீன்முகனைச் சங்கரித்தது.

காலாளுஞ்சேனைகளுஞ் சடிதியேபயணமாச்சு
தேரைச்சுற்றித்தெண்டனிட்டு தேரின்மீதேறினளே
அம்புவில்லைபிடித்து அச்சரதந்திரும்பிவிட்டாள்
தேவதுந்துமிமுழங்கத் தேன்மொழியாள்வருகிறாளே
சித்திரதேருஞ்செருக்களத்தேவருகிறதே
வந்துவளைத்தாளே வல்லிடிபோலல்லியரும்
வில்வளைத்துநாரிபூட்டி விலக்குணத்தொனித்தாள்
மாரிச்சரம்பொழிந்தாள் மகாசேனையுள்ளவர்மேல்
தொட்டாளேவில்லுதனை சொரிந்துவிட்டாள்பயணமதை
விட்டாள்சரபாணம் மேனியெல்லாந்தான்மறைய
யானைசேனைபரிவாரம் அடங்கலுங்கொல்லலுற்றாள்
யானைத்தலைகளெல்லாம் ஓலமிட்டுகீழ்விழவே
குதிரைத்தலைகளெல்லாம் கொக்கரித்துக்கீழ்விழவே
யானைமேலிருந்தவர்கள் அபயமிட்டுக்கீழ்விழவே
ஒட்டகத்தின்மீதிருந்தோர் ஓலமிட்டுக்கீழ்விழவே
குதிரைமேலிருந்தவர்கள் சொக்கரித்துமண்ணைக்கவ்வ
தெங்கவங்காய்போலாக சேனைத்தலையுருளவிட்டான்
பனங்காயைப்போலாக பார்தனிதுருளவிட்டாள்
செண்டுசெண்டாவேணதலை சேனைத்தலையுருளவிட்டாள்
அறுந்தலைகளெல்லாம் அம்மானையாகுது
ஆலைபடுங்கரும்புபோல அரைத்தாசம்பிழிந்தாள்
கரும்புக்கரணைபோல கண்டித்தாள்வேணதலை

மதம்பட்டயானைகள்தான் மடுவைகலக்கினாற்போல்
குட்டிமதயானை குளங்கலக்கிவிட்டதுபோல்
வெள்ளரிபில்சந்தனத்தை கூட்டிவழிந்ததுபோல்
நீன்முகன்சேனையெல்லாம் கிர்த்தாளிபண்ணலுற்றான்
பிடாரியார்கோவிலுக்கு பலிகொடுக்கும்பாவனைபோல்
அம்மையார்கோவிலுக்கு ஆடுவெட்டும்பாவனைபோல்
அரைநாழிக்குள்ளே அதம்பண்ணாள்பாளையத்தை
சண்டைபண்ணமாட்டாமற் றளர்ந்தோடிப்போனார்கள்
பண்டாரமென்பாரும் பரதேசியென்பாரும்
நாமத்தைக்காண்பித்து நான்தாதனென்பாரும்
பூணூலைக்காண்பித்து பிராமணனென்பாரும்
சண்டைக்குவல்லையென்று சலாஞ்செய்தோடுவாரும்
தண்ணீர்தண்ணீரென்று தவிக்குதுபாளையங்கள்
வடுகரெல்லாம்நீளென்பார் வன்றமிழர்தண்ணீரென்பார்
துலுக்கரெல்லாம்பாணியென்று சொல்லிப்புலம்புகிறார்
இவ்விதமாய்ப்பாளையத்தை இரக்ஷித்தாளல்லியரும்
நீன்முகராஜனண்டை நேரிழையும்வந்தெதிர்த்தாள்
ஆடாநீன்முகனே அறிவுகெட்டபாதகனே
வெட்டிப்பயலேநீ வீரியமுனக்கேண்டா
தம்பலவட்டிலேங்காம் தாதிபெற்றமகளூரே
மதுரம்புளியாமா வைகாசிதையாமா
எருதுபசுவாமா வெதிர்த்துவந்தாய்யாண்பிள்ளையாய்
உன்னைக்கொடுப்பேனே உனக்குமொருசேவகமா
கொசுவுபார்த்தாமோ கூடப்பாக்குமோ
உயரப்பார்த்தாலு மூர்க்குருவிபருந்தாமோ
அணிப்பிள்ளையசக்கினால் மான்குட்டிவிழுமோடா
ஓதிபெருத்தால்தூணுமோ ஒட்டாங்கச்சிமுலையாமோ
உன்னை-அதம்பண்ணும்படியாக அல்லியிலேநான்பிறந்தேன்
பொற்றாமரையிலே பிறப்பித்தாளீஸ்வரியாள்
உன்-தொண்டைக்குதூண்டிமுள்ளு தொப்புளுக்குவிராணி
உன்-மார்புக்குசெப்புலக்கை மண்டைக்குக்கோடாலி
உன்னை-சழிக்கவந்த காமாட்சியம்மனடா
உன்னை-ஊட்டியழுக்கவந்த வுண்மைபராஞ்சோதியடா
உன்-குலத்துக்தெய்வமடா ஓங்காரஅல்லியம்மாள்
அறியாமற்போனாயடா அறிவுகெட்டநாய்தலையா
அரைநாழிக்கொள்ளையிலே யமபுரஞ்சேர்க்கிறேன்பார்
கால்நாழிக்கொள்ளையிலே கைலாசஞ்சேர்க்கிறேன்பார்
ஒருநாழிக்கொள்ளையிலே உயிர்வதைசெய்கிறேன்பார்
தின்றவுப்புமாண்டதே தெருவுபாழாச்சுதே
காலனுருவாவந்த கைகாட்டியழைத்தானே
இயமனுருவாவந்து இக்கேவந்தென்றாரே

ஆகையினாலேயடா வமருக்குவந்தாவிட்டாய்
என்சமத்துஞ்சேவகமு மிப்போதறிவாய்பார்
தேரைத்தாரதநிவிட்டாள் செங்கையில்வில்லெடுத்தாள்
கேட்டார்தனீன்முகனுங் கெர்வமதிகமாகி
நெற்றிக்கண்ணீஸ்பரனார் திமிர்ந்துவிழிபார்த்தாற்போல்
வலதுபக்கமீசையது வல்லயம்போலேதுடிக்க
இடதுபக்கமீசையது ஈட்டிபோலத்துடிக்க
மீசைத்துடிக்கிறது மூன்கோபமாகிறது
சாணுண்டேபெண்ணேசமர்த்தாகப்பேசுறாய்
உன்சவுரியத்தாலிழப்பேன் கம்பலங்கடேந்தவைப்பேன்
என்வல்லமையைப்பாரென்று வளைத்தானேவில்லதனை
இவ்விருவர்தேருமிருவிலத்திற்றான்சுழல
மாலிக்கர்சொக்கனையும் மனதில்நினைத்தாளே
அங்கயற்கண்ணையகியை ஆதிபரமேஸ்வரியை
மனதில்நினைக்கலேலோ வாங்கிவிட்டான்பாணமது
பாவியந்தநீன்முகனும் பகரிச்சரம்பொழிந்தான்
விட்டானேசரபாணம் மெல்லிநல்லாள்மேனியிலே
கோடானகோடிபாணங் குறித்தானேநீன்முகனும்
அல்லிப்பெருமாளுக் கதிகமானகோபமுடன்
ஒன்றுக்குபத்தாக ஒருநூறாயிரமாம்
சரமேற்சரம்பொழிந்தாள் சாமர்த்தியமுள்ளகன்னி
வாய்வினதுஅஸ்திரங்கள் வருணனதுஅஸ்திரங்கள்
திவ்யமுள்ளஅஸ்திரங்கள் தீர்க்கமுள்ளஅஸ்திரங்கள்
சண்முகனஸ்திரமாம் சலந்திரனஸ்திரமாம்
மகாதேவனஸ்திரமாம் பார்வதியஸ்திரமாம்
வச்சிரயஸ்திரமா மகுடநல்லஅஸ்திரமாம்
இடியினதுஅஸ்திரமா நவசந்திரஅஸ்திரமாம்
இராமசந்திரஅஸ்திரமாம் ரவச்சக்ரஅஸ்திரமாம்
சூரியஅஸ்திரமாம் சுப்பிரமணிஅஸ்திரமாம்
கார்த்திகைமாதத்திற் கனத்தமழைபெய்ததுபோல்
ஐப்பசிமாதந்தன்னி லடர்ந்தமழைபெய்ததுபோல்
சோனைமழைகளுரு சொரிந்தாற்போற்றாக்கிவிட்டார்
விட்டதொருபாணமது மட்டுமிதங்களில்லை
நான்குநாள்மட்டு நல்லசண்டைபண்ணுகிறார்
விற்பிடித்தகைகளது மெத்தசிவப்பேறிற்று
அம்புபிடித்தகைகளது அல்லிப்பூவருணமாச்சு
நெல்லிப்பழம்போலே நெருங்கிற்றுகொப்பளங்கள்
இந்தவிதமாக இருவர்சண்டைபண்ணினார்கள்
அப்போதுஅல்லியம்மா லம்மனைதோத்தரித்து
இடியாஸ்திரமெடுத்து இந்திராயுதந்தானுமிட்டு
மார்புரளவாங்கியல்லோ தோளபுரளதான்கொடுத்தாள்

கைசருமமொருபயபரிய வந்துவிழுந்தனவே
தேருமுடைந்தனவே செம்புரவிசெத்தனவே
சட்டைதமான்வர்சிரப்பாய் தவிடுபொடியாயினவே
சல்லடைக்கண்போலே சரிரங்கள்தொளையாகி
பதாதியாய்நின்றனே பராக்கிரமநீன்முகனும்
எடுத்தான்வளைதடியை எற்றினன்கேடயத்தை
கண்டாளே அல்லியம்மாள் கனத்தநல்லகோபமுடன்
கேடயமும்வாளெடுத்து கெர்ச்சித்துக்கிழ்விழுந்து
எலிகண்டபுலியதுபோல் ளெழும்பினாளல்லியம்மாள்
பசுகண்டபுலியதுபோல் பாய்ந்தானேநீன்முகனும்
யானைகண்டசிங்கம்போ லல்லியெழும்பினளே
கொக்குகண்டராசாபோற் குதித்தானேநீன்முகனும்
மானைக்கண்டசிங்கிபோலே வாறளேயல்லியம்மாள்
உன்னைவிடுவேனென்று உன்மனதிலெண்ணாதே
நீன்முகாஉன்தலையை நிமிஷத்தில்வாங்குவேன்பார்
இடசாரிவலசாரியா யிருவருஞ்சுழலுகின்றார்
சக்கரஞ்சுழல்வதுபோற் சமர்த்தர்சுழலுகின்றார்
வண்டுதும்பிபோலாக வட்டமிட்டகருடனைப்போல்
முன்கந்துபாய்ந்தல்லவோ முதுகின்மேல்வெட்டுவாளாம்
தட்டிரிதறிநிற்பான் தாக்குவானல்லியரை
எமனுமியமனைப்போல் இந்திரனுமிந்திரனு
மலையுமலைபோலே வந்தெதிர்த்தபாவனைபோல்
நான்குநாழிகைமட்டும் நல்லசண்டைபண்ணினார்கள்
பொற்றாமரைதனிலே பிறந்தெடுத்தயல்லியரும்
ஆலவாய்சொக்கரென்னு மாண்டவனைத்தானினைந்து
மூன்சுந்துபின்கந்து முப்பத்திரண்டுகந்து
பக்கவளையாகவந்து யாச்சலுடனெழும்பி
வீசினாள்வாளாலே வேறிரண்டுதுண்டாச்சு
கரும்புகரணையைபோற் கண்டிக்கத்தான்விழுந்தாள்
எதிரூர்தேர்மேலே எடுத்தார்நெடுங்குடைகள்
நீன்முகன்விழுந்தானென்று நிசங்குதான்கொடுத்தாள்
தேரைத்திருப்பிவந்தாள் தேன்மொழியாளல்லியம்மாள்
நீன்முகன்மார்மீதில் நிசேரதமோட்டினளே
செயங்கள்செயங்களென்று செயபேரியடித்துவந்தாள்

அல்லியம்மாள் மதுரைக்குவந்து பட்டங்கட்டிக் கொண்டது.

எழுபதுசேனாபதி எல்லவருமோடிவந்தார்
தப்பிப்பிழைத்தவர்கள் சகலசேனைகளெல்லாம்
அல்லிப்பெருமாட்கு அடிபணிந்துதெண்டனிட்டார்
அடைக்கலமாச்சியென்று அடிபணிந்துதெண்டனிட்டார்

தேவதுந்துமிமுழங்கத் தேவர்பூமாரிபெய்ய
ஆறாயிரவரொன்று மையன்மார்தானழித்தார்
சந்தோஷப்பட்டார்கள் தார்வேந்தரோடிவந்தார்
மகள்தனைப்பார்த்தல்லோ மகிழ்ந்தார்கள்பாண்டியர்கள்
மதுரைத்தெருவனைத்தும் மகுடதோரணங்கட்டுமென்றார்
அரைநாழிக்குள்ளே அலங்கரித்தார்பட்டணத்தை
எங்குமலங்கரித்து எத்திசையுநீர்தெளித்து
வாழைமரங்கமுகுமரம் வாசலெல்லாகட்டார்கள்
சேனைகள்சூழ்ந்துவர செயபேரியடித்துவர
மேளங்களார்பரிக்க மெல்லிவருகுறாளே
மதுரைத்தெருவைச்சுற்றி மாளிகையில்வந்தார்கள்
சிங்காதனத்தின்மீ தேறினாள்தேன்மொழியாள்
ஆறாயிரம்பாண்டியரா மையன்மாரானவரும்
பட்டந்தரித்தார்கள் பத்தினியாளல்லியர்க்கு
செங்கோலும்பட்டமுடன் துரைத்தனமுந்தந்தார்கள்
பொம்மையிருநாகட்டி பூதக்கலைகட்டிவைத்தார்
அல்லிகொடிகட்டி அரசுநிலையாளுகிறாள்
மதுரையம்பத்தாறுகாதம் மாதுமையாளாளுகிறாள்
ஆண்பட்டங்கட்டியே அரசுநிலையாளுகிறாள்
பெண்பட்டங்கட்டியே பூமியரசாளுகிறாள்
இவ்விதமாக அல்லியரசாண்டிருந்தாள்
இப்படியாகவேதான் இருந்தரசாளுகையில்
அப்போதருச்சுனனும் ஆறுலழகுமன்னன்
இந்திரபுரிபட்டணத்தில் அனந்தத்திருடரவர்
பசுதிருடிப்போனசேதி பார்த்திபன்தானறிந்து
அம்மையெடுக்கவென்று அரண்மனையிற்போய்புகுந்தான்
எழுநிலையின்மேறு மின்பமையேறினாரும்
தருமருந்துரோபதையுஞ் சருவிவிளையாடையிலே
குங்குமப்பூமேடையிலே கூடியுறவாடினார்கள்
கலந்திருந்தவர்கள் தன்னைக் கண்ணாலேகண்டுவிட்டான்
முன்னிட்டகாலவன் பின்னாகவாங்கினனே
மந்தாரைக்குந்தியரை மாதாவைதேடிவந்தான்
ஆச்சியர்கள்பாத மடிவணங்கித்தெண்டனிட்டான்
வாழ்த்திவிடைகொடுத்து வருணித்தாக்குந்தியம்மாள்
ஆச்சியரேஎன்தாயே அடியேனொருவார்த்தை
அண்ணனுந்தேவியரு மன்பாசமெத்தையின்மேல்
கலந்துவிளையாடுவதைக் கண்ணாலேகண்டேனம்மா
சருவிமையலாகையிலே சடுதியில்நான்கண்டேன்
பார்த்தபடியினாலே பாவம்வந்துசேர்ந்ததம்மா
ஆகாதபாவத்திற்கு ஆளானேனாச்சியரே
பொல்லாதபாவம்வந்திப் போதுபலித்ததம்மா

இப்பாதம்நீர்வதற்கு எத்தலங்களும்பார்த்து
துங்கபத்திரிகோதாவரி யமுனைசரஸ்வதியாம்
காசிஸ்நானஞ்செய்யவேண்டும் கனபாவம்தீர்க்கவேண்டும்
பரஸ்தலங்களெல்லாம் பார்த்துவருகிறேன்யான்
சிவஸ்தலம்விஷ்ணுஸ்தலம் தெரிசனமேசெய்வேன்யான்
கால்கண்டதூரமெல்லாங் கடுகத்திரிந்துவாரேன்
போகவேணுமென்று பொன்னடியைத்தெண்டனிட்டான்
அவ்வார்த்தைதான்கேட்டு அழுதுபுலம்பலுற்றாள்
உன்னையான்பாராமல் ஒருநிமிஷம்நிற்கமாட்டேன்
பாராதிருப்பதற்கும் பாவிமனம்வருமோ
செத்துமடிவேநான் செலவழிந்துபோலேனென்றாள்
அழுதுபுலம்பலுற்று ள்ராணம்குருகுந்தியம்மாள்
அழுதகுரல்கேட்டு அத்தருமராசர்வந்தார்
சந்தனவடிவழகர் தருமராசர்வந்துவிட்டார்
ஏதுக்கழுவதுதா னென்தாயேசொல்லுமென்றார்
அர்ச்சுனன்சொன்னதெல்லா மாச்சியருந்தாமுரைத்தார்
அவ்வார்த்தைகேட்டு அருண்மைந்தர்நொந்துமனம்
சொற்பேச்சுக்கேளானே சுந்தரப்பூமுடியான்
என்வார்த்தைகேட்கானே இளவிஜயராசனவன்
ஆரைநினைத்தானென்றால் அளவற்றசிந்தையிலே
எவரைநினைத்தானென்றால் இன்பமுள்ளசிந்தையிலே
அடியளந்தமாயவரே ஆதிமூலம்வாருமென்றார்
இவ்வேளையிச்சமய மிங்கேவாசுவாமியென்றார்
தருமர்நினைத்ததைச் சுவாமியறிந்து
வட்டமிடுங்கருடனேறி ஸ்ரீராமர்வந்துவிட்டார்
காடுசெடிதாண்டி கரியமலைதான்தாண்டி
ஆறுசுனைதாண்டி அநேகவனந்தான்தாண்டி
சந்தனவடிவழகர் தருமரண்டைவந்துவிட்டார்
வாகனம்விட்டிறங்கி வந்துசரணமிட்டார்
என்னையழைத்ததுதா னேதுகருமமென்றார்
சிம்மாதனத்தின்மீதில் ஸ்ரீராமர்வீற்றிருந்தார்
இட்டசிம்மாதனத்தி லெம்பெருமாள்வீற்றிருந்தார்
சந்தனவடிவழகர் தருமராசரேதுரைப்பார்
ஆணழகுமன்னன் அருச்சுனராசனவன்
தீர்த்தயாத்திரைபோகச் சிந்தையில்நினைத்துக்கொண்டு
காசியாத்திரைபோகக் கருத்தில்நினைத்தானே
ஆர்சொல்லுங்கேளானென்று அருச்சுனன்போகலுற்றான்
தனியேயனுப்புதற்குச் சற்றும்மனந்தோணவில்லை
அர்ச்சுனர்க்குத்துணையாக அரிராமர்போய்வாரும்
கூடத்துணைபோய்நாள் கோபாலப்பெருமானே

கும்பிடுந்தெய்வமும்நீர் குலத்திராமமும்நீர்
உன்னையேநம்பிறு லுயிர்கொண்டுலாவுகிறேன்
ஆரைச்சதமென்பேன் அன்னியரைத்தஞ்சமென்பேன்
எவரைச்சதமென்பேன் இனியாரைத்தஞ்சமென்பேன்
உம்மையல்லால்வேறுதுணை யுண்டோயிம்மாநிலத்தில்
அருச்சுனன்மேல்சென்று அழைத்துமேவாருமையா
போய்வாருங்காவியென்றார் புகழ்பெற்றதருமலிங்கம்
மாதாவுங்குந்தியம்மாள் வாழ்த்திசெலவுதந்தாள்
மாயவருமருச்சுனனும் வணங்கியெழுந்திருந்து

மாயவனும் அருச்சுனனும் தீர்த்தயாத்திரை போகிறது.

காஷாயந்தானுடுத்திக் கடிகவேஷங்கொண்டார்கள்
சந்நியாசிவேஷங்கொண்டு தவமுனிபோல்வேஷம்பூண்டு
தருமபுரம்விமாபுரம் தானிபுரந்தாண்டி
இந்திரவனங்கடந்து இனியவனம்போகலுற்றார்
காடுசெடிதாண்டி கரியமலைதான்தாண்டி
விசுவநாதசுவாமியைத்தான் வேண்டிதரிசித்தார்
அங்கபத்திரிகேதாரி தொலைதீர்த்தமாடினார்கள்
யமுனைசரஸ்வதியு மின்பமுடன்ஸ்நானஞ்செய்தார்
மல்லிகார்ச்சுனம்வந்து மகேஸ்வரனைபூசைபண்ணார்
திருப்பதியேவந்தார்தெரிசனமேசெய்தார்கள்
வேடனதுஎச்சிலைத்தான் விரும்பியுண்டவித்தகனார்
கண்ணப்பனுக்குகாட்சிதந்த காளஸ்திரிவந்தார்கள்
காளத்திநாதனையுங் கண்டுதரிசித்தார்கள்
திருப்பாலைவனந்தனிலே சிறப்புடனேவந்தார்கள்
கபாலிசநாதனைப் பணிந்துதண்டஞ்செய்தார்கள்
வால்மீகர்பூசைசெய்த மருந்தீசனைத்தரிசித்தார்கள்
திருவொற்றியூரில்வந்து தியாகரைப்பூசித்தார்கள்
கழுக்கள்வலம்வந்து கடைநயினார்பூசைசெய்தார்
திருக்கழுகுன்றபதி தேடியேவந்தார்கள்
வேதகிரிலிங்கத்தை வேண்டித்தொழுதார்கள்
வன்றொரப்பெண்ணுக்காய்மணம்போறதென்றுசொல்லி
அன்றுமலையாளை யானைமுகாதேடிவந்தார்
அருணகிரிநாதனைத்தா னடிபணிந்துதெண்டனிட்டார்
பற்றிடங்கொண்டதொரு பொன்திருவாரூர்போனார்
தியாகரைத்தரிசிக்க திரும்பினாரிருவருமாய்
சிதம்பரந்தன்னிலேதான் சபாபதியைதரிசித்தார்
மாயவரங்கும்பகோணம் வந்துதரிசித்தார்கள்
ஸ்ரீரங்கம்வந்தலவோ இரங்கரைப்பூசித்தார்
ஜம்புகேஸ்வரத்திலேதான் ஜலகண்டனைதரிசித்தாராம்
இராமேஸ்வரத்திற்கு இருவருமாய்வந்தாரும்

சேதுபதிஸ்நானஞ்செய்து இராமலிங்கம்பூசைசெய்து
பிட்டுக்குமண்சுமந்த பித்தரைக்காணவென்று
மதுரைநகர்தேடி வருகிறாரிருவருமாய்
வருகிறவழிதனிலே வாணியனொருவனவன்
அல்லியரசாணி ஆரணங்குமாதிருக்கு
நித்தமவன்முத்தளிக்கும் நீதியுள்ளவாணியன்றான்
அன்றுடமுத்தி லளவுகுறைந்ததென்று
படிமுத்துகுறைந்ததென்று பதறிப்புலம்புகிறான்
வாயிலறைந்துகொண்டு மண்ணிற்புலம்புகிறான்
அழுதகுரல்கேட்டு அங்குவந்தாரிருவருமாய்
ஆடாதம்பியரே யழுதுபுலம்புவதேன்
உன்னை-பந்நீதம்பண்ணினவ ரார்காணும்வர்த்தகனே
அழுதுபுலம்புவதே னவ்வயணஞ்சொல்லுமென்றார்
அப்போதுவாணியனும் அங்கனமேயேதுசொல்வேன்
நீர்-வனந்திரியும்சந்நியாசி என்வார்த்தையதுவுங்களுக்கேன்
இராசாத்திவார்த்தையது இனியுரைக்கக்கூடாது
சொன்னேனேயாமாகில் சுகமாகப்போரீரோ
உங்களாலாவதென்ன ஊர்வழியேபோங்களென்றான்
அவ்வார்த்தைதான்கேட்டு அர்ச்சுனனுமேதுரைப்பார்
சொன்னால்குறைவுமுண்டோ சுகப்பெறுவீர்வாணியரே
பெரியோர்க்குச்சொன்னால் பிழையுண்டோவுந்தனுக்கு
உன்மனக்குறைபகற்றி வகைமானம்செய்திடுவோம்
அழுதவயணமதை அறியவுரையுமென்றார்
ஆனாற்கேள்சந்நியாசி அவ்வயணஞ்சொல்லுகிறேன்
ஐயாபெரியவரே ஆண்டவரேகேளுமையா
மானுமதுரைவாழுகின்ற தேன்மொழியாலல்லியரும்
ஆறுயிரம்பாண்டியர்க கரியதுரைமகளாம்
வயிற்றிற்பிறந்தபிள்ளை வன்கொடுமைசெய்ததில்லை
குடலிற்பிறந்தபிள்ளை குலக்கொடுமைசெய்ததில்லை
ஓடுகின்றதண்ணீரி லுள்ளேமணற்சேருமுண்டு
அடிக்கிறகாற்றதனி லலைகாற்றுரும்புமுண்டு
குன்றின்மணிக்காணுலும் கொஞ்சங்கருப்புமுண்டு
புருவங்கருப்பொழிய பின்னேகருப்புமில்லை
மயிரேகருப்பொழிய மற்றோர்கருப்புமில்லை
ஆறுயிரவருந்தா னரியமைந்தனில்லாமல்
மாளுவோமென்றுசொல்லி மலைமேல்தவமிருந்தார்
மாளாதேயென்றுசொல்லி மலரிலவதரித்தாள்
பொற்றாமரைதனிலே பிறந்தாளேமாதுகன்னி
அல்லியிலைமேலே யருமையாய்த்தவமிருந்து
அல்லியென்றுபேருமிட்டு ஆரணங்குபெண்வளர்த்தாள்

எழுபிராயமதி லெதிர்த்துவந்தனின்முகனை
நின்முகனைக்கொன்றவரு நீயெபட்டங்கொண்டாளே
பொம்மைமலிருதுகட்டிப் பூமியாசாளுகிறான்
அவ்வார்த்தைகேட்டு அர்ச்சுனனுமேதுரைப்பான்
அழகில்மிருந்தபெண்ணு அனழகாசொல்லுமென்றான்
அவளழகுபாவனையு மையாவேசொல்லுமென்றான்
எல்லார்தலைமயிரு மிருமுழமொருமுழமாம்
ஆரணங்குகூந்தலது அறுபத்துமூன்றுமுழம்
வண்டுமுதுகோடதுபோல் மயிர்கிறமாயிருக்கிறது
தேய்பிறையாயலைப்போல் திருநெற்றிக்கண்ணழகும்
வேப்பிலைசாயதுபோல் மேல்புருவத்தழகும்
கூரியமூக்கழகும் குளிர்ந்தமுகத்தழகும்
முத்துப்போல்பல்வரிசை முருக்கிலைபோல்செவ்விதழும்
நீர்முட்டைபோற்கண்ணழகும் நெரிந்தபுருவமுடன்
சங்குகழுத்தழகும் சாதிலிங்கமேனிகளும்
காமன்கடைந்ததுபோல் ககசத்திளமுலையும்
கற்பகச்சாயலைப்போல் கைத்தலமிரண்டழகும்
ஆலிலைபோலாக வமர்ந்ததிருவயரும்
சிங்கத்திடைபோற் சேர்ந்தயிடையழகும்
இளவாழைத்தண்டதுபோல் இரண்டுதொடையழகும்
முத்துசிப்பிபோலே முழங்காலிரண்டழகும்
சுவரிலெழுதலாகும் சித்திரம்போல்பார்க்கலாகும்
புத்தகம்சேர்ந்ததுபோல் புறங்காலிரண்டழகும்
வெரிற்பவளங்கள் மின்னுகிறகாந்தியவள்
கொம்பனையாள்வார்த்தையது குயில்கள்குரலோசை
காய்க்கும்பிராயமையா கன்னிகட்டுங்காலமையா
பூக்கும்பிராயமையா பிஞ்சுவிடுங்காலமையா
அவளைப்போலழகுடையா ளாருமில்லைவையகத்தில்
கட்டழகிமாதினுக்கு கலியாணமாச்சுதடா
மாலைப்பசுங்கிளியை மணமுகூர்த்தம்செய்தனரோ
ஆனால்கேள்சந்நியாசி அவ்வார்த்தைசொல்லுகிறேன்
கொள்ளவருமாப்பிளைக்கு கொரடாகொடுப்பேனென்றான்
ஆளவரும்சமபந்தியை யடிப்பேனேசெறுபந்தால்
முன்வாசற்படிதனிலே முச்சிகொட்டாகட்டிவைத்தால்
கல்யாணமென்பாரைக் கண்ணைப்பிடுங்கிடுவாள்
பாலைக்கறந்துதான் பட்டணத்தில்வந்தாக்கால்
பாக்கின்றகாகமது பாலுதுதலையெடுத்து
ஆண்காற்றடியாது அல்லியம்மாள்கோட்டைதனில்
ஏறுவதும்பெண்குதிரை யிருப்பதும்பெண்சேனை
பன்னிரண்டுவயதாச்சு பாலப்பிராயமையா
நான்-சீத்தங்கலமுத்தளப்பென நீதியுள்ளமாதினுக்கு

ஆகையினாலேதான் அழுதுபுலம்புகிறேன்
அன்றுடமுத்தி லளவுகுறைந்ததையா
வெட்டியெறிந்திடுவாள் வீரமணிவாளாலே
கொல்லவினைப்பாளே குடிகேடுவந்திடும்
ஆகையினாலேதா னழுதுபுலம்புகிறேன்
அலனுக்காதரவுசொல்லி யப்புறமேபோகையிலே

அர்ச்சுனன் அல்லியின்மேலாசைகொண்டது.

அருச்சுனராசனவன் அதிகமோகங்கொண்டானே
அப்புறம்நடக்கறியான் அர்ச்சுனராசனவன்
அல்லியின்மேலாசையது அதிகமோகங்கொண்டானே
காமவிகாரத்தால் களைதசங்கிப்போனானே
மன்மதனெய்தகணை மார்பைப்பிளக்கிறதே
மோகித்துத்தானுமிவன் மூர்ச்சைபட்டுப்போனானே
பாணங்களைந்தும் பட்டுநெஞ்சுருகிறதே
ஆயன்பெருமாளே அடியேனொருவார்த்தை
கட்டினவிருதுகளைக் கடுகவறுக்கவேணும்
எந்தவிதமானாலும மணமாலைசூட்டவேணும்
மாலையிட்டாலல்லாது மாயனேவருவதில்லை
செத்துமடிவேனையா செலவழிந்துபோவேனையா
அவ்வார்த்தைதான்கேட்டு அரிராமரேதுசொல்வார்
கட்டென்னகாவலென்ன காவலதிகாரமென்ன
ஆருயிரவர்ளாண்மயன்மார்சேனையென்ன
சேவகமிருந்ததொரு தேன்மொழியாளல்லியரை
கலியாணம்பண்ணுதற்குக் காண்டீபாஆருமோதான்
கொல்லவினைப்பாளே குடிகேடுவந்திடும்
செத்துமடிந்திடுவாய் செலவழிந்துபோய்விடுவாய்
தேசத்துபெண்களோடே சேனைபேர்விட்டாரே
சாதியிலொருபெண்ணை தாலிகட்டவைப்பேனடா
குலத்திலொருபெண்ணை சோலம்பண்ணிவைப்பேனடா
மாதுடையவார்த்தையை நீ போட்டுமறந்துவிடு
அல்லியரைமாலையிட லாகாதுஉன்னாலே
செத்துமடிவாயே செலவழிந்துமோவாயடா
நச்சுநச்சென்னாதே நாம்போவோம்ராசாவே
தீர்த்தயாத்திரைவந்து சேனாளாச்சுதடா
தருமரும்தம்பியரும் தவித்துப்லம்புவாரே
ஆரணியவாசம்வந்து அனேகநாளாச்சுதடா
என்றதுதான்கேட் டேதுசொல்வான்வாள்விசயன்
நான்-செத்துமடிந்தாலும் செலவழிந்துபோனாலும்
மாண்டுமடிந்தாலும் வைகுந்தஞ்சேர்ந்தாலும்
செத்தவிடந்தனிலே செங்கழுநீர்பூர்ப்பேன்

பஞ்சணைமெத்தையிலே படுக்கமலராவேன்
கொண்டைக்குப்பூவானேன் கொசவனத்திற்பையாவேன்
நெற்றிக்குப்பொட்டாவேன் நேர்விழிக்குமையாவேன்
மூக்குத்தாணிதொங்கலிலே முள்ளாகியொட்டுவேன்காண்
காலுக்குமிஞ்சாவேன் கைவளையல்நானுவேன்
மாலையிட்டாலல்லாது மாயவரேவருவதில்லை
கலியாணஞ்செய்துவையும் கரியமாலெம்பெருமாள்
உன்-புண்ணியத்தினாலேயான் பிழைக்கவழிபாருமையா
பாதம்பணிந்தானே பார்த்திபனப்போது
ஆயர்பெருமாளு மருளாளரேதுசொல்வார்
புத்திகெட்டஅர்ச்சுனனுவுன் பின்னாலேவந்தேனடா
பெண்களைப்பார்த்துநீ பேதைப்போல்புலம்புகிறாய்
காமக்கிளைகள்பட்டு களையாகக்கீழ்விழுந்தான்
ஆயன்பெருமாளு மாலோசனைபண்ணலுற்றார்
மாதுகன்னியல்லியரை வரவழைக்கவேணுமென்று
மாயமிருகங்களை மாயவனுருண்டுபண்ணார்
காட்டானைசிங்கங்களும் கரடிபுலியாளிகளும்
மானுமுயல்களுடன் மட்டற்றபன்றிகளும்
மயிலுங்குயிலன்னம் வண்ணவண்ணப்பட்சிகளும்
அநேகமிருகங்களை யசிராமருண்டுபண்ணார்
மதுரைக்குடிபடைகள் மகாசெனங்களத்தனையும்
காட்டில்வரத்தான்பயந்து கன்னிநல்லாள்முன்னேவந்தார்
அல்லியற்குதெண்டனிட்டு அடிபணிந்தேதுரைப்பார்
இத்தனைநாள்பிழைத்தோ மிடுக்கமில்லையென்றிருந்தோம்
என்னகுறைசெய்தோ மென்னவொண்ணாமிருகங்கள்
காட்டுக்குப்போவோமென்றால் கனத்தமிருகமம்மா
பொல்லாதமிருகங்கள் புலிகள்துரத்துதம்மா
எதாற்பிழைப்போமென் றெல்லாருமழுகலுற்றார்
அல்லிப்பெருமாளு மாரணங்கேதுரைப்பாள்

அல்லியரசாணி வேட்டைக்கு வருகிறது.

மிருகத்தால்மடிவேனென்று மிகவும்பயப்படாதே
வேட்டைக்குநான்போய் வேணமிருகமெல்லாம்
அரைநாழிக்குள்ளே மாண்மனைக்குப்போங்களென்றாள்
அந்தண்டபெண்களெல்லா மாண்மனைக்குப்போனபின்பு
ஆடிதாதிகளே அலங்காரச்செங்காலம்
வேட்டையாடும்பெண்களைநீ விரைந்தோடியழையுமென
குறவர்பெண்கள்மறவர்பெண்கள் கூட்டிவாதாதியரே
வல்லியர்பெண்களைநீ விரைந்தோடியழையுமென்றாள்
குதிரைமேல்சினிகட்குஞ் சொப்பெனவேதாதியென்றாள்
அவ்வார்த்தைதான்கேட் டாரணங்குதாதியவள்

இலாயத்தில்கட்டி வைத்து இருக்கின்றபுரவிதனில்
பாரசாரிபுரவிதன்னைப் பார்த்துடனே தானழைத்து
குதிரைகுளிப்பாட்டி கொப்பெனவே கடிவாளமிட்டு
நாலுகாற்குவண்டயமும் நடுக்கழுத்திற்கொலுசுகளாம்
பக்கத்திலங்குபடி படியவைத்தாரப்போது
கண்ணாடிசல்லிகட்டி கவரிமான்சுங்குவிட்டு
மூத்துத்தாராசலிக்க தூறு முன்னூலேதான்சொருகி
இமாம்பட்சியிறகுகளை இயலாகத்தான்சொருகி
குதிரையலங்கரித்து கொண்டுவந்தனுப்பிவிட்டார்
அல்லிப்பெருமாளு மப்போதேதானெழுந்து
அம்புவில்லுங்கைபிடித்து அம்புறுத்தூணிமுதுகணிந்து
பதினாயிரந்தோழிமார் பக்கம்புகூடவரு
ஆயிரம்யானைகுதிரை யல்லியுடன்பயணமாச்சு
வெள்ளித்தமுக்கடித்து வெங்கலக்கொம்பூதினார்கள்
பொன்னின்தமுக்கடித்து புறப்பட்டார்பெண்களெல்லாம்
வேட்டைநாய்சங்கிலியும் விருதுகட்டிவருகிறார்கள்
மானவலையம்வல்லயமும் வளைதடியுஞ்சக்கரமும்
இரட்டைக்குழாதுப்பாக்கி இருதோளிலிட்டார்கள்
காறசெருப்புந்தோற்சட்டையும் கையிலேவில்லாக்கோலும்
அனந்தவிதபெண்களெல்லாம் அல்லியரைசூழ்ந்துவர
அப்போது அல்லியரும் ஆரணங்குதானெழுந்து
புரவியருகில்வந்து பொற்கொடியாள்மாதுகன்னி
புரவிதனைச்சுற்றி போதவேசாணஞ்செய்தாள்
கழுத்துமயிர்பிடித்து கடிவாளங்கைபிடித்தாள்
தட்டினாள்புரவிதன்னைச் சடுதியிற்றானேறினாள்
அடிவயிற்றிற்கால்தட்ட அபாரியாயோடிற்று
ஆயிரம்புரவிகளும் அல்லியுடன்கூடவிட்டாள்
ஆயிரங்குதிரைகளில் அல்லியம்மாள்குதிரையது
காற்றாய்ப்பறந்து கடுகெனவேவருகிறது
பட்டணத்தைதான்கடந்து பாவனந்தான்வந்து
காட்டைவளைத்தார்கள் கருநாயைச்சூழவிட்டார்
செடியைவளைத்தார்கள் செந்நாயைச்சூழவிட்டார்
கோணக்கொம்பூதுவார்கள் கொப்பெனவேதமுக்கடிப்பார்
ஆயன்பெருமாளும் அர்ச்சுனனைத்தானெழுப்பி
வருகிறாள்காணல்லியரும் வனத்தனிலேவேட்டையாட

அல்லிக்கு அர்ச்சுனனம்பு பொருக்கித்தருவது.

அவள்-எய்கிறபாணமெல்லா மெழில்விசயாநீபொருக்கி
அம்புகள்தான்பொருக்கி அல்லியற்குநீகொடுத்து
வல்லமையாய்வந்தாலே மாலையிட்டுவைப்பேனென்றார்
அவ்வார்த்தைதான்கேட் டருச்சுனனுந்தானெழுந்தான்

மாயமிருகமது வந்ததே யல்லிமுன்பு
புள்ளிமான்றன்னைவே பொற்கொடியாள் தெண்டனிட்டாள்
மானைத்துரத்தியேதான் வருகிறாளல்லியரும்
காற்றாய்ப்பறந்ததுவே கானகத்தில்மானதுதான்
குதிரைசவாரியிட்டுக் கொப்பெனவே துரத்தலுற்றாள்
கூடத்தொடர்ந்தானே கோபாலன்மைத்துனனும்
அல்லியரசாணியவள் அங்குகளைத்ததெல்லாம்
பொறுக்கித்தருவானே போர்விஜயனர்ச்சுனனும்
காடெல்லாம்வேட்டையாடிக் களைத்தாளேயல்லியரும்
விடிவிடிநேரமது வெயிலாகவேளையிலே
ஆலமரத்தடியில் அங்கேயிறங்கிவிட்டார்
ஆரடி தாதிகளே யாசனம்போடுமென்றாள்
அரைத்துணியைத்தான்விரித்து அர்ச்சுனனுங்கீழ்ப்போட்டான்
குதிரையைகட்டுமென்று கொப்பெனவேதான்படுத்தாள்
அகில்மரத்தனடியே யணைத்துவைத்தார் குதிரைதன்னை
பாங்கியரே என்னுடைய பாதம்பிடியுமென்றாள்
அருச்சுனராசனுமே அல்லியருக்கெதிரேவந்து
அல்லியம்மாள் தன்பாத மருச்சுனனும்பிடிக்கலுற்றான்
கையால்பிடிக்கையிலே களையாறிச்சுற்றிக்கொண்டான்
ஆரடி தாதியரே யலங்காரத்தோழியரே
நீ-கற்றகதைதனிலே கதையொன்றுசொல்லுமென்றாள்

அருச்சுனன் அல்லிக்குக் கதைசொல்லல்.

அறுமுகமன்னனல்லியர்க்கதையுரைப்பான்
அல்லியரசாணி அம்மாதுரைசாணி
துருவாசர்மந்திரத்தால் குலங்கவர்ந்தவமலிகள்
சந்திரகுலம்விளங்கவந்த தர்மரவரைந்துபேர்கள்
பாண்டுராசன்பெற்றெடுத்த பஞ்சவர்களைவருண்டு
தருமருக்குநேரிளையான் தாக்குடையவீமராசன்
வீமருக்குநேரிளையான் வில்லாளருமர்ச்சுனன்றான்
நெருப்பிற்பிறந்தபெண்ணாம் நேரிழையாள்திரௌபதியை
எட்டாதவில்வளைத்து இளங்கொடியைமாலையிட்டான்
மீசைமுறுக்கழகன் விழியிற்கறுப்பழகன்
நாவதலில்நட்சத்திரம் நயனவிழிப்பார்வையுள்ளான்
தோளில்துளசிமாலை தொப்புளிலமுர்தகலசம்
பல்லிற்பரசவிளை பாதத்திற்செந்தாமரை
முதுகிலேமச்சரேகை முழங்காலில்முத்துமாணிக்கம்
ஸ்திரீலீலைமன்மதன்றான் சிறுபெண்கள்மணவாளன்
முன்னிலும்பின்னழகன் மோககன்னிமணவாளன்
பின்னிலும்முன்னழகன் பெண்கள்மணவாளன்
அர்ச்சுனனைப்போல அழகுடையாராருமில்லை
திக்குகல்லபாலகரை செயம்பண்ணுஞ்சேவகன்றான்

இனிபிறக்கும்பெண்களுக்கு எற்றமணவாளன்
என்றுசொல்லக்கேட்டு இளங்கொடியாளல்லியரும்
என்னகதைசொன்னாயென்று யேறமுகம்பார்த்தாள் காண்
மீசைகட்டும்பாவலையும் விழியழகுங்கண்டுவிட்டாள்

அருச்சுனன்பேரில் அல்லியரசாணி கோபித்தது.

நீ-ஆரடா ஆண்பிள்ளையென்றாயுதந்தானெடுத்தாள்
காற்றாய்ப்பறந்தானே கட்டழகனர்ச்சுனனும்
கத்தியெடுக்கையிலே காதவழியோடிவந்தான
நிற்கத்தரியாமல் நீலவர்ணர்பக்கம்வந்தார்
அங்கேநடந்தசேதி ஆண்டவர்க்குத்தானுரைத்தான்
கதைகளுஞ்சொன்னேன்யான் காலும்பிடித்தேனே
காலும்பிடித்தேனே கலைகள்தெளியவில்லை
கணையாழிமோதிரத்தைக் கழற்றியந்தேன்மாயவனே
மாலைப்பசுங்கிளியை மாலையிட்டுவையுமையா
ஆவியுருகிறதே ஆவசீவன்போகிறதே
ஐந்துபாணந்தைத்தலவோ அடியெனெஞ்சுருகிறதே
ஆறுருகுபாணமது அடியேன்மார்புருகிறதே
பஞ்சிலிட்டதீப்போல பதைத்துருகுதென்மனது
அவளைப்போலழகுடையா ளவனியிலேயானறியேன்
பார்த்துமறியேனையா படத்திலேயுங்கண்டதில்லை
ஈழத்துதச்சனவ னெழுதிவரவிட்டானோ
மேனாட்டுத்தச்சனவ னெழுதிவரவிட்டானோ
எதாய்சிருட்டித்தானோ இயலானபிரமதேவன்
அல்லியென்பான்மெல்லியென்பா னகந்தனிலேபெண்ணையென்பா
காமக்கணையாலே கலைதாங்கிப்போய்விட்டான் [ன்
மூர்ச்சைபட்டுவிழுந்தானே முடிமன்னனர்ச்சுனனும்
அப்போதுதாதிமா ரத்தனைபேர்தோழிகளும்
பாங்கிமார்தோழியரும் பத்தினிமாருமில்வந்தார்
ஆரடிதாதியரே அருகில்வந்தசெங்கமலம்
ஆரோவொருவனவன் அறையிறந்தவன்டி
காலும்பிடித்தானே கதைகளுரைத்தானே
தேடிப்பிடித்துவாரும் கண்டித்துப்போடுகிறேன்
ஆங்காரப்பட்டவனை ஆக்கினைகள்செய்யவேணும்
ஆயிரந்தோழிகளை யங்கெனவேதேடவிட்டார்
எங்கெங்குந்தேடியே யினியவிடமாராய்ந்து
கள்ளன்திருடனைத்தான் காணோமென்றுதானுரைத்தார்
பேயோபிசாசோதான் பின்தொடர்ந்துவந்ததம்மா
ஆளுருவாய்த்தோன்றிற்றோ ஆச்சரியமேயுந்தனுக்கு
அதனாற்பழுதில்லை ஆச்சரியமேபெருந்திருங்கள்
ஏறினாள்புரவியின்மே லனேகசனஞ்சூழ்ந்துவர
பாங்கியருந்தோழியரும் பக்கம்புடைசூழ

மாளிகைவாசலென்று மண்டபம்போய்ச்சேர்ந்தார்கள்

ஸ்ரீ கிருஷ்ணபகவான் படமெழுதிக்கட்டியதும் அர்ச்சுனன் தேடியதும்.

அப்போதுகாரியமா லாலோசனைகள்செய்து
அல்லியரைப்போலாக அழகுபடமெழுதி
படங்களெழுதியே பாரளந்தார்மாயவரும்
குளத்தங்கரையிலுற்ற கோகுமாரத்தன்னில்
உயர்ந்தமரத்தனிலே உளகளந்தார்கட்டிவைத்தார்
தன்னிலில்முல்தெரிய சுவாமியப்பேகட்டிவைத்தார்
அர்ச்சுனனைக்கட்டியே யரிராமர்தானெழுப்பி
காண்டீபா அர்ச்சுனனே கலியெனக்குவருகிறது
தண்ணீர்க்கொண்டுவந்து தந்தாயேயாமாகில்
மாலைபசுங்கிளியை மாலையிட்டுவைப்பேனடா
என்றுசொல்லக்கேட்டு எழுந்தானர்ச்சுனனும்
கமண்டலத்தைதானெடுத்து கடுகியேஓடலுற்றான்
வனத்திற்குளத்தேடி வருகிறவேயருச்சுனனும்
தன்னிலிலிறங்கும்போது தையல்படம்கண்டுவிட்டான்
தன்னிலில்போயிருக்கத் தருமோடிபெண்மயிலே
என்னிடம்புருஷனடி எங்கேகிடைப்பான்காண்
கட்டிலுண்டுமெத்தையுண்டு கால்பிடிக்கதாதியுண்டு
ஆடவென்றுஊஞ்சலுண்டு அமர்ந்திருக்கமெத்தையுண்டு
பந்தாடிசெண்டாடி பள்ளாங்குழலாடி
அம்மானையாடியேதா னமர்ந்துவீற்றிருப்பாய்
தேனேபசுங்கிளியே சிம்மாதனம்வீற்றிருப்பாய்
உன்சொல்லுமேலாக வுத்தமியேகாவிருப்பேன்
உன்றைசொன்னான் உழன்றுதிரிகிறேனே
உன்-மாயமருந்தாலே தாயைமறந்தேனே
அண்ணன்தம்பிமாரை யனைவரையும்நான்மறந்தேன்
காமக்கணையாலே கணைதாங்கிப்போகிறனடி
ஆசையெல்லாமுன்மேலே அலையுதடிஎன்சியன்
வாயைத்திறவாயோ மறுவார்த்தைசொல்லாயோ
தாயைத்திறவாயோ தனிவார்த்தைசொல்லாயோ
வாயைத்திறந்தாயானால் வச்சிரமுதிருமடி
வச்சிரமுதிர்ந்தாலே வாரியெடுக்கிறேண்டி
தாயைத்திறந்தாலே தங்கமுதிருமடி
தங்கமுதிர்ந்தாலே தடவியெடுக்கிறேண்டி
உன்-சித்திரவாய்திறந்து செப்பாயோஒருவார்த்தை
மார்போடேமார்பணைந்தால் மோகவிடாய்தீருமடி
தோளோடேதோளணைந்தால் சுகங்கள்தெரியுமடி
தான்-அத்தனைகேட்டும் இதங்கள்சொல்லாமேவன்யான்
கல்லுங்கரையுமடி கற்றாளுமிற்றவிழும்

உன்மனதுகளையவில்லை மாலைப்பசுங்கிளியே
தண்ணீரில்நானிறங்கி தழுவிப்படிப்பேண்டி
யென்றுகுதித்தாயே இளவிசயராசனவன்
மூர்சைப்பிடித்தவனு மூழ்கித்தடவலுற்றான்
சாமநேரமட்டாக தண்ணீரில்தடவினேனே
தவளையும்பாம்புகளும் தடவிவலித்தெடுத்தான்
அலுத்துசலித்தவனு மர்ச்சுனனும்வெளியில்வந்தான்
கரையில்மேல்வந்தவனுங் கட்டழகனேதுசொல்வான்
என்றனைமோசஞ்செய்து எங்கேபோனாளென்றறியேன்
போனவிடமறியேன் போய்பதுங்குந்தாவறியேன்
தங்குமிடமறியேன் சஞ்சரிக்குந்தாவறியேன்
என்றுவிசாரமிட்டு இரங்கியவன்பார்க்கையிலே
தண்ணீர்தெளிந்தபின்பு தையலரைப்பார்த்துவிட்டான்
இந்தநேரந்தடவினேனே யெங்கிருந்தாயேந்திழையே
என்னவித்தைதருத்தரங்க ளிளங்கொடியேகற்றவள்தான்
மாயமறிந்தவளோ மந்திரங்கள்கற்றவளோ
மலையாளவித்தைகள் மந்திரந்தைகற்றாயோ
எந்திழையேயுனைபிடிக்க என்கையாலாகாதோ
மறுபடியுங்குதித்தாரே மன்னன்துரைராசாவும்
அவ்வளவில்மாயவனார் அங்கேவேவோடிவந்தார்
படத்தையவிழ்த்தவரும் பாரளந்தார்போய்மறைந்தார்
நாலுநாழிகைமட்டும் நல்விசயராசதுரை
குட்டிமதயானை குளங்கலக்கிவிட்டதுபோல்
மூழ்கித்தடவினானே முடிமன்னராஜதுரை
அல்லியரைக்காணுமலைந்துவிசாரமிட்டான்
வந்துவெகுநேரமாச்சு மாயவரென்சொல்வாரோ
கனத்தவிசாரமிட்டு கமண்டலத்தில்நீர்முகந்து
மாயவனார்தன்னருகில் வந்தானேஅர்ச்சுனனும்
ஏன்காணுமர்ச்சுனரே இன்னேரமேதுசெய்தாய்
சாமநெடுநேரமாச்சு தண்ணீர்கொண்டுவீரப்போய்
என்னவதிசயமா இருந்தீர்காணர்ச்சுனரே
ஐயாபெருமாளே அடியேனொருவார்த்தை
தண்ணீர்மொள்ளப்போனபோது தையலரைக்கண்டேனையா
தண்ணீரிற்போக தரிசித்ததெந்தனுக்கு
குதித்துதடவினேன்யான் கொம்பனைக்காணுமல்

ஸ்ரீ கிருஷ்ணபகவான் சித்திரைசெய்யவும் அர்ச்சுனராசன் அல்லியரைத் தேடிப்போனது.

அவ்வார்த்தைதான்கேட் டரிராமரேதுசொல்வார்
அல்லியர்மேல்சித்தமது அபாவில்லையர்ச்சுனரே
கன்னியாய்வருகிறது காண்டீபாவெந்தனுக்கு
சித்திரைசெய்தபின்பு சேரிழையைபுந்தனுக்கு

மாலைப்பசுங்கிளியை மாலையிட்டேவைப்பேனடா
என்று-வாழ்விசயன்கொண்டைமேலே மாயவனார்தான்படுத்தார்
கள்ளக்குறட்டைவிட்டு சரியமால்தூங்குகிறார்
அப்போதுவாழ்விசய னருச்சுனனுமேதுசெய்தான்
சிரசைகழுகவிட்டுத் தோவிசன்தானெழுந்தான்
பாரக்கல்லைத்தூக்கிக்கொண்டு பார்த்திபன்வருகிறானே
தலைமேலேகல்போடத் தார்விசயன்தானினைத்தான்
என்றுகலங்கி எண்ணமிட்டுத்தானிருந்தார்
கல்லைவெடுத்துவந்து காண்டீபனர்ச்சுனனும்
தலைக்குபாரம்வைத்து சுவாமியைப்படுக்கவைத்தான்
அல்லிமேற்சிந்தைகொண்டு அர்ச்சுனனும்போகலுற்றான்
மதுரைக்குபோகவென்று மாதுதன்னைக்காணவென்று
காடுசெடிதாண்டி கடுகிவருகையிலே
அருச்சுனன்போனசேதி யறிந்துமேமாயவரும்
அருச்சுனராசனுக் கனர்த்தம்வந்துநேர்ந்ததென்று

ஸ்ரீகிருஷ்ணபகவான் குறத்தியுருக்கொண்டது.

மாயன்பெருமான் வடிவெடுத்தாரந்நேரம்
செக்கச்சிவலையாய்ச் சிறுபெண்குறத்தியானார்
அக்குமணிகொக்குமணி அழகானபாலமணி
பச்சைமணிபாலமணி பாங்காயலங்கரித்து
குறத்தியரைப்போலாகக் கொற்றவனார்வடிவெடுத்தார்
கண்டானேகுறத்தியரைக் கட்டழகனர்ச்சுனனும்
ஆச்சிக்குறத்தியடீயே யடியேன்சரணமென்றான்
கையார்த்துகுறியுரைக்க கட்டழகியல்லவிபா
மனதிலநினைத்தகுறி சொல்வாயோமாதாவே
எந்தவூருங்களது எனக்கறியச்சொல்லுமென்றான்
தினதெக்கிறு தினதெந்திறு தினதெந்திறு தினனு
தெனனுநிதா தினனு தினதெந்திறு தினனு.
எந்தனதுதிருநாடு கேட்கிறையோதம்பி
எத்தமுள்ளஇந்திரனு ராளுமெங்கள்நாடு
சந்திரர்கள்சூரியர்கள் தவம்புரியும்நாடு
தவமுனிகள்ரிஷிகளெல்லாம் வாழுமெங்கள்நாடு
கொச்சிமலைகுடகுமலை யெங்களதுநாடு
குமரேசர்வாழுமது மெங்களதுநாடு
பச்சைமலைபவழமலை யெங்களதுநாடு
பரமசிவன்வாழுவது மெங்களதுநாடு
வங்காளஞ்சிங்காள மராட்டியமெங்கள்நாடு
வளம்பாடிகுறியுரைக்க வந்தேனடாதம்பி
பசிகாலமானாலே பழங்கூறிவருவோம்
பரமசிவனுடையவட்குங் கைபார்க்குங்குறத்தி
ராமக்காள்லட்சுமக்காள் பொம்மக்காளென்பேர்

நலமதிற்குறுகுறியுரைப்போம் கட்டனையசய்நாங்கள்
உண்மையாய்க்குறியுரைப்போம் தன்மையில்லைதம்பி
உன்றனையென்றனை யென்றவனுஞ்சிரித்தான்

வேறு.

ஆனல்கேள்கட்டுவச்சி படியேனொருவார்த்தை
தெய்வக்குறத்தியென்றால் சொல்லுங்குறியெந்தனுக்கு
உண்மைக்குறியுரைத்தால் வுச்சிதங்கள் தருவேன்டி
காதிலிடுங்குண்டலமும் கையிற்பவுத்திரமும்
நான்-உடுத்துமுடைமான மூந்தனுக்குத்தருவேண்டி
கைபார்த்துக்குறியுரையும் கட்டமுருமெந்தனுக்கு
நாமக்குறத்தியவள் நலமாகவேதுசொல்வாள்
வண்மைக்குறத்தியவள் வாய்திறந்தேதுசொல்வாள்

குறத்தி அருச்சுனனுக்கு குறிசொன்னது குறம்.

தினதெந்தினு தினதெந்தினு தினதெந்தினு தினனு
தென்னுதினா தினனு தினதெந்தினு தினனு.

திங்கள்மதிபிறைசூடுஞ் சிவனுடையமகனே
திருத்தணிகைவாழ்முருகர் சேவையருள்வேண்டும்
மலையாளத்தஞ்சியம்மை வாக்கருளவேண்டும்
அலர்மேலுமங்கையரே மலர்மேலுஞ்சிந்தை
அனைவோரும்வந்துகுறி யன்புதரவேணும்
ஆகாயவாணிதுர்க்கை ஐயனூர்பிடாரி
அம்மைவள்ளியுமையவளு மினியகுறிசொல்லும்
பொங்கல்நயினுநம பொற்கொடியேதெய்வம்
பூவாடைகாரியம்மை புகழ்ந்துகுறிசொல்லும்
தெய்வங்களைநினைத்தாலே சிலிர்த்துக்கொள்ளுதடப்பு
திரேகமெல்லாமயிர்க்குச்சி பிடிக்கிறதேதம்பி
வாடைமணம்வீசுதடா ஐவர்வந்தாப்போல்
மயக்குகிறதென்னுடம்பை சன்னங்கொண்டதுபோல்
கூடைகொண்டுகவியுதடா கொற்றவனேயெனக்கு
கோலவிழிதுடிக்கிறது குறிகள்சொல்லக்கேளு
சந்திரகுலராசாக்கள் தருமரைவர்நீங்கள்
தரணிமுழுதாளுகின்ற தருமர்தம்பியுந்தான்
சிலைநுதலான்வடிவழகன் தேர்விஜயாநீதான்
தீர்த்தயாத்திரைபோகவென்று தோழனுடன்வந்தாய்
வடிவழகிசிலைநுதலாள் தென்மதுரைவாழும்
மாதரந்தஅல்லியின்மேல் மையல்கொண்டாய்நீயும்
ஆருயிரம்பாண்டியர்க்கு அரியதுரைமகளாம்
அல்லியின்மேலாசைகொண் டலைகின்றாய்நீயும்
பொய்யோதான்என்குறிகள் மெய்யோதான்புகல்வாய்
புண்ணியனேதர்மர்தம்பி பொறுமையுடன்சொல்வாய்
என்றவனைத்தான்பார்த்து இணைவிழியாள்மிரட்டி

இளங்குறத்தியைப்போலே யிடைதுவளநகைத்தாள்

வேறு.

மெய்தான்காணுமுயிரே விளம்புறேனுந்தனக்கு
கண்டதாகண்டாய்போல் கட்டிவச்சிசொல்லிவிட்டாய்
தெய்வக்குறத்திநீ தெளிவாகக்கட்டுவச்சி
உள்ளக்குறியெனக்கு வுத்தமியேயுரைத்தாய்
அல்லியரைமாலையிட்டு அழகுமணஞ்சூட்டுவேனோ
என்மனதுக்கேற்றபடி வருவாளோ அல்லியவள்
வன்மீதிவிச்சைகொண்டு இசைந்துவரப்பாருமம்மா
பாதம்பணிந்தானே பார்த்திபனருச்சுனனும்
ஆருள்கேள் நம்பியரே அல்லிவருவதற்கு
மூன்றுவிதக்குளிகையது முடிமன்னுநான் தருவேன்
அம்மருந்தைக்கைவாங்கி யல்லிபுரம்போய்ச்சேர்ந்து
தெய்வமொழியாள்பட்டணத்தில் திருக்குளத்திற்போய்ச்சேர்ந்து
நான்-தந்தமருந்தெடுத்து தண்ணீரில்நீயுரைத்தால்
மருந்துகளையுந் தவள்மனதுகளையுமோடா
குளிகைகளையும்போதவள் குணமுந்திரும்புமோடா
அல்லிமனம்வந்து அழகுமணஞ்செய்திடுவாள்
பொம்மக்காள்பேரைச்சொன்னால் நிம்மக்காள்நேர்ந்துவிடும்
ராமக்காள்பேரைச்சொல்ல லட்சுமக்காள்சேர்ந்துவிடும்
பொய்யல்லவென்மருந்து புண்ணியனேநான் தருவேன்
உத்தமுடையமான மூர்த்தியதைத்தாருமென்றாள்
சாதிலிங்குண்டலமும் கையில்பவித்திரமும்
கச்சைகளுந் தட்டிகளுங் கழட்டிக்கொடுத்தானே
இந்தமருந்துதான் பலியாமற்போனக்கால்
உன்னை-எங்கேகண்டுதேடுவே னுச்சியரேசொல்லுமென்றான்
ஆனாற்கேள் தம்பியரே பற்பமாய்ப்போச்சுதானால்
நாலுமலைக்கு நடுவேவடவெண்மலைதான்
ஏழுகுடிசைகளில் எதிர்குடிசை எந்தனது
ராமக்காள்பொம்மக்காள் லட்சுமக்காளென்றழைத்தால்
உன்னுடைமைதான் தருவே னுத்தமனே யஞ்சாதே
அருச்சுனன் தரித்திருந்த ஆபரணமுள்ளதெல்லாம்
பட்டுகுல்லா தட்டிகச்சை பலவிதவுடைமைகளும்
கழட்டிக்கொடுத்தான் கட்டழகனர்ச்சுனனும்
வாங்கிக்கொண்டாளே மலைக்குறத்திதனைப்போலே
ஆணழகராசதுரை அர்ச்சுனன்வழிநடந்தான்
உன்னமனமகிழ்ந்து வுத்தமனும்போகலுற்றான்
காடுசெடிதாண்டி கடந்துவந்தான்தென்மதுரை

அர்ச்சுனன் அல்லிபிறந்த திருக்குளத்தில் மருந்துரைத்தது.

பவளக்கட்டுபொய்கைதனில் படியிறங்கியபின்



வண்ணமருக்கெடுத்து தண்ணீரிறைக்கலுற்றான்   [பான்
அல்லியென்பான்மெல்லியென்பா னனந்தனிலேபெண்ணேயென்
வருவாளோ அல்லியென்று வாய்திறந்துபெண்ணேயென்பான்
மருந்துகளையும்போதவள் மன்துகளையாதோ
குளிகைகரையிலே குணமுந்திரும்பாதோ
சித்தமிரங்கியே தேடிவருவாளோ
எப்போமனம்வருமோ என்னருகில்வாராயோ
காமன்கணையாலே கனதாங்கிபோறேனே
மன்மதபாணமது மாரைப்பிளக்குதடி
சித்தசன்தொட்டகணை சிருமார்புருகுதடி
உன்னுசைகொண்டுநான் வுழன்றுதிரிகிறேனே
அல்லியென்பான்மெல்லியென்பா னனந்தனிலேபெண்ணேயென்று
வருவாளோ அல்லியென்பான் வாய்திறந்துபெண்ணேயென்பான்
வண்ணமருக்கெடுத்து தண்ணீரிலுறைக்கலுற்றான்
அல்லிப்பெருமா ளவளுடையதாதியர்கள்
ஆயிரந்தாதிமார்க ளாரணங்குதானெழுந்து
தங்கக்குடமெடுத்து தண்ணீர்க்குவருகலுற்றாள்
பவளக்கட்டுதிருக்குளத்தில் படியோரம்வந்தார்கள்
மருந்துரைக்குமவன்மைகளும் வார்த்தைகள்சொல்கிறதும்
அல்லியரையவிறதும் அவ்வார்த்தைகேட்டார்கள்
இடிவிழுவானசொன்னதெல்லா மெல்லவருங்கேட்டார்கள்
அல்லிப்பெருமானை யரசாளும்நாயகியை
வம்புதம்புஞ்சொல்வார்கள் மண்டலத்திலாருமில்லை
அல்லியென்றுபேர்சொன்ன லழகபிள்ளைவாய்மூடும்
ஆகட்டும்வார்த்தையெல்லா மாச்சியற்கேசொல்லவென்று
ஓட்டம்நடையுமாக ஓடிவந்தார்தாதியர்கள்
அல்லியம்மாள்முன்னாலே அடிபணிந்துதெண்டனிட்டார்
ஆர்பணிதாதியரே அறியவுரையுமென்றாள்
ஆர்பணியுமல்லநா மடியேன்திருப்பணிதான்
தங்கக்குடமெடுத்து தண்ணீர்க்குப்போனேனம்மா
பவளக்கட்டுகுளந்தனிலே படியிலொருவனம்மா
வண்ணமருந்துகளைத் தண்ணீரிலுரைக்கலுற்றான்
ஆகடியம்சொல்லுகிறான் அழும்புகளும்பேசுகிறான்
வம்புதம்பும்பேசுகிறான் வாய்பழுதஞ்சொல்லுகிறான்
காதாறக்கேட்டோமம்மா கனக்குலைந்துவந்தோமம்மா
அவ்வார்த்தைதான்கேட்டு அல்லிவெகுகோபமதாய்
எட்டிப்பழம்போலே இருகண்ணுந்தான்சிவந்து
செந்தலைநாகம்போற் சீறியவள்கோபமதாய்
எழுபிராயந்தனி லெதிர்த்துவந்தநின்முகனை
நீன்முகனைக்கொன்று நீல்பட்டமாளுகிறேன்
அடிபெண்ணேயல்லியென்பார் ஆருமொருவரில்லை

பொம்மவிருதுகட்டி பூமியரசாளுகிறேன்
பாலக்கறந்துதான் பட்டணத்தில்வைத்தாலும்
பறக்கின்றகாகமது பாலுதுதலையெடுத்து
ஐம்பத்தாறுகாதமுமென் னாக்கினைகள்மெத்தவுண்டு
அஞ்சாமல்வந்துமிங்கே யழும்புசொன்னாராடித்தான்
என்னவிதமாயவனை யாக்கினைகள்செய்திடுவோம்
என்றுமவள்கேட்க ஏதுசொல்வாள்பவளசேனை
கட்டும்விருதறுத்துக் கலியாணம்செய்வதற்கு
மண்டலத்துராசாவோ வானவரோதேவரோதான்
மணஞ்சூட்டவந்தவன்போல் மாதாவேகாண்கிறது
என்றதயோசனைக ளெண்ணியவள்மனதில்
அல்லிப்பெருமாள்தனக் காலோசனையேதுசொல்வாள்
விடுவிடுநேரத்திலே வெயிலானவேளையிலே
வெம்பாமணலிலே போட்டுபுறட்டுமென்றாள்
ஆகொடும்பாவிதனை ஆற்றில்புறட்டுமென்றாள்
சென்மமுருகியவன் செத்துமடிந்திடுவான்
ஆரடிதோழியரே ஆயிரம்பேர்வாருங்கள்
ஆற்றுமணல்தனிலே அவனைபுரட்டுங்கள்
வெம்பாமணல்தனிலே யிழுத்துபுரட்டுங்கள்
கட்டியுருட்டுங்கள் கள்ளன்திருடனைத்தான்
செத்துமடிந்தபின்பு சேதிவந்துசொல்லுமென்றாள்
அவ்வார்த்தைதான்கேட் டாயிரந்தோழியர்கள்

அருச்சுனற்கு அல்லியரசாணி முதல் தண்டனையிட்டது.

ஓட்டம்நடையுமாக ஓடிவந்தார்தாதியர்கள்
ஆயிரந்தோழிமார்க ளருச்சுனனை தானெடுத்தார்
ஆற்றுமணல்தனிலே அருச்சுனரைப்போடவைத்தார்
காண்டீபனர்ச்சுனற்கு கனமோசம்வருகுதென்று
ஆயன்பெருமாளும் யானைநினைக்கலுற்றார்
சூரியபகவானை திருமாலுந்தானினைத்தார்
கானலுரைக்கவேண்டாம காண்டீபனர்ச்சுனற்கு
அர்ச்சுனரைக்காருமென்று ஆயருந்தோத்தரித்தார்
அப்போதுதோழியர்க ளாற்றோரம்வந்துநின்று
ஆற்றின்மணலிற்போட் டருச்சுனரைப்புரட்டினார்கள்
கொற்றவனருச்சுனற்கு குளிர்ந்தசலம்போலிருக்கும்
ஆயிரந்தோழியற்கு மணல்கொண்டுவீசுதங்கே
நெல்லிப்பழம்போலே நெருங்கிற்றேகொப்பளங்கள்
அத்தண்டதோழிகளும் அலைகுலைந்தழுகிறார்
அப்போதருச்சுனனும் ஆனழகனேதுசொல்வான்
அல்லிபெரும்நாளுமா யமர்ந்துவிளையாட
மருவிவிளையாடுதற்கு மண்டபந்தானிலையோ
ஆற்றிலேவந்துநீ யமர்ந்துவிளையாடிருப்பாய்

எப்போது தான்வருவா ரென்றுகைதீர்வதற்கு
மனதுவருவதெப்போ மருவியணைவதெப்போ
இந்தமோகந்தீர சற்றேமனம்வருமோ
என்றுபுலம்புகிறு விசனமாயர்ச்சுனனும்
அப்போது தாதிமா ரரணைக்குமே துணைப்பாள்
அல்லியற்குதெண்டனிட்டு ஆணைக்குமே துலைப்பாள்
வெம்பாமனைதனிலே வைகவேபுறப்பட்டேனும்வாம்
ஆற்றுமணலில்போட்டு அருச்சுனனைப்புரட்டும்போது
எங்கள்சரீரமெல்லாஞ் சக்கம்பழம்போலச்சு
நெல்லிப்பழம்போல் நெருங்கிற்றேகொப்பளங்கள்
அவனுக்கு-வாட்டமில்லை தக்கமில்லை மாபாவியானவற்கு
அல்லியல்லியென்றுசொல்லி யலைகிறான்மாபாவி
உன்மேலெண்ணையாய் உருகிப்புலம்புகிறான்
அல்லிப்பெருமாளும் ஆணைக்குமேதுசொல்வாள்
வாரானுமுலைவதான் மருந்தல்போவினையில்
என்னமருந்தறிவான் இடிவிழுவான்பாவியவன்
எந்தவிதத்தாலே அவனைநாம்வெல்கிறது
பாங்கிகளில்கல்லவளாம் பவளசேடியதுசொல்வாள்
நாக்குமாரத்தில்போட்டு தூக்கிடச்சொல்லுமென்றாள்
செங்கமலத்தாதியரே தோழிபவளத்தான்பார்த்து
ஊருக்குமேற்காக ஒருகாதவழிதனிலே
நாக்குமாஞ்சொப்பனிட்டு தோழியேபோடுமென்றாள்

அருச்சுனருக்கு அல்லியிராண்டாவது தெண்டனையிட்டது.

அவ்வார்த்தைதான்கேட் டருகிருந்தசெங்கமலம்
திடுக்கென்றெழுந்திருந்து தோழிவருந்தானுமாக
தச்சன்மகளாரைத் தையலருந்தானுமாக
நாக்குமாஞ்சொப்பனிட்டு ஜோடித்துவந்தார்கள்
கொண்டுவந்துநாக்குமாக் கொப்பெலவேநட்டார்கள்
ஏணியுஞ்சாத்தி இணியகயிர்போட்டார்கள்
அர்ச்சுனராசாவை அங்கேயெடுத்துவந்தார்
சுற்றிவளைத்தார்கள் சூழ்ந்தார்கள் தாதியர்கள்
ஏணியேலேறுமென்றார் இவலசனமன்னவனை
அப்போதருச்சுனனும் மலைத்தானே துசொல்வான்
பார்த்துமறியேனடி பாருலகில்கண்டதில்லை
கண்டுமறியேனடி காதாரக்கேட்டதில்லை
போட்டுமறியேன்காண் புதிதாகத்தோணுது
எனக்குத்தெரியும்வகை இன்பமாய்சொல்லுங்கள்
ஏணிமேலேறி எடுத்துகயிர்பூட்டிக்கொள்
இந்தவிதமென்றுசொல்லி எங்களுக்குகாண்பியுங்கள்
அறியாதவெர்களுக்கு அறிப்படுத்துங்கள்
இவ்வார்த்தைதான்கேட் டெழுந்தாளேசெங்கமலம்

சூரனைகெட்டபாதகனே தெரியாதோவுன்னடத்தை
இதோபாருமென்றுசொல்லி ஏணிமேலேறினாளே

ஸ்ரீகிருஷ்ணமூர்த்தி பெருச்சாளிரூபங்கொண்டு
ஏணியைத் தள்ளிவிட்டது

அந்தசமயம்பார்த்தாரே அரிராமரெம்பெருமாள்
பெருச்சாளிபோலேவந்து புரட்டிவிட்டாரேணிதன்னை
சுருக்குவலித்துக்கொண்டு தொங்குகிறாள்தோழியவள்
காலையுதறிக்கொண்டு கண்விழிபிதுங்கிக்கொண்டாள்
நாவைவிழுத்துக்கொண்டு நல்லுயிர்தான்போச்சுதங்கே
செத்துமடிந்தாளே செங்கமலத்தோழியவள்
காண்டிபனருச்சுனரும் கட்டழகரேதுசொல்வார்
காலையுதறுவதுங் கண்பிதுங்கியிருப்பதுவும
நாக்கைபிதுங்கிக்கொண்டு நல்லவுஞ்சலாடுவதும்
இவ்வளவோசாஸ்திரங்களெனக்குத்தெரியவரும்
இனிமேல்தெரியவரும் பிராங்கிவாதோழியரே
ஐயையோதெய்வமென்றழுகிறார்தோழியரும்
ஓட்டம்நடையுமாக வோடிவந்தாராசியன்னை
மகுடத்தரச்சியரே மாதாவேநீர்கேளும்
தூக்குமரந்தனிலே தோழியவள்போடப்போன
செங்கமலத்தோழியவள் தூக்கில்மடிந்தாளே
அவ்வார்த்தைதான்கேட்டு அல்லிமனதுசோர்ந்து
பாங்கியிலும்நீகேளும் பவளசேனைநீகேளும்
என்னவிதமாக இவனைநாம்கொன்றிடலாம்
ஆரடிமந்திரியே ஆலோசனைசொல்லுமென்றாள்
அப்போதுபவளசேனை யாலோசனைசொல்லுகிறாள்

அர்ச்சுனனை மூன்றாந்தரங் காளிக்கு பலியிடச்செய்தது.

வடவாசல்செல்லியம்மாள் மாகாளியம்மனுக்கு
பொங்கலையிட்டுநீங்கள் பொலிபோட்டுவாருங்கள்
அவ்வார்த்தைதான்கேட்டு ஆயிரந்தோழிமார்கள்
சிக்காயுமெண்ணையுடன் தேங்காயுமிளநீரும்
புதுப்பானையரிசிகளும் புட்பமுஞ்சந்தனமும்
கருப்பூரஞ்சாம்பிராணி காளிக்குக்கொண்டுவந்தார்
ஆரடிதாதிகளே அழைத்துவாரவேச்சப்பெண்ணை
இவ்வளவில்தாதிமார்களிவர்முடுகியோடுகிறார்
ஆயன்பெருமானும் அவ்வார்த்தைதானறிந்தார்
கார்மேகவர்ணரும் காளிபண்டையோடிவந்தார்
வாருமம்மாதங்கையரே வார்த்தையொன்றுநீர்கேளும்
அல்லிப்பெருமானை அழகுமணஞ்சூட்டவென்று
காளையர்தஅர்ச்சுனனும் கன்னவேஷங்கொண்டுவந்தார்
அர்ச்சுனராசனென் றறியாமலல்லிபெரும்



காளியம்மாவுந்தனுக்கு காவெடுக்கசொல்லுதந்தார்
ஓச்சப்பெண்போலாக வுத்தமியேவாருமம்மா
பூசையானபிற்பாடு பொங்கலிட்டுதீர்ந்தபின்பு
மன்மேலேசன்னதம்மா யிந்தபெலிவேண்டேனென்பேன்
என்வார்த்தைவேண்டாமென் றுன்வார்த்தைகேட்பார்கள்
காலுரைததபாவலேபோல் நாயகமேமேயுரையும்
அர்ச்சுனராசனுக் கழிவுவந்ததானுக்கால்
வெற்றிமதயானை விமனுனைப்பிழைக்கவொட்டான்
வச்சிரகோபகெதையால் மண்டிபோட்டுதலையுடைப்பான்
கண்டாயுதமெடுத்து தாக்குடையவிமராசன்
காளியென்றும்பாராமல் கனத்தவுயிர்வாங்கிடுவான்
காளியற்குத்தானுரைத்துக் கரியமால்தானடந்தார்
ஓச்சப்பெண்போலாக வுகைளந்தாரவடிவெடுத்தார்
ஓரசுத்திவாசலிலே யட்காரந்திருந்தார்காண்
ஓட்டம்நடையாக வோடிவந்தார்தாதியர்கள்
கோவிலுக்குப்போகவேனும் குர்செடுத்துவாருமென்றார்
திறவுகோல்தானெடுந்துத் தேன்மொழியாள்போகலுற்றாள்
கடுகிமுடுகியே காளிகோயில்வந்தார்
கோயில்கதவுதன்னைக் குச்சிட்டுதான்திறந்தாள்
குளத்தில்முழுகிவந்து கொம்பனையைபூசைசெய்து
அபிஷேகஞ்செய்தலங்கா ளாங்காரக்காளியற்கு
சென்னலரிசிகொண்டு தேவியற்குபொங்கலிட்டார்
கோவில்திருவிளக்கை குறையாமலேற்றினார்கள்
தேங்காயுடைத்தார்கள் தீபதூபந்தான்கொடுத்தார்
அர்ச்சனைக்கூட்டிவந்து அம்மனுக்கெதிரேவைத்தார்
மண்பிறக்குமுன்பிறந்த வழக்காடும்நெல்லிபெல்லி
யுகம்பிறக்குமுன்பிறந்த வுத்தண்டபத்திரகாளி
காய்ந்தமழுவேந்துங் கர்த்தனிடதேவியரே
எரிந்தமழுவேந்துங் மீஸ்வரனார்தேவியரே
வடவாசல்செல்லியம்மாள் மனிதர்பெலியோர்வைகொள்ளும்
வசனிக்கும்போதையிலே வந்துவிடும்சந்தனங்கள்
ஓச்சப்பெண்மேலே யுதறுதெய்வமது
ஆன்காற்றறியாத அல்லிமலர்நாயகிக்கு
அவளுடையஎல்லைகாக்கு மாங்காரக்காளியல்லோ
மதுரையைகாத்திருக்கும் மண்ணுபிடாரியல்லோ
அல்லியருக்காகாது யெந்தனுக்குமாகாது
இப்படியான்வேண்டே னேர்வையில்லையெந்தனுக்கு
பெண்பலியீந்தாலே யிப்பவேயேர்வைகொள்வேன்
ஆண்பலியீந்தாலே யவர்த்தம்பண்ணிபோட்டிடுவேன்
மதுரைக்குடிபடையை மாளாபலிபோட்டிடுவேன்
இவ்வார்த்தைதான்கேட் டேதுசொல்வார்தாதியர்கள்

நீசொன்னவாக்கியங்கள் நிச்சயமுமாகாது
காளியம்மைவாசலிலே கம்கையுமைத்தகலே
ஐஸ்வரியாள்வாக்குரைந்தாள் எல்லோர்க்குநிச்சயங்கள்
என்றுபயமிருந்தார்கள் நியலான தாதியர்கள
அருந்தியப்பயந்தார்க ளல்லியிட்டமோடிவந்து
மருட்டத்துரைசியவள் வந்துதெண்டம்பண்ணினார்கள்
காளியற்குபூசைபண்ணி கனத்தபொங்கலிட்டோமம்மா
ஆண்பலிவேண்டாமென் றடியாள்சந்ததமாய்
அவளையுங்கும்பாமல் அம்மன்சொல்லவேண்டுமென்றோம்
அப்படியேகாளியம்மாள் ஆண்பலிகொள்ளேனென்றாள்
அல்லிப்பெருமாட் கான்காற்றுமாகாது
எந்தனுக்குமாகாது என்றுளேகாளியம்மன்
ஆண்பலிதந்தாலே யனைத்தும்பண்ணிவிடுவேவென்றாள்
மதுரைக்குடிபடையை மாளபலிகொள்வேனென்றாள்
இவ்வார்த்தைகேட்டவுடனேதுசொல்வாளல்லியம்மாள்
வானஞ்சுழல்வதற்கு மருந்துவித்தைகற்றவளோ
பூமிசுழல்வதற்கு பொடிகளறிந்தவளோ
என்னமறிந்திவா ளிடிவிழுவாளென்றறியேன்
எந்தவிதத்தாலே யேந்திழையைக்கொள்வோமடி
பாங்கியும்நல்ல பவளமேனியேதுரைப்பாள்
பூதக்கிடங்கிலே போட்டடையும்பாதகனை

அர்ச்சுனனுக்கு நான்காவது தெண்டனையிட்டது.

ஆடிதாதிகளே யலங்காரத்தோழிகளே
பூதக்கிடங்குகளிற் போட்டடையுமென்றுசொன்னாள்
எம்பெருமான்மேகவர்ணர் இவ்வயணந்தானறிந்தார்
பூதங்கள்தன்னருகே பெருமானுமோடிவந்தார்
மாயவனைக்கண்டவுடன் மயங்கிற்றேபூதமெல்லாம்
ஆரடாபூதங்களோ வலங்காரராட்சதரே
அர்ச்சுனனைக்கொண்டுவந்து அடைக்கவருவார்கள்
பார்த்திபனர்ச்சுனற்குப் பணிவிடைசெய்திடுங்கள்
சங்கித்தன்னுடனே சந்தோஷமாவைத்திடுங்கள்
அர்ச்சுனராசனுக்கு அழிவுவந்தானுக்கால்
வெற்றிமதயானை வீமராசன்தானறிந்தால்
தண்டாயுதமெடுத்து தாக்குடையவீமராசன்
வச்சிரகோபகதையினாலே மண்டியிட்டுத்தலையுடைப்பான்
பூதத்துக்குச்சொல்லியபின் பெருமாளும்போய்நடந்தார்
அப்போதுதாதிமார் அர்ச்சுனனைக்கூட்டிவந்தார்
பூதக்கிடங்குதனிற் போட்டடைத்தானர்ச்சுனனை
ஆர்காணும்பூதங்களே அல்லியம்மாளுத்தாரம்
பொல்லாதபாதகனை பலியதுகொண்டிடுங்கள்

இவளைப்பலிகொண்டு எடுத்துப்புசித்திடுங்கள்
தள்ளிக்கதவடைத்தார் சங்கிலியைப்பூட்டினார்கள்
முதுகிலேமச்சரேகை கண்டதேபூதமெல்லாம்
பஞ்சவர்வெத்தைகேட்டு பார்த்திபனைக்குந்தவைத்து
அத்தண்டபூதமெல்லாம் அர்ச்சுனற்குப்பணிகள்செய்யும்
கைபிடிக்கும்சிலபூதம் கால்பிடிக்கும்சிலகணங்கள்
பாதம்பிடிப்பதும் பாட்டுகளைப்பாடுவதும்
கூத்துகளாடுவதும் கொண்டாண்டிப்பதுவும்
தேர்விசையனர்ச்சுனற்கு சங்கீதம்பாடுவதும்
ஆடாதகேளிக்கையும் அரும்பவனிநாடகமும்
சங்கீதம்பார்த்துமே தார்விசயன்தானிருக்க
அல்லிப்பெருமாளின் அருகாகவேயோடிவந்து
சாஷ்டாங்கமாக சரணமுடனேதுசொல்வாள்
பூதக்கிடங்குகளில் போட்டடைத்தோம்பாதகனை
பூதப்பிசாசனைத்தும் போகப்பணிசெய்கிறதும்
பாதம்பிடிக்கிறதும் பணிவிடைகள்செய்கிறதும்
கூத்துகளாடிக்கொண்டானடிக்கிறதும்
பார்த்துவந்தோமாச்சியென்று பாதம்பணிந்தார்கள்
அல்லிப்பெருமாளு மாரணங்மேதுசொல்வாள்
என்னமருந்தறிவா னிடிவிழுவானென்றறியேன்
வானஞ்சுழல்வதற்கு மருந்தறிவான்சண்டாளன்
பூமிசுழல்வதற்குப் பொடியறிவான்சண்டாளன்
என்றுவிசாரமா யிருந்தாளே அல்லியம்மாள்
மாயன்பெருமாளு மலைராமரேதுசொல்வார்
அருச்சுனராசாவை அழைத்துவரவேணுமென்று
என்னவடிவெடுத்தா ரெம்பெருமாள்மேகவர்னர்

ஸ்ரீகிருஷ்ணபகவான் ஸ்திரீரூபங்கொண்டு

அர்ச்சுனனை யழைத்துப்போனது.

தெய்வப்பெண்போலே ஸ்ரீராமர்வடிவெடுத்தார்
செக்கச்செவலைபோலே தீவுக்கிளிபோலே
மின்னுகிறகாந்தியைப்போல் வேரிற்பவளம்போல்
காய்க்கும்பிராயம்போற் கன்னிகட்டும்பிராயமவள்
பூர்க்கும்பிராயமவள் பிஞ்சுவிடுங்காலமவள்
கொஞ்சும்வயதுகாண் கொழுந்தெல்லாம்பிஞ்சுவிடும்
பாதிப்பிராயமவள் பக்கமெல்லாம்பிஞ்சுவிடும்
இருண்டெழுந்தசோலையிலே செவந்தெழுந்தசூரியர்போல்
குன்றுமேற்சந்திரன் குதித்தெழுந்தபாவனைபோல்
ஈழத்துதச்சனவன் எழுதிவரவிட்டானோ
மேல்நாட்டுதச்சனவன் விளைந்துவரவிட்டதுபோல்

விட்டபாணமெல்லாம் அலங்காரஞ்செய்தவளும்
பட்டுபளபளென்ன பாடகக்கால்சோதிமின்ன
தெய்வப்பெண்போலே ஸ்ரீராமர்வருகின்றாரே
அழகுதுலங்கவும் அனந்தங்கோஞ்சாலேதான்
உடல்குலுங்கமாயவனா ரோடிவருகிறாரே
காடுசெடிதாண்டி கடுகியேவந்துவிட்டார்
மதுரைதெருவிலே வந்தாரேயெம்பெருமாள்
அக்கமாரேதங்கைமாரே ஆடிதாய்மாரே
செக்கச்செவலையம்மா சிறுவயதென்கணவன்
வெறிபிடித்தமன்னவன்காண் விதிதிரிவாண்டி
அல்லியென்பான்மெல்லியென்பானனந்தனிலேபெண்ணேயென்பா[ன்
தண்ணீர்கண்டவிடத்தில் தங்கைமருக்குரைப்பான்
வீட்டுகளாச்சதம்மா என்கணவன்விடுவிட்டு
ஆரோதெரியாது அடக்கிசலங்கொண்டார்கள்
என்கணவனைக்காணாமல் கதறித்திரிகிறேனே
புருஷனைக்காணாமல் புலம்பித்திரிகிறேண்டி
அரிந்தாலுமையுங்கள் அக்கமாரேயென்றழுதாள்
மாதுபுலம்புவதை மதுரையுள்ளோர்தான்கேட்டு
தாதியர்கள்தோழியர்கள் தானறிந்தோடிவந்தார்
அல்லிப்பெருமாட்டி கதிக்கையிட்டார்தாதியர்கள்
பூதக்கிடங்குதன்னில் போட்டடைத்தார்பாதகனை
அலனை-மாலையிட்டதேவியராம் வந்தாளொருத்தியிங்கே
வானத்தரம்பையம்மாள் மயிலனையாள்தோற்றுகிறாள்
கணவனைக்காணோமென்று கதறிப்புலம்புகிறாள்
சொல்லியழுகிறது துக்கம்பெருகுதம்மா
அவ்வார்த்தைதான்கேட்டு ஆரணங்கேதுசொல்வாள்
ஆரணங்குமாதரைநீ ரழைத்தோடிவாருமென்றாள்
ஓட்டம்கடையாக ஓடிவந்தார்தாதியர்கள்
ஆரடிகன்னியரே யழுதுபுலம்புவதேன்
எங்கள்அச்சியருமுன்னை யழைத்துவரச்சொன்னார்காண்
அல்லிப்பெருமாளு மழைக்கிறாள்வாருமென்றாள்
எதுக்கழைக்கிறா ளிளங்கொடியாள்மாதுதன்னை
என்றுநடந்தாளே யெம்பெருமாள்மாளிகைக்கு
வாசலும்வாசலது படியேழுந்தான்கடந்து
அல்லியற்றுமுன்னேவந்து ஆரணங்குதெண்டனிட்டாள்
தெண்டனிட்டகன்னியரைத் தேன்மொழியாளேதுசொல்வாள்
எந்தவூருங்களது எங்கிருந்திங்குவந்தாய்
எதுக்கழுகிறு யெனக்கறியச்சொல்லுமென்றாள்
என்னுடையஅச்சியரே யென்பாவங்கேளுமம்மா
தூரவடக்கேயம்மா துவாரகாபுரிதேசம்
திருமலைநாய்க்கன்பெற்ற சிரானபெண்ணிருவர்

என்பேருமெல்லியர்கா ணென்தங்கைபேரல்லியர்காண்
என்னைமணஞ்சூட்டி என்தங்கைமேலிச்சைகொண்டான்
பெண்டுமேல்பெண்டுமல்லோ கொடுப்பாரோபூமியிலே
அல்லியர்மேலாசையாய் அணைமுகன்வெறியெடுத்து
பித்தம்பிடித்தவர்போல் திரித்திரிகிறனே
தன்னீரைக்கண்டாலே தங்கைமருந்துரைப்பான்
அல்லியென்பான்மெல்லியெனபா னலைந்துதிரிகிறனே
விடுவாசல்தங்காமல் வெளிப்பட்டுப்போய்விடுவான்
தேடித்திரிகிறேனே சீரானமன்மதனை
கண்டுபிடித்தவரைக் கடுகிமனைகொண்டுபோவேன்
எட்டுநாளொருவார மிருப்பான்மனம்பிடித்து
மாதுமேல்நினைவெடுத்து மாளிகையில்நிற்கரியான்
பந்தாடும்பட்டணத்தில் பாவிபெண்பிறந்தேன்
செல்வத்தலையிலே செப்போடெழுதினதும்
சுதியைத்தொலைப்பேண்டி காவேரிநீந்திடுவேன்
விதியைத்தொலைப்பதற்கு விதனமற்றாளவேண்டி
வடிவழகாயிருந்தார் மன்னன்துரையென்கணவன்
ஆரோதெரியாது அடக்கிவசங்கொண்டார்கள்
என்புருடன்றன்னையம்மா இனிகாணப்போறேனோ
என்றதுதான்கேட் டேதுசொல்வாளல்லியம்மாள்
என்பேரைசொல்லியவ னெடுத்துமருந்துரைத்தான்
ஆகடியஞ்சொன்னதினா லடைத்தேன்கிடங்கிலே
பயித்தியக்காரரென்றாற் பழுதில்லையெந்தனுக்கு
அனுலழைத்துப்போ மனுப்பிவிடச்சொல்லுகிறேன்
ஆரடிதாதியரே அலங்காரத்தோழிகளே
கிடங்கைத்திறந்தவனைக் கொப்பெனவேபோகவிடும்
அவ்வார்த்தைதான்கேட் டலங்காரத்தோழியர்கள்
ஓட்டம்நடையாக ஓடிவந்தார்கிடங்கில்
கிடங்கைத்திறந்தார்கள் கொப்பெனவேவிட்டுவிட்டார்
அப்போதுதெய்வகன்னி ஆளன்முகம்பார்த்து
வாடாகுடுப்பாநீ மதியழிவானென்றுரைத்தாள்
அல்லியென்பான்மெல்லியென்பா னணைமுகன்தான்வருவான்
எப்போவருவானோ என்னாசைதீருமென்றாள்
மன்மதபாணம் மார்புருகிப்போகுதென்பான்
சித்தசன்தொட்டகணை சிறுமார்புருகுதென்பான்
ஆருறுகுபாணமது மார்புருகிப்போகுதென்பான்
அஞ்சுருகுபாணமது நெஞ்சுருகிப்போகுதென்பான்
அர்ச்சனரைக்கூட்டியே அரிராமர்போகலுற்றார்
மதுரையைத்தாண்டியே வந்தாரேகானகத்தில்
மாயன்பெருமாளும் மாய்கையாய்போகலுற்றார்
ஆலமரத்தடியி லரிராமர்பள்ளிகொண்டார்

கள்ளக்கொருக்கையிட்டு சரியமால்தூங்குகிறார்
ஆயனருகாக அர்ச்சுனனார்வந்துநின்றார்
பாராளந்தார்பாதத்தைப் பார்த்திபன்பிடிக்கலுற்றான்
அலண்டுபுரண்டதுபோ லரிராமர்கண்விழித்தார்
ஆனாலமருமன்னா அருச்சுனரேகேட்டீரோ
காணாதசொற்பனத்தைக் கண்டேன்கானர்ச்சுனரே
என்னைத்தனியேயிட்டு எங்கேயோபோனதுவாய்
கானகக்குறத்தி கைபார்த்துசொன்னதுவாய்
வண்ணமருந்தெடுத்து மல்லக்குறத்திதந்ததுவாய்
நிதரித்தபூஷணத்தை நேரிழைக்குத்தந்ததுவாய்
அந்தமருந்தைநிவாங்கி அல்லியிடம்போனதுவாய்
வண்ணமருந்தெடுத்து தண்ணீரிலுரைத்ததுவாய்
அல்லியிடதாதிமா ராயிரம்பேரோடிவந்து
அர்ச்சுனரேயுனையெடுத்து ஆற்றிலேபோட்டதுவாய்
தூக்குமரந்தனிலே தேர்விஜயாபோடக்கண்டேன்
காளியம்மன்கோயிலிலே காவுகொடுக்கக்கண்டேன்
பூதக்கிடங்கிலேதான் போட்டடைக்கக்கண்டேனப்பா
ஆரோஒருதெய்வகன்னி யழைத்துவரக்கண்டேனப்பா
என்னருகேவந்திருக்க கண்டேன்கனவாக
என்னகாரன்மைத்துனனே இப்படிகனவுகண்டேன்
வாள்விசையன்கோமானும் மாயனுக்கேதுரைப்பார்
பித்தமுயர்ந்ததினாற் போதக்கனாக்கண்டீர்
அல்லியர்மேல்சிந்தைபதா ஆசைமறக்கவில்லை
மாலையிட்டுயல்லியரை மருவியலோவதெப்போ
கோபாலமைத்துனரே கூட்டிவைப்பதுன்பாரம்
அப்போதுமாயவரு மருச்சுனன்முகம்பார்த்து
ஏறமுகம்பார்த் தெம்பெருமானேதுசொல்வார்
பட்டுநல்லகுண்டலமும் பவுத்திரமோதிரமும்
பட்டுதட்டிஒட்டியாணம் பசும்பொன்னாற்சமுதாடு
தாமரைப்பூச்சல்லடமுள சந்திரகாந்திதட்டிகளும்
உத்தாசஞ்சம்வல்லவாட்டு வுத்தமனேயெங்கேயென்றார்
அஞ்சிப்பயந்தவன் அர்ச்சுனனுமேதுசொல்வான்
ஆயர்பெருமாளேநீர் அனத்தமித்திரைபோகையிலே
மதினதுபட்டணத்தை மதுரையைப்பார்ப்போமென்று
மாதுமேல்தன்னினைவாய் வந்ததுகுறிசொன்னாளையா
வண்ணமருந்துதந்து தண்ணீரிலுரையுமென்றாள்
குளிகைகரையும்போது குணமுந்திரும்புமென்றாள்
மருந்துபலியாமல் மாயவரேபோச்சதையா
நாலுமலைக்குள் நடுவிலவள்குடிசையென்றாள்
இராமக்காள்பொம்மக்காள் லட்சுமக்காளவள்பேராம்
அக்குவர்துகேட்டாக்கா லாபரணந்தருவேனென்று

மருந்தைக்கொடுத்துவிட்டு வாங்கிவிட்டானுடைமையெல்லாம்
அவள்-கொடுத்தபடியேதான் குணமாச்சேரவர்ச்சுனரே
சொன்னபடியாகச் சேர்ந்தாளோ அல்லிநல்லாள்
ஒருலாபங்கண்டறியேன் வுழன்றுநான்வந்தேனையா
பொம்மக்காள்பேரைச்சொல்லித் திம்மக்காள்நேர்ந்ததையா
உடமைபறிகொடுத்து வுழன்றுநான்வந்தேனையா
அவ்வார்த்தைதான் டரிராமரேதுசொல்வார்
குறத்தியிருப்பிடத்தைக் கொற்றவனேதேடிப்போய்
உன்னுடமையுள்ளதெல்லாம் வுத்தமனேவாங்கிவாரும்
கடுகியேவாங்கிவாரும் கட்டழகாவென்றுரைத்தார்

அர்ச்சுனன் குறத்தியிடம்சென்று தான்கொடுத்ததை வாங்கினது.

ஆயரதுசொற்கேட்டு அர்ச்சுனனார் தானடந்தார்
குறத்தியைத்தேடி கொப்பெனவேவருகிறாரே
நாலுமலைநடுவே நல்லிசையன்தேடிவந்தார்
இராமக்காள்பொம்மக்கா லட்சுமக்காளென்றழைத்தார்
மாயன்பெருமாளு மலைக்குறத்திபோலேவந்தார்
ஆரடாதம்பியரே யழைத்தகருமமென்ன
அப்போதருச்சுனனு மாணழகரேதுசொல்வார்
நீகொடுத்தமருந்துதன்னிற் சற்றும்பலனில்லையே
பொம்மக்காள்பேரைச்சொன்னால் திம்மக்காள்நேர்ந்ததம்மா
உன்பேச்சைகேட்டுநா னுதைபட்டுவந்தேனடி
நான்-கொடுத்தவுடமையெல்லாம் கொப்பெனவேதாருமென்றான்
என்வார்த்தைநீர்கேளீர் இயலானதம்பியரே
காசுகைதனிலே கண்டதுதலையாரிசேனை
கன்னமிட்டுவந்தேனென்று கட்டியடித்தார்கள்
அடியும்பட்டேனுதையும்பட்டே னலைச்சல்களும்பட்டுவந்தேன்
உடமைபறிகொடுப்பே னினியவுடமையது
அவ்வார்த்தைதான்கேட் டருச்சுனனுமேதுசொல்வான்
உடமைகொடுக்காம லுன்னைவிடேன்கட்டுவச்சி
எங்கிருந்துநான்கொடுப்பே னினியவுடமையது
மடியைப்பிடித்திழுத்தான் மாதுகுறத்தியவை
குய்யோமுறையோவென்று கூவினாள்குறத்தியரும
புற்றீசல்போலவேதான் புறப்பட்டார்சிறுகுறவர்
சில்லுபொல்லென்றுசொல்லிச் சிறுவராய்க்கூடினார்கள்
ஆளுக்கொருகுத்துவைத்து அடித்தாரேயர்ச்சுனனை
அர்ச்சுனர்தரித்திருந்த ஆபரணமுள்ளதெல்லாம்
கொண்டுவந்துதந்தாளே கொம்பனையாள்குறத்தியரும்
அல்லியர்க்காபட்டகலை போதுமென்றாரர்ச்சுனரும்
அர்ச்சுனமகாராச னையரிடம்வந்துவிட்டான்
வாங்கிவந்தேனுடைமையென்று வணங்கியேதெண்டனிட்டார்
அப்போதுமாயவனா ரருச்சுனற்கேதுசொல்வார்

மாளிகைக்குபோகவேமனமுண்டோஅர்ச்சனரே
குமார்தவிப்பாரோ தம்பிமார்புலம்புவாரோ
காருறேருயுன்ரூர்சி கலங்கித்தவிப்பாளோ
வங்குலவருநாளாச்சே வாள்விசையனர்ச்சனரே
பெண்ருறுசைகொண்டுநீ புலம்பித்தவிக்கிருயே
மாதர்மேலாசைகொண்டு மயங்குகிருயர்ச்சனரே
ஆருலமுருமன்னன் அர்ச்சனனுமேதுசொல்வான்
காந்தவிதமாளுலு மிளங்கொடியாளல்லியரை
தாலிகட்டிவையுமையா சுவாமிபெருமானே
மாலையிட்டுவையுமையா மாயன்பெருமானே
என்றுபலவிந்தானே இவலானவாள்விஜயன்
மாயன்பெருமாளு மிராமரேதுசொல்வார்
ஆருலமுருமன்ன னர்ச்சனரேநீர்கேளும்
ஆண்டியாக அல்லியின்றன்வாசலிலே
படையூர்க்குவந்தையாகில் மாலையிட்டுவைப்பேனடா
அப்படியேபோய்வருவே னையாசெலவருளும்

அர்ச்சனன் ஆண்டிவேடங்கொண்டு படஊர்ந்தது.

மாயன்பெருமாளு மிராமரப்போது
ஆண்டியைப்போலாக அருச்சனற்குசிலவுதந்தார்
ஆருலமுருமன்ன னர்ச்சனனுமேதுசொல்வான்
தொண்ணூறும்பத்துஞ்சென்ற துவண்டகிழவனைப்போல்
பன்னைப்பழம்போலே பழுத்தகிழவனைப்போல்
நாணற்பூப்போல நரைத்தகிழவனைப்போல்
தோலும்நரம்புகளுந் தொங்குதுகிழவனுக்கு
பழுத்தபழம்போலே பார்த்திபன்வடிவெடுத்தார்
காவிகாஷாயமுடன் கைதனிலேமாத்திரையும்
திருநீறுதாமணிந்து திருகண்டமாலைசுற்றி
உத்திராட்சத்தாவடமு முருத்திராட்சமாலைகளும்
அன்றுரித்தமான்தோலும் அன்பானபுலித்தோலும்
தொட்டமிதியடியுந் தோளில்வைத்தகின்னரியும்
மாத்திரைக்கோற்பிரம்புகளும் மயிர்க்குச்சங்கமண்டலமும்
வேலாயுதஞ்சூலாயுதம் விருதண்டகோடாலி
கௌரிகல்லபாத்திரமும் கேதாரக்கங்கணமும்
திருவோடுபாத்திரமுந் திருநீறுசோமிகளும்
சக்குசெயகண்டிகையுந் தரித்தாரேபூஷணங்கள்
சடையுமுடியுமாகத் தம்பிரானைப்போலானார்
ஆதிசிவன்போலாக அருச்சனனார்வேடங்கொண்டார்
கைலாசநாதனைப்போல் காண்டீபர்வடிவெடுத்தார்
வேடங்கள்பூண்டானே வீரதிவீரனுந்தான்
ஐயர்பெருமாளு மங்கெனவேதுசெய்தார்

அல்லியமைப்போலாக அழகுபடமெழுதி
பாங்கியிழும்நல்ல பவளசேனைநாயகியை
கூடவெழுதினாராம் கோவிந்தரெம்பெருமாள்
படத்தைமடித்தவரும் பார்த்திபன்கைகொடுத்தார்
அல்லியகுவாசலிலே யங்கேபடம்விரித்து
அவள்-உடுத்தியபாவாடையில் ஒருமுழம்பிச்சைவாங்கி
வந்தாயேயாமாகில் மாலையிட்டுவைப்பேனடா
போய்வாருமென்றுசொல்லி பெருமாளனுப்பிவைத்தார்
வண்ணப்படமெடுத்து வாள்விஜயன்தானடந்தான்
தள்ளாடி தள்ளாடி தளர்ந்துமெள்ளவழிநடந்தான்
தெத்துத்தெருகடந்து தேரோடும்வீதிவிட்டு
அல்லியரண்மனையா ளாசாரவாசல்வந்தான்
ஆரடிதாதியரே யரண்மனைக்குப்போகவேணும்
பிச்சைகேட்கவந்தேனம்மா போகவழிவிடுங்கள்
பொற்கொடியாள்வாசலிலே போய்வருவேனுச்சியரே
ஐயாபெரியவரே யறிவுபடைத்தவரே
திரப்படித்தவரே தெளிவறிந்தசங்கமரே
ஆண்காற்றடியாது அல்லியதுகோட்டையிலே
போனாற்பழுதுவரும் போகாதேசுவாமியென்றாள்
ஆண்டிப்பரதேசி ஐயமென்றுவந்தவரை
வழியுமறிப்பார்கள் வையகத்திலாருமில்லை
தொண்ணூறுஞ்சென்றதம்மா துவண்டகிழவனடி
தோலும்நரம்புகளுந் தொங்குதளர்ந்தனுக்கு
என்னைப்பார்த்தவர்களெல்லாரும் பணிந்திடுவார்தப்பாது
போகசிலவுகொடும் போய்வருவேனுச்சியென்றான்
வாசற்கடைக்காரர் வழிவிட்டார்சங்கமற்கு
அவ்வாசலது அர்ச்சுனனுந்தாண்டிவந்தான்
ஐந்தாம்படிதளத்தில் அர்ச்சுனனார்வந்துவிட்டார்
புலியாசனம்போட்டு பொற்குடத்தைமுன்னேவைத்தான்
ஆசனத்தின்மேலிருந்து அல்லிபடம்தான்விரித்து
மான்செவியுங்கண்ணையு மறைத்தாரேமாயவனார்
கண்ணிரண்டுதெரியாமற் காதிரண்டுங்கேளாமல்
அல்லிமேற்சிந்தையா யருச்சுனன்புலம்பலுற்றான்
அலியென்பான்மெல்லியென்பா னனந்தனிலேபெண்ணேயென்பா[ன்
வருவாளோஅல்லியென்பான் வாய்திறந்துபெண்ணேயென்பான்
உன்னுசைகொண்டடி யூராரைபேர்மறந்தேன்
தாயாரைநான்மறந்தேன் தமையனதுபேர்மறந்தேன்
தம்பிதமயனை சகலரையுமநான்மறந்தேன்
தன்னுசைகொண்டுநா னுழன்றுதிரிகிறேனடி
மன்மதபாணமது மார்பைப்பிளக்குதடி
சித்தசன்விட்டகணை சிறுமார்புருகுதடி

காமக்கலையாலே கலைதாங்கிப்போறேனடி
அஞ்சுருகுபாணமது நெஞ்சுருகிப்போகுதடி
அருமருகுபாணபாணமது மார்புருகிப்போகுதடி
மார்போடேமார்பணைந்தால் மகாவிடாய்திருமடி
என்றுதெளியுமோ எக்காலஞ்செல்லுமடி
அல்லிமேற்சிந்தையா யர்ச்சுனன்புலம்பலுற்றான்
அவ்வாசல்காக்கின்ற ஆயிரந்தாதியர்கள்
அவ்வார்த்தைதான்கேட்டு அதிசயசாரங்கொண்டான்
இதுவென்னகாலக்கேடோ எதறிவோம்தோழியரே
பாங்கியிலும்கல்லதொரு பவளசேனைதன்னருகில்
ஓட்டம்நடையுமாக ஓடிவந்தார்தாதியர்கள்
பவளசேனைப்பக்கத்தில் பணிந்தவர்களேதுசொல்வார்கள்
ஆரோ ஒருகிழவ னாண்டிபரதேசியவன்
பிச்சைக்குவந்தான்காண் போகவழிதான்விட்டோம்
ஐந்தாங்கட்டுவாசலது அரண்மனையில்தான்வந்தான்
அல்லியவளைப்போலாக அழகுபடமெழுதி
உன்னையுங்கூடவே ஒருமையாய்வைத்தெழுதி
வண்ணப்படம்விரித்து வல்லமையாய்படிக்கிறார்கள்
அல்லியாமேலாசையா யலைந்துபுலம்புகிறான்
வாடியென்னும்போடியென்றும் வம்புதும்புஞ்சொல்லுகிறான்
ஆகடியம்பேசுகிறா னழும்புகளுஞ்சொல்லுகிறான்
சொல்லுகிறவார்த்தையது செவிகேட்கமுடியாது
இவ்வார்த்தைதான்கேட் டேதுசொல்வாள்பவளசேனை
அல்லிப்பெருமாளை அழகுமணஞ்சூட்டவென்று
மாறுவேடங்கொண்டவனும் மாலையிடவந்தவன்காண்
ஆண்டிபரதேசியானு லழும்புகளும்சொல்வானோ
எல்லாமறிந்திடுவோம் வாரடிதோழிகளே
ஓரைந்துதாதிமார்கள் ஒருநிறமாயெழுந்திருங்கள்
ஒருநிறமாய்க்குழல்முடித்து ஒருநிறமாயலங்கரித்து
ஐந்துவிதப்பட்டுகளை யலங்காரமாயெடுத்து
பொன்னொருதட்டிலேயும் பூவொருதட்டிலேயும்
ஆடையொருதட்டிலேயும் ஆபரணமொருதட்டிலேயும்
ஒன்பதுரத்தினமு மொருதட்டில்தானெடுத்து
பண்டாரமுன்னாலே பாங்கியரேகொண்டுபோய்
ஐயருக்குமுன்னேவந்து அடிபணிந்துதெண்டனிட்டு
ஐந்துபேர்பெண்களிலே யார்வேண்டும்சொல்லுமென்று
ஆபரணமுத்துவஸ்திர வாசையென்றாலெடுத்துக்கொள்ளும்
பெண்களின்மேலாசையென்றால் பின்தொடர்ந்துவருவோமென்று
ஐவரைக்கேட்பதற்கு ஆரணங்கேபோங்களென்றாள்
அவ்வளவில்தோழிமா ரதிகமுடனோடிவந்து
ஐந்துபேர்தோழிமார்க ளலங்காரஞ்செய்துகொண்டார்

ஐந்துவிதத் தட்டிலே யாபரணபூஷணங்கள்
முத்துகளும்வஸ்திரமும் முன்னாலேகொண்டுவந்தார்
ஐயாதமுன்னேவைத் தடிபணிந்துதெண்டனிட்டார்
ஐயாபெரியவரே யடியேன்சரணமென்றார்
ஆச்சியருந்தனுக்கு அனுப்பிவைத்தாள்பூஷணங்கள்
ஊர்துபேருனக்கு அனுப்பிவைத்தார்சங்கமரே
ஆசையுள்ளபெண்களோடீர் அழைத்தால்வருவோமையா
வேண்டுமென்றாத்திலத்தை யெடுத்துக்கொள்ளுஞ்சங்கமரே
என்றந்தபெண்களுமே யிறங்கியேதெண்டனிட்டு
அல்லியென்பான்மெல்லியென்பானனங்கனிலேபெண்ணேயென்பா [ன்
எப்போவருவாளோ என்னாசைதீர்ந்திடுமே
மன்மதபாணமடி மார்புருகிப்போகுதடி
சித்தசன்விட்டகணை சிறுமார்புருகுதடி
காமக்கணையாலே கணைதாங்கிப்போறேனடி
அல்லியல்லியென்றுசொல்லி யலைகிறான்சங்கமனும்
கேட்டந்ததாதியுங் கிலேசங்கொண்டுதானடந்தாள்
பவளசேனை தன்னருகில் பக்கத்தில்வந்தார்கள்
ஆச்சியின்சொற்படிக் கைந்துபெண்கள்போனோமம்மா
அலங்காரந்தன்னுடனே யாபரணமுன்வைத்தோம்
ஏனென்றுகேட்கவில்லை யேறெடுத்துபார்க்கவில்லை
அல்லியின்மேல்சிந்தைகொண் டலைகிறான்சங்கமனும்
அநேகநெடுநேரம்நின்று அலைந்துமேவந்துவிட்டோம்
இவ்வார்த்தைதான்கேட் டிளங்கொடியாள்பவளசேனை
என்னதவெண்ணமெல்லா மெண்ணரியிளங்கொடியும்
ஐயமென்றுவந்ததொரு யாண்டிப்ரதேசியல்ல
கட்டின்விருதறுத்துக் கலியாணம்பண்ணவந்தான்
தெய்வமென்றுநாமறியோஞ் சிவநாஜரென்றறியோம்
தன்மனதிலேயடக்கி தானடந்தாள்சங்கமலம்
அல்லிநல்லாள்பக்கம்வந்து ஆரணங்குதெண்டனிட்டாள்
ஏதுபவளசேனை யிந்நேரம்வந்ததென்ன
வேர்க்கவிரிவிரிக்க வெந்துயிலுஞ்சோர்ந்துவிழ
உச்சிபுருமத்தி லுத்தமியிக்குவந்தோம்
ஆச்சியரேகேட்டாயோ அதிசயமானவிதம்
நாடுசுகப்படவே நானுச்சுவாச்சியரே
எனக்குவரும்பாக்கியங்க ளொருவருக்குந்தெரியாது
ஆதிசிவனைப்போ லாண்டியிங்கொருவர்வந்தார்
படம்படிக்கும்பண்டாரம் பரமசிவன்போலேவந்தார்
வாணிக்கச்சொக்கலிங்கம் வந்தாற்போற்காணுதம்மா
சடையுஞ்சடைமுடியுந் தம்பிரான்போற்காணுதம்மா

கண்டுமறியோமம்மா கலியுகத்தில்தானறியோம்
தோளும்நரம்புகளுந் தொங்குதுகிழவனுக்கு
ஐந்தாங்கட்டுவாசலிலே ஐயர்வந்திருக்கிறார்
தெரிசனம்பண்ணுறோமானாற் றோஷவினைதிருமம்மா
பார்த்தால்பசிதீரும் பண்டாரமானவரை
ஆச்சியெழுந்திரம்மா ஐயனைப்போய்ப்பார்ப்போம
என்றதுதான்கேட் டேதுசொல்வாளல்லியம்மாள்
ஆண்காற்றடையாத வரண்மனைவாசலிலே
ஆண்டிபரதேசி யையமென்றுவந்தாலும்
கொடுத்தனுப்பலாகாதோ கொம்பனையேயென்தோழி
என்றனுடன்சொல்வானே னெழுந்திருந்தாயென்றாள்
பாங்கியிறும்நல்ல பவளமேனியேதுசொல்வாள்
பிச்சைகொடுக்கிறது பெருமையென்றுபாராதே
நல்லோர்பெரியோரை நடந்துபோய்சேவித்தால்
காசிபோகவேண்டுமோ கருமந்தொலையாதோ
பெரியோரைசேவித்தால் பிழைபொறுக்காலுமில்லை
கைலாசநாதரைப்போல் காண்கிறது.ஆச்சியரே
என்வார்த்தைதள்ளாதே யெழுந்திரும்போவோமென்றாள்
மருட்டத்துரைச்சியவள் வாழ்வாகியேதுசொல்வாள்
ஆண்டியைப்பார்ப்பதற்கு அழைக்கிறாயென்தோழி
ஆளுலகுமன்னன் அரிகிழவன்றனும்
என்னைக்-கண்டானேயாமாகில் காமங்கொளுந்திடுமே
பரிகாசஞ்செய்தாலே பாக்கியரேயென்னசொல்வேன்
விரமணிவாளாலே விசியெறிந்திடுவேன்
அப்படியேயாகுமம்மா ஆச்சியெழுந்திருங்கள்
சிங்காதனத்தைவிட்டுத் தேன்மொழியாள் தானெழுந்தாள்
பட்டுபளபளென்ன பாடகக்காற்சோதிமின்ன
நெற்றிசுற்றிதிகதிகென்ன நீலவிழிமைதுலங்க
காற்பிலிசலகலென்ன கைவளையல்பளபளென்ன
முந்தாணிசிலம்புநாள மோதிரக்கால்சத்தமிட
தோழியைத்தோளக்கு தோகைநல்லாள்தானடந்தாள்
பாங்கிமார்தோழியர்கள் பக்கம்புடைசூழ
வாசலும்வாசலது படியேழுந்தான்தாண்டி
ஆண்டியிருக்குமந்த அஞ்சாங்கட்டுவாசல்வந்தார்
அல்லிவரும்போது அருச்சுனனுமேதுசொல்வார்
என்னகாணல்லியரே எப்போமனதிறங்கும்
என்றைக்காறுவேனென்றாசைதிருமடி
மாரனவனெய்தகணை மார்பைப்பிளக்குதடி
சித்தசன்தொட்டகணை சிரமார்புகுதடி
மாலையிடுவதெப்போ மருவியணைவதெப்போ
கூடியணைவதெப்போ குறைகளெல்லாந்தீர்வதெப்போ

அல்லியென்பான்மெல்லியென்பா ரகந்தனிலேபெண்ணேயென்பார்
வருவாளே அல்லியென்பான் வாய்திறந்துபெண்ணேயென்பான்
கட்டழகியல்லியம்மாள்காதாரகேட்டுவிட்டாள்
உருக்கியசெம்பொனது உதிரம்போற்கண்சிவந்து
பிறந்துவளர்ந்துநான் பூமிபாரமாண்டிருந்தேன்
நின்முகனைக்கொண்டுநான் நீசிபட்டமாண்டேனே
வாடியென்றழைத்தவர்கள் வையகத்திலாருமில்லை
அடியென்றழைத்தவர்க ளவனியிலொருவரில்லை
ஆண்டியவன்வாயாலே அலைச்சல்படநாளாச்சே
எடுத்துவாபெரியகத்தி எடுத்துவா தாதியென்றாள்
பாங்கியிலும்நல்ல பவளசேனையேதுசொல்வாள்
பாண்டிப்பெருமாளே பகராதேயாச்சியென்றாள்
அப்படியேகொண்டுவந்து ஆச்சியருகில்வைத்தாள்
கண்ணாடியெதிரில்வைத்துக் கண்டாள்தன்படத்தழகை
தன்னழகும்படமழகும் சரியாகத்தோனறியது
உச்சிசுழியழகும் உரோமத்தின்பேரழகும்
மயிரழகும்பவனையும் மாபாவியெங்குகண்டான்
முகத்துத்திருவழகை மூதேவிகண்டுவிட்டான்
கண்ணின்விழியழகை கழுசிறையனெங்குகண்டான்
பவளம்போலெள்ளிதழும் பல்லழகுமெங்குகண்டான்
மார்பின்ஸ்தனமழகும் மச்சமுமெங்குகண்டான்
இடையழகுந்தடையழகும் யேனுதியெங்குகண்டான்
ஆபரணந்தன்னருகு மாடைத்தயிலழகும்
வடிவழகுமொப்பனையு மாபாவியெங்குகண்டான்
என்னையெழுதிவந்த தல்லாமலென்தோழி
உன்னையுங்கூடவே யுடனுயெழுதிவந்தான்
எடுத்துவாபெரியகத்தி யிருதுண்டாய்போடவென்றாள்
பக்கச்சதைகளெல்லாம் பதைக்கிறதேயல்லியற்கு
பாங்கியிலும்நல்லதொரு பவளசேனையேதுசொல்வாள்
ஐயமார்பட்டதொரு அடைவுபோலாகுமிது
பாண்டியர்கள்பட்டதொரு பதலம்போலாகுமிது
ஆண்டியைவெட்டினலே யாரார்தலைபோமோ
அந்தக்கதையையெனக் காரணங்கேசொல்லுமென்றாள்

பவளசேனை பாண்டியர்களடைந்த துன்பத்தை

அல்லியரசாணிக்கு கதையாகக்கூறினது.

வைகைப்பெருக்கெடுத்து மாவெள்ளம்போகையிலே
ஆராலும்வைகைதன்னை யடைக்கமுடியாமல்
பாண்டியராசாக்கள் பகுந்துகறைபோட்டார்கள்
ஆணாய்ப்பிறந்தவர்களரைஞாண்கயிர்கட்டினவர்

பெண்ணாய்ப்பிறந்தவர்கள் புடவையுடுத்தினபேர்
அவரவர்க்கொருபங்கு அளந்துகளைபோட்டார்கள்
அவரவர்கள்பங்கு அடைந்தார்கள்ஔவைதன்னை
அன்றாடம்பிட்டுகட்டு ஔவையார்விற்றிருப்பார்
அவளுக்கொருபங்குமல்லோ அளந்துகளைபோட்டார்கள்
பங்கங்களில்லாமல் பரதவித்துத்தானழுதாள்
மன்றாடுமங்கையவள் மனஸ்தாபப்பட்டழுதாள்
வாணியக்கிழவியவள் மனத்துயரமாகையிலே
மாணிக்கச்சொக்கலிங்கம் மகாதேவர்தானறிந்தார்
அட்டருநற்சொக்கலிங்கம் ஆதிசிவன்றானறிந்தார்
ஔவையார்மனத்துயரம் ஆபாசம்தீர்க்கவென்று
ஒட்டனைப்போலாக உலகளந்தமைத்துனரும்
கன்னக்கருத்தவர்போல் கர்த்தர்வடிவெடுத்தார்
தட்டுதலையில்வைத்துக் கெஜக்கோலைக்கைபிடித்து
மண்வெட்டிதோளில்வைத்து மகாதேவர்வாராரே
மதுரைத்தெருவிலே வந்தாரேசொக்கலிங்கம்
அப்போதுசொக்கலிங்கம் ஆதிசிவன்கூறிவாறார்
மண்வெட்டுப்பேன்சுவர்வைப்பேன் வைப்பீரோகூலியாளாய்
என்றுமேசொல்லியல்லோ ஈஸ்வரனார்கூறிவாறார்
கூலியவர்வந்தாரே கொடிமதுரைவீதியிலே
ஔவையார்தன்னருகே ஆதிசிவன்வந்துவிட்டார்
ஔவையாருமப்போது ஒட்டனுக்கேதுசொல்வாள்
ஆடாவொட்டாநீ அன்புடனேகேளுமென்றாள்
அன்றாடம்பிட்டுகட்டு அங்காடிவிற்பேனடா
நாற்குருபிட்டுகட்டா லொருபிட்டுதிருமடா
உதிர்ந்ததோர்பிட்டுனக்கு வுத்தமனேநான்தருவேன்
மண்ணெடுத்துத்தாரடைத்து வருவாயோமன்னவனே
உதிர்ந்துபோகும்பிட்டையெல்லாம் முத்தமனேநான்தருவேன்
சத்தியம்தப்பாமல் தருகிறேன்போவென்றாள்
பிட்டுக்குக்கட்டுமம்மா போரடைத்துவாரேனென்றான்
ஔவையருந்தாமெழுந்து அடுப்பூதிமூட்டினாளே
பிட்டுக்குக்கட்டுமம்மா போதச்சமைக்கலுற்றாள்
இருபதுபிட்டுகட்டு எடுத்தாளேகூன்கிழவி
ஓட்டம்கடையுமாக ஓடிவந்தார்சொக்கலிங்கம்
காலாறடைத்துவந்தேன் கன்னிபசிக்குதென்றார்
கட்டீரோபிட்டுகளைச் சொல்லுமுதிர்ந்ததுண்டோ
எனக்கென்றாளெங்கிருந்தா ஈடுழியவனொட்டாநீ
இந்தாருமென்றுசொல்லி ஈந்துவிட்டாள்பிட்டதனை
குறையாரடைத்துவாரேன் கொப்பெனவேபிட்டுசுடும்
மரக்கடையிற்போவாரும் புன்னைமரத்தடியிருந்தார்

கொண்டுவந்தபிட்டையெல்லாம் கொப்பெனவேயுண்டுவிட்டார்
ஒருநாழிதரித் தோடிவந்தார்சொக்கலிங்கம்
அரையாரடைத்துவந்தே னுச்சிபசிக்குதென்றார்
சுட்டீரோபிட்டுகளைச் சொல்லுமுதிர்ந்ததுண்டோ
ஐம்பதுபிட்டுசுட்டே னனைத்துமுதிர்ந்ததுண்டோ
இந்தாருமப்பாவென் றெடுத்துக்கொடுத்துவிட்டாள்
வாங்கியந்தபிட்டதனை வழிநடந்தார்சொக்கலிங்கம்
கொன்றைமரத்தடியிற் கொண்டுவந்துதான்புசித்தார்
ஈரறைநாழிசென் றெழுந்தவருமோடிவந்தார்
மார்மேலுமதோள்மேலும் மண்வாரிப்போட்டுக்கொண்டார்
மூக்காலாறடைத்துவந்தேன் மெத்தபசிக்குதம்மா
சுட்டீரேபிட்டுகளுஞ் சொல்லுமுதிர்ந்ததுண்டோ
நூற்றொருபிட்டுகளுஞ் சுட்டாளேகூன்கிழவி
ஒருபிட்டுதான்தவிர மற்றபிட்டுதிர்ந்தனவே
உதிர்ந்தபிட்டையெல்லாம் உத்தமனார்கொடுத்தாள்
வாங்கியந்தசொக்கலிங்கம் வழிநடந்தார்மெல்லெனவே
குருந்தமரத்தருகே கொப்பெனவேவந்தமர்ந்தார்
கொண்டுவந்தபிட்டையெல்லாம் கொப்பெனவேயுண்டு
தலைக்குயர்ந்துதட்டுவைத்துச் சங்கரனார்பள்ளிகொண்டார்
ஆனந்தநித்திரையாய் ஆதிசிவன்போனாரே
ஒருபிட்டுவிற்றாளே உத்தமியாள்கூன்கிழவி
நூறுபிட்டுலாபமதை நேருடனேகண்டுகொண்டாள்
ஆறாயிரம்பாண்டியரு மையரவர்கள்வந்தார்கள்
வைகைகரைபார்த்து வருகையிலேபாண்டியர்கள்
கொஞ்சமாம்சலம்பெருகிக் குறையாறுவருகிறது
கண்டந்தபாண்டியரும் கடிதானகோபமுடன்
ஆருதடாபங்கிதுதா னடைக்காமற்போனதென்ன
எவருதடாபங்கித்தா னேதுக்கடைக்கவில்லை
பிட்டுவிற்கும்வாணிச்சி பொற்கொடியாள்பங்கிதுதான்
ஆள்பெரும்சேவகரும் அதிவிரைவாயோடிவந்தார்
ஔவையாரைத்தானுமங்கே யழைத்துவந்தாராசரண்டை
வந்துமேதெண்டனிட்டாள் வாள்பாண்டிராசருக்கு
வாடிநீகூன்கிழவி மாசகன்னிஔவையாரே
அவரவர்கள்பங்குதனை யடைந்தார்கள்வைகைதன்னை
உன்பங்கையடைக்காமற் போனதென்னகூன்கிழவி
ஆரோஒருவொட்டனையா ஆரடைப்பேனென்றுசொல்லி
நூறுபிட்டைவாங்கிதின்று நேராயடைப்பேனென்றான்
பிட்டுதின்றபாவியைத்தான் பின்வரக்காணேனே
ஆரடைத்தேனென்றறிந்தே னந்நீதம்பண்ணிவிட்டான்
அவ்வார்த்தைதான்கேட்டா ராயிரம்பேர்பாண்டியர்கள்
ஆரடாசேவகரே அவனைப்பிடியுமென்றார்

தேடிப்பிடியுமென்றார் பிரானொட்டனைத்தான்
அப்போதுசேவகர்க ளாராய்ந்துதேடலுற்றார்
மதுரைத்தெருவாரும் வனங்களுந்தோப்புகளும்
தேடிவருகிறார்கள் பிரானொட்டனைத்தான்
மாத்தடியிற்பள்ளிகொண்ட மன்னவனைக்கண்டார்கள்
கண்டுபிடித்தார்கள் கடுகெனவேகட்டிவந்தார்
பாண்டியராசர்கள் பார்த்தவருங்கோபமதாய்
வாணியக்கிழவியைநீ வனமோசஞ்செய்தாயடா
ஆறடைப்பேனென்றுசொல்லப் பிட்டெலாந்தின்றுவிட்டு
மண்ணெடுத்துப்போட்டுநீ வைகையடையுமென்றான்
தட்டிலேமண்வாரித் தலைமேலெடுத்துக்கொண்டு
அடிமேலடிவைத்துமல்லோ அஞ்சிநடைநடக்க
அறிவிலனென் றறியாமற்பாண்டியர்கள்
பிட்டுதின்றமயக்கத்திருற் போகமனம்வல்லையோடா
என்றுசொல்லிபாண்டிய ரிவ்வரனைத்தானடித்தார்
பாரப்பிரம்பாலே பாண்டியரடித்துவாரார்
அடிப்பட்டசொக்கலிங்கம் அம்மண்ணைபோட்டுவிட்டார்
ஆறுமடைத்தவ ரருபாய்ப்போய்மறைந்தார்
அறுபிரம்பாண்டியற்கு மடிதுடையிற்பட்டதுவே
ஆறுமாதப்பிண்டத்திற்கு வந்தவடிபட்டதம்மா
அப்படிப்போலாகுமிது அல்லியம்மாமிஞ்சாதே
ஆண்டியனைக்கொன்றுக்கா வாரார்தலைபோமோ
உன்கையாற்கொல்லாதே கட்டழகிசங்கமனை
கொல்வாரைவிட்டுமல்லோ கொல்லவிடுசங்கமனை

ஆண்டியைசற்பங்களால் கொல்லநினைத்தது.

பாம்புகளைக்கொண்டு பாரவிஷமேற்றி
சர்ப்பங்களைவிட்டுநீ சங்கமனைக்கொல்லுமென்றார்
அவ்வார்த்தைதான்கேட் டல்லிப்பெருமாளும்
ஆரடிதாதிகளே யலங்காரத்தோழிகளே
பாம்புபிடாரர்களை பார்த்தோடியழையுமென்றாள்
அவ்வார்த்தைதான்கேட் டாரணங்குத்தோழிமாரும்
பாம்புபிடாரனைப்பெண்ணே பத்தினிமாரானோர்கள்
வாருங்களென் றுசொல்லி வரவழைத்தார்தாதியர்கள்
மகுடிக்குழலூதி மகாவிருதுகட்டினார்கள்
பாம்புபெட்டிதோளில்வைத்து பிடாரப்பெண்கள்வாரார்கள்
வீதியும்வீதியது தெருவும்பலகடந்து
அல்லியம்மாள்வாசலிலே அனைவோரும்வந்தார்கள்
மகுடத்துரைச்சியற்கு வந்துதெண்டம்பண்ணினார்கள்
எங்களையழைத்தவகை யேதவகைசொல்லுமென்றார்



உங்களையழைத்ததா னென்றாற்குறையுமில்லை
காட்டிற்குப்போங்களடி கன்னிபுத்திமருந்துவைத்து
கரிநாகளுசெந்நாகங் காற்கோடகப்பெண்டுகளை
மண்ணுளிபாம்புகளுமலைவிரியன் தாகிரியன்
மட்டில்லாப்பாம்புகளை வகைவகையாய்ப்பிடித்து
ஆண்டியைக்கொல்லவேணு மதிசாரிதமாய்வாருமென்றாள்
உச்சிதங்கள்வேணமட்டு முங்களுக்குநான் தருவேன்
பாம்புபிடாரப்பெண்க ளாரணியம்வந்தார்கள்
புற்றுக்குமருந்துவைத்தார் பெரும்பாம்புசான்பிடிக்க
மந்திரத்தைச்சொல்லியவர் மகுடிக்குழலூதினார்கள்
புற்றைச்சல்போலாக புறப்பட்டதுபாம்புகளும்
கரிநாகஞ்செந்நாகங் கருத்தசிறப்பாம்புகளும்
அடிவரும்பாம்புகள்தா னமர்ந்ததுபெட்டியிலே
சீரிவருகின்ற செந்நாகமுள்ளதெல்லாம்
மட்டில்லாபாம்புகளை வகையுடனே தான்பிடித்தார்
காவடியைத்தோளில்வைத்து கடுகியேவாரார்கள்
விருதுகளைக்கட்டிக்கொண்டு மகுடிக்குழலூதிவாரார்
காடுசெடி தாண்டி கடுகிவந்தார்தென்மதுரை
செட்டித்தெருதாண்டி தேரோடும்வீதிவிட்டு
அல்லியம்மாள்தன்னுடைய அரண்மனைக்குள்வந்தார்கள்
வாயலூர்வாசலது யேழுகட்டுந்தான்தாண்டி
பத்தினிக்குதெண்டனிட்டு பாம்புகளைமுன்னேவைத்தார்
வகைக்கொருபாம்பாக மாதேகாம்கொண்டுவந்தோம்
கொண்டுவந்தோமாச்சியென்று கொம்பனைக்குதெண்டனிட்டார்
மகுடத்துரைச்சியவள் மாதுமவளேதுசொல்வாள்
ஆர்பெண்கள்தாதிகளே யலங்காரத்தோழிகளே
பாலும்பழமுமாய் பாம்புகட்குவையுமென்றாள்
அபினிமருந்துகளு மடைவானசாராயமும்
முட்டையுடைத்துமல்லோ முன்னாலேவையுமென்றாள்
கொணர்ந்துவைத்தார்கள் கொம்பனைமார்பாமபுகட்கு
அந்தண்டபாம்புகளு மாகாரமுண்கிறது
கண்கள்சிவக்கிறதே காந்தாளமாகிறது
அவ்வரிக்கண்களெல்லாம் செவ்வரிபூத்ததங்கே
பாம்புகளைப்பார்த்துமல்லோ பத்தினியாளேதுசொல்வாள்
அங்கயற்கண்ணம்மை யருளாலேயான்பிறந்தேன்
பட்டமுஞ்செங்கோலும் பாதிகாடாளுகிறேன்
வாடியென்றும்போடியென்றும் வமபுசொன்னாருமில்லை
ஆண்டியவதுவாயாலே யலைச்சல்படுகிறேனே
சாதிகெட்டபண்டாரம் தாறுமாறுப்பேசுகிறான்
என்-அங்கமுருகிறதே யாவிதளலாகிறதே
சென்மமுருகிறதே சிந்தைதளலாகுதம்மா

பண்டாரமானவரைப் பத்தினியேசொல்லுமென்றாள்
கும்பிட்டுதெண்டனிட்டாள் குணமானபாம்பிற்கு
அவ்வசனங்கேட்ட அத்தண்டபாம்புகளும்
செந்நாகமுள்ளதெல்லாம சீறியெழுந்தனவே
கருநாகமுள்ளதெல்லாம் கதறியெழுந்தனவே
இருதலைபாம்புகள்தா னெழும்பிவருதங்கே
மூன்றுதலைநாகமல்லோ முடியவருகிறதே
சீறிவரும்நாகமெல்லாந் தேர்விஜயனைப்பார்த்து
ஓடிவரும்பாம்பனைத்து மர்ச்சுனரைக்கண்டதுவே
ஆறுலழகுமன்ன வர்ச்சுனராஜனென்றாள்
முன்னழகும்பின்னழகும் முழுவில்மச்சரேகைகளும்
பல்லிற்பாசவிணை பாதத்திற்செந்தாமரை
மீசைமுறுக்கழகும் விழிநல்லபார்வைகளும்
அவரழகைத்தான்பார்த்து அர்ச்சுனரென்றறிந்து
நாககன்னிமணவாளன் நல்விஜயராசனல்லோ
தருமராதம்பியராந் தனஞ்செயனர்ச்சுனர்காண்
வெற்றிமதயானை வீமருக்குதம்பியல்லோ
மாயாதுமைத்துனர்காண் வல்விஜயரிவர்காணும்
அல்லியரைமாலையிட ஆண்டிகோலமானாரே
மாலையிடவேணுமென்று வேடங்கொண்டுவந்தாரே
மாப்பிள்ளையைக்கொல்லவென்று மருந்திட்டாளல்லியரும்
கணவனைக்கொல்லவென்று கட்டழகிமருந்திட்டாளே
அல்லியதுவார்த்தைகேட்டு அர்ச்சுனரைக்கொல்லவென்று
பொற்கொடியாள்நாககன்னி போதச்சிறையாவாள்
கனமோசம்வந்துவிடும் கன்னிசெய்தகாரியங்கள்
செல்வமகனுக்கு செங்கானல்வீசுதென்று
ஐந்துதலைநாகமது அர்ச்சுனற்குகுடைபிடிக்கும்
தோள்மேலேறுவதும் தும்பிபறப்பதுவும்
கீதங்கள்பாடுவதும் கொண்டாணடிப்பவவும்
அரும்பவனிகூத்துகளும் மாடுஞ்சிலகாலம்
மகுடத்துரைச்சியவள் மாதரும்பார்த்துவிட்டாள்
பாம்புமயங்கவேதான் பாவிமருந்துவைத்தான்
வானம்சுழல்வதற்கு மருந்துண்டுபாவிகையில்
என்னைமயக்கவொரு மருந்தறியமாட்டாரோ
ஆர்காணுந்தாதிகளே யலங்காரத்தோழிகளே
வெள்ளிப்பிரம்பாலே விசங்கள்பாம்புகளை
பாரப்பிரம்பாலே பாம்பையடியுமென்றாள்
தாதிமாரப்போது சவுக்கெடுத்துவீசலுற்றார்
மாறியடிக்கலுற்றார் வண்ணமிகப்பாம்புகளை
அப்போதுசற்பமெல்லா மல்லியரைப்பார்த்துரைக்கும்

மாப்பிள்ளையுமாக மணமுகூர்த்தம்செய்கையிலே
அவ்வளவுஞ்சலம்பெதற் கழைத்தால்வருமோ
என்றாந்தபாம்புகள்தா வெளிரிப்பறக்கதவே
பாங்கியிறும்கல்லகொரு பவளமேனிதேசரும்
எந்தவிதத்திறலே கொன்றிடுவோமென்தோழி
பண்டாரந்தன்னைக்கொல்ல பக்குவஞ்சொல்லுமென்றாள்
ஆறல்கேளாச்சியரே ஆலோசனைசொல்லுகிறேன்
நீபிறக்கதபசுபண்ண நீதியுள்ளகாட்டானை
ஆனையையழைத்துவந் தனந்தமயக்கமேற்றி
கொல்லவிடலாமோ கொம்பனையேசங்கமனை
அவ்வார்த்தைதான்கேட் டல்லிமனமகிழ்ந்து

ஆனையினால் ஆண்டியைக்கொல்ல வகைதேடினது.

ஆடிதாதிமோ அலங்காரத்தோழிகளே
காட்டானைதன்னைநீங்கள் கடுகவழையுமென்றாள்
ஆச்சியரேநீர்கேளு மடியேனொருவார்த்தை
நீபிறக்கதபசுபண்ண நீதியுள்ளகாட்டானை
வெறித்துதிரிகிறதே வெங்கானகந்தனிலே
தன்னிழலைதான்பார்த்து தன்மதம்பொழிகின்றது
கொம்பினால்மலையையல்லோ குத்திப்பிளக்கிறதே
மலைகள்பருவதத்தை மண்ணோடேசாய்த்துவிடும்
மதப்பட்டுதிரியுதம்மா மயிலனையேயவ்வானை
எங்களைக்கண்டாலே எடுத்தறைந்துவிடும்
செத்துமடிந்திடுவோம் சிவலோகம்சேர்ந்திடுவோம்
சென்றோமேயாமாகில் திரும்பிவருவதில்லை
இவ்வார்த்தைதான்கேட் டேதுசொல்வாளல்லியரும்
கணையாழியோதிரத்தை கழட்டிக்கொடுத்தாளே
முத்தினமே இரகசித மொய்குழலாள்கொண்டுநீங்கள்
ஆனைமுன்னேவைத்து அடிபணிந்துதெண்டனிட்டு
நீர்-பெற்றமகளல்லியரசாள புலம்பியழுகிறாளே
உன்னை-பார்க்கமனதாகப் பத்தினியாளிருக்கிறாளே
அழைத்தோடிவாருமென்று சொன்னாளேயல்லியம்மாள்
கணையாழிகழட்டியல்லோ கடுசழைத்துவாருமென்றாள்
ஓட்டம்நடையுமாக ஓடுங்கள்தாதியென்றாள்
மதகஜந்தான்பிடிக்க மாவெட்டப்பெண்களவர்
தன்னளதுமாளிகையிற் சடுதியிற்போய்நுழைந்து
பத்திரமானவர்க்கு புத்திமிகவுரைத்து
மதகஜந்தான்பிடிக்க மாகவனம்போறோமே
சாவோம்பிழைப்போமே சாமிசெயலப்படியோ
பிழைத்துநாம்வந்தோமானால் பிள்ளைமுகம்பார்ப்போம்
இல்லாமற்போச்சுதானால் ஈசன்பாதம்சேருகிறோம்
பிள்ளைகளைக்கூட்டிவந்து பெரியோர்கையிலொப்புவித்து

வாய்க்கரிபெவாய்ம மேலதனிற்பேசலுற்றார்
திரண்டவளங்களெல்லா மெங்கெங்குமிடையுற்றார்
மேலேயோரம்படுத்திருந்த மதயானைபார்த்துமேல
யானையதுவிட்ட டலங்காரமாவெழுந்து
தன்னிழல்தான்பார்த்து தலையிலடக்குமது
கொம்பாய்மலையைக்குத்தி கிளப்பிற்றுயானையது
கண்டுபயந்தார்கள் கட்டழகுபெண்களெல்லாம
யானையைக்கண்டுமவ ரடிபணிந்துதெண்டனிட்டார்
கனவாழிபோட்டுக் கன்னிமாரேதுசொல்வார்
அல்லிப்பெருமாளு மாரணங்குநாயகியாள்
நீங்கள்தபசுபண்ணிபெற்றதொரு மதயானைல்லாவல்லியாரும்
உண்ணா-காணவிருப்பமாகிக் கலங்கித்தவிக்கிறளே
பார்க்கமானதாகிப் பசித்துப்புலம்புகிறாள்
போசனம்பண்ணமற் புலம்பித்தவிக்கிறாள்காண்
உண்ணுருடுக்க வொருபொழுதுமிராட்டாள்
படுக்கைபொருக்காளே பத்தினியாளல்லியரும்
அழுதகண்ணுஞ்சிந்தையுமா யழைத்தோடிவாருமென்றாள்
நீ-வாராமற்போனக்கால் மாண்டுமடிவேனென்றாள்
செத்துமடிவேனென்றாள் செலவழிந்துபோவேனென்றாள்
கடுகெனவேவாருமென்று கைபெய்த்துதெண்டனிட்டார்
கேட்டந்தமதயானை கெர்ச்சித்துதான்வருமாம்
யானைவரும்போது அழகானதாதியர்கள்
தெத்துத்தெருகடந்து தேரோடும்வீதிவிட்டு
அல்லியம்மாள்தன்னருகே அடிபணிந்துதெண்டனிட்டார்
யானைவருகுதென்று அடிபணிந்துதெண்டனிட்டார்
மதுரைத்துரைச்சியவள் மாதுகன்னிதான்கேட்டு
கரும்புசமைகளைத்தான் கட்டுகட்டாவையுமென்றாள்.
தென்னமட்டைவாழைமட்டை தோழிகளேவையுமென்றாள்
பச்சரிசிதேங்காயும பாங்கிகளேவையுமென்றாள்
ஐங்கலஞ்சாராயமு மறுகலமெட்டிக்கொட்டை
கெஞ்சாவபினிகளும் கொண்டுவந்துவையுமென்றாள்
இடிமருந்துபாஷாண மிளங்கொடியேவையுமென்றாள்
கொண்டுவந்துவைத்தார்கள் கொம்பனையாள்முன்னாலே
வாழ்மதுரைபட்டணத்தில் மத்தகஜம்வருகிறதாம்
யானைவருகுதென்று அம்மதுரைபட்டணத்தார்
மதுரைக்குடிபடைகள் மாளிகையிற்போய்புகுந்தார்
ஓடியொளிப்பார்களுத்தமரானவர்கள்
அப்போதுமத்தகெஜம் ஆங்காரமாய்நடந்து
தெத்துத்தெருதாண்டி தேரோடும்வீதிவிட்டு
கடையும்கடைத்தெருவும் கருமாரவீதிவிட்டார்
அல்லியம்மாள்தன்னுடைய-அரண்மனையில்வந்ததுதான்

பாமினியைக்கண்டவுடன் அல்லியெழுந்திருந்து
மதகெஜம்முன்னேவந்து வணங்கியேதெண்டனிட்டான்
யானைக்குமுன்பாக ஆகாரம்வைத்தார்கள்
வயிராரவுண்டதல்ல மயக்கம்பெரிதாக்க
கண்கள்சிவந்தனவே கனமயக்கங்கொண்டதுவே
அல்லிபெருமாளை மடிவணங்கியேதுசொல்வாள்
நாம்பிறக்கவேணுமென்று கல்லுதலம்பண்ணியீர்களோ
நீங்கள்-தவசுபண்ணிபெற்றமகள் தனிமையிலின்றுவிட்டேன்
அன்று-ஏழுபிராயத்திலே எதிர்த்துவந்தநீன்முகனை
வெட்டிதலையறுத்து விராட்டங்கட்டிக்கொண்டேன்
நீன்முகனைக்கொன்றுதானே பட்டமாளுகிறேன்
வாடிபெண்ணேயென்பார்கள் வையகத்திலாருமில்லை
அடியென்றழைத்தவர்கள் ஆருமில்லைபூமியிலே
ஆண்டியிடவாயிலிலே அலைச்சல்படுகிறேன்யான்
சாதிகெட்டபண்டாரம் தாறுமாறாய்ச்சொல்லுகிறான்
சொல்லொணாச்சொல்லுகிறான் சென்மமுருகுதைய
பொறுக்கமுடியவில்லை பெரும்பாவிசொன்னதெல்லாம்
கேட்டுமுடியவில்லை கேடுகாலன்சொன்னதெல்லாம்
செல்வமருமைத்துரையா சிறந்திருந்தின்றுவிட்டேன்
ஆண்டியைக்கொல்வதற்கு அழைப்பித்தேனுச்சியரே
அல்லியதுவார்த்தைகேட்டு ஆங்காரக்கோபமுடன்
கண்சிவந்துமத்தகெஜம் காமியனைக்கொல்வதற்கு
தும்பிக்கைதூக்கியல்லோ சுற்றியறையவரும்
முதலில்மச்சரேகைகளும முன்னமுதுகண்டதுதான்
மச்சவடிவுகொண்டு மயங்கிற்றுஅப்பொழுது
மச்சரேகைபடைத்தவர்கள் மண்டலத்திலாருமில்லை
அர்ச்சுனனொருவனல்லால் அவனியிலேயாருமில்லை
வாழ்விஜயனல்லாமல் மண்டலத்திலாருமில்லை
தேவேந்திரன்மகன்காண் திருமாற்குமைத்துனன்காண்
துரௌபதையைமாலையிட்ட தேர்விஜயனிவர்காணும்
அல்லியரைக்கன்னமிட ஆண்டிகோலமாகிவந்தார்
மாப்பிள்ளையைக்கொல்லவென்று மருந்திட்டாள்மாபாவி
கணவனைக்கொல்வதற்கு கனத்தமருந்திட்டாளே
அல்லிதன்வார்த்தைகேட்டு அர்ச்சுனனைக்கொன்றுவிட்டு
அயர்பெருமாளும அதிகதல்பழுதுவரும்
பீமனறிந்தாலே வெகுமோசம்போக்குவிக்கும்
அல்லியற்கேற்றதொரு அழகுள்ளபுருஷனிவன்
மகாராசனைமோப்பிட வையகத்திலாருமில்லை
செல்வமருமகன்தான் சிறப்பக்காரனேமேன்
அருமைமருமகன்தா னலைச்சல்படுவானேன்
தும்பிக்கையாலே சுழற்றியெடுத்துக்கொண்டு

கும்பஸ்தனத்தில்வைத்து கூத்தாடுமேயானையது
கண்டாளேயானைதன்னை கண்டுகொள்ளக்கோபமுடன்
மதயானைதான்மயங்க மறிந்தறிவான்பாவியவன்
காட்டானைதான்மயங்க கனமருந்தறிவாண்டி
என்னைமயக்கும்வகை இவனறியமாட்டானே
ஆரடிதாதிகளே யடியுங்கள்யானைதன்னை
மாறியடியுமென்றாள் மதயானைதன்னையவள்
அப்போதுமத்தகஜம் அல்லியரைப்பார்த்துரைக்கும்
மாப்பிள்ளையுநீயுமாக மணக்கோலம்வரும்போது
என்னையழைத்தாலும் ஏந்திழையேவருவேனோ
வேண்டியழைத்தாலும் வருவேனோமெல்லியரே
என்றுநடந்ததுவே இருண்டவனங்களுக்கு
மதயானைபோனபின்பு மாயவரேதுசெய்தார்
மான்செவியுங்கண்கள்ரெண்டு மாயவனார்தெரியவைத்தார்
கண்ணுந்தெரிகிறதே காதிரண்டுங்கேட்கிறதே
அல்லிப்பெருமாளு மாரணங்கேதுசொல்வாள்
பாக்கியிலும்நல்லவளே பவளசேனைநாயகியே
இந்தக்கிழவனைத்தான் யென்செய்வேன்தோழியென்றாள்
செல்வக்குலையுதடி தேன்மொழியேயென்னசெய்வேன்
பாண்டிப்பெருமாளே பதறுதேசற்றேநில்லும்
அறிந்துநான்வந்துமல்லோ ஆச்சியரேசொல்லுகிறேன்
தெரிந்துநான்மல்லோ சொல்லுகிறேனுந்தனுக்கு
திடுக்கென்றெழுந்திருந்து தோழியும்வருகிறாளே
சங்கமனாருகில்வந்து தையலாருமேதுசொல்வாள்
ஐயாபெரியவரே யரிவைப்படைத்தவரே
தீரப்படித்தவரே தெளிவறிந்தசங்கமரே
புதிதாய்தபசுபண்ணி புத்திமிகக்கற்றவரே
எங்கிருந்துவந்தீர்கா ணிங்கேபுலம்புகிறாய்
ஏதுவகையாக இங்கேவந்தீர்சொல்லுமையா
ஆர்காணுமாச்சியரே யருகில்வந்துகேட்கிறது
மல்லிகார்ச்சுனமிருந்து வந்தேனிதுவழியாய்
துங்கபத்திரிகோதாவரி துய்யகிருஷ்ணாநதியுடனே
கேதாரஞ்சரஸ்வதியும் ஸ்நானங்களாடிவந்தேன்
பாராதஸ்தனங்களில்லை பணியாதகோவிலில்லை
முழுகாததீர்த்தமில்லை மிதியாதகோவிலில்லை
புண்யகோடிதீர்த்தமாடிப் போரேனம்மாராமேசுரம்
பிட்டுக்குமண்சுமந்த பித்தரையும்தெரிசித்தேன்
நூறுபத்துஞ்சென்றதம்மா நிசமானயென்வயது
தோலுநரம்புகளும் தொங்குதுபாரெந்தனுக்கு
இப்பவோபின்னையோ இன்னமரைநாழிகையோ
எப்பவோஎன்சடலம் பிறப்பதுநானறியேன்

அல்லிப்பெருமாளும் அரசாளுநாயகியாள்
கன்னிகையென்றார்கள் கட்டழகிவல்லியரை
பத்தினியாளென்றுவெகு பேர்களுஞ்சொன்னார்கள்
ஆசையினாலேதா னானங்கள்தேடிவந்தேன்
எங்கள்முப்பாட்டனாளையிலே வைத்தபழஞ்சோறு
அட்சயபாத்திரக்கா வடிமேலாக்கதென்று
சோளிக்குபழஞ்சோறு கேட்கவந்தேனங்கதரியே
உடுத்திக்கிழிந்திருக்கு முன்னாடைபொருமுழந்தான்
எனக்குமயர்தக்காமே லழுகிருந்துபோனேனம்மா
அவ்வார்த்தைதான்கேட்டு ஆரணங்குவக்கனிட்டாள்
அல்லியர்குலெதண்டனிட்டு அன்புடனேதுசொல்வாள
ஐயாபெரியவர்மேலவாசப்பட்டீரே
அவர்முப்பாட்டனாளையிலே வைத்தபழஞ்சோறியம்மா
அட்சயபாத்திரத்தா லடிமேலாக்கதம்மா
சோறுக்குபழஞ்சோறு கேட்டீரோச்சுதரியே
பிச்சைகொடுத்தனுப்பும் போய்விடுவார்சுவாமியென்றாள்
அவ்வார்த்தைதான்கேட்டு அரிதுலைவாயிலாள்
அறுபதுமுழம்புடவை அழகானபச்சைவடம்
எடுத்துக்கொடுங்கடி இரக்கமில்லாபாவிபற்கு
நச்சைகொண்டிறந்த கனைமுழுவன்போராட்டம்
எப்போதுதானதுவும் எடுத்துக்கொடுங்களென்றாள்
ஒட்டம்நடையுமாக ஓடிவந்தாராதாதியர்கள்
பச்சைவடங்கொண்டுவந்து பண்டாரமுன்னேவைத்தார்
ஐயாபெரியவரே அறிவுபடைத்தவரே
சோளிக்குபழஞ்சோறு கந்தரியைக்கேட்டீரே
முப்பதுமுழப்புடவை முன்னேவைத்தோமெடுத்துப்போ
ஆர்காறுமாச்சியரே ஆரணங்கேநீகேளும்
இப்படிக்குவேறுமானால் எனக்குமனேசமுண்டு
நாட்டிலேநான் லட்சம் நமக்குக்கொடுப்பார்கள்
பத்தினியாள்கோட்டதோர் பாவாடைபுள்ளாடை
உள்ளாடைசேலைதனி லொருமுழம்வேண்டுமென்றார்
அவ்வார்த்தைதான்கேட்டு அல்லியருங்கோபங்கொண்டு
இப்படிக்குபிச்சைகேட்போருண்டோவுலகுதனில்
பாக்கியமுங்கல்லதொரு பவளசேலைவெகுகொல்லாள்
ஆச்சியமேயுக்தனுக்கு அதனுற்பழமில்லை
கொடுப்பதிலேயம்மா குறைவொன்றும்வருவதில்லை
அருக்கில்புழுங்கினதோர் ஆடைநன்றன்றால்பேதமென்ன
கொடுக்காமறபோனாலவன் கொஞ்சத்திக்கிடுவதில்லை
சனியன்தொலையவேண்டுஞ் சற்றேகொடுத்தனுப்பும்
அப்படியேகான்கொடுத்தா லாண்டியவன்போவானோ
கேட்டுவாதாதியரே கேடுகெட்டசங்கமனை

பாங்கியிலும்நல்லவளாம் பவளசேனையோடிவந்து.
ஐயாபெரியவரே அறிவைப்படைத்தவரே
நிரப்படித்தவரே தெளிவறிந்தசங்கமரே
உள்ளாடைசேலையது ஒருமுழமூன்றதாலே
போகிறீரோபெரியவரே புண்ணியரேசொல்லுமென்றாள்
ஆனால்கேளாச்சியரே அதிலுமொருவயனம்
ஏந்திழையாள்பிச்சைதந்தால் இருகையால்வாங்கிகொள்வேன்
தேன்மொழியாள்கைத்தலத்தை தீண்டியேயான்பிடித்து
அள்ளியேயீறிடுவேன் அனங்கமாரியற்கு
இருகையினால்வாங்கி ஏந்திழையாளளிக்கவேண்டும்
உலகதிலுள்ளபடி உகத்தமியேதப்பாது
அவ்வார்த்தைதானகேட்டு அழகானதாதியரும்
மகுடக்குமாச்சியற்கு வந்தவரும்தெண்டனிட்டாள்
ஆச்சியரேநீர்கேளும் அடியேனொருவார்த்தை
ஐயருக்குபிச்சையது ஆனாங்கேதந்தபின்பு
உன்கைத்தலத்தைத்தான்பிடித்துக் கடுகியேயீறிடுவார்
வாங்கிச்சரித்துக்கொண்டால் வாழ்த்தியவர்போய்விடுவார்
உலகத்திலுள்ளபடி யுனக்குக்குறைவுமில்லை
தலையிலெழுத்திதுவோ தையலரேயென்தோழி
உடுத்தியசேலையது உள்ளாடைதான்கிழித்து.
இந்தாருஞ்சாமியென்று ஈந்தாளேயல்லியம்மாள்
வாங்கியந்தசங்கமனும் வாழ்வரசிமுகம்பார்த்து
அள்ளியேயீறுமிட்டார் ஆணங்குகைத்தலத்தில்
பத்தினியைவாழ்த்தியவர் பல்லொளியைக்காட்டினரே
அடிவானமில்லையப்போ லல்லியற்குத்தோன்றியது
கண்டுமயங்கினளே கட்டழகியல்லியவள்
காண்டீபனருச்சுனரும் காற்றாய்பறந்துவிட்டார்
தெத்துத்தெருதாண்டி சீரானகாட்டில்வந்தார்
மாயன்பெருமாளிடம் வந்துவிட்டானருச்சுனனும்
அல்லியின்வாசலிலே அதிசயங்களுள்ளதெல்லாம்
மாயருடன்சொல்லியல்லோ மனஸ்தாபப்பட்டழுதான்
மாலைதரிப்பதெப்போ மனதுகுறைதீர்வதெப்போ
கூடியணைவதெப்போ குறைகளெல்லாந்தீர்வதெப்போ
மன்மதபாணமது மார்புருவிப்போகுதென்றான்
அப்போது அல்லியரும் அவள்சோகந்தீர்ந்தெழுந்து
ஆரடிதோழியர்க ளாயிரம்பேர்வாங்களடி
ஆண்டியைக்கொண்டுவாரும் ஆக்கினைகள்செய்யவேணும்
பாங்கியிலும்நல்லதொரு பவளசேனையேதுசொல்வாள்
சந்திரனேசூரியனே சதுர்முகப்பிர்மாவோ
மாணிக்கச்சொக்கலிங்கம்வடிவுகொண்டுவந்தாரே
எங்கென்றுதேடுவோம் எழிலானசங்கமனை

போருளும்போருன் போவோமரண்மனைக்கு
அல்லியைக்கூட்டிக்கொண்டு அரண்மனையில்வந்தார்கள்
மாளிகைவாசலது மண்டபம்வந்தார்கள்

ஸ்ரீகிருஷ்ணபகவான் பாம்புபிடாரனாகவும் அருச்சுனன் பாம்பாகவும் வடிவுகொண்டது.

அப்போதுபெருமானும் ஆரென்னவடிவெடுத்தார்
பாம்புபிடாரனாகப் பாரளந்தார்வடிவெடுத்தார்
தொண்ணூறும்பத்துஞ்சென்ற துவண்டகிழவனைப்போல்
பல்லைப்பூபோலாக பழுத்தகிழவனானார்
பற்குளிதப்பாம்புகளை பாரளந்தாருண்டுபண்ணார்
வாழ்விசயனருச்சுனனை மாணிக்கப்பாம்பாக்கி
போர்விசயனருச்சுனனை பெட்டியிலேதானாக்கி
முப்பதுவிருதுகட்டி முகடிக்குழலெடுத்து
பாம்புபெட்டிக்காவடியை பாரளந்தார்தோளில்வைத்து
மகுடிக்குழலூதி வாறாரேயெம்பெருமாள்
அல்லியவள்பிறந்த அழகானபொய்கையண்டை
ஆலமரத்தடியில் அரிராமர்வந்தமர்ந்தார்
நடுகாட்டிடைச்சியர்கள் நானூறுகன்னியர்கள்
பாற்குடங்கள்தாமெடுத்துப் பத்தினிக்குக்கொண்டுவந்தார்
காரம்பசும்பாலைக் கப்பங்கள்கட்டிவைப்பார்
ஆலமரநிழலிலே அனைவரும்வந்தமர்ந்தார்
பெண்ணரசிமாதரெல்லாம் பிடாரனைக்கண்டார்கள்
ஐயாபெரியவரே அழகானபிடாரனேநீர்
எந்தவூரெந்தநாடு எங்கிருந்துவந்தீரையா
ஊரென்னபேரென்ன உத்தமனேசொல்லுமென்று
சோக்குமலையாளம் கொச்சிதேசமெங்களது
பாம்புபிடிக்கிறதும் பவனியாட்டிவைப்பேனென்றார்
ஆனால்கேளாயாவே அடியேனொருவார்த்தை
என்னென்னபாம்புவிதம் எடுத்துதானாட்டுமென்றார்
பசியாயிருக்குதம்மா பாம்பாடமாட்டாது
ஐந்துநாளாச்சுதம்மா ஆகாரந்தான்புசித்து
போசனங்களில்லாமல் புல்லாடல்பட்டுதம்மா
பாலதுதானகுடித்துப் பசியதுதான்தீர்ந்தால்
அப்போவிளையாடும் அழகானபாம்பிதுதான்
அவ்வார்த்தைகேட்டு அங்கிருக்குமாதரெல்லாம்
கொஞ்சம்பால்வார்க்கிறோம் குடிக்கவையும்பாம்பையென்றார்
அப்போதுபிடாரன் ஆயரவரோடுசொல்வார்
ஒருவர்-கண்பார்க்கக்குடியாது கனமுள்ளபாம்பிதுதான்
பக்கந்திரைவளைத்து பாற்குடத்தைமுன்புவைத்தால்
உண்டுபசியாறும் உத்தமிபேழைப்பாப்பாம்பு

பாற்குடங்களைத்திறந்துமுள்ள பாலெல்லாம் பாம்பு குடித்தது.

அத்தண்டபெண்களெல்லாம் அவ்வார்த்தைதான்கேட்டு
பாற்குடமுள்ளதெல்லாம் பார்த்திறந்துவைத்தார்
சுற்றித்திரைபோட்டு சீரானபாம்பைவிட்டார்
பக்கந்திரைவளைத்துப் பாம்புகளையுள்ளேவிட்டார்
ஆறுலகுமன்னன் அருச்சுனவீரியனும்
பாலைக்குடித்துவிட்டு பானையுருட்டிவிட்டார்
திரையெடுத்துப்பார்த்தார்கள் திகிலடைந்தார்பெண்களெல்லாம்
ஐயையோதெய்வமென்று அரைந்துகொண்டாரெல்லவரும்
பாவிகெடுத்தாயே பாலெல்லாம்போச்சுதடா
இத்தனைபாலைபது எதாய்குடித்ததடா
அல்லியறிந்தாலே ஆக்கினைகள்செய்வாளே
தாமணிப்போட்டல்லவோ தலையைதரிப்பாளே
கொல்லநினைப்பாளே குடிகேடுவந்திடுமே
ஆரடாபாதகனே அறிவுகெட்டபிடாரனே
கொஞ்சம்பால்குடிக்குமென்று குடமெல்லாம்வைத்தாயே
நரைத்தலையைநாய்பிடுங்க கிழத்தலைக்குகேடுவர
எங்களைக்கெடுத்தாயடா எங்கள்பாவங்கொண்டாயடா
என்றுபுலம்புகிறு ரிளங்கொடிமாதரெல்லாம்
அழுதகண்ணுஞ்சிந்தையுமாய் போருர்சள்மாதரெல்லாம்
அல்லியம்மாள்தன்வாசல் அரண்மனையில்வந்தார்கள்
அல்லியற்குமுன்வந்து அடிவணங்கிதெண்டனிட்டார்
ஆச்சியரோஎன்தாயே அதிசயத்தைநீர்கேளும்
மதுரபுரியருகே வைகைகரையோரம்
ஆலமரத்தடியி லங்கேயொருகிழவன்
பாம்புபிடாரனவன் பாருலகில்பாமறியோம்
பத்துவிதப்பாம்புகளில் பஞ்சரத்தினப்பாம்பிதுதான்
சந்திரனைப்போலாகத் தளும்புதேஎன்னுச்சி
சூரியனைப்போலாகத் துலங்குதேஎன்னுச்சி
வேரிற்பவளமது மின்னுகிறகாந்தியைப்போல்
மின்னற்கொடிபோலே விளங்குகிறதப்பாம்பு
பாம்புபசியாயிருக்கிறது பால்வார்த்துபோங்களென்றான்
பாற்குடத்தைசிறழிக்கப் பாலதுவார்க்கவந்தோம்
கண்ணாலேபார்த்தாலே காண்டிப்பால்குடியாதென்றான்
அத்தனைபாலையுந்தா னப்பாம்புபுண்டதம்மா

அல்லியரசாணி பாம்புபிடாரனை வரவழைத்தது.

அவ்வார்த்தைதான்கேட்டு அல்லியருமேதுசொல்வாள்
இந்தவதிசயத்தை எங்கிலும்கண்டதில்லை
பாம்புகளைப்பார்க்கவேண்டும் பிடாரனையழையுமென்றாள்

அந்தக்கிழவனைப்போய் அழைத்தோடிவாருமென்றாள்
அவ்வார்த்தைதான்கேட்டு அலங்காரத்தோழியர்கள்
ஓட்டம்நடையுமாக ஓடிவந்தார்பிடாரனண்டை
ஐயாபிடாரனேயுன்னை ஆச்சியருமழைப்புமென்றாள்
பாம்புகளையாட்டிவைத்தால் பாக்கியங்கள்தந்திடுவார்
வேணுமென்றாடச்சிதங்கள் உத்தமியாள்தான்கொடுப்பாள்
வாருமையாவென்றுசொல்லி வருந்தினார்தாதியர்கள்
அப்போபிடாரனவன் அரிராமர்தானெழுந்து
காவடியைதோளில்வைத்து கடுகியேவழிநடந்தான்
அங்காடிவீதிகளும் அரண்மனைத்தெருதாண்டி
அல்லியம்மாள்தன்வாச லரண்மனையிற்போய்புகுந்து
வாசலும்வாசலது படியேழுந்தான்தாண்டி
சிங்காதனத்துக்கு முன்பாகவந்துநின்றார்
உத்தமியைக்கண்டவனும் ஒதுங்கியேதெண்டனிட்டான்
வந்துபணிந்தவரும் வணங்கியேநிற்கலுற்றார்
ஐயாபிடாரனே அப்பாம்பையாட்டுமென்றாள்
வண்ணவண்ணப்பாம்பெடுத்து விதவிதமாயாட்டலுற்றான்
ஆடாதகூத்துகளை ஆட்டிவைத்தான்பிடாரனவன்
ஐயாகிழவனாரே அன்பானபிடாரனேநீ
வேரிற்பவளம்போலே தளும்புதேபெட்டியிலே
சங்கிரகாசம்போலாகக் களும்புதேசான்றைச்சி
சூரியனைப்போலேயல்லோ துலங்குகிறதுபெட்டியிலே
என்னபாம்பிருக்கிறது எடுத்துநீயாட்டுமென்றாள்
ஆச்சியரேநீர் அடியேனொருவார்த்தை
என்னோடேதான்பிறந்த எனக்கிளையதங்கையவள்
தங்கையவள்வளர்த்துவந்த தயவானபாம்பிதுதான்
எப்பாம்பெடுத்தாலும் இப்பாம்பெடுக்கறியேன்
பெண்களைக்கண்டாலே பிரியமுடனோடிவரும்
மார்மேலுந்தோள்மேலும் மடிமேல்புரண்டாடும்
தோளின்மேலேறுவதும் தும்பிபாய்வதுவும்
மார்பின்மேலேறுவதும் மடியிலிருக்குமது
முகத்தோடமுகமணைந்து முத்தங்கொடுக்குமது
மார்பின்மேலேறியல்லோ மருவிவிளையாடும்
கிதங்கள்பாடுவதும் கொண்டாடிக்குமது
ஆடாதகூத்துகளும் அரும்பவலியாடுவதும்
வெட்டும்பிளசெடுத்து மெத்தெனவேவாயிலிடும்
வெற்றிலைசுருளெடுத்து விரும்பியதுகொடுக்கும்
பஞ்சரத்னபாம்பிதுதான் பத்தினியேநானெடுக்கேன்
உன்னையிதுகண்டாலே ஓடிவந்துமடியிலேறும்
இப்பாம்பைநானெடுக்கேனென்றான்பிடாரனுமே
குறல்கேளீயாவே அன்பானபிடாரநீ

அப்பெரியபாம்பினது அதிசயத்தைப்பார்க்கவேணும்
சற்றெவெடுத்துவிடும் சந்தேகப்படவேண்டாம்
உச்சிதங்கள்வேணதெல்லா முன்றனுக்குபான்தருவேன்
மெத்தவருந்தினளே மெல்லினல்லாளல்லியரும்
அப்போபிடாரனவன் அப்பாம்பைநானெடுத்தார்
பெட்டிதிறக்கையிலே போனவாழ்விசையன்

அருச்சுனன் பாம்புருவுக்கொண்டு அல்லிஅம்மாளை மருவினது.

அல்லிமடிமேலே அர்ச்சுனனேறினனே
மார்மேலும்தோள்மேலும் மருவிவிளையாடுகிறன்
முகத்தோடேமுகமணைந்து முத்தங்கொடுக்கிறனே
போதுமையாமைத்துனரே போய்வாருஞ்சுவாமியென்றன்
மாயவரைக்கண்காட்டி வழிபிடித்துபோங்களென்றன்
தும்பிபறக்கிறதுஞ் சேர்ந்துவிளையாடுவதும்
கொண்டாடியடிப்பதுவுங் கூத்தாடுவதும்
வெற்றிலைபாக்கெடுத்து மெல்லியற்குகொடுப்பதுவும்
பார்த்துமகிழ்ந்தாளே பத்தினியாளல்லியம்மாள்
ஐயாபிடாரனேநீ அன்பாகவார்த்தைகேளும்
இன்றையராத்திரிக்கு இருக்கட்டுமிப்பாம்பு
நாளைக்குவந்துதான் வாங்கிப்போம்பாம்பையென்றாள்
அவ்வார்த்தைதான்கேட்டு அன்புடனேயேதுசொல்வாள்
என்னுடையதங்கையவள் இன்பமுள்ளநாயகிபாள்
பஞ்சணைமெத்தையிலே படுத்திருக்கும்போதையிலே
கூடப்படுத்துக்கொண்டு குலாவிவருமபாம்பிதுதான்
பக்கத்திற்பிரிந்ததில்லை பத்தினியாள்தங்கையவள்
காணமற்போனாலே கலங்கித்தவிப்பாளே
பாராமற்போனாலே படுக்கைபொருந்தாளே
உண்ணாள்குளியாளே வுறக்கம்வந்துதூங்காளே
அல்லவென்று உன்னிடத்தி லாச்சியேநான்விட்டுபோனால்
பாம்புகரைந்துபோகும் பத்தினியேயேதுசொல்வேன்
அரைப்பலம்குறைந்துபோகும் அழகானவிப்பாம்பு
கரைந்துகுறைந்தாலும் கனகந்தருவேனென்றாள்
தருசமிறையாக எறுத்துப்போம்பாம்பையென்றாள்
அப்படியேசம்மதித்தான் ஆயன்பிடாரனவன்
எடுத்துதராசில்வைத்து இடைபார்த்துவந்துவிட்டான்
பாலும்பழங்களுமே பசியாமல்வையுமென்றான்
நாளைவருகிறேன்யான் நாயகனேபோகிறேன்யான்
பாஷையினாலேயல்லோ பார்த்திபனேதுசொல்வான்
எட்டொருநாள்போனபின்பு இங்கேவாமைத்துனரே
இந்தவிசுவாசமெனக்குத்தெரியுமென்றான்
போங்காணுஞ்சுவாமியென்று புகழாகதெண்டனிட்டார்
பாலும்பழங்களுமே பாம்புக்குவைத்தார்கள்

பாம்பைக்கொடுத்தல்லோ பாரளந்தார்போய்நடந்தார்
பார்த்திபனருச்சுனரும் பசிபோய்த்தானிருந்தார்
அந்திக்காலமாச்சுதங்கே ஆதித்தன்போய்மறைந்தார்
ஆதித்தன் தான்மறைய அல்லியம்மாளேதுசொல்வாள்
அந்தியனுஷ்டானம் அனைத்துமிகக்கழித்து
செபதபங்களுள்ளதெல்லாம் செய்தாளேயல்லியம்மாள்
சொக்கனைப்பூசைசெய்து செவிதனிலேபூசொருகி
போசனசாலையிலே புகுந்தாளேயல்லியம்மாள்
அறுசுவைபாற்போசனமும் சாதங்கறிவகையும்
உண்டுபசியாறி உத்தமியாள் கையலம்பி
பஞ்சணைமெத்தையுள்ள பள்ளியறைசோடியென்றாள்
தோழிமாரானவர்கள் சுருக்காயெழுந்திருந்து
கல்முன்றுடையதொரு கனவயிரக்கட்டிலிட்டார்
மெத்தைமடித்துவிட்டார் மேலேதலையணைபோட்டார்
காம்பரிந்தமுல்லைப்பூ கட்டிலின்மேலேசொரிந்தார்
தங்கத்தலையணியுஞ் சாய்மணையுமிட்டார்கள்
ஒருகுதலையணையும் ஒய்யாரத்தினடுவைத்தார்
இருகுதலையணையும்வைத்து அலங்காரஞ்செய்தார்கள்
அத்தர்புனுகுகளும் அள்ளித்தெளித்தார்கள்
கதம்பமுங்கஸ்தூரி கரைத்துத்தெளித்தார்கள்
சந்தனமும்பன்னீருஞ் சாடிநிறைத்திசையும்
சந்தனமும்பன்னீருஞ் சாமபிராணிதூபமிட்டார்
குத்துவிளக்குகளைக் கொளுந்துபடவேற்றினார்கள்
மாடங்கள்தோறுமங்கே மலர்விளக்குமேற்றினார்கள்
சன்னலிலேபன்னீரைச் சாடிநிறைத்திசையும்
பஞ்சணைமெத்தையண்டை பாக்குபடிக்கம்வைத்தார்
முத்துசுட்டசுண்ணாம்பும் மோரங்கிவெற்றிலையும்
ஆரங்கிபாக்குகளும் அழகுள்ளவெற்றிலையும்
கச்சாகளிபாக்கும் கம்மாறுவெற்றிலையும்
வாகாய்ச்சுருள்மடித்து மாணிக்கத்தட்டில்வைத்தார்
கிண்ணியிற்பாலைவைத்து கெண்டிகையில்தீர்த்தம்வைத்தார்
சோடித்தோமாச்சியென்று தெண்டனிட்டார்தாதியர்கள்
பாம்பெடுத்துமடியில்வைத்து பத்தினியாள்தானடந்தாள்
பஞ்சணைமெத்தையின்மேல் படுக்கையறைபோய்ச்சேர்ந்தார்
மாணிக்கக்கதவடைத்து வயிரத்தாள்பூட்டினாளே
அத்தண்டதாதிகளும் அங்கங்கேபள்ளிகொண்டார்
பஞ்சரத்னப்பாம்பெடுத்து பக்கத்தில்வைத்துக்கொண்டாள்
பைங்கிளியானல்லியம்மாள் பள்ளிகொண்டார்மலரணையில்
அப்போதருச்சுனனும் அவளைத்தானினைந்து
என்சோபந்தெளியவேண்டும் ஸ்ரீராமாதயவுசெய்யும்
காமவிகாரமது கன்றிடவேண்டுமென்றான்

ஸ்ரீகிருஷ்ணபகவான் மூதேவியழைத்து அல்லியின் மேல் பிரவேசிக்கச் செய்தது.

அருச்சுனன் தன்துயர மறிந்தாரேயெம்பெருமான்
சீதேவிமுன்பிறந்த திருவிளையாள்மூதேவி
மூதேவிநாயகியை முகில்வண்ணர்தாமழைத்து
மருடத்துரைச்சியற்கு மாறுதகித்திரையை
விடிந்தமொருசாமம் மெல்லிகித்திரைதெளியாமல்
மாறுகித்திரைகொள்ளுமென்று வரவிட்டார்மாயவரும்
வந்துநிலைந்துகொண்டாள் வளம்பெரியமூதேவி
அனந்தல்தெளியாமல் அசந்துநித்திரைபோகலுற்றாள்
பாம்புவடிவைவிட்டுப் பார்த்திபனர்ச்சுனனும்
எப்போதும்போலாக இளவிசயன்வடிவுகொண்டான்
சங்கரரும்பார்வதியும் தழுவியிருந்ததுபோல்
சிவனுடனேபார்வதியும் சேர்ந்திருந்தபாவனைபோல்
தென்னகரிராமனுக்கு சீதைவந்துவாய்த்ததுபோல்
கந்தருடன்வள்ளியம்மை கைகலந்தபாவனைபோல்
சாரையுஞ்சர்ப்பமும் கருவிமயலானதுபோல்
மானுங்கலையுமல்லோ மருவியணைந்ததுபோல்
கூடிமருவினனே குங்குமப்பூமெத்தையிலே
கண்ணாடிமேலேயல்லோ கடுகுருண்டபாவனைபோல்
மல்லிகைப்பூமேலே வண்டிருந்துவாய்த்ததுபோல்
மருவியணைந்தானே மகாவிடாய்தீர்ந்தானே
ஆறுதசோபமெல்லா ஆமினனர்ச்சுனனும்
தீறுதசோயமெல்லாம் தீர்ந்தானருச்சுனனும்
மங்கையரைப்புல்கியல்லோ மருவினனர்ச்சுனனும்
வெள்ளிமுளைக்கையிலே வெண்கோட்டான்கூவும்போது
பாம்புவடிவெடுத்து பக்கம்படுத்திருந்தான்
எப்போதுஞ்சர்ப்பம்போ லெழில்விசையன்வீற்றிருந்தான்
பொழுதுவிடிந்தங்கே பொற்கொடிமார்கண்விழித்தார்
தோழியர்கள்தாதியர்கள் திடுக்கிட்டெழுந்தார்கள்
அல்லிப்பெருமாளும் அசந்துநித்திரைபோகலுற்றாள்
கொம்பனைமார்தோழியர்கள் கூவியெழுப்பினர்கள்
தட்டியெழுப்பினர்கள் தாமக்குழலாளை
பொட்டெனக்கண்விழித்துப் பொற்கொடியாள்தானெழுந்து
அலைகுலையத்தலைகுலைய ஆடைகளைந்திருக்க
கதவைத்திறந்தாளே கட்டழகியல்லியம்மாள்
பாங்கியர்கள்சூழவேதான் பவளசேனைவந்துவிட்டாள்
அல்லிப்பெருமானை ஆரணங்கைத்தான்பார்த்து
உற்றுற்றுப்பார்த்தவளும் உத்தமியைகேட்கலுற்றாள்
ஒருநாளுமில்லாத உச்சிதங்கள்காணுதம்மா
வாரிமுடித்ததலை மயிருங்கலைந்ததென்ன

கோதிமுடித்ததலை கூந்தல்கலைந்ததென்ன
மஞ்சளழிந்ததென்ன மார்பழிந்துபோனதென்ன
பொட்டுகலைந்ததென்ன பூவழிந்துபோனதென்ன
கண்ணிலிட்டமைகளெல்லாம் கரையவந்தகாரணமேன்
கோவைப்பழம்போல குமரியின்செவ்வுதடும்
குமரியின்செவ்வுதடும் கோதியிருப்பானேன்
படுக்கைகலைவானேன் பஞ்சணைகலைவானேன்
காம்பரிந்தஜெங்கலப்பூ கசக்கினசுங்குவானேன்
மங்கையரேஉந்தனுக்கு வாட்டம்வந்தவாறேது
அல்லிப்பெருமாளு மாரணைக்குஎதுசொல்வாள்
பிடாரனவன்சொன்னவார்த்தை பொய்யல்லதாதியரே
மனிதருகூடவே மருவினபாம்பிதுதான்
பஞ்சணைமெத்தையிலே பக்கத்தில்வைத்திருந்தேன்
எதாய்விளையாடிற்றே இளங்கொடியேதேன்மொழியே
என்று-முத்தின்மிதியடியைத தொட்டுநடந்தசைந்தாள்
பூங்காவனந்திறந்துப்போய்ப் புனல்கங்கைநீராடி
பாளைகொண்டுபல்விளக்கி ஓலைகொண்டுநாவழித்து
கன்னியிளங்கொடியாள் கால்முகஞ்சுத்திசெய்து
வாயோடுபல்லுஞ் மதிமுகஞ்சுத்திசெய்து
சிவனுக்கருளென்று திருநீற்றுக்காப்பணிந்தாள்
சிங்காரமெத்தையின்மேல் தேன்மொழியாள்வந்தமர்ந்தாள்
ஆரடிதாதியரே அலங்காரத்தோழியரே
பாம்புதனக்குப்பாலும் பழங்களும்வையுமென்றாள்
கொண்டுவந்துவைத்தார்கள் குடம்நிறைந்தபாலதனை
பஞ்சரத்னப்பாம்பிதுதான் பாலைக்குடித்ததுவே
அப்போபெருமாளும ஆயரவர்தாமெழுந்து
பிடாரனைப்போலாக பெருமாளும்வந்துவிட்டார்
வாசலுள்ளவாசலது படியேழுந்தான்தாண்டி
அல்லியம்மாள்முன்னேவந்து அடிபணிந்துதெண்டனிட்டார்
ஆச்சியரேநீர்கேளும் அடியேனொருவார்த்தை
இப்பாம்புயில்லாம லென்னுடையதங்கையவள்
அழுதகண்ணுஞ்சிக்கையுமா யமுதுண்ணமாட்டாமல்
கண்ணீரைவிட்டவளும் கலங்கெழுதாளே
கேளாதவார்த்தையெல்லாம் கேட்டேனம்மாஉன்னாலே
உன்னாலேபட்டகளை வுதயமியேபோதுமம்மா
என்னுடையபாம்பதுதா னெத்தனைகரைந்துபோச்சே
எவ்வளவுதேய்ந்ததோ பெடுத்துவாலிருப்போமென்றார்
கொண்டுவந்துவைத்தார்கள் கொப்பெனவேதிராசுதனில்
பாரமிகக்குறைந்து பாம்புதட்டெழும்பியது
அரைவாசிகுறைந்ததம்மா அழகானபாம்பதுதான்
இன்னம்-இரண்டுநாளிருந்தால் யிங்கேதான்சாகும

அறியாமல்விட்டுப்போன னனர்த்தப்பரலாச்சுதம்மா
கொஞ்சமிடைக்குத்தான் கொண்டுவாரும்ரத்தினத்தை
என்றுசொல்லத்தான்கேட்டு யிளங்கொடியாளல்லியம்மாள்
வச்சிரமாணிக்கமும் வைத்திடைகட்டித்தந்தாள்
பாமபெடுத்துபெட்டியிலே பாரளந்தார்வைத்துகொண்டார்

ஸ்ரீகிருஷ்ணபகவான் அர்ச்சுனனுகியபாம்பை எடுத்துப்போனது.

போகிறேனச்சியென்று போய்நடந்தான்பிடாரனவன்.
கோட்டைகடந்தவரும கொத்தளமுந்தான்தாண்டி
தெத்துத்தெருகடந்து தேரோடும்வீதிவிட்டு
ஆரண்யந்தன்னிலே யரிராமர்வந்துவிட்டார்
ஆனாலழகுமன்னன் னர்ச்சுனனேதுசொல்வான்
வாழ்வரசியல்லியரை மாலையிடுவதெப்போ
தாலிதரிப்பதெப்போ சுவாமிபெருமாளே
கட்டினவிருதழித்துக் கலியாணஞ்செய்வதெப்போ
என்றுதெளியுமோ பெக்காலஞ்சென்றிடுமோ
அல்லிமேற்சிந்தையா யலைகிறானர்ச்சுனனும்

ஸ்ரீகிருஷ்ணபகவான் மறுபடியும் மிருகங்களை யுண்டுபண்ணினது.

அன்றுபோய்மற்றூநா ளரிராமரேதுசெய்தார்
மாயமிருகங்களை வனத்திலேயுண்டுபண்ணூர்
காட்டானைசிங்கங்களும் கரடிபுலியானைகளும்
ஏனங்கடம்பைகளும் யெருமைக்குரங்குகளும்
புள்ளிமான்முள்ளம்பன்றி புனுகுமுயல்களுடன்
மயில்குயிலன்னங்கள் வண்ணவண்ணப்பட்சிகளும்
அந்தமானமிருகமெல்லா மரிராமருண்டுபண்ணூர்
மதுரைக்குடிபடைகள் வனத்தில்வரயஞ்சுகிறூர்
கண்டவரைஎதிர்க்கிறது காட்டானைசிங்கந்தான்
ஓடிப்பதுங்கியலோ வொளிப்பாரேசெனங்களெல்லாம்
அழுதகண்ணுஞ்சிந்தையுமா யல்லியண்டையோடிவந்தார்
அழுதமுகத்துடனே அல்லியண்டையோடிவந்தார்
இத்தனைநாள்பிழைத்தோ மிடுக்கமில்லாதிருந்தோம்
என்னகுறைசெய்தோதோ யியலானமிருகமம்மா
காட்டானைகரடிபுலி கண்டுமிரட்டுதம்மா
எந்தவிதமாய்பிழைத்து யிடுக்கமில்லாதிருப்போம்
மிருந்தபன்றிமானினனும் விம்மிதாத்துதம்மா
மறுதேசம்போய்நாங்கள் வகையாய்ப்பிழைப்போமம்மா
மதுரையிலுள்ளசெனம் வலசைகுடிபோறேமெனறூர்
அவ்வார்த்தைதான்கேட் டலங்காரத்தாதிமார்கள்
அல்லியம்மாள்தன்னுடனே அறிக்கையிட்டார்தாதியர்கள்
மகுடத்துரைச்சியவள் வார்த்தையதுகேட்டு
வேட்டைகாரபெண்டுகளே விரைந்தோடியழையுமென்றாள்



குறவர்பெண்கள்மறவர்பெண்கள் கூட்டிவாதாதியென்றாள்
வில்லியப்பெண்களை வேட்டைக்கழையுமென்றாள்
கேட்டந்தாதியர்கள் கொப்பெனவேஓடிவந்தார்
வேட்டைக்காரபெண்களைத்தா னோடியழைத்தார்கள்
அப்போதுவில்லியர் மெல்லியர்யாருர்கள்
காற்செருப்புந்தோற்குல்லாவும் கைதனில்சில்லாக்கோலும்
இரட்டைகுண்டுதுப்பாக்கி யிருதோளில்வைத்தார்கள்
பன்றிகுத்துமல்லயங்கள் பாலர்களுந்தானெடுத்தார்
மான்வலைபுறாவலையும் வகையுடனே தானெடுத்தார்
உண்டிவில்லுஞ்சுண்டுவில்லும் சிங்காரவில்லெடுத்தார்
வெள்ளித்தமுக்கடித்து வெண்கலக்கொம்பூதிவாரார்
பொன்னின்தமுக்கடித்து புறப்பட்டார்பெண்கள்வர
வேட்டைநாயுஞ்சங்கிலியும் விருதூகட்டிவாருர்கள்
கருநாயுஞ்சங்கிலியும் கடுகெனவேகூட்டிவந்தார்
அல்லியம்மாள்வீதியிலே அனைவோரும்வந்துநின்றார்

அல்லியம்மாள் மறுபடியும் வேட்டைக்குப்போகிறது.

ஐயாயிரந்தோழியர்கள்டங்காரம்பயணமென்றார்
பல்லக்கைஜோடியென்றார் பத்தினியாளல்லியரும்
கனகதண்டிசொப்பனவிட்டு கன்னியர்கள்முன்னேவைத்தார்
ஆயிரம்பெண்களவ ரமுதுள்ளகுதிரையேறி
பாண்டிப்பெருமாளும் பல்லக்கிலேறினுளே
பாராசாரிபுரவிபூது பஞ்சகல்யாணியது
விடுகுதிரைஜோடித்து மெல்லியர்கள்கொண்டுவந்தார்
ஏறினாள்கனகதண்டி எடுத்தார்கொடிவிருது
ஆனையின்மேல்பேரிகைதா னடிபடுதேகுமுகுமென்று
மேளமுழக்குறதும் மண்டலமதிர
மதுரைத்தெருக்களெல்லா மண்துளெழும்புறது
மதுரைத்தெருதாண்டி வந்துவிட்டார்கானகத்தில்
காடுசெடிதாண்டி கன்வேட்டைபாடுமென்றார்
கனகத்தண்டிவிட்டிறங்கி கட்டழகியல்லியம்மாள்
ஏறினாள்புரவியின்மே லெடுத்தாளே அம்புவில்லை
தட்டினாள்புரவிதன்னைச் சாரிவிட்டாள்கானகத்தில்
வளைத்தாளே வில்லுதன்னை வாங்கிவிட்டாளஸ்திரத்தை
இழுத்துவிட்டாள்பாணந்தன்னை யிமயகிரிநடுங்க
தொட்டாளேவில்லுதன்னைச் சொரிந்துவிட்டாள்பாணங்களை
காட்டானைசிங்கங்களைக் கண்டுநாந்துகிருர்
புலிகள்கரடிகளைப் போடுகிறாள்பாணத்தால்
கலைமான்பன்றிகளும் காண்டாமிருகங்களை
மட்டில்லாமிருகங்களை வதைபண்ணிபோட்டிடுவாள்
புள்ளிமான்றன்னைக்கண்டு போட்டாளேபாணத்தாலே

மதயானைமிருகங்களை அதமாக்கிப்போடுகிறாள்
அநேகமிருகங்களை வதமாக்கிப்போடுகிறாள்
மாயன்பெருமாளு மல்லிஜாலியோடுசெய்தான்
அந்தவனந்தனிலே அதிஜாலமில்லாமல்
தண்ணீர்கிடையாமல் சுவாமிபெருமாள்பண்ணார்
அல்லிப்பெருமாட்கு அதிகதாகமுண்டுபண்ணார்
தண்ணீர்களையாலே தாகவிடாயானாளே
கொந்தலர்க்குப்போகிறதே நினைவுதப்பிப்போகிறதே
உண்ணுக்குத்தொண்டையது வுலர்ந்துமேபோகிறதே
காதையடைக்கிறதே களையாய்வருகிறதே
தண்ணீர்களையாலே தான்விழுந்தாள்பூமியிலே

அருச்சுனன் காசிப்பிராமணனாகவந்து தீர்த்தங்கொடுத்தது.

காண்டீபனருச்சுன னுங் கட்டழகரப்போது
காசிப்பிராமணன்போல் சடுகவடிவெடுத்தார்
தொண்ணூறுப்பத்தனுசென்ற துவண்டகிழவனைப்போல்
நரைத்தபூப்போலேயல்லோ நரைத்தகிழவனானார்
காசிகல்லதீர்த்தமது காவடிவைத்தோளில்வைத்து
மூர்ச்சையாய்விழுந்தாளே மொய்குழலாளல்லியம்மாள்
அந்தவழியாகவர்ச்சுனரும்வந்தாரே
பிராமணனைக்கண்டார்கள் பொற்கொடிமார்தோழியர்கள்
ஐயாபெரியவரே அழகானவேதியரே
மெத்தப்பெரியவரே மீனாட்சிவேதியரே
பாருலகையாளுமொரு பத்தினியாளல்லியம்மாள்
தண்ணீர்களையாகத் தவித்துவிழுந்தாளே
தாகவிடாய்மிகுந்து தளர்ந்தாள்காண்ராஜகன்னி
காதையடைத்தவளுங் களைத்துவிழுந்தாளே
காசிதீர்த்தமவாருமையா களைகள்தெளியவேணும்
புண்ணியமாய்ப்போகுதையா பிராமணரேதீர்த்தங்கொடும்
என்றதுதான்கேட்டு யிறக்கினான்காவடியை
இறக்கினானேகாவடியைத் தீர்த்தகுப்பிதானெடுத்து
மாதுகளைதெளிய வார்க்கலுற்றான்தீர்த்தமதை
தாகந்தெளியதற்கு தண்ணீருந்தான்கொண்டுவந்து
கடுகவர்ச்சுனனுங் காவடியைத்தோளில்வைத்து
காற்றாய்ப்பறந்தமல்லோ கரியமால்பக்கம்வந்தான்
மாயனபெருமாளே வார்த்தையொன்றுநீர்கேளும்
களைபட்டிருந்தாளே கன்னியிளங்கொடியாள்
தண்ணீரையான்கொடுத்து தாகவிடாய்தீர்த்துவந்தேன்
மாலைதரிப்பதெப்போ மணமுகூர்த்தம்செய்வதெப்போ
தாலிதரிப்பதெப்போ சுவாமிபெருமாளே
என்றுதெளிந்திடுமோ எக்காலஞ்செல்லுமோதான்

அல்லியின்மேல்பிரமைதகொண்டு அலைகிறானர்ச்சுனனும்
மாதுமேற்பிரமையாய் மயங்குகிறானர்ச்சுனனும்
மாயவபெருமாளு மலோராமமேதுசொல்வார்

ஸ்ரீகிருஷ்ணபகவானும் அர்ச்சுனனும் மாறுவேடங்கொண்டு
தண்ணீர்பந்தல் வைத்தது.

அத்வானகானகத்தி லாரண்யந்தன்னிலேதான்
தண்ணீர்பந்தல்போடுகிறார் சுவாமிபெருமாளும்
வெந்நீர்குளிர்ந்தநீர் மோர்களும்வைத்தார்கள்
கொள்ளுதண்ணீர்வைத்தார் குளிர்நசலம்வைத்தார்கள்
தண்ணீர்பந்தல்வைத்துபின்பு சுவாமியென்னவடிவெடுத்தார்
தெய்வப்பிராமணத்தி சிறுபெண்வடிவெடுத்தார்
காய்க்கும்பிராயமவள் கன்னிகட்டும்பாவனையாய்
பூக்கும்பிராயமவள் பிஞ்சுவிடுங்காலமையா
கொஞ்சம்வயதல்லவோ கொழுந்தெல்லாம்பிஞ்சுகண்டீர்
சோலையிலேசந்திரனைச் சுழட்டிப்பிடித்ததுபோல்
ஈழத்துதச்சனவ னெழுதிவரவிட்டானே
மேல்நாட்டுதச்சனவன் விளைந்துவரவிட்டானே
வேரிற்பவளமது மின்னுகிறகாந்திகையைப்போல்
மின்னற்கொடிபோலே மேகவர்ணர்வடிவெடுத்தார்
அழகுதுலங்குவதும் ஆனந்தங்கொஞ்சுறதும்
வடிவுதுலங்குமது மாணிக்கங்கொஞ்சுவதும்
இந்தவிதமாக எம்பெருமாள்வடிவெடுத்தார்.
அர்ச்சுனராஜதுரை அவரென்னவடிவானார்
தொண்ணூறும்பத்துஞ்சென்ற துவண்டகிழவனைப்போல்
பண்ணைப்பூபோலாக பழுத்தகிழவனானார்
நாணற்பூப்போலே நரைத்தகிழவனானார்
தோலுமநரம்புகளுந் தொங்குதுகிழவனுக்கு
ஒருகண்ணொள்ளைக்கண் ணொருபக்கம்நொண்டிக்கால்
ஒருகைமொண்டிக்கை யொருபக்கம்சாய்ந்தவுடல்
இந்தவிதமாக இளவிஜயன்வடிவெடுத்தான்
தண்ணீர்பந்தலுக்குள்ளாக தானிருந்தாரிருவர்களும்
படிசொம்புகைபிடித்து பிராமணத்திமுன்னிருந்தான்
அல்லிப்பெருமாளும் அவளுடையசேனைகளும்
அத்துவானகானகத்தில் அந்தவழிவாறார்கள்
மிகவேட்டையாடியல்லோ வெளிப்பட்டுவாறார்கள்
தண்ணீர்பந்தல்வழியாக தையலர்கள்வாறார்கள்
கண்டாளே தண்ணீர்ப்பந்தல் கன்னியுள்ளேவந்தாளாம்
வந்துஇறங்கினார்கள் வர்ணலட்சச்சேனையெல்லாம்
அத்தண்டசேனைகளும் அனைவரும்வந்தார்கள்
தாகக்களைகளும் சகலருந்தான்தெளித்தார்

அல்லிப்பெருமாட்கு ஆசனங்கள்போட்டார்கள்
ஆசனத்தின்மேலாக அமர்ந்தாளேயல்லியம்மாள்
பிராமணக்கன்னியென்னும் பெண்ணரசைத்தான்பார்த்து
ஆர்காணுங்கன்னிபரி அலங்காரப்பெண்மயிலே
எந்தவூரெந்ததேசம் எங்கிருந்துவந்தீர்காண்
அத்வானகானகத்தில் ஆர்வைத்தார் தண்ணீர்பந்தல்
பிராமணப்பெண்ணுமிப் பொற்கொடியாளேதுசொல்வாள்
எம்பாவம்பெரிதுகண்டீர் பத்தினியேதுசொல்வாள்
தெய்வலோகம்வாழுகின்ற தெய்வப்பிராமணத்தி
நான்-வாழும்பெருமையது மகிட்சிகள்மெத்தவேண்டாம்
ஆலடிபாதிதனி அழுதார்க்குவந்தார்கள்
அள்ளிப்பதரையிட்டு அனியாயம்பண்ணதோஷம்
சாணிதிரட்டிவந்து சரணங்கள்பட்டதோஷம்
ஆதிசிவன்சந்நிதிமுன் அழுகாய்வளர்ந்ததுகாண்
மகாதேவர்சந்நிதிமுன் மல்லாய்வளர்ந்ததுகாண்
சாணிமலையதுதான் எதிரேவளர்ந்ததுகாண்
மிட்டுதிருநாளுக்குப் புறப்பட்டார்சொக்கலிங்கம்
முப்பத்துமுக்கோடி முனிவர்களுந்தேவர்களும்
வானவருமிந்திரரு மகாதேவர்தான்முதலாய்
கைலாசஞ்சுற்றியல்லோ வருகிறவேளையிலே
சாணிமலையதனைச் சங்கரனார்கண்டுவிட்டார்
என்றுவேலவந்ததொரு இடமுகனைத்தாமறிந்தார்
பொல்லாதசாபமிட்டுப் பூமியிலேபோங்களென்றார்
சாபந்தொலைவதற்குத் தண்ணீர்பந்தல்வைத்தேனம்மா
அண்ணனில்லைதம்பியில்லை ஆதரிக்கயாருமில்லை
தாய்வீட்டுசனங்களில்லை தாபரிக்கயாருமில்லை
மாமிவீட்டுசனங்களில்லை மற்றுமனிதரில்லை
தாண்டிநுழைவதற்குத் தாழ்வாரமில்லையம்மா
எட்டிநுழைவதற்கு எரவாணந்தானுமில்லை
வாவென்றழைப்பதற்கு மனிதரொருவரில்லை
தோஷபகாமபுகளுந் தொக்கிறதுகிழவனுக்கு
மாருககிழவனுக்கு மாலையிட்டேனென்றுச்சி
இக்கக்கிழவனுந்தா னிறந்தாபடியவில்லை
பாவந்தொலையவில்லை பத்தினியேயென்னசெய்வேன்
எல்லபவனிசெய்தா லங்கேயாகிலுமிழைப்பேன்
அவ்வார்த்தைதான்கேட்டு அல்லியம்மாளேதுசொல்வாள்
எந்தனுக்குத்தோழியர்களெனக்கருகில்நீயிருந்தால்
சகலமானபாக்கியமுஞ் சம்பத்துந்தருவேனென்றான்
கூடவருவாயோ கொம்பனையேயென்றழைத்தாள்
எப்படிவருவேனம்மா யிளங்கொடியேயுன்பிறகே
இலச்சுமிகோன்பதுதான் நாளைவருகுதம்மா

நோன்புமுடிக்கவேண்டும் நீதியுள்ளதாயாரே
என்றைக்குமுன்னடிமை யாகவிருக்கிறேன்பான்
மருடத்துமாரசியவள் மாதருமேதுசொல்வாள்
எந்தனையன்மனையி னுன்னிடநோன்பதனை ;
குறையாமற்செய்துவைப்பேன் கொம்பனையேஎன்தோழி
வேணுமென்றசாமான்கள் மெல்லியரேநான்தருவேன்
வாருமம்மாவென்றுசொல்லி வருந்தியழைக்கலுற்றாள்
இந்தமுடவனைநான் எங்குபோட்டுவருவேனம்மா
டோலிலேபோட்டவரைத் தூக்கிவரச்சொல்லுமென்றார்
பல்லக்கிலேறினாள் பத்தினியாளல்லியம்மாள்
கிழவனைததூக்கிவந்து டோலிலேபோட்டார்கள்
தோழிமாருள்ளவர்கள் தூக்கியெடுத்தார்கள்
காடுசெடிதாண்டி கடுகிவருகிறார்கள்
ஆறுசுனைதாண்டி அதிகவனந்தான்தாண்டி
மதுராபுரிபட்டணத்தில் மகிட்சியுடன்வாறார்கள்
தெத்துத்தெருக்கடந்து தேரோடும்வீதிவிட்டு
மாளிகைவாசலிலே வந்தாளேயல்லியம்மாள்
கனகதண்டிவிட்டிறங்கி கன்னியரும்போகலுற்றாள்
இந்தக்கிழவனைபு மிவ்வாசலில்வையுமென்றாள்
ஐந்தாங்கட்டுவாசலிலே ஆசியனைவையுமென்றாள்
அப்போபிராமணத்தி அரிராமரேதுசொல்வார்
தனியாகவிட்டுப்போக தரிக்குமோவென்மனது
முடவனைநான்விட்டுவிட முறையல்லவெந்தனுக்கு
அவராலேயென்னகுற்றம் ஆச்சிவரட்டுமென்றாள்
அல்லிப்பெருமாளும் அரண்மனையிற்போய்புகுந்தாள்
முத்துசெம்பொன்வாசலது மூன்றுகட்டுந்தான்தாண்டி
ஆசாரவாசலது அரண்மனைபோய்ச்சேர்ந்தாள்
அந்தியனுஷ்டான தனைத்துமேதான்கழித்து
போசனச்சாலையிலே புகுந்தாளேமாதுகன்னி
பிராமணக்கன்னியர்க்கும் அவளுடையபுருஷனுக்கும்
அமுதுபடியரிசி ஆனதெல்லாங்கொடுக்கவென்றாள்
அந்திகாலமாச்சுதங்கே ஆதித்தன்போய்மறைந்தான்
போசனங்களுண்டவர்கள் பொற்கொடிமார்பள்ளிகொண்டார்
மற்றுநாட்காலையிலே கதிரோனும்வந்துதித்தான்
திங்கட்கிழமையது தசமிபுனர்பூசம்
அன்றையதினமதிலே அரிராமரேதுசொல்வார்
அல்லிப்பெருமாளே அரசிதுரைநாயகமே
விரதமுடிக்கவேண்டும் எந்நோன்புதீரவேண்டும்
சாலுங்கரகமது தையலரேவேண்டுமென்றாள்
வேணுமென்றசாமானை வாங்கிக்கொண்டாள்பிராமணத்தி.
தேவையுள்ளவஸ்துவெல்லாஞ் சேகரித்துக்கொண்டவளும்

அர்ச்சுனன் அல்லியம்மாளைச் சூதாகத் தாலிகட்டி
விருந்துக்குப்போனது.

பந்தக்கால்கட்டுமல்லோ பந்தலலங்கரித்து
பச்சோலைப்பந்தலது பாங்காயலங்கரித்து
நிலைத்தைமெழுகியல்லோ மாவாலேகோலமிட்டார்
சாலுங்கரகமும் சதுராய்நிறுத்திவைத்தார்
பாலிகைவைத்துமல்லோ பாங்காய்ப்பூவைதெளித்தார்
அரசாணிக்கால்நாட்டி அம்மிகுழவிவைத்தார்
அந்திகாலமாச்சுதங்கே ஆதித்தன்போய்மறைந்தான்
ஆயிரம்பெருவிளக்கை அழகாகஏற்றிவைத்தார்
குத்துவிளக்கு குடவிளக்குமேற்றிவைத்தார்
மாயன்பெருமாளும் மல்லாரமரோசெய்தார்
அந்தண்டதோழிகட்கும் அல்லிப்பெருமாட்கும்
மயக்கத்தையுண்டுபண்ணார் மாயன்பெருமாளும்
மூதேவிதனையழைத்து முகத்தில்நிறையுமென்றார்
வந்துநிறைந்தாளே வாடையிட்டாள்மூதேவி
சொரணைதப்பித்தோழியர்கள் சோர்ந்துபடுத்தார்கள்
அப்போபெருமாளும் அர்ச்சுனனைத்தானழைத்து
ஓமம்வளர்த்துமென்று ருலகளந்தமாயவரும்
வேதங்கள்தப்பாமல் வேள்விவளர்த்தினார்கள்
ஐயன்பெருமாளும் அருளாளரேதுசொல்வார்
தேவேந்திரனையல்லோ சிந்தையிலேதானினைந்து
அர்ச்சுனராசனவன் அல்லியரைமணம்பொருந்த
மணமுகூர்த்தம்செய்வதற்கு மங்கிலியம்வேண்டுமம்மா
யானைத்தலைபோலே அழகானமங்கிலியம்
தும்பிக்கைபோலே திருமங்கிலியச்சரடு
மாயத்திருநீறும் வரவனுப்பவேணுமென்று
தோத்திரமேசெய்தாரே ஸ்ரீராமரெம்பெருமாள்
இந்திரனப்போது இருதயத்திற்றானறிந்து
உள்ளமகிழ்ந்துமல்லோ உம்பர்பிரானிந்திரரும்
யானைத்தலைபோலே அழகானமங்கிலியம்;
தும்பிக்கைபோலே திருமங்கிலியச்சரடும்
மாயத்திருநீறும் மகிட்சியுடன்தானெடுத்து
தூதன்கையிற்கொடுத்து ஸ்ரீராமர்கைகொடென்றார்
பாங்கியந்ததூதனவன் மாயவனார்கைகொடுத்தான்
ஆயரவர்வாங்கியல்லோ அர்ச்சுனனார்கைகொடுத்தார்
லக்கினமுந்தப்பாமல் நல்விஜயன்கைகொடுத்தார்
தாராபலன்பார்த்து தரியுமென்றார்மங்கிலியம்
மாயரிடதன்பாதம் வாங்கியந்தஅர்ச்சுனனும்
கல்யாணைப்பார்வதியை இருதயத்தில்தானினைத்து
பிட்டுக்குமண்சுமந்த புனிதனைத்தானினைந்து

தேவேந்திரபகவானை சிந்தையிலே தானினைந்து
அல்லியென்னும் பெண்ணரசி அரசாணிக் குகன்கழுத்தில்
சிவசிவாவென்றுசொல்லித் தேர்விஜயன் கட்டினான்
அரகராவென்றுசொல்லி அழுந்தினான்மங்கிலியம்
பிரமமுடி மூன்றுமுடி போட்டானே அர்ச்சுனனும்
ஈஸ்பரனார்வெண்ணீற்றை இட்டானே நெற்றியிலே
மாயன்பெருமாளும் வரமென்ன தான்கொடுப்பார்
இந்த-மங்கிலியக் கன்னியிவள் வாள்கொண்டயுத்தாலும்
கோடாலிபாலேயிவள் கொத்திப்பிளந்தாலும்
இரம்பத்தைப்பூட்டியிவள் கலமாயறுத்தாலும்
கத்திகொண்டறுத்தாலுங் கட்டழகிமங்கிலியம்
அறுமலிருக்கவென்று அரிராமர் தானடந்தார்
அருச்சுனரைக்கூட்டிக்கொண்டு அரிராமர் தானடந்தார்
பத்துசுற்றுக்கோட்டைகளும் பார்த்திபன் தாண்டிவந்து
மஞ்சட்கொடிகளுமே மருட்டாத்னதோரணமும்
பொம்மைவிருதுகளும் பூதத்தலைகளுமே
அல்லிக்கொடிவிருதும் அறுத்தெறிந்தானர்ச்சுனனும்
மூச்சுகொட்டாகொடிவிருதை முனைவீரன்றானறுந்தான்

கிருஷ்ணபகவானும் அர்ச்சுனனும் தருமாபுரம்வந்துசேர்ந்தது.

வீராதிவீரன் தம்பி விஜயன்வெளியானான்
மாயனுந்தானுமாக வழிநடந்துபோனார்கள்
மதுராபுரிகடந்து வனமாய்வனங்கடந்து
காடுசெடி தாண்டி கரியமலை தான்கடந்தார்
ஆறுசுனை தாண்டி அதிகவனந்தாண்டி
பொல்லாவனத்தாண்டி போய்ச்சேர்ந்தார்தருமாபுரம்
மாளிகைவாசலிலே வந்துசேர்ந்தாரிருவருமாய்
பொற்கோழிகூவியல்லோ பொழுதுவிடிந்ததுகாண்
சுக்கலாதேவிபுத்திரன் சூரியனும்வந்துதித்தான்
அருணனிடதேரேறி ஆதித்தன்வந்துதித்தான்
தோழியருந்தாதியர்கள் அக்கம்விழித்தார்கள்
அத்தண்டதோழியர்கள் அனைவருங்கண்விழித்த
பாங்கியிலும்நல்லதொரு பவளசேனையேதுசொல்வாள்!
அல்லிப்பெருமாளின் அருகாகவந்தார்கள்
தட்டியெழுப்பினார்கள். தாமக்குழலாளை
பொட்டெனக்கண்விழித்தாள் பொற்கொடியாளானவளும்

அல்லியம்மாள் மங்கிலியத்தைக்கண்டு பாதவிக்கிறது.

கழுத்திதேமங்கிலியம் கண்டாளே அல்லியம்மாள்
அத்தண்டதோழிகளும் அனைவோரும்வந்தார்கள்
முடாப்போலேதாலியது உன்மார்பினில்தொங்குதங்கே
கண்டுவிழுந்தாள் கட்டழகியல்லியவள்

பார்த்தப்பதல்குலைந்தாள் பத்தினியாளல்லியம்மாள்
இங்கிருந்தபாப்பாத்தி எங்கேபோனாள்பாருமென்றாள்
தேடிப்பிடித்துநீங்கள் சீக்கிரமாய்ப்பாருமென்றாள்
எங்கெங்குந்தேடி இனியவிடமாராய்ந்தார்
தேடியலைந்தார்கள் திசைபெட்டிற்கண்டதில்லை
என்றுதலைமன்னியவ ளிடிவிழுந்தாளல்லியம்மாள்
கத்தியெடுங்களடி கடுக அறுக்கவென்றாள்
கத்திகொண்டறுத்தாலும் கத்தியொடியுதங்கே
கத்திகொண்டறுத்தாலும நாணுதண்டாய்ப்போகுதங்கே
வாள்கொண்டறுத்தாலும் வாளுமடியுதங்கே
மெத்தவிசாரமிட்டு மெல்லிபுலம்பலுற்றாள்
கட்டினவிராசமுத்துக் கழுத்தில்தாலிகட்டினதார்
ஆரென்றறியேனடி ஆரணங்கேபவளசேனை
எவரென்றுயானறியேன் எலப்பசுங்கிளியே
ஆறுபிரம்பாண்டியரை யழைத்தோடிவாங்களென்றாள்
பொன்னின்மலைநாடாளும் பேரொடுத்த அண்ணனையும்
அழைத்தோடிவாருமென்று அனுப்பினாள் தாதியரும்
ஒட்டம்பெருநடையாய் ஓடிவந்தார் தாதியர்கள்
ஆறுபிரம்பாண்டியற்கு அண்ணாருக்குமேதுசொல்வாள்
மாதுகன்னியல்லியரை மங்கிலியஞ்சூட்டினார்கள்
கட்டினவிருதுகளைக் கடுகவறுத்தார்கள்
அல்லிப்பெருமாளும் அழைத்தோடிவாருமென்றாள்
வாருங்களையாவென்று வணங்கினார் தாதியர்கள்
அந்தவுரைகேட்டு ஆறுபிரம்பாண்டியர்கள்
அலைகுலையத்தலைகுலைய அரைப்புடவைநழுவிவிழ
அல்லியிடவாசலுக்கு அனைவோரும்வந்தார்கள்
மகளாரைக்கண்டல்லவோ வயிறெரிந்துதானழுதார்
ஐயோமகளேஉன்னை அக்கிதம்பண்ணவனார்
யானைத்தலைபோலே அழகானமங்கிலியம
மூடாப்போலேதாலியல்லோ முன்மார்பில்கட்டினதார்
இதுவென்னகாரணமோவென்றழுதார்பாண்டியர்கள்
கண்ணீரைவிட்டுமல்லோ கதறிப்புலம்புகிறார்
மருடத்துரைச்சியவள் வாய்திறந்தேதுரைப்பாள்
வயிற்றிற்பிறந்ததில்லை வன்கொடுமைசெய்ததில்லை
குடலிற்பிறந்ததில்லை குலக்கொடுமைசெய்ததில்லை
அங்கயற்கண்கிருபையாலே அல்லியிலேபெண்பிறந்தேன்
சொக்கர்கிருபையாலே சுந்தரியுமபெண்பிறந்தேன்
ஏழுபிராயத்திலே எதிர்த்துவந்தநின்முகனை
வெட்டித்துணித்துநான் விரபட்டங்கட்டிக்கொண்டேன்
பன்னிரண்டுபிராயமட்டும் பாருலகையாண்டிருந்தேன்
கொள்ளவருவார்க்கு குறடாகொடுப்பேனென்றேன

ஆளவரும்சப்பந்தியை யடிப்பேனென்றேன்சேருபந்தால்
கலியாணமென்றவரைக் கண்ணைப்பிடுங்கிடுவேன்
என்றுவிருதுகட்டி எல்லையரசாண்டேனே
பொம்மைவிருதுகட்டிப் பூமியரசாளுகிறேன்
மூச்சுகொடிதெருவிற்கட்டி முடிசூட்டியாளுகிறேன்
காணவருவாரும் கைகட்டிநிற்பாரும்
பார்க்கவருவாரும் பணிந்துகைகட்டுவாரும்
எதிரிகளில்லாமல் எல்லையரசாண்டேனே
அடியென்றழைத்தவர்கள் அவனியிலொருவரில்லை
வாடிபெண்ணேயென்றவர்கள் வையகத்தில்யாருமில்லை
மதிக்கும்படியாக மண்டலத்தையாண்டேனே
கட்டினவிருதறுந்துக் கழுத்தில்தாலிகட்டினதார்
யாரோதெரியாது அந்நீதம்பண்ணுனே
ஆகாயலோகத்து அமரரென்றுநானறியேன்
அந்தரலோகத்து கந்தருவரென்றறியேன்
திக்கெட்டையாண்டதொரு துரைகளென்றுயானறியேன்
பானைபோலதாலிகட்டிப் பறையன்மகன்போனனே
மூடாப்போலேதாலிதொங்க முடிசூட்டியாள்வேனே
கண்டார்சிரிப்பாரே கலியுகத்தாரேசுவாரே
பார்த்தார்நகைப்பாரே பரியாசம்பண்ணுவாரே
சற்றுமதியாரே தரணிதனிலுள்ளவர்கள்
நான்-செத்துமடிந்திடுவேன் சிவலோகம்சேர்ந்திடுவேன்
மாண்டுமடிந்திடுவேன் வைகுந்தஞ்சேர்ந்திடுவேன்
வல்லபிராணனைநான் கல்லோடேமோதிடுவேன்
சாவேன்கெடுவேனுன் சமுத்திரத்தில்போய்விழுவேன்
முட்டிகொண்டாள்தானேடே முகத்திலறைந்துகொண்டாள்
மார்பிலறைந்துகொண்டு மண்மேற்புரண்டழுதாள்

பாண்டியர் அல்லியம்மாளுக்கு மனந்தேறுதல் சொல்கிறது.

ஆறுயிரவர்களும் ஐயமாரேதுசொல்வார்
அஞ்சாதேயென்மகளே ஆலோசனைசொல்லுகிறோம்
கட்டினதாலியை கடுகஅறுத்தெறிந்து
விருதெடுத்துக்கட்டியல்லோ வெற்றியுடன்ஆளுமென்றார்
அவ்வார்த்தைதான்கேட்டு அல்லியம்மாளேதுசொல்வாள்
கத்திகொண்டறுத்தாலும கத்திமடியுதையா
வாள்கொண்டறுத்தாலும் வாளுமடியுதையா
ரம்பங்கொண்டறுத்தாலும் ரம்பமொடிந்திடுதே
பட்டிமாடுபோலாக பறையன்மகன்கட்டினனே
கழுத்துமிகனேதுதையா கட்டினதோர்தாலியாலே
எடுக்கமுடியவில்லை என்செய்வேனையாவே
ஆரென்றுநானறிவேனையாவேசொல்லுமென்றாள்

அறிந்தேனேயாமாகில் ஊர்தூண்டாய்போட்டிடுவேன்
தெரிந்தேனேயாமாகில் சிறைசெய்திடுவேன்
என்றுசொல்லப்போது சொல்லுவார்பாண்டியர்கள்
வந்தவரலாற்றை மகனேநீசொல்லுயென்றாள்
அருள்சேனையாளே அற்புதவதிசயங்கள்
பரிவேட்டைபோனேனையா பாரவனந்தனிலே
அரோரொருவ னம்புபொறுக்கித்தந்தான்
பார்த்தேனேயாமாகில் பாணத்தாற்போட்டிடுவேன்
அறிந்தேனேயாமாகில் அம்புக்கிறைகொடுப்பேன்
காலைப்பிடித்தானே கதையெனக்குச்சொன்னானே
அவன்முகத்தையான்பார்த்து ஆயுதமெடுக்கப்போனேன்
கட்டப்பிடித்தானே ஓடிவிட்டான்பாவிமகன்
மற்றொருநாளையிலே மதுரையிலேயொருவன்
மயித்தியக்காரனைப்போல் மவளக்காட்டுதிருக்குளத்தில்
வல்லமருந்தெடுத்து தண்ணீரிலுரைத்தானே
வம்புகும்புஞ்சொல்லியல்லோ மருந்தையவனுரைத்தானே
அவனையான்கொண்டுவந்து அக்கினைசள்செய்வதற்கு
ஆற்றிலேபோட்டவனை அன்பாய்புரட்டுமென்றேன்
அதிலுமஞ்சாகவில்லை அருப்பாவியானவனும்
தூக்குமரத்திலே துஷ்டனைப்போடுமென்றேன்
அதிலுமஞ்சாகவில்லை அரும்பாவியானவனும்
போடப்போனதாதியவள் பெலியாளுள்செங்கமலம்
காளியம்மன்கோவிலிலே கடுபலிபோடுமென்றேன்
அக்காளிசெல்லியம்மாள் அன்பெலிவேண்டேனென்றாள்
பூதக்கிடங்கிலே போட்டவனைக்கொல்லுமென்றேன்
பூதங்களுள்ளதெல்லாம் போதப்பணிசெய்யுதையா
அதிலுமஞ்சாகவில்லை அரும்பாவியானவனும்
எவளோசிறுகன்னி இந்திரரம்பைபோலேவந்தாள்
தன்கணவனென்றுசொல்லி தனித்துப்புலம்பிவந்தாள்
அவனைத்துரத்திவிட்டேன் அழைத்துப்போனாள்சீக்கிரமாய்
பண்டாரப்போலொருவன் படமெழுதிவந்தானையா
என்னைப்போல்படமெழுதி இங்கேகாட்டலுற்றான்
சொல்லாதவார்த்தைசொல்லி சோளிக்குசேலைகேட்டான்
கொடுத்தாலேயல்லாது போகேனென்றான்பாவியவன்
பாம்புதனைவிட்டேனே பாவியைக்கொல்வதற்கு
யானைமதமேற்றி அவனையேகொல்லவிட்டேன்
அதாலுஞ்சாகவில்லை இருந்தான்மகாபாவி
மற்றொருநாள்பிடாரனவன் வகையாகப்பாம்புபெடுத்து
ஆடாதபாம்புகளை ஆடவைத்தான்வாசலிலே
மற்றொருநாள்வனத்தில் நான்வேட்டைபோனேனே
தண்ணீர்களியாலே தாகவிடாய்பட்டுவந்தேன்

காசிப்பிராமணன்போற் காசிதீர்த்தர்வார்த்தருண்டு
வனவேட்டையாடினபின் மாளிகைக்குவரும்போது
தண்ணீர்ப்பந்தல்போட்டிருந்தாள் தையல்பிராமணத்தி
பரதேசியென்றழுதாள் பரிதாபப்பட்டேனையா
மாளிகைவாசலுக்கு மயிலாளைக்கூட்டிவந்தேன்
இலட்சுமிபோன்பென்று நடத்தினாள்பாவியவள்
கலியாணச்சடங்குபோலே கலசம்நிறுத்தினாள்
வேள்விவளர்த்தினாள் வேதங்களோதினாள்
பார்த்துமிருந்தேனே பண்ணினநோன்புகளை
கண்டுமிருந்தேனே கண்ணுறங்கிதூங்கிவிட்டேன்
பார்ப்பானைப்போலிருந்த பாவியவன்கட்டிவிட்டான்
கழுத்திலேதாலிகட்டிக் கனவிருதறுத்துவிட்டான்
ஆரென்றறியேன் ஐயாவேசொல்லுமென்றாள்
ஆறாயிரவர்களும் ஆலோசனையேதுசொல்வார்
தேவனையென்றாலே செயிக்கமுடியாது
மண்டலத்துராஜரெல்லாம் மாதேயழிந்திடலாம்
சீமைசீமைராஜருக்குத் திருமுகமெழுதுமென்றார்
சொக்கலிங்கந்தன்னுடைய சொர்னமயச்சந்நதியில்
கோயிற்கெதிராக கொப்பறையில்நெய்காச்சி
சத்தியங்கள்பண்ணச்சொன்னால் சாடையறிந்திடலாம்
மண்டலத்துக்கெழுதும் மதியுள்ளமந்திரியே
இராஜசமர்க்கெழுதும் நன்மையுள்ளமந்திரியே
ஊர்கணக்கப்பிள்ளைதன்னை உத்தமரைத்தானழைத்து

அரசர்களுக்குத் திருமுகமெழுதி அனுப்புகிறது.

சீமைசீமைராஜருக்கு திருமுகமெழுதுமென்றார்
என்னவென்றுஓலை எழுதுவதென்றானே
அயோத்தியாகோசலமுஞ் சலகாணுபுவிதனிலே
ஆரியமப்பளமும் அச்சுகமுந்தொழுமார்க்கம்
அங்கதேசம்கலிங்கதேசம் அவந்திஅளகாபுரி
முப்பரசிமன்னரும் கோவைமலைபாளம்
அஸ்தினாபுரம்சந்திரனோடு அழகுள்ளஇந்திரனோடு
துலுக்காணம்பைகோவை தெலுங்குதேசந்தருமாபுரி
குருநாடுசிந்துதேசம் பங்காளம்காப்பில்பதேசம்
விஜயபுரியீமாபுரி மச்சுதேசங்குடகுநாடு
மராட்டியம்சோமாபுரி மலைபாளம்மேல்நாடு
சீனங்கிநஞ்சுமார்க்கம் வங்கசிங்காளமும்
ஆனைதந்திபட்டணமும் அழகானஒட்டியமும்
ஐம்பத்தாறுதேசத்து அரசர்களானவர்கள்
நம்பிக்கைசெய்து நலமுடனேபோவதற்கு
அல்லிநிகரினைத்து அரிபக்கணைக்குதகளை

மெல்லியாளல்லியம்மாள் மிகவுமேதானழைத்து
தேசதேசராசருக்குத் திருமுகமெழுதுமென்றார்
அப்படியேகணக்கர்க ளன்புடனெழுதுமென்றார்
மதுராபுரியாளுநிற வாள்வரசியல்லியம்மாள்
சொக்கரருளாலே சுந்தரியாள்தான்பிறந்தாள்
அங்கயற்கண்ணருளாலே அல்லியருந்தான்பிறந்தாள்
எழுபிராயத்திலே எதிர்த்துவந்தவேன்முகனை
வெட்டித்தலைதுலித்து வீரபட்டங்கட்டினவள்
பன்னிரண்டுபிராயமட்டும் பாருலகையாண்டகன்னி
விருதுகொடிகட்டியல்லோ வேணமட்டுமாண்டவள்காண்
ஆறுபிரம்பாண்டியற்கு அரியதுரைமகளாம்
அல்லியம்மாள்தன்கழுத்தில் ஆரோதெரியாது
தேன்மொழியாள்தன்கழுத்தில் திருட்டுதாலிகட்டினார்கள்
கழுத்திலேதாலியை கட்டினவிருதறுத்தார்
இன்னவனென்றுசொல்லி எனக்குத்தெரியாது
சீமையிலுள்ளதொரு துரைகள்மேலெந்தனுக்கு
ஐயாவுந்தான்மியது அரசமன்னராசாக்களை
சீமையாளும்ராசாக்கள் துரைகள்வரவேண்டும்
எல்லையரசாளும் இராசாக்களிங்குவந்து
கழுத்திலேதாலியது கட்டவில்லையென்றுசொல்லி
நாங்கள்சொன்னநம்பிக்கையை செய்துதரவேண்டும்
ஓலையைத்தள்ளிவிட்டு வாராதிருந்தோர்களை
கோட்டையிடித்திடுவேன் கொத்தளங்கள்பேர்த்திடுவேன்
அரண்மனையைநானிடித்து ஆமணக்குவிரைத்திடுவேன்
ஆண்சிறையும்பெண்சிறையு மடங்கலும்நான்பிடிப்பேன்
வெட்டித்தலையறுப்பேன் வீரசொர்க்கஞ்சேர்த்திடுவேன்
ஓலைகண்டநாழிகைக்கு வந்திடுங்களென்றுசொல்லி
எழுதுமென்றாரோலையது இளங்கொடியாளல்லியம்மாள்
அவ்வார்த்தைதான்கேட்டார் அன்பானமந்திரிகள்
சேமக்குறுத்தோலை சீருகததானெடுத்து
ஈழப்பனையோலை யிருபக்கம்காம்பரிந்து
தாளிப்பனையோலை தலைப்பக்கம்காம்பரிந்து
வாரியவோலையிலே வக்கணைகள்தானெழுதி
செந்திரிக்கம்போட்டுமல்லோ சிக்காமுத்திரைவைத்து
அல்லியம்மாள்முன்புவைத்து அடிபணிந்துதெண்டனிட்டு
ஆடாசிட்டிமல்ல ராயிரம்பேரெழுந்திருங்கள்
சீமையுள்ளராசருக்குச் சுருளோலைகொண்டுபோங்கள்
மல்லரெழுந்திருந்து வாங்கினாரோலைதன்னை
காலால்நடவாமல் காற்றாய்ப்பறந்தார்கள்
மதுரையைத்தாண்டியவர் வனங்கள்புகுந்தார்கள்
தூறுசெடிதாண்டி கரிமலைதான்தாண்டி

சீமைசீமைராசருக்குத் திருமுகந்தந்தார்கள்
ஓலைக்குருள்விரித்தா ருலகாளுமராஜாக்கள்
அதிலிருந்தவிஷயமெல்லாம் அனைத்துமறிந்துகொண்டார்
நாமும்வருவோமென்றார் இராஜாத்திசொற்படிக்கே
நம்பிக்கைதான்கொடுத்து நலமுடனேவாருமென்றார்
தருமாபுரமாளும் தருமருக்கோலைதந்தார்
சந்தனவடிவழகர் தருமரவரோதுசொல்வார்
சீர்கணக்கரையழைத்து சுருளோலைபிடியுமென்றார்
அப்போதுகணக்கப்பிள்ளை யன்பாகசுருளவிரித்து
படித்தார்களோலைதனைப் பார்வேந்தர்கேட்டுவிட்டார்
சந்தனவடிவழகர் தருமரவர்கேட்டுவிட்டார்
நாமும்வருகிறோம் ருஜாத்திகொலுவுக்கென்றார்
மாயன்பெருமாட்கு வந்ததேசுருளோலை
ஓலையதுபடித்து உலகளந்தமாயவரும்
நாமும்வருகிறோம ராஜாத்திகொலுவுக்கென்றார்
சீமையிலுள்ளதொரு துரைகட்குசொல்லிவந்தார்
காடுசெடிதாண்டி கடுகிவந்தார்தூதுவர்கள்
அல்லியம்மாள்முன்புவந்து அடிவணங்கிதெண்டனிட்டார்
சீமைசீமைராஜருக்கு சொல்லிவந்தோமாச்சியென்றார்
சீமைகளிலுள்ள துரைகளெல்லாம்வந்தார்கள்
மண்டலத்துராஜாக்கள் மகுடமன்னர்வாறார்கள்
திக்கெட்டையாண்டதொரு துரைராஜர்வாறார்கள்
சந்தனவடிவழகர் தருமரவரோதுசொல்வார்
மாயன்பெருமாளை வரவழைத்துவாருமென்றார்
ஓட்டம்நடையுமாக ஓடிவந்தார்தூதுவர்கள்
மாயன்பெருமாட்கு வந்துமேதெண்டனிட்டார்
சந்தனவடிவழகர் தருமர்தன்னைக்காணவென்று
கூட்டிவரச்சொன்னார்காண் கோபாலசுவாமியென்றார்
அப்போதுபெருமாளும் அக்கணமேதானெழுந்து
தாரகனையெச்சரித்து சுவாமிவரவேணுமென்றார்
கொண்டுவந்தான்தாரகனும் கொபமெனவேசித்ரரதம்
ஏறினார்தேர்மேலே எம்பெருமாளாண்டவனும்
காடுசெடிதாண்டி கடுகவந்தார்தருமாபுரம்
கோபுரவாசலண்டை கோபாலர்தேரிறங்கி
மாயன்பெருமாளும் மாளிகையில்வந்துவிட்டார்
தாணியளந்தமாயன் தருமருக்குதெண்டனிட்டார்
சிங்காதனம்போட்டு ஸ்ரீராயர்வீற்றிருந்தார்
இட்டசிம்மாதனத்திலெம்பெருமாள்வீற்றிருந்தார்
என்னையழைத்ததுதானேதுகருமமென்றார்
மதுராபுரியாளுகின்ற வாழ்வரசியல்லிபற்கு
தாரார்புகழுடைய தருமரவரோதுசொல்வார்

காணுமல்மங்கிலியம் கட்டியேபோனார்களாம்
திக்கெட்டையாண்டகல்ல துரைகள்மகாராசருக்கு
கருளோலையெழுதியல்லோ அனுப்பினார்தேசத்திற்கு
நம்பிக்கைசெய்துபோக நமக்கோலைவந்ததையா
அர்ச்சுனருமபேருமாக ஆரணியம்போனீர்களே
காசியாத்திரைபோனபோது களவுசெய்துவந்ததுண்டோ
தயுதலைப்பட்டிமகன் தாழ்வுசெய்துவந்ததுண்டோ
குற்றங்களுண்டானால் கோபாலர்சொல்லுமென்றார்
அர்ச்சுனனைதன்றுலே ஆரணியம்போனீர்களே
கான்-மூக்கநடக்கிதனே ஒருபாவங்கண்டதில்லை
கூடநடக்கிதனே குற்றங்கள்தானறியேன்
அம்புகளுண்டானு லருண்மைந்தாசொல்லேனே
எந்தனுக்குமூலையது எழுதிவரவிட்டாள்காண்
நானுமிதோபோறேன் தென்மதுரைசீமைக்கு
விட்டுக்கொருவரல்லோ வேந்தர்கள்போகவேணும்
ஐவர்தனிலொருவ ராருகிலும்வாருமென்றார்
ஆரையழைத்துப்போறீ ரரிராமர்சொல்லுமென்றார்
வெற்றிமதயானை விமனையழைத்துப்போறேன்
நம்பிக்கைதந்துவிட்டு நாங்களும்வந்திடுவோம்
போய்வாருமென்றுசொல்லி புண்ணியருஞ்சிலவுதந்தார்

கிருஷ்ணசுவாமியும் விமனும் மதுரைக்குபோகுதல்.

வெற்றிமதயானை விமனெழுந்திருந்து
சந்திரகாந்திதட்டிகட்டி தாமரைப்பூச்சுங்குவிட்டு
அம்புவில்லுங்கைபிடித்து அம்புறாத்தூணிமுதுகணிந்து
தேரின்மேலேறினானே திக்குவிசயங்கொண்டவிமன்
மாயன்பெருமானு மச்சரதமேறினாரே
இருவருமாகவல்லோ ரதமேறிவாறார்கள்
தருமாபுரந்தாண்டி விமாபுரந்தாண்டி
காடுசெடிதாண்டி கரியமலைதான்தாண்டி
ஆறுசுனைதாண்டி பதிகவனந்தாண்டி
வன:மாய்வனந்தாண்டி வந்துவிட்டார்தென்மதுரை
மண்டலத்துராசரெல்லாம் வந்தார்மணிபுரத்தில்
முடியோடேமுடிவணங்க முடிமன்னர்வந்துவிட்டார்
வச்சிரகிரீடங்கள் மணிமுடிநெருங்குதங்கே
எல்லைபராசாண்டார்க ளெல்லோரும்வந்தார்கள்
ஆறுபிரவருடன் அல்லிபருந்தானறிந்தார்
மகுடத்துரைச்சியவள் வாய்திறந்தேதுசொல்வாள்

மாலிக்கச்சொக்கலிங்கம் மகாதேவர்கோயிலண்டை
கோபுரவாசலண்டை கொப்பறையை வையுமென்றாள்
ஆயிரக்கலநெய்விட்டு அக்கினியைமூட்டுமென்றாள்
பாதாளக்குழிபறித்து பாங்கானபள்ளம்வெட்டி
இருப்புநல்லகொப்பறையை யெடுத்துவந்துவைத்தார்கள்
ஆயிரக்கலநெய்வார்த்து அக்கினியைமூட்டினார்கள்
நெய்யைக்கொதிக்கவைத்து நேரிழைக்குசேதிசொன்னார்
பதிங்கலநெல்லெடுத்துப் பாக்கியரேவையுமென்றான்
அம்பாரம்போடுமென்று ளாண்டவனார்சந்நிதிமுன்
சம்பாநெல்லும்காருநெல்லும் அம்பாரம்போட்டார்கள்
மகுடத்துரைச்சியற்கு மணியாசனம்போட்டார்கள்
ஆருயிரவர்களும் அல்லியருந்தானெழுந்து
ஆலயந்தன்னருகே வந்தார்களெல்லவரும்
கோபுரவாயலண்டை கொப்பெனவேவந்தார்கள்
மகுடத்துரைச்சியரும் வந்தபர்ந்தாளாசனத்தில்
வந்தந்தராசரெல்லாம் வீற்றிருந்தாரெத்திசையும்
அல்லிப்பெருமாளும் ஆரணங்குயேதுசொல்வாள்
கேளுங்கள்ராசர்களே கீர்த்திபெற்றமன்னர்களே
ஆலவாய்ச்சொக்கலிங்கம் ஐயர்தன்கிருபையாலும்
அங்கயற்கண்ணம்மை ஆச்சிசெயலாலும்
அல்லியிலேயேலே ஆரணங்குபெண்பிறந்தேன்
ஒருவர்-வயற்றிற்பிறந்ததில்லை வன்கொடுமைசெய்ததில்லை
குடலிற்பிறந்ததில்லை குலக்கொடுமைசெய்ததில்லை
ஓடுகிறதண்ணீரில் உள்ளேமணற்சேறுமுண்டு
அடிக்கிறகாற்றதனில் அலைகாற்றுருப்புமுண்டு
ஆலகாலமுண்டவற்கு கண்டங்கருப்புமுண்டு
குண்டுமணிக்காணலும் கொஞ்சங்கருப்புமுண்டு
என்மயிரேகருப்பொழிய மற்றகருப்புமில்லை
புருவம்கருப்பொழிய பின்னேகருப்புமில்லை
மாசிலாப்பெண்பிறந்தேன் மீனாட்சிதன்செயலால்
ஏழுபிராயத்திலே எதிர்த்துவந்தநின்முகனை
வெட்டித்தலைதுணித்து வீரபட்டங்கட்டிக்கொண்டேன்
பனிரெண்டுபிராயமட்டும் பாருலகையாளுகிறேன்
வாடியென்றழைத்தவர்கள் வையகத்திலாருமில்லை
வம்புதும்புசொன்னவர்கள் மண்டலத்திலாருமில்லை

யாரோதெரியாது அனியாயம்பண்ணுறீனை
காறுமைமல்மங்கிலியம் கட்டினுனென்சமுத்தில்
இன்றுனினியாமென் றெனக்குத்தெரியாது
ஆகையினுமேலதா னைமைப்பித்தேனுங்களோநான்
நானறியேனென்றுசொல்லி நம்பிக்கைசெய்திடுங்கள்
கொதிக்கின்றநெய்தனிலே சொப்பெனவேகையிடுங்கள்
அம்பாரம்போட்டநெல்லை யள்ளிநிமிட்டிடுங்கள்
நெல்லுநிமிட்டாமற் போனவனைவிடுவதில்லை
கையதுகொப்பளிக்க கண்டதேயுண்டானால்
சும்மாவிடுவதில்லை சொர்க்கபதம்சேர்த்திடுவேன்
வெட்டித்தலையிளப்போம் வீரசொர்க்கம்சேர்த்திடுவேன்
நாகலோகம்போனாலும் நானவனைவிடுவதில்லை
ஆகாயம்போனாலும் அவனைநான்விடுவதில்லை
வானத்திற்போனாலும் வலைகட்டிநான்பிடிப்பேன்
பாதாளம்போனாலும் பேதிப்பேன்பைங்கொடிநான்
விட்டுவிடுவேனென்று சற்றுமனதெண்ணவேண்டாம்
சத்தியத்தைசெய்துநீங்கள் தயவுடனேபோய்விடுங்கள்
அவ்வார்த்தைதான்கேட்ட அனேகங்கோடிராஜரெல்லாம்
எழுந்தார்கள்சபையிலே எதுசொல்வாராஜாக்கள்
அன்னமடமாதே யாரணங்குநாயகமே
பாருலகையாண்டதொரு பாண்டியர்கள்சீர்மகளே
செங்கோல்முடிசூட்டித் துரைத்தனங்கள்செய்பவளே
உன்-வரைறியோம்பேரறியோம் ஒருசெய்கைநாமறியோம்
மங்கிலியந்தொட்டுமல்லோ தரித்தவகையறியோம்
அறிந்தோமேயாமாகி லமும்புவருமெங்களுக்கு
அக்கினிக்கெதிராக அனைவரும்வந்துநின்றார்
மகுடமுடிராஜாக்கள் வந்தவர்கள்தானெழுந்து
நெய்க்கிடாரந்தன்னருகே அக்கினிக்குமுன்னாலே
இருகையைக்கட்டியவ ரேதுசொல்வார்மன்னவர்கள்
ஐயன்பிடாரிகளே ஆகாயதுர்க்கிகளே
அந்தரதேவதையே சந்திரசூரியரே
இந்திரப்பிரமாவே கந்தர்வரிஷிகளே
ஆலவாய்ச்சொக்கலிங்க மங்கையர்கனம்மையரே
மாணிக்கச்சொக்கலிங்க மகாதேவரீஸ்வரரே
ஏதுமறியோமென் றிருகையைத்தானெடுத்து
மாதருக்குமங்கிலியம் தரித்தவகையறியோம்
காய்கின்றநெய்தனிலே கையைத்துவைத்துவந்தார்
அம்பாரநெல்லையெல்லா மள்ளிநிமிட்டினார்கள்

ஒவ்வொருமன்னர்களாய் சேர்தனைதந்தார்கள்
மாயன்பெருமாளும் வந்துசத்தியம்பண்ணுரே
வெற்றிமதயானை வீமனொழுந்திருந்து
நெக்கிடாரந்தன்னருகே நேராய்வருகையிலே
அக்கினியாய்வீசியது அருகில்வரவொட்டாமல்
வெந்துகருகிறது வீமன தேகமெல்லாம்
மாயன்பெருமாளே மைத்துனரே கிருட்டுகிருஷ்ணு
முன்னிட்டகாலையவன் பின்னிட்டுவாங்கிவிட்டான்
என்னபுதுமையது எம்பெருமாளென்றுகேட்டான்
அருகில்வரவொட்டாமல் அக்கினியாய்வீசுதுகாண்
சேரவேவொண்ணுமல் செந்தணலாய்வீசுதுகாண்
ஒருபாவம்நானறியேன் எதுவினையென்றறியேன்
அக்கினிபகவானை ஆயிரம்கைதொழுது
எம்பெருமாள்மாயவரும் யாரைநினைக்கலுற்ருர்
ஒருநன்றிசெய்தவரை யுள்ளத்தில்வைக்கவேண்டும்
அக்கினிபகவானே அருச்சுனராஜருக்கு
எத்தனைசகாயஞ்செய்தா ரெல்லாரந்திருந்தீரோ
மாளுகின்றயுன்னையந்த வாழ்விசையன்காத்தானே
அந்தகாயமல்லோ அறியாமலேன்மறந்தீர்
பெண்டுடையமன்னவன் பெண்ணரசைமாலையிட்டான்
உந்தனுக்குக்கோபமென்ன வுறுததுவானென்செந்தணலாய்
கோபங்கைவையாதே குளிர்ந்தஜலம்போலிருக்கான்
என்றுதொழுதாரே எம்பெருமாயமாயவரும்
ஆயாதுசொற்கேட் டக்கினிதேவரவர்
குளிரந்தஜயர்போலாக கொப்பெனவேநின்றுவிட்டார்
வாருங்காண்வீமசேனு வார்த்தைகேளும்மைத்துத்துனரே
மாதுக்குமங்கலியும் மதவீமா தரித்ததுண்டோ
செய்ததேயுண்டானல் சேரவரவொட்டாது
கலகங்களுண்டானல் கட்டழகாதூரநில்லு
மனத்திற்சபடுகளும் வஞ்சனைகளில்லையென்றல்
இராஜாக்கள்பொலேநீ நம்பிக்கைசெய்யுமென்ருர்

வீமராசன்நெய்யைக்குடித்துவிட்டுக் கொப்பரையுருட்டினது.


மறுபடியும்வீமராஜன் மன்னனுந்தான்வருவான்
கொதிக்கிறநெய்யருகே கொப்பெனவேவந்துநின்ருன்
மணக்கின்றநெய்யருகே மதவீமன்வந்துவிட்டான்
தூக்கினன்கொப்பரையைத் துரிதமாய்நெய்யையெல்லாம்
வெற்றிமதயானை வீமனவன்வாயில்வைத்து
நெட்டிக்குகுத்துவிட்டு நோரகவிட்டெறிந்து
தருமர்தயக்கிளைய மதவீமன்வந்துவிட்டான்
மாயனுடனுக வழிபிடித்துபோய்நடந்தார்

பதக்கதெறறான்டு வைபாய்வைக்கடத்து
இத்தனைபேர்தனிலே பெண்ணைத் திருடனென்பேன்
அசேசகோடிராசர்கள் வானைத்திருடனென்பேன்
சத்தியங்கள்செய்தானே தானியிலல்லவரசரெல்லாம்
செய்யிலேலைசோய்த்து செக்கிவிட்டிவிட்டார்
சோதனைக்காட்டியல்லோ துரைகளெல்லாம்போனையிலே
அவளைப்போளோ அவனிலனைதோய்ச்சனேனாய்
கொதிக்கின்றசெய்தனைக் குடிச்சவிநிருதுறையோ
திருடருக்குத்தைவருண்டோ சோரருக்குநேயமுண்டோ
வாலக்சுழல்தைர்று பராக்குண்டவன்கையில்
பூமிகழல்வதற்கு பொறியுண்டவன்கையில்
வல்லடிராசதெரித்து தன்னரிசிறைச்சகோயோ
வையதுப்புப்பேசியவன் வாய்பொழுதுசொல்லனேயோ
ஆற்றில்மிரட்டியல்லோ அவனைநான்கொல்லுமென்றேன்
அவனுடையபத்திரர்நாலாற்றைதனடசட்டகோயோ
துக்கிலேபோட்டவளைத் தோழியரேசொல்லுமென்றேன்
தாதிகளைக்கொன்றவிட்டான் தர்திரவித்தையினல்
காளியம்பல்சோவிலுக்கு காவுகொடுக்கவென்றேன்
படைவாசல்செல்லியவரை வாய்த்தடைகட்டிவிட்டான்
பண்டாரப்போலேவந்து படப்பிடித்தான்வாசலிலே
வைப்பானவார்த்தைகளும் வாய்பழுதசொன்னனே
அரவத்தைவிட்டுநா னடிமைகொள்ளுமென்றேன்
பாம்பைதடைகட்டினனே பாதகனவனும்
யானையைமதமேற்றி அடிமைக்கொல்லுமென்றேன்
யானைதடைகட்டிகட்டினனே யரும்பாவியானவனும்
வேதியனைப்போலாக வேவ்விவளர்த்தினனே
பறையவனைப்போலேவந்த மங்கிலியஞ்சூட்டிவிட்டான்
பொய்மைக்குஷக்கவவள் வகையறியமாட்டானோ
பலயாளவித்தைகளும் மந்திரமுங்கற்றபாவி
எந்தவூர்ராஜாவோ எனக்கறியச்சொல்லுமென்றாள்
தர்மாபுரமாளும் தருமர்தம்பியவனென்றார்
அவ்வார்த்தைதான்கேட்டல்லிபெருமாளும்
எட்டிப்பழம்போலே இருகண்ணுந்தான்சிவந்து
உருக்கியசெம்பொன் உதிரம்போல்கண்சிவந்து
தர்மாபுரமுள்ளதெல்லாம் தவிடுபொடியாக்கி
தங்கமதில்கோபுரத்தை தகைப்போட்சாய்த்திடுவேன்
அபரணக்கப்பருத்தியுமா படைக்குவல்விரைத்திடுவேன்
ஆண்சிறைபெண்சிறை படைக்கவும் நாலபிடிப்பேன்
பயணம்பயணமென்று பயணபேரிபோடுமென்றாள்
வெட்டியானைத்தானழைத்து விரமுரசறையுமென்றாள்
ஆறுபிரம்பாண்டியர்கள் அடங்கலும்பயணமானார்

இன்றுவெளிகூடாரம் இப்படைனேபோடுமென்றாள்
சண்டாளனைநாட்டுமென்றாள் தமுறையடியுமென்றாள்
அப்போதுசாப்புவனும் யானைமேறிமாலைசூடி
அடித்தான்பறையோசை அம்மதுரைதானறிய
மதுரைப்படைகளெல்லாம் வாருங்களென்றுசொல்லி
ஆயுதங்கட்டியல்லோ அனைவோருவாருமென்று

அல்லியரசாணி பஞ்சபாண்டவர்பேரில் சண்டைக்குவருகிறது.

மதுரைப்படைகளும் மகாசனங்களுள்ளவரும்
எண்ணுதஆயுதத்தை எடுத்தரையிற்கட்டிக்கொண்டு
அமரதருமசமரதரும் அதிரதரானவரும்
கலிங்கர்தெலுங்கர்களும் கன்னடையரானவரும்
ஈழத்துவங்களரும் இளநாட்டுச்சோனகரும
ஆரியரும்மாரியரும் அனைபலேநாடர்களும்
உவைபவரும்குடகரு மொட்டியரும்பார்ப்பாரும்
கிட்டிமன்னர்நேசமன்னர் உரைமன்னர்பேர்மன்னர்
குறவர்மறவர்களும் குச்சிலியருள்ளவரும
வேடரும்வில்லியரும் வேணசேனமுள்ளவரும்
ஆயுதங்கள்கட்டியல்லோ அனேகசனம்வந்தார்கள்
பட்டயஞ்சூரியர்கள் பாரியவில்சமுதாடும்
நிமையில்சுடுங்குண்டுகளும் கேரிசமாம்பெரியகத்தி
கூலிசமும்குலிசமும் குண்டுதுப்பாக்கிகளும்
மண்வெட்டிகோடாலி வல்லயமிருப்புலக்கை
வாளுகளும்வேலுகளும் வளைதடிசக்கரமும்
கண்டகோடாலிகளும் கவுண்டுகளுண்டுவில்லும்
சிங்காணிபூச்சுவில்லும் சேனவிதஆயுதமும்
இரம்பமும்பாசங்களும் நாலெட்டுவாயுதமும்
எண்ணுதவாயுதத்தை எடுத்தரையிற்கட்டினார்கள்
சட்டைதமான்வச்சிரகபாய் தரித்தார்களெல்லவரும்
சண்டைக்குமுஸ்திப்பாய்ச் சமர்த்தரெல்லாம்வருகிறார்கள்
வந்துநிறைந்தார்கள் வளம்பெரியசேனையெல்லாம்
யானைகளோ ஆறுலட்சம் அசுவங்களோ மூலட்சம்
ஒட்டகமோபத்துலட்சம் ஒன்றாகக்கூட்டினார்கள்
கார்மேகம்போலாகக் கருந்தானைகூட்டம்வரும்
செவ்வானம்போலாகச் செவந்தபுரவிகளும்
வந்துநிறைந்தார்கள் வாழ்வாசிபல்லியண்டை
பொன்னின்மலைநாடாளும் பேரெடுத்தஅன்னவை
அன்னவைதானழைத்து ஆருமென்றாள்பொன்மதுரை
வென்றுகெலித்துநான் விருதுகட்டிவருமளவும்
செயித்துவருமளவும் தென்மதுரைபாருமென்றாள்
முத்துபடித்துறையும் முன்னைவீரர்பட்டரையும்





யானைபடுந்துறையு மடங்கலும்படகனவென்றாள்
பவளம்படுந்துறையும் பட்டணம்பார்த்திருங்கள்
கப்பற்படுந்துறையுங் கடற்சோங்கும்பத்திரங்காண்
ஜெயித்துவருநாளையும் சீர்மதுரையாளுமென்றாள்
பயணம்பயணமென்று பயணபேரியடியுமென்றாள்
அம்பெடுத்துவில்லெடுத்து அம்புறாத்தூணிமுதுகணிந்து
எல்லாரும்பயணமென்று ஏறினார்தேர்மேலே
வானத்துமேகம்போல் மணிரதங்கள்வருகிறது
ஆயிரந்தேரும் அணியணியாய்வருகிறது
சொக்கலிங்கந்துணையென்று தேரைநடத்தினார்கள்
அச்சுகிறுகிறென்ன யானைநெடுந்தேரசைய
வண்டில்கிருச்சுவிட மதயானைகோஷ்டமிட
குதிரையனுமானிக்கக் கொடிமன்னர்சத்தமிட
வெய்யனுக்கெடுத்தார்கள் வெள்ளைநல்லகூடாரம்
கானனுக்கெடுத்தார்கள் கறுப்புநல்லகூடாரம்
கறப்புநிசான்செகப்புநிசான் கலந்துபறக்குதுபார்
அல்லிக்கொடிவிருது அலைகிறதுதேர்மேலே
மஞ்சட்கொடிபறக்க மகாதோரணமசைய
வருகிறதேமூலபலம் மண்ணிலிடங்கொள்ளாமல்
ஆற்றுமணல்போலே யானைக்கோடிசேனைகளும்
மேகம்புரண்டார்போல வேசனங்கள்வரும்
காட்டுகளாப்பூவும் காளாம்முளைத்ததுபோல்
சுத்திக்குடைபிடித்தார் சூரியனைக்காணாமல்
செந்தூளெழும்பினதே சேனைகள்தான்மறைய
அடிபடுதேபேரிகை வந்தாரந்தானதிர
யானையின்மேல்பேரிகை குதிரையின்மேல்டங்காவும்
ஒட்டையின்மேல்நகபத்திரம் ஓசையெழும்பினதே
வெண்கலபேரிபத விருதுமுழங்கிறதே
பாஞ்சசன்னியந்தேவதத்தம பலவிருதுதான்முழங்க
சச்சரிகைவீணைகளும் தாக்கிமுரசறைய
ஒற்றுவாசல்சங்கமது ஊதுறுருலகதிர
மதுராபுரியைவிட்டு வளநாட்டிற்போகலுற்றார்
காடுசெடிதாண்டி கரியமலைதான்தாண்டி
ஆறுசுனைதாண்டி அதிகவனந்தாண்டி
வேங்கையடர்ந்தவனம் வெண்களாப்பூத்தவனம்
அண்டரறியாத இருண்டவனந்தாண்டி
தருமபுரிபட்டணத்தை தானடுத்தாளல்லியம்மாள்
பட்டணத்தைச்சுத்திக்கொண்டு பாளையஞ்சூழ்ந்தாரே
பஞ்சவர்கள்கூடாரம் பலதிசையும்போட்டார்கள்
இலட்சணைபோட்டாளே இராசாத்திஅல்லியம்மாள்

ஜண்டாவைகட்டார்கள் தமுறடித்தார்பாளையத்தில்
அடிபடுதாராயபேரி அடிவானத்திடிபோலே
கோடைகாலத்திடிபோலே குமுறுதேதாரயபேரி
செவ்வானத்திடிபோலே சேரமுழங்கிறதே
சத்தத்தைதானியதுதான் தருமரவர்கேட்டுவிட்டார்
பரிஉள்ளசனங்களெல்லாம் ஓடிவந்துபுலம்பலுற்றார்
சந்தனவடிவழகர் தருமலிங்கமகாராஜர்
வெற்றிமதயானை வீமனைத்தானழைத்தார்
நகுலசகாதேவ ராஜர்களைத்தா னழைத்தார்
மாயன்பெருமாளை மனதிலேதானினைத்தார்
அடியளந்தமாயவனே ஆதிமூலமேவாருமென்றார்
வாருமென்றபோதே வந்தாரேயப்பெருமாள்
சந்தனவடிவழகர் தருமருக்குச்சரணஞ்செய்தார்
கூடச்சரணஞ்செய்தார் சோதரரையவரும்
என்னையழைத்ததுதா னேதுகருமமென்றார்
பட்டணத்தைச்சுற்றியல்லோ பாளையங்கள்வந்ததுகாண்
கோட்டையைச்சுற்றியவர் முத்திரைபோட்டார்கள்
சண்டைபண்ணவாருமென்று தமுருமடித்தார்கள்
சண்டைநிராமிட்டார்கள் தண்டுவந்திறங்கினதே
எந்தனுராசாவே எதுமதிதேவனே
ஆளைவிட்டுநீங்க ளறிந்துவரச்சொல்லுமென்றார்
அர்க்காலொருவனைத்தா னனுப்பினார்மந்திரியும்
வந்ததாரென்று வார்த்தையறியுமென்றார்
ஒற்றுமொருவனவன் ஓடினான்மந்திரியும்
பாண்டியர்களெதிரில்வந்து பாக்குடனேதெண்டனிட்டு
எந்தனுராசரையா எதுக்காகவந்தீர்கள்
சண்டைபண்ணவந்ததொரு படையெல்லாராசர்களே
சொல்லுங்களையாவென்று தெண்டனிட்டார்வந்தவர்கள்
மந்திரியுங்கேட்கையிலே மகாராசரேதுசொல்வார்
பதுராபுரியாளும் வாழுவரசியல்லியற்கு
காணாமல்மங்கிலியம் கட்டினாரவள்கழுத்தில்
பொய்சத்தியம்பண்ணியல்லோ புகழ்விமன்வந்துவிட்டான்
ஆகையினாற்சண்டைசெய்ய அநேகதளம்கூட்டிவந்தோம்
சண்டைபண்ணிஜெயிக்கச்சொல்லும் சாமர்த்தியராசாக்களை
வந்தாலேபார்க்கலாம் வாராமலிருந்தாக்கால்
காணி-கோட்டையிடித்திடுவோம் கொத்தளங்கள்பேர்த்திடுவோம்
தங்கமதில்கோபுரத்தை தரைமேடாய்ச்சாய்த்திடுவோம்
ஆமணக்குப்பருத்திகளும் அடைவிதைத்திடுவோம்
ஆண்சிறையும்பெண்சிறையும் மடக்கலும்பிடித்திடுவோம்
கடுகவரச்சொல்லுங் கட்டழகராசர்களை

அவ்வார்த்தைத்தான்கேட்டு அழகான தூதுவர்கள்
சந்தனவடிவழகர் தர்மனண்டை வந்துவிட்டார்
வணங்கிநமஸ்கரித்து பந்திரியுமேதுசொல்வார்
மதுராபுரியாளும மாள்வசிகல் வனியற்கு
காணாமல்மங்கிலியம் கட்டினாராமவள்கழுத்தில்
பொய்சத்தியம்பண்ணியல்லோ வந்தாராம்புண்ணியரும்
ஆகையினாலேதா னல்லிதளங்கூட்டி வந்தாள்
சண்டைக்குவந்தாலே அல்லாதுரைராசாவே
கோட்டைப்பிடிப்போனென்றால் கொப்பைப்பறிப்பேனென்றாள்
சண்டைக்குவரச்சொன்னாள் தருமலிங்கராசாவே
என்றுசாணமிட்டா னியலான தூதவனும்
தக்கபுகழுடைய தருமராதுதான்கேட்டு
மாயன்பெருமாளின் மதிமுகத்தைதான்பார்த்து
தையலிளங்கொடிக்கு சத்தியஞ்செய்யவென்று
தென்மதுரைபோனீர்களே செய்தியென்னசொல்லுமென்றார்
அருண்மைந்தர் தருமருக் கரிமாமரேதுசொல்வார்
பண்டலதுராசாக்கள் வந்துசத்தியம் பண்ணூர்கள்
கொதிக்கின்றநெய்தனிலே கொப்பெனவேவகைதுவைத்து
வெற்றிமதயானை வீமனவனேதுசெய்வாள்
சத்தியங்கள்செய்யாமல் நாமமதவாழ்மார்பன்
கொதிக்கின்றநெய்யதனைக் கொப்பறையோடெடுத்து
நெய்யைகுடித்துவிட்டு கொப்பறையையுருட்டிவிட்டான்
மதப்பட்டவீமன்செய்த வல்லமையினாலிப்போது
சண்டைக்குவந்தாளே சாமர்த்தியமுள்ளகன்னி
சண்டைபண்ணவந்தவளைச் சற்றும்விடலாகாது
சண்டைகளைச்செய்யவேணுஞ் சாமர்த்தியமுள்ளகன்னி
வந்தசண்டைவிடலாமோ வளம்பெரியதர்மரேசொல்
பின்னுக்கிடந்தாலே விடுவாளோபெண்ணரிசி
வென்றுசெயிக்கவேண்டும் வீரபட்டஞ்சூட்டவேண்டும்
அவ்வார்த்தைதான்கேட் டருண்மைந்தரேது சொல்வார்
ஆரையனுப்பிடுவோம் அவரதுசெய்யவென்றால்
எவரையனுப்புவோம் மெமபெருமாள்சொல்லுமென்றார்
நகுலசகாதேவ ராசாக்கள்தங்களையும்
வெற்றிமதயானை வீமனையனுப்புமென்றார்
மூவருடனுக வெகுசனங்கூட்டுமென்றார்
நானுங்கூடப்போறேன் ராசாவேயஞ்சாதே
வென்றுஜெயித்துநான் வெளிப்பட்டுவருவேனென்றார்
மனதுக்கிசைந்தபடி மாயவரேசெய்யுமென்றார்

பஞ்சபாண்டவர் அல்லியோடு சண்டைக்குவருகிறது.

தர்மராதுசேனைகள் சகலஜனம்வாருமென்றார்
இன்றுவெளிகூடாரமியலுடனேபோடுமென்றார்

சண்டைமூராசனையுமென்றார் சண்டைக்கொடிநாட்டுமென்றார்
பாளையக்காரருள்ளதெல்லாம் படைகள்சொல்லுறார்கள்
அரடாதேர்பாகா அலங்கரியுந்தேரையென்றார்
தேர்பாகனோடிவந்து தேரையலங்கரித்து
அறவண்டி நாறுசட்ட பழகானகுதக்கக்கால்
குத்துக்கால்சொப்பனிட்டு கொடுங்கைநிரைவகுத்து
கும்பக்கலசமது கொடுங்கையலங்கரித்து
தேரையலங்கரித்துத் தேர்ப்பாகன்கொண்டுவந்தான்
அழகானசிவிகையில் அலங்காரம்பண்ணினானே
நாலுபக்கஞ்சாலர்களும் நவரத்னதோரணமும்
கண்ணாடிசல்லிசட்டி கவரியான்சுக்குவிட்டு
ஊஞ்சல்கோத்தாராய்ச்சி யழகுதனிசட்டினானே
நவகண்டவீரபலி நான்குபக்கங்கட்டினானே
வாழைமரங்கட்டியே மகமேரலங்கரித்து
நான்குபுரவிகளை நன்றாய்க்குளிப்பாட்டி
பாராசபரிபுரவியொன்றும் பஞ்சகலியாணியொன்றும்
தேசியெனும்புரவியொன்றும் சிவரத்னபுரவியொன்றும்
நாலுகால்வண்டயமாம் நடுக்கமுத்தில்கொலுசுகளும்
முன்னாலேசுட்டிகளும் பின்னாலேகுச்சிகளும்
மாணிக்கக்கடிவாளம் வாயிற்கொடுத்தானே
நான்குகுதிரைகளை நன்றாயலங்கரித்து
தேரின்மேலேறினானே சீக்கிரமாய்ப்புரவிகளை
சாய்ந்திருந்துசண்டைசெய்ய குறிஞ்சிபூமெடையிட்டானே
ஒளிந்திருந்துசண்டைசெய்ய ஒருகுதலையணைகளிட்டான்
சந்தனப்பொட்டுமிட்டு சாம்பிராணிதூபமிட்டான
தேரையலங்கரித்து தேர்ப்பாகனோடிவந்து
அலங்கரித்தேனென்றுசொல்லி யடிவணங்கிதெண்டனிட்டு
வெற்றிமதயானை வீமனவனெழுந்து
நகுலசகாதேவ ராசாவுமெழுந்து
ஆயர்பெருமாளு மரிராமர்தானெழுந்து
மகுட'மணிக்காரர்கள் வாகுவலயமிட்டார்
வாள்களுங்கத்திகளும் வலதுகையில்தானெடுத்து
அம்புவில்லுந்தானெடுத்து அம்புறாத்தூணிமுதுகணிந்தார்
சட்டைதமான்வச்சிரகாயம் தாமணிந்தார்ராசரெல்லாம்
டண்டுவில்லுஞ்சுண்டுவில்லுஞ் சிங்காணிபூச்சுவில்லும்
வச்சிரக்கபாயமணிந்தான் மதவீமராசனவன்
தண்டாயுதமணிந்தார் மந்திரவாளணிந்தார்
சண்டைக்குமுழுஸ்திபாய்ச் சமர்த்தவெளுபானோர்
அர்ச்சுனரிதுவறிந்து ஆபரண்டையோடிவந்து
அல்லியவளோடே யமருக்குப்போரோ

எவ்மேலேபம்புபட்டால் என்னுயிருமிவிடும்
எயனருந்திடுவேன் செலவழிந்துபோவேனென்றான்
மாய்டுமடிந்திடுவேன் மாதருக்குபாணம்பட்டால
எந்தவிதமானாலும் யிட்டுவந்துசேருமையா
பொற்கொடியமாதரையீர் பிடித்துவந்துசேருமையா
நல்லதருச்சுனரே நமக்குத்தெரியவரும்
எந்தவிதமானாலு மிட்டுவந்துசேர்க்கிறேன்பார்
உன்மனதுக்கிசைந்தபடி மன்னவனேசெய்கிறேன்போ
என்றுமேசொன்னாரே எம்பெருமாள்மாயவரும்
அப்போதருச்சுனரு மாணழகர்தாமெழுந்து
வெற்றிமதயானை வீமனண்டையோடிவந்து
மதகரிவீமனுக்கு வணங்கிநமஸ்கரித்து
அண்ணாமதவீமா அடியேனொருவார்த்தை
அல்லியவள்மேலே அமருக்குப்போரீரோ
அவள்மேலேபாணமதை விடவேண்டாமண்ணாவே
வில்வித்தைசெய்யவேண்டாம் விசைபாணம்போடவேண்டாம்
தந்திரமாய்க்கொண்டுவாருந் தாமந்தவாழ்மார்பா
என்றுதொழுதானே எழில்விசையனர்ச்சுனனும்
அவ்வார்த்தைதான்கேட்டு ஆணழகனேதுசொல்வான்
நல்லதுதம்பியரே நமகருத்தெரியவரும்
என்றுசொல்லிமதவீம னேறினான்தேர்மேலே
ஏறினார்தேர்மேலே எடுத்தார்நெடுங்குடையை
முத்துக்குடைகளுமே முழுவயிரநற்குடையும்
பட்டுகுடைகளுமே பலதிசையுந்தானெடுத்தார்
கிருஷ்ணரதுதேர்மேலே கருடக்கொடிபறக்க
வீமரதுதேர்மேலே தங்கக்கொடிபறக்க
நகுலரதுதேர்மேலே நாமக்கொடிபறக்க
சகாதேவர்தேர்மேலே சாஸ்திரக்கொடிபறக்க
அச்சுகிறுகிறென யானைநெடுந்தேரசைய
வண்டில்கிறுச்சிகளும் மதயானைகோஷ்டமிடும்
குதிரையனுமானிக்கக் கோடிமன்னர்சத்தமிட
யானைசேனைபரிவார மடங்கலும்வருகிறதே
செந்தூளெழும்புவதுஞ் சூரியனைக்கப்புவதும்
கருந்தூளெழும்புவதும் கதிரோனைக்கப்புவதும்
மண்தூளெழும்புவதும் மண்டலத்தைக்கப்புவதும்
அடிபடுதாரயபேரி அந்தகரந்தானதிர
வெண்கலபேரியது விருதுமுழங்கிவர
சண்டைசண்டையென்றுசொல்லிச் சண்டைபேரியடிபடுது
வெற்றிவெற்றியென்றுசொல்லி வெற்றிமுரசடிபடுதே
ரணங்கள்ரணங்களென்று ரணபேரியடிபடுதே

கோடைகாலத்திடிபோலே குமுறுதேருயபேரி
அடிவானத்திடிபோலே அடிபடுதேராயபேரி
அல்லியென்றபேர்சொன்னால் கல்லுந்தெய்வங்கூத்தாடும்
மன்னாருஞ்சென்னாளும் மண்டலத்தைக்கப்பியதே
வருகிறசனங்களென்றால் மட்டுமதிக்கவில்லை
பட்டணத்தைதாண்டிப் பாளையம்வருகிறதே
யூகம்பிரித்தார்க ளுயித்தியஞ்செய்யவென்று
வந்துமுனைகொடுத்தார் வளப்பெரியசேனையெல்லாம்
இருவாருபாளையங்க ளெட்டிநெருங்கிற்றங்கே
உத்திபிரித்தார்க ளுயித்தியம்பண்ணுகிறார்
வில்வளைத்துநாரிபூட்டி வேணபாணந்தொடுத்தார்
சரமேற்சரம்பொழிந்தார் சாமர்த்தியமுள்ளவர்கள்
கலிங்கர்தெலுங்கர்களும் தெலுங்கர்கலிங்கர்களும்
கன்னடையர்கள்ளியர் கள்ளியர்கன்னடியர்
சத்திரியர்முத்திரியர் முதகிரியர்சகதிரியர்
யானையோடுயானைதாக்க அஸ்வத்தோடஸ்வந்தாக்க
ஒட்டகமுமொட்டகமும் ஒக்கப்போர்செய்யுதங்கே
ஒருவர்க்கொருவரல்லோ உயித்தங்கள்பண்ணுகிறார்
அட்டிற்றேகல்லசண்டை எழும்பிற்றேராயபேரி
மூணுதேகல்லசண்டை முழங்கிற்றேராயபேரி
வந்துமுனைகொடுத்தாள் வாழ்மாரியல்லியம்மாள்

வீமசேனன் யுத்தம்.

வெற்றிமதயானை வீமனவன்பாய்ந்து
வந்துவளைத்தானே வல்லிடிபோல்தேர்திருப்பி
தேரைத்திருப்பியவன் செங்கையில்வில்லெடுத்தான்
வில்வளைத்துநாரிபூட்டி வில்லைக்குனைத்தொனித்து
அம்புதொடுத்தானே அல்லியவள்மேலாக
வாரிபொழிந்தானே வளம்பெரியஅஸ்திரத்தை
வாயுவாஸ்திரங்களோடு இந்திராஸ்திரங்களுந்தான்
சூரியஅஸ்திரமாம் சுப்ரமண்யஅஸ்திரமாம்
மூடுபனிபோலாக மூடிக்கிவிட்டான்பாணமதை
அம்புவரும்வேகமானா லார்க்கமுடிபோகாது
பாணம்வரும்வேகமானால் பார்க்கமுடிபோகாது
சரவருஷம்போலாகச் சரமேற்சரம்பொழிந்தார்
கண்டாளேயல்லியம்மாள் கண்கள்சிவந்தாளே
சீறியெறிபறந்து சிங்கத்தைப்போற்கரும்பி
சுழுத்திலேமங்கிலியக் கட்டினவனாடா
திருட்டுப்பயலேயுன் சேவன்பரித்திடுவேன்
சண்டிப்பயலேயுன் சாமர்த்தியம்காணழிப்பேன்
என்சமர்த்துஞ்சேவகமு மிப்போதெரியுதுபார்

அல்லியென்றுபேர்சொன்னால் அழுதபிள்ளைவாய்மூடும்
அல்லியென்றுபேர்சொன்னால் வண்டாண்டம்பிடுமென்றும்
அரைநாழிக்கொள்ளையிலே யனகாபுரஞ்சேர்த்திடுவேன்
சேனைதிருப்பிறேனே சொன்னையிலே வில்லெடுத்தாள்
பம்பரம்போலாக பாரரதந்திருப்பி
சக்கரத்திகிரிபோல சம்பாதுடனேதேர்திருப்பி
வில்வளைத்துநாரிபூட்டி விட்டாள்சரபாணம்
ஆகாயமுள்ளதெல்லாம் அம்பாலேபந்தலிட்டாள்
அம்புவரும்விதங்களார்க்கமுடிகூடாது
பாணம்வரும்விதங்கள் பார்க்கமுடிகூடாது
கார்த்திகைமாதத்திலே கனமழைபெய்ததுபோல்
ஐப்பசிமாதத்திலே யடர்ந்தமழைபெய்ததுபோல்
சோனைமழைபோலே சொரிகிறாள்பாணங்களை
அக்கினியாஸ்திரங்கள் அனந்தம்பொழிந்தாளே
நெல்லிப்பழம்போலே நெருங்கிற்றேம்சாப்பணங்கள்
அருநெல்லிப்பழம்போல யஸ்தமெல்லாங்கொப்பளிக்க
நாலுநாள்மட்டாக நல்லசண்டைபண்ணுனார்கள்
தன்மேல்வரும்பாணமெல்லாஞ் சங்கரிப்பான்வீமனவன்
ஒருவர்விட்டபாணமெல்லாஞ் சங்கரிப்பான்வீமனவன்
இருவர்சமானமாக இனியசண்டைபண்ணுகிறார்
வீமன்விடும்பாணத்தினால் வெகுசனங்கள்மாளுகுது
யானையின்மேலிருந்ததுரை யறுந்துவிழுகுறார்கள்
குதிரையின்மேலிருந்ததுரை கொக்கரித்துவிழுந்தார்
ஒட்டகத்தின்மேலிருந்ததுரை யோலமிட்டுவிழுவார்கள்
அம்மாடியென்றுசொல்லி யலறிவிழுவார்கள்
தென்னங்காய்போலாக சேனைதலையுருளவிட்டான்
பனங்காய்போலாகப் பரித்தெரிந்தான்வேணதலை
அறுத்ததலைகளெல்லா மம்மானுருளுதங்கே
பெட்டியும்பெழைபோலே பெலிகொடுத்ததலைகள்போல
சட்டிகள்பானைபோலே தலைகளுருளவிட்டான்
அம்மாடியென்றுசொல்லி அனேகர்தலையுருளும்
காலறுந்துபோகுதே கைகளற்றுபோய்விடுதே
கால்குடல்சரிந்து இருநிலத்தில்வீழ்வாரும்
மணிக்குடல்தான்சரிந்து மண்ணிலவிழுவாரும்
நிலப்பூச்சிபோலாக நிலத்தில்நசுங்குற்றார்
சாகிறவுணிபோலே தரையில்நசுங்குற்றார்
மாண்டசெனங்களென்றால் மட்டுமிதங்களில்லை
செத்தசெனங்களென்றால் சொல்லமுடிபோகாது
அல்லியம்மாபாணங்க ளலைந்தலைந்தேதடுக்குது
சண்டைபண்ணமாட்டாமல் சலாம்பண்ணியோடலுற்றார்
ஆயுதத்தைதூரவைத்து அருகில்சலாம்பண்ணுவாரும்

பண்டாரமென்பாரும் பரதேசியென்பாரும்
நாமத்தைக்காட்டுவாரும் நான்தாதனென்பாரும்
பூநூலைக்காட்டுவாரும் பிராமணனென்பாரும்
பிச்சையிரந்துண்ணப் புறப்பட்டோமென்பாரும்
ஆயுதத்தைதூரவைத்து அருகில்சலாம்பண்ணுவாரும்
ஐயையோபாதெய்வமென்று அலைகிறதேபாளையங்கள்
வடுகரெல்லாம்நானென்பார் வன்றநிழ்தன்னிலானென்பார்
துலுக்கரெல்லார்பாவியென்று சொல்லிப்புலம்புகிறார்
தண்ணீர்தண்ணீரென்று தவிக்கிறதேபாளையங்கள்
மார்பளவரத்தாறு வழியவிட்டான்வீமனவன்
பிடாரியம்மன்கோவிலுக்கு பலிகொடுத்தபாவனைபோல்
அம்மையார்கோவிலுக்கு ஆடுவெட்டும்பாவனைபோல்
தள்ளுகிறதலைகளெல்லாம் நெருக்களங்கொள்ளவில்லை
ரத்தவழுடினதே யுத்தகளங்களெல்லாம்
இவ்விதமாக இனியபோர்செய்வதில்லை
தேவாதிதேவரெல்லாம் சொல்லுவாரொருவார்த்தை
இராமர்சண்டையென்பார் இராவணன்சண்டையென்பார்
சூரபத்மன்சண்டையென்பார் சுப்ரமண்யர்சண்டையென்பார்
யீரபத்மன்சண்டையென்பார் வேள்விதக்கன்சண்டையென்பார்
வெற்றிமதயானை வீமனவன்பின்னிடையான்
நான்குநாள்மட்டுமல்லோ நல்லசண்டைபண்ணுகிறான்
அல்லிப்பெருமாளு மாக்கரித்துப்பற்கடித்து
ஆலவாய்சொக்கரென்று பாண்டவனைத்தானினைத்து
திவ்வியாஸ்திரத்தை தூபமிட்டுதானெடுத்தாள்
மந்திரதூபமிட்டு வாங்கிவிட்டாள்மன்மேலே
மார்புளவாங்கியல்லோ தோள்புளவாங்கிவிட்டாள்
மேலிட்டுவருகிறதே வீமனதுதேர்மேலே
வாலில்நெருப்பெரிய வந்துவிழுந்ததுவே
தேருமுடைந்ததுவே செம்புரவிசெத்ததுவே
போட்டதோர்வச்ரப்பாய் பொடிபொடியாயாச்சுதங்கே
சட்டைதமான்வச்ரப்பாய் தவிடுபொடியாச்சுதங்கே
சரீரங்களெல்லாம் சல்லடைக்கண்ணாச்சுதுகாண்
மானங்குலைந்தானே மதகரியான்வீமசேனன்
விழுந்துமெழுந்தவனும் வெட்கங்கொண்டோடிவிட்டான்

ஸ்ரீகிருஷ்ணபகவான் யுத்தம்.

மாயன்பெருமாளும் மயிலிராமர்கண்டுவிட்டார்
வசைமோசம்வந்ததென்று மாயவரும்தேர்திருப்பி
வந்துமேசண்டைசெய்தார் மயிலணபாள்தன்னுடனே
பம்பரம்போல்திருப்பி பாணந்தொடுத்துவிட்டார்
அல்லிப்பெருமாளு மாக்கறித்துபற்கடித்து
சொக்கரைத்தானினைத்து தொட்டாளேபாணமதை

இருவர்சரங்களு மிருநிலத்தில்தான்சுழல
பம்பரம்போலசுகப் பாராதந்திரும்பி
விட்டாள்சரபாணம் மேகவண்ணன்தேர்மேலே
வாய்வாஸ்திரங்களும் வருணாஸ்திரங்களும்
வச்சிரபாணமதை வாச்சாபொழிந்தாள்
ஒன்றல்லரண்டல்ல ஒருகோடிபாணமவிட்டாள்
சூரியனைத்தான்மறைத்தாள் தொடுத்தகல்லபாணமதால்
ஆகாயமுள்ளதெல்லா மம்பாலேபந்தலிட்டாள்
பெருமனுமலைபெரும் பிரியாதசண்டைபண்ணார்
மாளுஞ்சேனைகளென்றால் மட்டுமிதங்களில்லை
ஐயையோதெய்வமென் றலையுமேசுபானையங்கள்
யானையின்மேலுள்ளவர்கள் அபயமிட்டுமண்ணைக்கவ்வ
குதிரையின்மேலுள்ளவர்கள் சொக்கரித்துமண்ணைக்கவ்வ
ஒட்டகமேலுள்ளவர்கள் ஓலமிட்டுமண்ணைக்கவ்வ
இந்தவிதமாக இனியசண்டைபண்ணுகிறார்
அலைகடல்சத்தம்போல அபயமிடும்வெகுஜனங்கள்
கூக்குரலாகிறதே சோஷ்டமிடும்பானையங்கள்
அபயம்சிவாயவென்று அலைகிறதேவெகுசனங்கள்
வடுகரெல்லாம்நீளென்பார் வனறமிழர்தண்ணீரென்பார்
துலுக்கரெல்லாப்பாணியென்று சொல்லுகிறார்பானைபத்தில்
தண்ணீர்தண்ணீரென்று தவிக்கிறதேபானையங்கள்
அப்போதுஅல்லியம்மாள் அதிகமானகோபமுடன்
வச்சிரபாணகணை மந்திரதூபமிட்டு
மாயாதுதேர்மேலே வரிந்துவிழுத்துவிட்டாள்
உக்கிராஸ்திரங்களது திவ்வியாஸ்திரங்களது
இராமசந்திரஅஸ்திரமாம் நாராயணஅஸ்திரமாம்
அக்கினியாஸ்திர மனந்தம்பொழிகின்றாளே
ஒன்றல்லஇரண்டல்ல ஒருகோடிபாணம்விட்டாள்
வாரிப்பொழிந்தாளே வளம்பெரியஅஸ்திரத்தை
எடுத்துப்பொழிந்தாளே ஏழுலட்சம் பாணமதை
பாதாளமூருவப் பாணந்தொடுத்தாளே
ஆயன்சரீரமெல்லா பங்கம்பிளக்கடித்தாள்
சல்லடைக்கண்போலே சரீரமெல்லாந்துளைத்து
மயிருக்கொருபாணம் மாதுதொடுத்துவிட்டாள்
விற்பிடித்தகைகளெல்லாம் மெத்தசிவப்பேறிற்று
கைகளெல்லாஞ்சோர்ந்துவிடக் கன்னியரும்பாணம்விட்டாள்
ஆகாயதேவரெல்லாம் அல்லியரைக்கொண்டாடினர்
இந்தப்படியாக இனியசண்டைசெய்கையிலே
இவனேவெகுபார மென்றொருபாணமதை
மார்புரளவாங்கியல்லோ தோள்புரளதொடுத்துவிட்டாள்
வாயில்நெருப்பெரிய வந்துவிழுந்ததுவே


தேருமொடிந்துபோச்சு செம்புரவிகாலும்போச்சு
சட்டைதானவச்சிப்பாய் தவிடுபொடியாகி
செங்கையிலேவில்லெடுத்து சோதிசட்டைதானவிந்து
பாதகியாய்ப்போனீரே பாரளந்தபெம்பெருமான்
கைமோசம்வந்ததென்று கரியமால்வாடினார்

சகாதேவன்யுத்தம்.

கண்டான்சகாதேவன் கரியமாலேவாடுவதை
தேரைத்திருப்பினனே செங்கையில்வில்லெடுத்தான்
வாக்குவலியோங்குகொண்டான் வல்லியபோல்சகாதேவன்
பேரிகையறைவித்துப்போரெதிர்க்கானல்லிபண்டை
சண்டைபெரியமக்கு சார்த்துடனேவங்கெதிர்த்தான்
கண்டாளேஅல்லியம்மாள் கண்கள்ரெண்டுபதைக்கவெக்க
ஒருபாணம்விட்டாளே டங்கமெல்லாந்தானெர
பேரிகையைக்கிழித்தாளே பெரியபடமாதான்கிழித்தாள்
விழுந்தானெழுந்திருந்தான் வெட்கங்கெட்டோடிவிட்டான்

சகாதேவன் அல்லியைப் புலிகூண்டிற்பிடித்துவருகிறது.

எந்தவிதத்திலேயிவளைச்செயித்திடலாம்
அடங்காதகிளிகளை அடக்கும்வழியெப்படிதான்
என்றுமேதானினைந்து இன்பமாசகாதேவன்
உள்ளமைசாஸ்திரத்தை உத்தியுடன்பார்த்து
பாதாளஅஞ்சனத்தை பார்த்தசகாதேவன்
புத்துசுற்றுபுலிக்கூண்டை பாங்குடனேசொல்லிவந்தார்
ஒருபன்னியல்லியரை போனிலடக்கவேண்டும்
இல்லாமற்போனக்கா லிவளைசெயிக்கமுடியாது
இவள்கையால்மாளுவதெல்லாருநிச்சயந்தான்
சாஸ்திரத்தைதான்பார்த்து தாக்குள்ளசகாதேவன்
செருக்களத்தைவிட்டவனுஞ் சீக்கிரமாய்போகலுற்றான்
மாளிகையில்போய்ச்சேர்ந்து மன்னன்சகாதேவன்
விசுவபிர்மதச்சர்களை விரைந்தோடியழைபுமென்றான்
அப்போதுகாவலர்க ளழைத்தோடிவந்தார்கள்
ஆயிரந்தச்சர்களை யழைத்துவந்துவிட்டார்கள்
வந்துபணிந்தார்கள் மன்னன்சகாதேவனைத்தான்
எங்களையழைக்கபணி யாதென்றுகேட்டார்கள்
விஷமனைமாளிகையில் நிருமிபுக்கூண்டையென்றான்
ஒருபக்கம்பார்த்தாலே புச்சிதக்கூண்டைப்போல
மறுபக்கம்பார்த்தாலே மச்சவீடுபோலாக
பதுக்கற்றுக்கோட்டையதாய் பக்கங்கதவடைத்து
வாசலுக்குவாசலது வச்சிரத்தாழ்போட்டு
சாவிபுஞ்சங்கிலியுந் தாப்பாளும்வைப்புமென்றான்
ஆயிரந்தச்சர்களு மக்கணமேசொப்பனிட்டு
விஷமனைமாளிகையில் நியமித்தார்விசுவகர்மர்



சோடித்தோமென்றுசொல்லித் தெண்டனிட்டுப்போனார்கள்
அப்போசகாதேவன் அங்கேனவேதாமெழுந்து
தேரைத்திருப்புகிற ரூமியைத்தானழைத்து
குதிரையைச்சீக்கிரங் கொண்டுதேர்கட்டுமென்றான்
பாராசாரிபுவியிலே பாய்ச்சாயலங்கரித்து
கூண்டிக்கழுதாக் குதிரையைக்கண்டான்
சாஸ்திரப்படிவிருதுகள் சார்த்துடனேகட்டுமென்றான்
அந்தச்சகாதேவனைப்புவியிலுங்கைபிடித்து
எதிரேகூண்டதவரி லெடுத்தார்போரினையை
திறவுகோல்கைபிடித்துச் சூதாகப்போனாளே
கூண்டைதிருப்பியல்லோ கொண்டுவந்தான்பாளையத்தில்
வெயங்கொண்டோமென்றுசொல்லி செங்கையிலேவில்லெடுத்தார்
சண்டைசண்டையென்றுசொல்லி சண்டைபேரியடிபடுது
வெற்றிவெற்றியென்றுசொல்லி வெற்றிநகாடிபடுது
கண்டாளே அல்லியம்மாள் காற்றைப்போலதேர்திருப்பி
வந்துமுகைத்தாளே வல்லடிபோல்வளைந்தாள்
எட்டுகோதல்லசண்டை யெழும்பிற்றோயபேரி
முட்டுகோதல்லசண்டை முழங்கிற்றோயபேரி
விட்டாள்சரபாணம் மேனியெல்லாந்தான்மறைய
ஒருவர்விடும்பாணம் ஒருவர்தடுக்கிக்கொள்வார்
இருவர்சமானமாக யிருந்துசண்டைபண்ணுகிறார்
அர்த்தசந்திரபாணங்களில் அல்லியொருபாணம்விட்டாள்
சகாதேவன்வில்முறியச் சமர்த்துடனேபாணம்விட்டாள்
வேதாளமாகவந்து வில்லைமுறித்ததுவே
வில்லுமுறியவேதான் வேந்தன்சகாதேவன்
வாள்கேடயந்தானெடுத்து மண்ணிற்குதித்தானே
முன்கந்துபின்கந்து முப்பத்திரண்டுகந்து
இந்திரவித்தையி லெழும்பிவாரான்சகாதேவன்
அப்போதுஅல்லியரு மாமணைக்குதான்பார்த்து
காணங்கள்போடுகிறாள் கைலாகுபண்ணுகிறாள்
கருடபாச்சல்தானெடுத்து கொப்பெனவேபாயுகிறாள்
புலியும்புலியமுது போலெதிர்த்தபாலனைபோல
யானையும்யானையுமாய் அதிர்ந்தெதிர்த்ததுபோல்
சிங்கமுஞ்சிங்கமுமாய்ச் சீறியெதிர்த்ததுபோல்
சொக்கரிந்துபாளியிட்டுக் கொற்றவனும்பாய்கிறான்
துள்ளுமான்குட்டியைப்போல் துள்ளுகிறாளல்லியம்மாள்
ஓடியொளிப்பவன்போ லுபாயமாய்ச்சகாதேவன்
ஓடிப்போறானென்று உலகாளும்ராசகன்னி
கூடக்குதித்தாளே கூண்டுசனிற்பாய்ந்தாளே
முன்வாசற்புகுந்தவனும் பின்வாசலோடலுற்றான்

அவ்வாயற்புகுந்தாளே அல்லிமலர்நாயகியாள்
எங்கேபோனான்கள்ளனென்று இளங்கொடியாள்தேடுகிறாள்
ஐந்தாங்கட்டுவாசலிலே அல்லியம்மாள்தான்புகுந்தாள்
அவ்வாசல்கதவடைத்து தாப்பாளும்போட்டானே
ஐந்துவாசற்கதவடைத்து ஆணழகன்வெளியானான்
அகப்பட்டாளல்லியென்று அடியுமென்றான்பேரிகையை
செயங்கள்செயங்களென்று செயபேரிபோடுமென்றான்
அகப்பட்டாளல்லியென்று வடிபடுதேபேரிகைதான்
சிக்கினாளல்லியென்று சின்னங்களூதுகிறார்
அத்தண்டபேர்களுமே அனைவோருங்கேட்டார்கள்
சந்தோஷப்பட்டார் தருமரிடசேனையெல்லாம்
தப்பினசேனையெல்லாம் தென்மதுரைசேர்ந்துவிட்டார்
அப்போதுசகாதேவ னானந்தமாய்வாரானே
கூண்டைதிருப்பியே கொண்டுவந்தான்வையகத்தில்
அர்ச்சுனன்தன்னருகே அடிபணிந்துதெண்டனிட்டான்
தெண்டனிட்டசகாதேவர் சொல்லுவாரொருவார்த்தை
அல்லியுடன்சண்டைபண்ண வமருக்குப்போனபோது
அகங்காரப்பெண்புலிதா னகப்பட்டதென்கையிலே
வேங்கைப்புலியதனை விடுகூண்டிலடைத்துவந்தேன்
மதுராபுரியாண்ட வாழ்வரசியல்லியரை
தேரேறிசண்டைசெய்யுந் துரைகளைக்கொண்டுவந்தேன்
அவ்வார்த்தைதான்கேட் டர்ச்சுனனுமகிழ்ந்து
சந்தோஷப்பட்டானே தாமந்தவாழ்மார்பன்
அன்னநடைதுரோபதையாள் ஆரணங்கைதானழைத்து
நாகமடந்தையரை நறுநுதலைத்தானழைத்து
சேரவளநங்கை சுபத்திரையைத்தானழைத்து
நான்செய்தகாரியத்தை நாயகமேநீர்கேளீர்
மாயவரும்யானுமாக வனவாசம்போனபோது
தீர்த்தயாத்திரைபோகையிலே செய்தபிழைநீர்கேளும்
ஆதிசிவனைத்தான் அடிவணங்கவேணுமென்று
மதுராபுரியிலே மாணிக்கச்சொக்கலிங்கம்
பிட்டுக்குமண்சுமந்த பித்தரைக்காணவென்று
மதுரைக்குப்போகின்ற வழியிலேயங்கொருவன்
அழுதகண்ணுஞ்சிந்தையுமாய் அங்கொருவன்புலம்பிநின்றான்
மதுராபுரியாளும் வாழ்வரசியல்லியற்கு
அன்றாடமுத்தெடுத்து அளப்பானும்காரிழைக்கு
படிமுத்துகுறைந்ததென்று பதறியவன்விழுந்தான்
அல்லியரசாணி அரசுநிலையாள்கிறதும்
அவள்பிறந்தவண்மைகளும் ஆவலெல்லாம்சொல்லுமென்றேன்
ஆறுபிரம்பாண்டியர்க ளரியதவம்செய்ததுவும்
அகிலாண்டசொக்கலிங்கம் அங்கயற்கண்கிருபையினால்

அல்லிநிலைமேலே அவன்பிறந்தவன்மைகளும்
எழுபிராயத்தில் எதிர்த்தவர்க்குமேன்முகனே
வெட்டித்தலைதுணிந்து விரபட்டங்கட்டினதும்
கொள்ளைநம்மாப்பிள்ளைக்குக் குறடாசெருப்பேனென்று
சேரவருமமாப்பிள்ளைக்குச் செருப்புந்தாரேனென்றான்
ஆளவருஞ்சம்பந்தியை யடிப்பேனென்றான்செருப்பதால்
முச்சுகொட்டாதெருவிற்கட்டி மொய்குழலாளாண்டிருந்தாள்
இவ்வார்த்தைதான்கேட் டென்மனதுதாளாமல்
கட்டினவிருதுகரத்துக் கலியாணஞ்செய்யவென்று
என்றுமயறிலெண்ணி எட்டுநாள்காத்திருந்தேன்
பத்தினியானவள் பரிவேட்டைபோனதுவும்
பெண்வேஷம்போட்டுமல்லோ பின்னேதொடர்ந்துபோனேன்
கரும்புரவிமேலேறி மான்வேட்டையாடையிலே
ஆனந்தமாரியருள் கம்புபொறுக்கித்தந்தேன்
வேட்டைகளாடியே மெத்தக்களைக்கவரும்
ஆலமரத்தடியில் அங்கேபடுத்தானே
காலும்பிடித்தேனே கதையொன்றுசொன்னேனே
அடையாளங்காட்டவென்று ஆரங்கழற்றிக்கொண்டேன்
அன்றுபோய்மற்றநாள் மற்றொருவேடங்கொண்டேன
பித்தம்பிடித்தவன்போல் பெரும்பயித்தியங்கொண்டவனாய்
அல்லியதுபட்டணத்தில் அழகுதிருக்குளத்தில்
வண்ணமருந்தெடுத்து வளம்பாடியாறுவைத்தேன்
அனேகந்தாதிமாரைவிட்டே யாற்றிலென்னைபுரட்டுமென்றாள்
அதினாலுஞ்சாகாமல் அவன்பின்னேவாயிருந்தேன்
தூக்குமரந்தனிலே போடுமென்றாளேயவள்
செங்கமலத்தாதியரை வுபாயமாய்க்கொன்றுவிட்டேன்
காளியம்மன்கோவிலிலே காவுபோடச்சொன்னாளே
பூதக்கிடங்கிலே போட்டடைக்கச்சொன்னாளே
பூதம்பணிமாறப் பிழைத்திருந்தேனவ்விடத்தில்
மாயனொருபெண்ணாகி வரவழைத்துக்கொண்டுவந்தார்
ஆண்டிலைப்போல்வடிவெடுத்து அல்லிதன்வாசலிலே
வண்ணப்படமெடுத்து மாதுபிச்சைவாங்கிவந்தேன்
மாயன்பிடாரனானார் வண்ணவிதப்பாம்பானேன்
பாம்புருவாய்ப்போயிருந்து படுக்கையிலேகான்கலந்து
போடிபோடிமாதினுக்கு புத்திரனுண்டாக்கிவைத்தேன்
மற்றொருவேஷமது மறுநாள்வடிவெடுத்து
பெருமாள்தமாயவனார் பிராமணப்பெண்ணானார்
மெத்தக்கிழவனைப்போல் வேதியனாய்வடிவெடுத்து
அத்துவானமானகாட்டில் தண்ணீர்ப்பந்தல்வைத்திருந்தோம்
அதுவேஷந்தன்னுடனே அரண்மனையிற்போயிருந்தேன்
தேவேந்திரனைநோக்கி செய்தேன்பெருந்தபசு

ஆனைத்தலைபோலே அழகானமங்கிலியம்
தம்பிநகுலைபோலாகத் திருமங்கிலியச்சரடும்
கொடுத்தனுப்பவேண்டுமென்று கெசப்பெணையேதவஞ்செய்தேன்
மாயத்திருடீநீ மங்கிலியந்தரித்துவிட்டேன்
மாலைப்பசுங்கிளிக்கு மங்கிலியந்தரித்துவிட்டேன்
ஆருமறியாமல் அங்கொருவர்காணாமல்
கட்டினவிருதனுந்து கடுகியேவந்துவிட்டோம்
நான்குமாதகெற்பமது நடக்குதுகாண்மாதினுக்கு
இன்னவனென்றுசொல்லி என்னையறியமாட்டாள்
கழுத்திலேமங்கிலியம் கட்டினவனையறியாள்
தரணியிலுள்ளராசர்களை வாவென்றழைத்தவளும்
நெய்களைக்காச்சியல்லோ கைகளைநுழைவுமென்றாள்
மண்டலத்தாரானரெல்லாம் வந்துசத்தியஞ்செய்தார்கள்
வெற்றிமதயானை வீமன்குடித்துவிட்டான்
ஆலையினாலேயவள் அமருக்குமிங்குவந்தாள்
தாமமுடியானுஞ் சகாதேவன்பிடித்துவந்தான்
புலிகூண்டிலேயடைத்துப் பொற்கொடியைகொண்டுவந்தான்
இந்தவபணமெல்லா மேற்றிழைக்குநீயுரைத்து
நம்பிக்கைவாங்கியே நாயகியைவெளிவிடுங்கள்
கோபங்களாற்றுங்கள் கொம்பனையாள்நாயகிக்கு
மனந்தேறச்சொல்லுங்கள் மாலையிடப்பாருங்கள்
சத்தியத்தைவாங்கி தையலைவிட்டுவிடும்
ஆயுதத்தைவாங்கியேதான் அப்புறத்தில்விட்டுவிடும்
என்றதுசொல்லியே எழில்விஜயனனுப்பிவைத்தான்

திரௌபதை முதலானவர்கள்வந்து அல்லியம்மாளை
மனந்திருப்பி மாலையிடச்செய்தது.

அப்படியேயாகுதென்று அன்னநடைமாதர்களும்
திரௌபதைநாககன்னி சுபத்திரைவருகிறார்கள்
மந்தாரக்குந்தியம்மாள் மற்றுமுள்ளோர்வருகிறார்கள்
வாசலும்வாசலது படியேழுந்தாங்கடந்து
புலிக்கூண்டுதன்னருகே போய்ச்சேர்ந்தார்மாதரெல்லாம்
தோராவடிவழகி துரோபதையானதுசொல்வாள்
ஆரடியம்மாளே அழகானகூண்டிலேதான்
இப்பெரியகூண்டிலேதா னிருக்கிறவளார்காணும்
வாயைத்திறந்துநீ வந்தவகைசொல்லுமென்றாள்.
மகுடத்துரைச்சியவள் வாய்திறந்தேதுசொல்வாள்
என்னசொல்வேனாயகியே என்தலைவிதிப்பயனை
ஆருக்கடங்காம லரசுநிலைசெய்திருந்தேன்
வயிற்றிற்பிறந்ததில்லை வன்கொடுமைசெய்ததில்லை
குடலிற்பிறந்ததில்லை குலக்கொடுமைசெய்ததில்லை
ஒப்பிறந்தன்னிரி நூள்ளேமனச்சேதமுண்டு

அடிக்கிறகாற்றதனி லலைகாற்றுரும்புமுண்டு
ஆலாலைகண்டருக்கு கண்டங்கறுப்புமுண்டு
குண்டுமணிக்காறுயுங் கொஞ்சங்கறுப்புமுண்டு
மயிரேகறுப்பொழிய மற்றகறுப்புமில்லை
புருவம்கறுப்பொழிய பின்னேகறுப்புமில்லை
ஆறுயிரம்பாண்டியர்கள் அரியதவஞ்செய்தார்கள்
மாளுகிறேமென்றுசொல்லி மலைபேற்றவமிருந்தார்
மாளாதேயென்றுநான் மலரிலவதரித்தேன்
அல்லியிலைமேலே ஆரணங்குபெண்பிறந்தேன்
எழுபிராயத்திலே எதிர்த்துவந்தநேன்முகனை
வெட்டித்தலைபிளந்து விரபட்டங்கட்டிக்கொண்டேன்
எல்லையரசாண்டு இருந்தேனம்மாவிக்காலம்
சேரவரும்பிள்ளைக்கு சேருபந்துதருவேனென்றேன்
ஆளவரும்சம்பந்தியை யடிப்பெனென்றேனசேருபந்தால்
பொம்மைவிருதுகட்டிப் பூமியரசாண்டேனப்பா
எவனேதிருட்டுப்பையன் என்கழுத்தில்மங்கிலியம்
தாலியைக்கட்டினுனே தனிவிருதையறுத்துவிட்டான்
அதிர்துபிடிக்கவென்று அனைவரையும்வரவழைத்தேன்
நெய்தனைக்காய்ச்சியே கையைத்துவையுமென்றேன்
நெய்யைக்குடித்துவிட்டு வினமுடனவனும்
சண்டைக்குவர்திடத்தில் சமர்த்துகளைக்காட்டாமல்
எதிரேயிருநதுமல்லோ வென்சமர்த்தைப்பார்க்கவேணும்
என்னைமோசம்செய்தல்லோ இக்கூட்டிலடைத்தானே
சரியாகநிற்கவேண்டுஞ் சமர்த்துகளைக்காட்டவேணும்
வெளியேவிடச்சொல்லும் வீரியத்தைக்காட்டுகிறேன்
அவ்வார்த்தைதான்கேட் டேதுசொல்வாள்திரௌபதையாள்
கழுத்திலேமங்கிலியம் கட்டினவன்மையெல்லாம்
அந்தவதிசயத்தை ஆரணங்கேசொல்லுகிறேன்
காட்டிலேவேட்டையாடக் கடுகவரும்போது
பெண்வேஷம்போட்டுமல்லோ பின்னேதொடர்கிலையோ
அம்புபொறுக்கிலையோ ஆரணங்கேசொல்கிறேன்
காலும்பிடிக்கலையோ கதையொன்றுசொல்லலையோ
பித்தம்பிடித்தவர்போல் பெருமருந்துதானெடுத்து
வண்ணமருந்தெடுத்து தண்ணீரிலுரைக்கலையோ
அல்லிப்பெருமாளேநீ அதிககோபங்கொள்ளாதே
ஆற்றிலேபோட்டுநீ யவரைபுரட்டலையோ
தூக்கிலேபோடுமென்றாய் துய்யப்பசுங்கிளியே
காளியம்மன்கோயிலிலே காவுகொடுக்கச்சொன்னாய்
பூதக்கிடங்கிலே போட்டடையுமென்றுசொன்னாய்
மற்றுநாள்தெய்வகன்னி மணவாளனென்றழுது

தன்புருஷனென்றுசொல்லி தானழைத்துபோகலையோ
ஆண்டியைப்போல்வந்து அல்லியேயுன்வாசலிலே
நடையார்ந்துவந்தனது வாசலிலிருக்கும்போது
பாம்புகளைவிட்டுநீர் பண்டாரத்தைகொல்லுமென்றாய்
பாம்புபிடாரனைப்போற் பத்தினிவருகையிலே
பாம்பாகவேடங்கொண்டு படுக்கலையோவுன்னிடத்தில்
உன்னிடத்தில்போகஞ்செய்து உனக்குமைந்தனுக்கிளைத்து
பார்ப்பானைப்போலவந்து பணிமாலைசூட்டலையோ
தாலிதரித்தவர்தான் தருமர்தம்பியர்ச்சுனர்தான்
உன்னைத்தாலிகட்டிவந்ததுதான் சமர்த்தென்றுயாராதே
அல்லியிலைமேலே அதிசகாய்ப்பெண்பிறந்து
மெத்தப்பெரிதென்று பாராதேயல்லியரே
நான்-அக்கினியிற்பெண்பிறந்த அதிசயத்தைநீர்கேளும்
வயிற்றில்பிறந்ததில்லை வன்கொடுமைசெய்ததில்லை
குடலிற்பிறந்ததில்லை குலக்கொடுமைசெய்ததில்லை
சந்திரர்க்குமச்சமுண்டு சற்றேகறுப்புமுண்டு
குண்டுமணிக்காணூம் கொஞ்சங்கறுப்புமுண்டு
எனக்கு-மயிரேகறுப்பொழிய மற்றக்கறுப்புமில்லை
புருவங்கறுப்பொழிய பின்னேகறுப்புமில்லை
மாசில்லாபெண்பிறந்தேன் வளருகிறேனக்கினியில்
நெருப்பிற்பிறந்தேனே நீலப்பசுங்கிளியே
பாஞ்சாலனெக்கியத்தில் பிறந்தபதிவிரதை
மந்தாகிரிமேடைதனில் மச்சறையில்பெண்பிறந்தேன்
அர்ச்சுனர்மாலையிட அக்கினியில்பெண்பிறந்தேன்
அரக்குமாமாளிகையி லைவரிறந்தாரென்று
செய்திதெரிந்து துயரமிட்டானென்தகப்பன்
ஐவரிறந்தாரென்று ஆயாசப்பட்டார்கள்
நான்-மீறிவளர்ந்தேனே மெல்லிருதுவானேன்
போதவளர்ந்தேனே பிள்ளைபெறும்நாளானேன்
கொள்ளவேவைத்தார்கள் கோடானகோடியுண்டு
மாலையிடவந்தவர்கள் மட்டுமிதங்களில்லை
அப்போதருச்சுனரும் அன்றுமோர்பார்ப்பானாய்
குஷ்டரோகம்போலாகக் கொற்றவரும்வடிவெடுத்தார்
பாஞ்சாலன்பந்தலிலே பார்ப்பான்போல்வந்திருந்தார்
அப்போதுஎன்தகப்பன் ஆலோசனைபேதுசொல்வார்
வில்லைவளைத்தவற்கு மெல்லியளைகொடுப்பேனென்றார்
அவ்வார்த்தைதான்கேட்ட அரசமுடிராசாக்கள்
மண்டலத்துராசாக்கள் வந்துவில்லைவளைத்தார்கள்
திக்கரசையாண்டதொரு துரைகளெல்லாம்வந்தார்கள்
வானவர்கோனிந்திரரும் வந்துவில்லைவளைத்தார்கள்
மண்ணுலகராசர்களும் வில்லைவளைத்ததில்லை

தோத்துராசாக்கள் வில்லைவளைத்ததில்லை
அரசமுடிராசாக்கள் அவ்வில்லைவளைத்ததில்லை
திக்கரசராசாக்கள் வில்லைவளைக்கமாட்டாமல்
வெட்கங்கள்கெட்டாரே வேந்தரந்தராசாக்கள்
ஆராலுமுடியாது அவ்வில்லைவளைப்பதற்கு
வந்தவந்தராசாக்கள் மானங்குலைந்தார்கள்
அப்போதுடன்புருஷன் அர்ச்சுனன்டி ஆணழகன்
பார்ப்பானைபோலிருந்த பார்த்திபனெழுந்திருந்து
தேவாதிதேவர்மெச்ச துரைகளெல்லாம்பார்த்திருக்க
விஷ்ணுவுமயிர்மாவும் வியந்துகொண்டிடவே
வில்லைவிரல்கொண்டு அவ்வில்லைவளைத்தாரே
நீர்பார்த்துமீனெய்தார் நித்திலங்குலமுடியார்
என்னைமாலையிட்டாரே எழில்விஜயனர்ச்சுனரும்
உனக்குக்குறைவுமுண்டோ வென்றுடையகன்னை
இவ்வார்த்தைதான்கேட் டேதுசொல்வாள்நாககன்னி
அல்லியரே அப்பியரே அதிசயத்தைநீர்கேளும்
நான்-இந்தவுலகமல்ல இன்னாட்டுமனுஷியல்ல
நாகலோகமபெண்பிறந்த நாககன்னிநானல்லவோ
ஒருமொருமாணிக்கம பேருமொருமாணிக்கம்
மாணிக்கந்தன்னால் மடையடைக்கும்பொற்பானன்
எனைவந்துமாலையிட்டா ரியகாண்டன்புருஷன்
எனக்கென்னகுறையாக விருக்கிறேன்டியப்பியரே
இவ்வார்த்தைதான்கேட் டெழுந்தாள்சுபத்திரையும்
பூமியிற்பிறந்தவளே பொற்கொடியேநீர்கேளும்
மகுடத்துரைச்சியரே வார்த்தையொன்றுநீர்கேளும்
ஆயரதுதங்கையர்கான் அம்மானமகனல்லவோ
என்னைச்சிறையெடுத்து இட்டுவந்தாருன்புருஷன்
நானென்னகுறைவாக விருக்கி றதுரைச்சியரே
அர்ச்சுனரைப்பார்த்தாலே ஆவல்தெளிந்திடுமே
மீசைமுறுக்கழகர் விழிமிற்கறுப்பழகர்
நாவிலேலட்சத்கிரம் கயல்விழிப்பார்வைகளும்
தோளில்துளசிமாலை தொப்புளிலமிர்தகலசம்
பல்லில்பரசவினை பாதத்தில்செந்தாமரை
முதுகிலேலட்சரேகை முழங்காலில்முத்துமாணிக்கம்
ஸ்திரிலீலைமன்மதன்டி சிறுபெண்கட்குகந்தவன்டி
அர்ச்சுனரைப்பார்த்தாலே ஆவல்தெளிந்துவிடும்
அவ்வார்த்தைதான்கேட் டல்லியுருமேதுரைப்பாள்
அழகுவேண்டுமென்றுசொல்லி ஆரடிகாத்திருந்தார்
மாப்பிள்ளைவேணுமென்று மயங்கினவராரடிதான்
கணவனர்வேணுமென்று காத்திருந்தவராரடிதான்
வேண்டுமென்றிருந்தாலல்லோ விஜயனைவேணுவேது

இராஜாக்கள்தன்னைப்போலே நாளுமகுடஞ்சூட்டி
மாணிக்கக்கிரீடமது மகுடஞ்சிரசில்வைத்து
கத்திகட்டிசீமைகளை கன்னியரசாளவேணுமோ
எதிர்த்தவரைசங்கரித்து எல்லையரசாளவேணுமோ
மண்ணாண்டராஜாத்தி மனையாட்டியாயிருந்தால்
பூமியாண்டராஜாத்தி பெண்சாதியாயிருந்தால்
கண்டார்நகையாரோ கலியுகத்தாரேசாரோ
பார்த்தார்நகையாரோ பாருலகமேசாதோ
இவ்வார்த்தைதான்கேட்டே துசொல்வாள்துரோபதை
மகுடத்துரைச்சியரே வார்த்தையொன்றுநீர்கேளும்
தலையிலெழுதினதை தள்ளிவைப்பாராருமில்லை
வட்டிலெழுதினதை எடுத்தெறிவாராருமில்லை
அன்றெழுதுமாதிசிவன் அழித்தெழுதப்போறதில்லை
கதியைத்தலைக்கலாம் காவேரிநீந்திடலாம்
விதியைத்தலைப்பதற்கு வேறுவிதம்நாமறியோம்
கழுத்திலேதாலியது கட்டியிருக்கையிலே
வயிற்றிலேபிள்ளையது வந்தயிருக்கையிலே
ஆயாசப்படுவதுதான் அன்னியருக்கேச்சாகும்
தரணியுள்ளோர்கேட்டாலே சற்றேநகைப்பார்கள்
மாலைதரித்துநீ மணமுகூர்த்தஞ்செய்யவேணும்
எப்போதும்போலேயுங்க ளிராச்சியமாளவேணும்
மதுராபுரிபட்டணத்தில் மண்டலத்திலாருமில்லை
எப்போதும்போலேநீ எல்லையரசாளுமம்மா
அவ்வார்த்தைதான்கேட் டல்லியம்மாளேதுசொல்வாள்
நல்லதுஆச்சியரே நம்மைவெளியேவிடும்
உங்கள்-மனதின்படியாக விவகாரம்பேசுகிறேன்
கூண்டிலடைத்துமென்னை விவகாரம்பேசுவதேன்
விழியெதிரேநிற்கவேணும் விவகாரம்பேசவேணும்
வெளியேவிடுங்களென்றாள் மெல்லியிளங்கொடியாள்
அவ்வார்த்தைதான்கேட் டன்னநடைதுரோபதையாள்
தோகைமயிலாளும் துரோபதையுமேதுசொல்வாள்
கையிலிருக்கும்வாளைக் கன்னியரேவிட்டுவிடு
சந்திராயுதத்தைநீ சன்னலிலேவீசிவிடும்
என்வார்த்தைதள்ளிநீ யாதொன்றும்பேசவேண்டாம்
என்று-நம்பிக்கைதந்தாலே நானும்விடுவேனம்மா
சத்தியத்தைதந்தாலே தையலேவிடுவேனம்மா
அப்படியேயாகுதென்று ஆரணங்குமேதுசொல்வாள்
சொக்கர்திருவாணை ஸ்ரீராமர்தன்னாணை
ஆதிசிவன்தன்னாணை ஆறுயிரவராணை
அங்கயற்கண்ணம்மை யலர்மேலுதன்னாணை
பரமசிவன்தன்னாணை பார்வதியாள்தன்னாணை

சந்திரசூரியரும் சமஸ்தமானதேவதைமேல்
ஈஸ்வரருமீஸ்வரியு மிருடியர்மேலாணையென்றாள்
இந்திரனும்பிர்மாவு மெல்லார்மேலாணையென்றாள்
சத்தியங்தவறுமோவென்னென் றென்றாள்தையலரே
காலம்பிரண்டாலும் கலியுகம்பொய்த்தாலும்
சந்திரசூரியர்கள் தெற்குவடக்கானாலும்
சத்தியங்தவறுமோவென்ன றென்றாள்தையலரே
கதவைதிறக்கல்லோ கடுகவிடுங்களென்றாள்
அப்போதுரோபதையாள் ஆரணங்குமேதுசொல்வாள்
சகாதேவராசாவை சடுதியிலவரவழைத்து
கதவைத்திறந்துநீர் கன்னியரைவிடுங்களென்றாள்
அப்போசகாதேவன் அன்புடனேயோடிவந்து
தந்திரவுபாயத்திற் சாத்தும்கதவுதன்னை
எட்டித்திறந்தானே இயலானபொற்கதவை
சூஸ்திரமாகவேதான் திறந்துவிட்டான்பொற்கதவை
மின்னலொளிபோல வெளிப்பட்டாளல்லியம்மாள்
சந்திரனைப்போலே தளும்புகிறாள்தோகைநல்லாள்
குன்றுமேற்சந்திரன் குதித்தெழுந்தபாவனைபோல்
மகுடத்துரைச்சியவள் வந்தாள்வெளியாக
மூடிசிவிகைவைத்தார் முன்னாலேயல்லியர்த்து
ஏறினாள்சிவிகைதன்னி லெடுத்தார்நெடுங்குடைகள்
அந்தப்புரத்திலே யாரணங்கைகொண்டுசென்றார்
பத்தாங்கட்டாரண்மனையிற் பத்தினியைக்கொண்டுசென்றார்
சிவிகைதனைவிட்டிறங்கிச் சென்றாளேமாளிகையில்
கெண்டிகையில்தீர்த்தமது கொண்டுவந்துமுன்னேவைத்தார்
கைகாலுஞ்சுத்திபண்ணிக் கனிவாயைக்கொப்பளித்து
அமுதுண்ணுமண்டபத்தி லாரணங்குபோய்ச்சேர்ந்தாள்
பந்திப்பாய்மேலாகப் பாங்குடன்வந்தமர்ந்தாள்
வாழையிலைபோட்டு வரிசையுடன்நீர்தெளித்து
மல்லிகைமொக்குபோலே மாற்றுவெள்ளிநிறம்போலே
போசனமும்பாலித்து பொறிக்கறியும்வைத்தார்கள்
பத்துவகைக்கறியும் பதினெட்டுபச்சடியும்
சர்க்கரைப்பாற்போசனமும் முப்பழவர்க்கமுடன்
உண்டுபுசித்தார்க ளுமையுடனல்லியரும்
கைகாலலம்பினார்கள் கனிவாய்சுத்திபண்ணினார்கள்
மற்றுமொருமண்டபத்தில் வந்தமர்ந்தாரெல்லவரும்
சந்தனமும்புட்பமும் தாம்பூலந்தான்கொடுத்தார்
வாங்கித்தரித்தார்கள் மண்டபத்தில்கொலுவில்வந்தார்
அன்னநடைதிரௌபதையாள் அர்ச்சுனரைத்தானழைத்து
கலியாணமுகூர்த்தமது கடுகெனவேவையுமென்றாள்
ஓலையெழுதியே யூருக்கனுப்புமென்றாள்

ஆறாயிரம்பாண்டியர்க ளனைவோர்க்குமோலையது
எழுதியனுப்புமென்று ளின்பத்திரௌபதையாள்

'கலியாண ஒலையெழுதி அரசனுக்கனுப்புதல்.

ஈழப்பனையோலை இருபக்கம்காம்பரிந்து
தாழப்பனையோலை தலைப்பக்கம்காம்பரிந்து'
அவ்வார்த்தைதான்கேட் டர்ச்சுனர்மனமகிழ்ந்து
அண்ணன் தர்மராயருக் கறிக்கையிட்டானர்ச்சுனனும்
சாஸ்திரப்பிராமணரை சடுதியில்தாமழைத்து
ஊர்கணக்கப்பிள்ளைகளை யுத்தமரைவரவழைத்து
சிரானகணக்கர்களை சிறப்புடனேயழைத்து
திங்கட்கிழமையிலே தசமிநல்லமுகூர்த்தமதில்
அல்லிபற்குமர்ச்சுனற்கு மழகுமுகூர்த்தம்வைத்து
ஆறாயிரம்பாண்டியர்க ளனைவோரும்வாருமென்றார்
எழுதுமென்றுளோலையது இன்பமுடன் தருமலிங்கம்
அப்போதுகணக்கப்பிள்ளை அன்புடனேஒலைகொண்டு
வாரியஒலையிலே மஞ்சளைமேற்பூசி
ஆறாயிரம்பாண்டியர்க ளையன்மார்தங்கட்கு
வக்கணையாகவேதான் வைத்துஎழுதினார்கள்
எழுதினஒலைதன்னைச் சுருள்முடித்துத்தந்தார்கள்
செந்நிரிக்கந்தான்போட்டுத் திருவடிக்கீழ்வைத்தார்கள்
சாஷ்டாங்கதெண்டனிட்டு நடந்தாரேகணக்கப்பிள்ளை
ஒலைகளையெடுத்து உத்தமனார்தருமலிங்கம்
காற்றிலதிகமான கடுந்தூதரையழைத்து
மலையுடனேதலைகொடுக்கும் மன்னர்களைத்தானழைத்து
ஒலைகொண்டுபோகுமெனறார் வுத்தமனார்தருமலிங்கம்
இந்திரபுரந்தாண்டி இபலானநாடுவிட்டு
காடுசெடிதாண்டி கரியமலைதான்தாண்டி
ஆறுசுனைதாண்டி யதிகவனந்தான்தாண்டி
குன்றுமலைதாண்டி கொப்பெனவேதூதாட்கள்
மதுராபுரிபட்டணத்தில் வந்துவிட்டார்தூதாட்கள்
பாண்டியராஜர்முன்னே பாங்குடனேஒலைவைத்தார்
ஆறாயிரம்பாண்டியர்கள் தர்மமுடிராசாக்கள்
சாஷ்டாங்கமாகவே சரணமிட்டார்தூதாட்கள்
நாமும்வருவோமென்றார் ராஜாக்கள்பந்தலுக்கு
ஆறாயிரவர்களு மையன்மார்பயணமானார்
பொன்னுமலைநாடாளும்போரெழுதிய்வர்கூட
மற்றுமுள்ளராஜாக்கள் மன்னர்பயணமானார்
யானைபரிவார மடங்கலும்பயணமானார்
துரியோதனராசனுக்கு சுருளோலைவந்ததுகாண்
துருபதேசனுக்கு சுருளோலைவந்ததுகாண்

மந்திரதேசனுக்கு வந்ததேஓலையது
மண்டலத்துராசருக்கு வந்ததேஓலையது
கல்யாணஓலைதன்னைக் கண்டந்தராஜாக்கள்
சகலமானபேரும் சந்தோஷப்பட்டார்கள்
திக்காசையாண்டதொரு துரைகளெல்லாம்வாறார்கள்
மண்டலத்தையாண்டவர்கள் வருகிறார் துரைகளெல்லாம்
மேளமுழங்கியது மும்மண்டலந்தானதிர
செந்தூளெழும்பியது சூரியனைக்கப்பிற்றங்கே
கருந்தூளெழும்பியது கதிரோனைக்கப்பிற்றங்கே
முத்தைப்பிளந்தார்கள் மூன்றுங்கால்நட்டார்கள்
பவளம்பிளந்தார்கள் பந்தக்கால்நாட்டினாகள்
வெள்ளியால்கால்நிறுத்தி வெற்றிலையால்பந்தலிட்டார்
மூங்கில்பிளந்தார்கள் முச்சூடும்பந்தலிட்டார்
கரும்பாலேகால்நிறுத்தி அரும்பாலேபந்தலிட்டார்
பச்சோலைபந்தலது பாங்காயலங்கரித்தார்;
வன்னிமரம்கமுகுமரம் வாசலெல்லாம்நாட்டினார்கள்
சோலைபலாமரம் தெருவெல்லாம்நாட்டினார்கள்
வாழைமரங்களது வாசலெல்லாம்நாட்டினார்கள்
மாவிலைத்தோரணமு மகுடதோரணங்கட்டினார்கள்
எங்கெங்கும்சோலைகளு மெத்தினைதோரணமும்
கன்றாடிசல்லிசட்டி கவரிமான்குச்சுவிட்டு
பஞ்சவர்னக்கிளிகளை பந்தலிலேதூக்கிக்கட்டி
அன்னமுமயிலினமும் அழகுபெறக்கட்டினார்கள்
சுன்னவிலேபனிநீருஞ் சாடினரேஎத்திசையும்
நிலக்கோலமிட்டார்கள் நிலமெல்லாம்பூத்தெளித்தார்
அத்தர்புனுகுகளை அள்ளித்தெளித்தார்கள்
பட்டுரத்னப்பாய்போட்டார் பந்தலுக்குள்ளாக
சாரத்தலையணையுஞ் சகலாத்துதிண்டுகளும்
அந்தச்சமயத்தில் அனந்தங்கோடிராஜாக்கள்
வருகிறதுரைகளென்றால் மட்டுமிதங்களில்லை
வாகனங்கள்விட்டிறங்கி வந்தார்துரைகளெல்லாம்
சந்தனவடிவழகர் தருமருக்கேதெண்டனிட்டார்
பந்தலில்வந்தமர்ந்தார் பாங்குள்ளராஜாக்கள்
அந்தண்டபெண்களு யனைவோரும்சிவிகையிட்டு
அந்தப்புறத்திலே யனைவரும்போய்ச்சேர்ந்தார்கள்
சாஸ்திரப்பிராமணர்கள் சகலரும்வந்தமர்ந்தார்
செந்நெல்லைகிழ்பரப்பிச் சேஷமணைபோட்டு
மணவரையைப்போட்டார்கள் மாப்பிள்ளையைக்குந்தவைத்தார்

அல்லியரசாணியை அருச்சுனன் மாலையிடுதல்.

மாப்பிள்ளையும்பெண்ணுமாக வந்தமர்ந்தார்பந்தலிலே
சேஷமணைமேலே சிருடனேவந்தமர்ந்தார்

செங்கெலரிசிகொண்டு தெற்குநோக்கிப்பந்தலிட்டார்
நாவிதன்வந்துநின்றான் நல்மணப்பந்தலிலே
பாலால்முகந்துடைத்தார் பத்துவிரல்நகம்வாங்கி
பணிசெய்வோன்சங்கூத பார்த்திபர்நடைகவிய
சங்கீதமேளங்கள் சபையில்முழங்கிநிற்க
வெற்றிச்சங்கூதவே விருதுமேளமடிபடவே
சிக்கைகழித்தார்கள் சிராயிருவருக்கும்
மூன்றுபிராமணப்பெண் மூன்றுநலங்குசெய்தார்
ஏழுபிராமணப்பெண் ணேழுநலங்குசெய்தார்
மஞ்சனச்சாலையிலே மஞ்சனீராட்டிவைத்தார்
ஸ்நானங்களாட்டினார் தாமமுடியர்க்கும்
நீர்காட்டியுலாத்தினார் நிலங்கிள்ளிகாப்புமிட்டார்
ஈரத்துகில்களைந்து இழைசேர்ந்தபட்டுடுத்தி
நனைந்ததுகில்களைந்து நாகரீகப்பட்டுடுத்தி
மாப்பிள்ளையும்பெண்ணையு மண்டபத்தில்கூட்டி
அலங்காரம்பண்ணலுற்றா ரழகாயிருவரையும்
எழில்விஜையராஜனை எப்படியலங்கரிப்பார்
கோதிமுடித்தார்கள் கிறிகொண்டைபோட்டார்கள்
உட்கொண்டைபோட்டார்க ளருமாலைகட்டினார்கள்
வண்டித்தலைப்பாகை மன்னனுக்குதான் தரித்தார்
முத்துகடுக்கனது முகமழகாப்ககாதிலிட்டு
முத்துகலிக்கத்துமாய் முன்நெத்தியிலேசொருகி
லலாடச்சிங்கத்துமுவு நடுத்தலையிலேசொருகு
ஒட்டுக்கடுக்கனது வுலகம்விலைபெறுமே
பச்சைக்கல்முருகதனைப் பதித்தார்களர்ச்சுனற்கு
வச்சிரக்கடுக்கனுடன் மாணிக்கக்கடுக்கனிட்டார்
கண்டசரங்களுடன கனகவிதாபரணமும்
மோகனமாலையுடன் முத்துச்சரப்பளியும்
ஐந்தாம்பிறைபோல அடுக்கடுக்காய்பதக்கமும்
சிங்கமுகக்கடகம் சிரானபாசிபந்து
அரைஞாண்கயிறுகளு மைந்துவிரல்மோதிரமும்
நீட்டிவைக்குங்கால்களுக்கு நெரிஞ்சிப்பூச்சல்லடமாம்
மண்டியிடுங்கால்களுக்கு மாதளம்பூச்சல்லடமாம்
சந்திரகாந்திதட்டி கட்டி தாமரைப்பூச்சுங்குவிட்டு
பூவிழைத்தஅங்கிதன்னை பூட்டியலங்கரித்து
பொன்னிழைத்தபட்டாடை போட்டார்கள்வல்லவாட்டு
சிவசிவாவென்றுசொல்லி திருநீறுகாப்பணிந்து
சந்தனப்பொட்டுமிட்டார் தருமர்தம்பியர்ச்சுனற்கு
மல்லிகைமாலைதன்னை மார்பிலணிந்துகொண்டு
அர்ச்சுனனைஜோடித்தா ரழகுபெறத்தோழரெல்லாம்
ஆறுயிரம்பெண்க ளலைவோருஞ்சோடித்தார்

சம்பங்கிளண்ணைகொண்டு நடவிமயிராற்றி
நீவிமயிராற்றி சிமிள்பேசலைகொண்டையிட்டு
ஒவ்வொருபூவுக் கொவ்வொருபொன்னிதழாம்
பூவிதழும்பொன்னிதழும் பூட்டியலங்கரித்தார்;
கட்டிமுடித்தகொண்டை காதின்மேற்சோதிமின்ன
சுற்றிமுடித்தகொண்டை சூரியனைத்தோற்கடிக்கும்
ஆண்மயிலைப்பெண்மயிலை யண்டையில்சேர்த்தார்கள்
சந்திரனைச்சூரியனை சரியானபிறையணிந்து
பக்கத்திற்சேர்த்தார்கள் பல்லிபாம்வார்பிறையும்
பல்லீடுமெல்லீடு பக்கமயிர்கொலுத்தம்
அருகுகொப்புசொருகுவாளி அன்னகொப்புமணிந்தார்கள்
பச்சைக்கல்முருகுகளும் பதித்தார்களல்லியற்கு
மூக்குத்தியட்டிகை மேற்கத்திரிபாவிலையும்
நாகரிகக்காரையது நடுக்கழுத்தில்பூஷணமும்
ஒற்றைச்சரடுகளாம் ஒருபுறமாம்பொற்சரிகை
முத்துவடங்களாம் மோகனமாலைகளாம்
வட்டசரப்பளியாம் மார்நிறைந்ததாழ்வடமாம்
ஐந்துவிரலுக்கு மழுத்தியமோதிரமாம்
பத்துவிரலுக்கு பதித்தமுத்துமோதிரமாம்
பாடகந்தண்டைகளாம் பருஞ்சிலம்புகாலாழி
காலாழிகல்லணையாம் பீலாழிபில்லணையாம்
அஷ்டாபரணமெல்லாம் அலங்காரம்பண்ணினார்கள்
சோடித்தோமென்று சொல்லிதெண்டனிட்டார்கள்
அர்ச்சுனரையல்லியரை யழைத்தார்கள்பந்தலிலே
மணவரையின்மேலாக வந்தாரிருவருமாய்
அரசாணிநாட்டினார்க ளம்மிகுழிவைத்தார்
சாலும்கரகமும் சட்டமுடன்வைத்தார்கள்
அம்மிவலமாக அரசாணிமுன்பாக
குத்துவிளக்குகளும் குடவிளக்குமுன்புவைத்தார்
பார்த்திபனர்ச்சுனர்முன் பாலியதிரக
ஓமப்புகையிலே யுடனிருந்துவேதஞ்சொல்ல
ஆறுபிராம்பிராமணர்க ளங்கிருந்துவேதஞ்சொல்ல
காப்பரிசிதான்வழங்கிக் கங்கணந்தரித்தார்கள்
மாவுங்கழுநாலு மஞ்சளுடநெல்விதை
தாலியுங்கூறையும் தந்தாரேபாண்டியர்கள்
காலுங்கழுவியே கன்னிகைதானமிட்டார்
தந்தேனுனக்கிந்தேன் தாரைநீர்பிடியுமென்றார்
மாவுங்கழுநாலும் மஞ்சளுடனரிசி
அத்தண்டபிராமணர்க ளஸ்தமிட்டமங்கிலியம்
பட்டணத்துராஜாக்கள் மன்னர்களஸ்தமிட்டார்
ஆறுயிரம்பாண்டியர்க ளாயன்மா ளஸ்தமிட்டார்

மாயன்பெருமானு மலைராமாஸ்தமிட்டார்
அரகராவென்றுசொல்லி யழுத்தகிறான் மங்கிலியம்
சிவசிவாவென்றுசொல்லி தேர்விஜயன்கட்டலுற்றான்
மாதுதலைகுனிய மன்னன்தரிக்கலுற்றான்
பிரமமுடிமூன்றுமுடி போட்டானே புண்ணியனும்
தேவர்துந்துமிமுழங்க தேவர்பூமாரிபெய்தார்
சங்கீதமேளமது சபையில்முழங்கிவர
அடிபடுதேபேரிகைதான் அந்தரந்தானதிர
முப்பத்துமுக்கோடி முனிவர்கள்தேவரெல்லாம்
ஆகாயவீதியெல்லாம் அர்ச்சுனரைவாழ்த்தினாரே
அர்ச்சுனற்குமல்லியற்கு மடந்தையெறிந்துவிட்டார்
வாழ்த்தியேபோனார்கள வானவர்களைவருந்தான்
அரசாணிசுத்தினார்கள் அம்மிமிதித்தார்கள்
அப்போதர்ச்சுனரு மல்லிப்பெருமாளும்
அருந்ததிபூசைபண்ணி யள்ளிப்பொரியிறைத்தார்
கணையாழிமாற்றினார் கட்டழகரிருவருமாய்
மாலைதனைமாற்றி வந்தமர்ந்தாரிருவருமாய்
அத்தண்டபேர்களு மள்ளியேசேஷையிட்டார்
வந்திருந்தராஜாக்கள் வந்தவர்கள்மொய்யுமிட்டார்
காப்பரிசிதான்வழங்கிக் கங்கணமவிழ்த்தார்கள்
அனைவரையுந்தெண்டம்பண்ணி யரண்மனையினுட்புகுந்தார்
பாலிகைபாய்மேலே பாங்குடனேபோய்ச்சேர்ந்தார்
பாலும்பழங்களுண்டு பசியாறிவீற்றிருந்தார்
அந்தநற்பந்தலிலே யழகானபந்தலிலே
மொய்பாக்குவெற்றிலைப் முடிமன்னராஜருக்கு
சந்தனபுட்பமுந் தாம்பூலம்வழங்கினாரே
ஆயிரம்பிராமணற்கு மதிதிபரதேசிகட்கும்
பலதானம்தந்தார்கள் பிராமணருள்ளவற்கு
மண்டலத்துராஜாக்கள் வந்திருந்ததுரைகளெல்லாம்
போஜனச்சாலையிலே போய்புகுந்தாரெல்லோரும்
பந்திப்பாய்போட்டார்கள் பாங்குடனேவந்தமர்ந்தார்
வாழையிலைபோட்டு வரிசையுடனீர்தெளித்தார்
முப்பழமும்சர்க்கரையும் முடிமன்னர்வைத்தார்கள்
புத்துருக்குநெய்வார்த்து போஜனமுண்ணுமென்றார்
அத்தளிகையுண்டபின்பு மறுதளிகைபின்னேவைத்தார்
மல்லிகைமுல்லைபோலே மாற்றுவெள்ளிநிறம்போலே
போஜனங்கள்பாலித்துப் பொரிக்கறியும்வைத்தார்கள்
பத்துவிதக்கறியும் பதினெட்டுபச்சடியும்
எட்டுவிதக்கறியும் இயலானபோஜனமும்
பொன்போல்பருப்புவைத்து புத்துருக்குநெய்சொரிந்தார்
அத்தளிகையுண்டபின்பு மறுதளிகைவைத்தார்கள்

இளந்தோச்சல்தயிருமிட்டா ரெலுமிச்சங்காயும்வைத்தார்
போஜனங்களுண்டபின்பு பொடியிட்டுங்கைதிமிறி
கைகால்சுத்திபண்ணிக் கனிவாயுங்கொப்பளித்தார்
சித்திரப்பந்தலிலே வந்தார் துரைகளெல்லாம்
சம்பந்திதாம்பூலந் தட்டோடேவழங்கினார்கள்
உறவின்முறைதாம்பூல முத்தமர்கள்வழங்கினார்கள்
யானையலங்கரித்து அர்ச்சுனற்குகொண்டுவந்தார்
அத்தளங்கள்சோடித்து அல்லியற்குகொண்டுவந்தார்
யானைமேலர்ச்சுனனும் அத்தளத்திலல்லியரும்
ஏறினாரிருவருமா யெடுத்தார்நெடுங்குடைகள்
சண்டாளவைபறக்கவிட்டார் தனிபேரியடித்தார்கள்
யானையின்மேல்பேரிகையும் குதிரையின்மேல்டங்காவும்
ஒட்டகமேல்நகபத்து ஓசைமுழங்கவேதான்
சங்கீதமேளமது சபையில்முழங்கவேதான்
எக்காளசின்ன மெழில்பெறவூதிவர
பாஞ்சசன்யம்தேவதத்தம் பலவாத்தியமுழங்க
சாமரங்கள்சின்னம் வெக்காளமூதிவர
பகல்வத்திமத்தாப்பு பட்டம்பகல்போல்பிடித்தார்
புருசுவெடிபாணம் போதமுழங்கிறதே
ஆடாதகூத்துகளும் அரும்பவனிநாடகமும்
கேளிக்கைதன்னுடனே கீர்த்திமன்னரர்ச்சுனரும்
நான்குதெருக்கோலம் நன்றாய்வருகிறார்கள்
தண்ணீர்தெளிப்பார்கள் சாம்பிராணிபோடுவார்கள்
வாழைகமுகுகளும் வாசலெல்லாம்நடுவார்கள்
நிலக்கோலமிடுவார்கள் நிலமெல்லாம்பூத்தெளித்தார்
உவர்கோசமாகியே யுத்தமர்கள்வந்தார்கள்
ஆலமும்சுற்றினார்க ளர்ச்சுனற்குமல்லியற்கும்
திருஷ்டிகள்சுற்றியே தெருவிலேகொட்டுவார்கள்
வாகனங்கள்விட்டிறங்கி மண்டபத்தில்போய்புகுந்தார்
பாலும்பழங்களுண்டு பசியாறிவீற்றிருந்தார்
ஐந்தாறுநாள்சென்றபின்பு அத்தன்டராஜர்களும்
அவரவர்மாளிகைக்கு அனைவோரும்போவோமென்று
தருமர்செல்வத்தினால தானடந்தார்மாளிகைக்கு

பாண்டியரும் அல்லியரும் விடைபெற்று மதுரைக்கு வந்தது.

ஆருபிரவையன்மார்தங்கள்முதல்
மூநகிவிசையிலே மெல்லியவளைவைத்துக்கொண்டு
காலாளுஞ்சேவகரும் சுடுகப்பயணமானார்
தருமர்செல்வத்தினால் சந்தோஷமாயெழுந்து

யானைகளும்சேனைகளும் யாவர்களுமாக
மேளமுழங்கிவர முடிமன்னர்போறூர்கள்
மதுராபுரிபட்டணத்தில் வந்தார்களெல்லவரும்
நான்குதெருக்கோலம்வந்து நாயகியும்போய்ச்சேர்ந்தார்கள்
மண்டபத்துக்குள்ளாக வந்தமர்ந்தாரெல்லோரும்
அப்போது அல்லியரு மாதக்குழிப்பானாள்

அல்லியரசாணி பாலகனைப்பெற்றது.

ஓரான்தான்மாதமது ஒருதிங்கட்கிழமையிலே
இரண்டாந்தான்மாதமது இரண்டுதிங்கள்தானாச்சு
மூன்றுந்தான்மாதமது மூச்சுகொங்கைமுநங்கறுத்து
நான்காந்தான்மாதமது நல்லமசக்கையானாளே
ஐந்தாந்தான்மாதமது அடிவயறுகனத்திடுமாம்
ஆறுந்தான்மாதத்திலே யங்கமெல்லாந்தங்கநிறம்
ஏழாந்தான்மாதத்திலே இசைந்தஸ்ரீமந்தஞ்செய்வார்
எட்டாந்தான்மாதத்திலே இளைப்புந்தலிப்பானாள்
ஒன்பதாமாதத்திலே உடம்பெல்லாம்நோகுதென்றாள்
பத்தாந்தான்மாதத்திலே பாலகனைப்பெற்றெடுத்தாள்
பப்பிரவாகனென்று பாண்டியருமபெயருமிட்டார்
மாணிக்கத்தொட்டிலிலே வளருகிறானிந்திரனும்
இந்தக்கதைதன்னை இன்பமாயாவர்களும்
விந்தையாயிக்கதையை விரும்பியபூவைகளும்
அன்புமிகக்கொண் டல்லிக்கதைபடிக்க
துன்பமிகத்தீர்ந்து துரிதமுடன்படிக்க
கோதைமார்தான்வாங்கிக் கொள்ளிமனங்களிக்க
பேதைமார்தானேங்கிப் பெருங்களிப்பில்தான்குளிக்க
சொக்கநாதர்படிக்க சுத்தமாயிக்கதையை
அக்கரையாகவே அனைவோரும்படிப்பதற்கு
இக்கதையையாவர்களும் இசைந்துமேகேட்டவர்கள்
நாடுநகர்பதியதனைச் சேர்வார்கள்வையகத்தில்
நன்மையாய்க்கேட்டவர்கள் அனைவோரும்தான்வாழி
அருமையாய்க்கேட்ட பெரியோர்கள்தான்வாழி
பாருலகிலிக்கதையைப் படிப்பவர்கள்தான்வாழி
சீரிலகுமல்லிகதை சிந்திப்போர்தான்வாழி
தேவருமூவரும் யாவருந்தான்வாழி
ஆதிசிவனருளால் அனைவோருந்தான்வாழி

A. No. 45396

மாயனருளாலே மண்டலங்கள் தான்வாழி
காயங்களுள்ளளவும் களிப்புடனே தான்வாழி
சொக்கருளாலே சுகமாய்த்தான்வாழி
இக்கட்டுவாராமல் இசைந்துமிகவாழி
அங்கயற்கண்ணம்மை யருளாலேதான்வாழி
ஆல்போல்தழைத்து அறுகுபோல்வேரோடி
மூங்கில்போல்சுற்றம் முசியாமல்தான்வாழி
தீங்கில்லாமாதர் செழித்துமிகவாழி
ஊழியூழிதோறு முலகங்கள் தான்வாழி
வாழிவாழியென்று வாமளித்தாரீஸ்வரனார்

மாதவத்தோர்வாழ்க மற்றுமுள்ளதேவர்வாழ்க
வேதமும்வாழ்கவீர சைவத்தோர் தாமும்வாழ்க
ஆதுலர்முனிவர்வாழ்க அந்தரிஷிகள்வாழ்க
பூதலம்வாழ்கபூமி புவியுள்ளோர்வாழ்கத்தானே.

அல்லியரசாணிமாலை முற்றிற்று.

மங்களம்.

மங்களம் ஜெயமங்களம்-நித்தியசுபமங்களம்.

பூமிபரிபாலனுக்கும் புகழ்வடிவேலனுக்கும்
சேமமிகுசீலனுக்கும் செய்யவனுகூலனுக்கும்-ஜெ

வில்லகர்பாண்டவர்க்கும் விண்ணவர்களாண்டவர்க்கும்
தொல்லலின்பூண்டவர்க்கும் துய்யமுத்துதாண்டவர்க்கும்-ஜெ

கற்புநிலைவிழியாட்கும் கனியனையமொழியாட்கும்
பொற்புறுசுழியாட்கும் பெருகயலில்விழியாட்கும்-ஜெ

மன்னர்புகழ்நேசனுக்கும் வளங்கொள்மஹாராஜனுக்கும்
பன்னரியநேசனுக்கும் பத்திவிசுவாசனுக்கும்-ஜெ

பாருலகிலல்லியர்க்கும் பன்னின்மொழியல்லியர்க்கும்
சீருலகிலல்லியர்க்கும் செருக்களவிஜயருக்கும்-ஜெ

பாண்டியர்கள்பாலருக்கும் பரிமளசீலருக்கும்
ஆண்டியெனுந்தேவருக்கும் அவரடியார்மூவருக்கும்-ஜெ

மங்களம்-முற்றும்.
